# ஊக்கமூட்டும் வளர்ச்சி



INSURANCE BOARD OF SRI LANKA

இலங்கை காப்புறுதி சபை

வருடாந்த அறிக்கை 2016

# உள்ளடக்கம்


ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 4
தலைவரின் மீளாய்வு 7
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 10
சபை அங்கத்தவர்கள் 14
சபை அங்கத்தவர்களின் அறிமுகம் 15
சிரேஷ்ட முகாமைத்துவ அணி 17
அலுவலர்கள் 18
மீளாய்வு
பொது மீளாய்வு 22
புள்ளிவிபர மீளாய்வு 32
செயற்பாட்டு மீளாய்வு
- மேற்பார்வை மீளாய்வு 66
- ஒழுங்குபடுத்தல் மீளாய்வு 71
- விசாரணை மீளாய்வு 76
- சந்தை அபிவிருத்தி மற்றும்
வெளி உறவுகள் மீளாய்வு 82
- நிருவாக மீளாய்வு 86
- நிதி மீளாய்வு 87
நிதித் தகவல்கள்
- நிதி நிலைக் கூற்று 90
- நிதிச் செயற்பாட்டுக் கூற்று 91
- காசுப் பாய்வுக் கூற்று 92
- கணக்கீட்டுக் கொள்கைகள் 94
- நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 96
கணக்காய்வாளர் தலைமை
அதிபதியின் அறிக்கை 98
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால்
எழுப்பப்பட்ட விடயங்களும் சபையின்
பிரதிபலிப்புகளும் - 2016 109
பின்னிணைப்பு I 120
பின்னிணைப்பு II 122
கலைச்சொல் அகராதி 123



நாட்டதாரர்களின் நிறுவனங்கள்
முகங்கொடுக்கும் சவால்களை
வெற்றிகொள்கின்ற
புத்தாக்க மற்றும்
நடைமுறை ரீதியான தீர்வுகளை
உருவாக்குவதற்கு
எமது நாட்டதாரர்களுடன்
ஒவ்வொரு நாளும்
நாங்கள் நெருக்கமாக
பணியாற்றுகிறோம்.

# நோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துநராக இருத்தல்.

# பணி

காப்புறுதிதாரர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கின்ற அதேநேரம் காப்புறுதித் துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.



# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- 29 காப்புறுதிக் கம்பனிகள்
- 56 காப்புறுதித் தரகர்கள்
- 43,816 (மொத்தம்) காப்புறுதி முகவர்கள்
- காப்புறுதி பற்றிய விழிப்புணர்வு 12 பிரதேச செயலகங்களிலுள்ள 798 கிராம நிலதாரி பிரிவுகளைச் சென்றடைந்திருக்கிறது.

## காப்புறுதித் தொழிற்றுறையின் செயலாற்றகை

| | 2016 | 2015 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ. பில்லியனில்) | 143 | 123 | 16.26% |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்லியனில்) | 527 | 467 | 12.84% |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஓர் சதவீதமாக | 1.21 | 1.12 | 8.03% |
| காப்புறுதி அடர்த்தி (ரூ.) | 6,743 | 5,865 | 14.97% |

## சபையின் செயலாற்றுகை

| | 2016 | 2015 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி (ரூ. பில்லியனில்) | 3.30 | 2.64 | 25% |
| வீதவரி வருமானம் (ரூ. மில்லியனில்) | 408.20 | 321.75 | 26.87% |
| வருடாந்தக் கட்டணம் (ரூ. மில்லியனில்) | 125.50 | 103.81 | 20.89% |

**ரூ. 527 பில்லியன்**
காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தச் சொத்துக்கள்

**ரூ. 143 பில்லியன்**
காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தக் கட்டுப்பணம்



# முகாமைத் தகவல்கள்



"மத்திய வருமான நாடொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை GDP இன் ஏற்புடைய அதிகரிப்பொன்றுடன் முன்னோக்கி நகர்கிறது. இதன் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்வதற்கு காப்புறுதித் துறை இந்நாட்டின் நிதித் துறைத் தூண்களில் ஒன்றாக இருப்பது அவசியமானதாகும்."

# தலைவரின் செய்தி

இலங்கை காப்புறுதி சபையின் பணிப்பாளர்கள் சபை சார்பாக 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். தெற்காசியாவில் முன்னுதாரணமான காப்புறுதி ஒழுங்குபடுத்துநராக இருப்பதற்கான எங்களுடைய பயணத்தில், சவால்களை கொண்டிருந்த இந்த ஆண்டின் காலப்பகுதியில் அடுத்த முன்னேற்றகரமான மட்டத்திற்கு நகர்வதற்கு எங்களால் முடிந்திருந்தது.

திட்டமிடப்பட்டதன்படியும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதன்படியுமான வேறாக்குதல் செயன்முறையிறைப் பூர்த்தி செய்வது எதிர்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க RII (திருத்த) இன் விதிகளின்படி, சகல கூட்டுக் காப்புறுதிக் கம்பனிகளும் தங்களுடைய வியாபாரத்தை இரண்டு வெவ்வேறான சட்ட நிறுவனங்களாகப் வேறாக்குவதற்குத் தேவைப்படுத்தப்பட்டன. ஏனைய பல நாடுகளில் நடைமுறையிலிருக்கின்ற இந்தத் தேவைப்பாடானது காப்புறுதிதாரர்களுக்கான சிறந்த பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற பிரதான நோக்கத்தைக் கொண்டதொரு காப்புறுதி நடவடிக்கையாகவும் அதேபோன்று சிறந்த ஆளுகைக் கோட்பாடு ஒன்றாகவும் இயற்றப்பட்டது. பன்னிரெண்டு கூட்டுக் கம்பனிகளில் ஒன்பது கம்பனிகள் விருப்பத்துடனும் ஒத்துழைப்புடனும் தங்களுடைய செயற்பாடுகளை வேறாக்கியதன் மூலம் இந்தத் தேவைப்பாட்டுடன் இணக்கமாகியிருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பெரியளவான சந்தைப் போட்டியாளராக இருக்கின்ற அரசுக்குச் சொந்தமானதொரு காப்புறுதி வழங்குநர் உள்ளிட்ட மூன்று கம்பனிகள் இந்தச் சட்டத் தேவைப்பாட்டுடன் இணக்கமாகும் பொருட்டு பிரித்து வேறாக்கப்பட வேண்டியுள்ளன.

அரசாங்கத்தால் "தேசிய காப்புறுதி தினம்" இந்த ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டதன் காரணமாக இலங்கைக் காப்புறுதித் தொழிற்றுறையின் வரலாற்றில் 2016 ஆம் ஆண்டு ஒரு முக்கிய ஆண்டாகக் கருதப்படும். 2016 நவெம்பர் 22 ஆந் திகதி இந்தப் பிரகடனத்தற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 1 ஆந் திகதி, தேசிய காப்புறுதி தினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தினம் காப்புறுதி தினமாகக் கொண்டாடப்படவுள்ளது.

## தொழிற்றுறைச் செயலாற்றுகை

சவால்மிக்க சூழல் காணப்பட்டபோதிலும், இத்தொழிற்றுறையானது ஆண்டின் காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிலும் மேல்நோக்கிய வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. ஆயுள் காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிலிருந்தும் ஒட்டுமொத்தக் கட்டுப்பணமாக (GWP) ஏறத்தாழ ரூ.142,969 மில்லியனை அடைய முடிந்திருந்தது. இது கிட்டத்தட்ட ரூ.20,000 மில்லியன் அதிகரிப்பையும் 16.27% வளர்ச்சியையும் பதிவுசெய்திருக்கிறது. இதேபோன்று, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் தேசிய மீள்காப்புறுதி வழங்குநர் (என்.ஐ.டி.எப்.) இற்குச் சொந்தமான சொத்துக்கள் உள்ளடங்கலான காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தச் சொத்துக்களிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தச் சொத்துக்களின் கணிப்பிடப்பட்ட பெறுமதி ரூ.527,228 மில்லியன் என்பதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 12.97% வளர்ச்சியுமாகும்.

ஒழுங்குபடுத்துநரால் (IBSL) அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் மாற்றங்கள் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் காப்புறுதித் தொழிற்றுறைக் கட்டமைப்பு குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தை அனுபவித்திருந்தது. இடர் அடிப்படையிலான மூலதன (RBC) மாதிரியை ஏற்றுக்கொண்டு பின்பற்றியமை அவற்றுள் ஒன்றாக இருந்தது. பல கட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர், RBC இன் நடைமுறைப்படுத்தலானது 2016 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நடைமுறைப்படுத்தலின்போது குறிப்பிட்ட சில பிரச்சினைகள் மேலெழுந்திருந்ததை அவதானித்திருந்த போதிலும் தொழிற்றுறையானது புதிய மூலதன மாதிரியை வெற்றிகரமாக உள்வாங்கிக்கொண்டது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் பொருட்டு, வெளித்தரப்பு நிபுணர்களின் உதவியுடன் கடன் தீர் எல்லை விதியினை மறுபரிசீலனை செய்ய நாங்கள் விரும்பினோம்.

# தலைவரின் செய்தி

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இரு பெரிய தொழிற்றுறைப் போட்டியாளர்கள் மூலம் மூன்று பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் உள்நாட்டுக் காப்புறுதித் தொழிற்றுறையின் ஒருங்கிணைந்த செயன்முறை ஒன்றிற்கு இது சாட்சியாகவுள்ளது. ஒன்றிணைப்புகள் மற்றும் கொள்வனவுகள் ஊடாக, தொழிற்றுறையின் தொழிற்பாட்டு வினைத்திறன்கள் மற்றும் பலமான ஐந்தொகைகள் ஆகிய இரண்டும் சிறப்பாக இருக்கும் என நம்பப்பட்டுள்ளது.

காப்புறுதி வழங்குநர்கள் மத்தியில் காணப்படும் கடுமையான போட்டிக்கு மேலதிகமாக, சவால்களின் உயர்ச்சியினையும் தொழிற்றுறை எதிர்கொண்டிருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் காணப்பட்ட பாதகமான காலநிலை நிலைமைகள் பிரதானமாக பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்குக் கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இதற்குக் காரணம் கடுமையாக அதிகரித்திருந்த, வெள்ளம் மற்றும் விபத்துகளுக்கான உரிமைக்கோரிக்கைகளாகும்.

அரசாங்கத்தால் செய்யப்பட்ட 'தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டத்தின்' ஊக்குவிப்புகளும் காப்புறுதிக் கம்பனிகளால் வெள்ளம் சம்பந்தப்பட்ட பல உரிமைக்கோரிக்கைகளுக்குச் செய்யப்பட்ட உடனடிக் கொடுப்பனவுகளும் தமது வாழ்வையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான காப்புறுதி ஒன்றைக் கொண்டிருப்பதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் பொதுமக்கள் மீதான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்திருக்கலாம். அத்துடன், இந்நிலைமையானது வெள்ளம் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களுக்கான காப்புறுதி ஒன்றை வழங்குவதற்காக தேசிய பேரழிவு அனர்த்த இடர்கள் பற்றிக் கவனஞ் செலுத்துவதற்கும் விசேடத்துவமான காப்புறுதி வகைகள் மற்றும் தீர்வுகளை விருத்தி செய்வதற்கும் காப்புறுதி வழங்குநர்களை ஊக்குவித்துள்ளது.

## முன்னோக்கிய வழி

மத்திய வருமான நாடொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை GDP இன் ஏற்புடைய அதிகரிப்பொன்றுடன் முன்னோக்கி நகர்கிறது. இதன் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்வதற்கு காப்புறுதித் துறை இந்நாட்டின் நிதித் துறைத் தூண்களில் ஒன்றாக இருப்பது அவசியமானதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 1 ஆந் திகதியை "தேசிய காப்புறுதி தினம்" ஆகப் பிரகடனப்படுத்தியமை, காப்புறுதி ஊடுருவலின் அதிகரிப்பு பற்றியும் அதேபோன்று தொழிற்றுறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி பற்றியும் எங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. தொழிற்றுறையால் அறிமுகப்படுத்தப்பட்ட எண்ணிலடங்கா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் IBSL இனால் நடத்தப்பட்ட சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஊடாக, பொதுமக்களுக்கு காப்புறுதி எண்ணக்கரு பற்றியும் காப்புறுதி ஒன்றைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம் பற்றியும் நன்றாகத் தெரியப்படுத்தப்பட்டு அறிவூட்டப்படும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது எதிர்காலத்தில் தேவைப்படுகின்ற காப்புறுதித் தொழிற்றுறை ஒன்றினை உருவாக்குவதற்கு சந்தேகத்திற்கிடமற்ற வகையில் உதவும்.

நாட்டில் காப்புறுதி ஊடுருவலை அதிகரிப்பதற்காக IBSL ஒத்துழைப்புடன் பல தொழிற்றுறை முயற்சிகளை இடம்பெறுகின்றன. படிப்படியாக வளர்ச்சியடைகின்ற இடம்பெயர் காப்புறுதித் திட்டமானது குறைந்த வருமான வகுதியினுள் இருக்கின்ற குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மக்களைச் சென்றடைய உதவியுள்ளது. காப்புறுதியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இடம்பெயர் காப்புறுதி ஊடாக காப்புறுதி செய்துகொண்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் என தற்போதுள்ள இடம்பெயர் காப்புறுதியை நாங்கள் மீளாய்வு செய்கின்றோம்.

காப்புறுதிக் கம்பனிகள் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 52% ஆக இருக்கின்ற பெண்களின் பாதுகாப்பு இடைவெளியை நிரப்புவதில் முன்னணி வகிபாகமொன்றை ஆற்ற முடியும். பெண்களால் வாடிக்கையாளர் பிரிவினர் மத்தியில் காப்புறுதி வகைகளை விபரமாக எடுத்துக்கூறி விற்பனை செய்வதில் முக்கியமான வகிபாகத்தினை, விசேடமாக ஏனைய பெண்களுக்கு, புதிய வாடிக்கையாளர் அடிப்படை ஒன்றினை உருவாக்கி ஆற்ற முடியும். எனவே, மக்கள் தொகையின் பல்வேறுபட்ட பிரிவினரதும் காப்புறுதித் தேவைகளை அடையாளம் காண்பதற்கும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்குப் பொருத்தமான நிதிசார் காப்புறுதி வகைகளை விருத்தி செய்வதற்கும் என தொழிற்றுறையானது அதன் இயல்திறன்களை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) இன் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (CMDP) இன் கீழும் உலக வங்கியின் (WB) நிதித் துறை நவீனப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழும் அரசாங்கத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்ற இரண்டு வெளிநாட்டு நிதியிடல் செயற்றிட்டங்களின் ஒரு பயனாளியாக IBSL இருக்கும்.

நாட்டின் நிதித் துறையை மேம்படுத்துவதற்கான பல பகுதிகளை உள்ளடக்கியிருக்கின்ற உலக வங்கிச் செயற்றிட்டத்திலிருந்து, IBSL இன் ஒழுங்குபடுத்தல் இயலளவை வலுப்படுத்துவதற்கான நிதி மற்றும் தொழினுட்ப உதவியை எதிர்பார்ப்பதுடன் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவும் எதிர்பார்க்கின்றோம். ஆசிய அபிவிருத்தி வங்கியானது நிதியாற்றலை விரிவாக்குவதற்கான உபாயமொன்றை விருத்தி செய்வதற்கான தொழினுட்ப உதவியை வழங்குவதுடன் தற்போதிருக்கின்ற ஒழுங்குபடுத்துநர் அதேபோன்று தொழிற்றுறையின் முறைப்பாடு கையாளும் நடைமுறையை மீளாய்வு செய்வதற்கும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கிணங்க முற்றடக்கமான பிணக்குகள் தீர்க்கும் நடைமுறை ஒன்றை விருத்தி செய்வதற்கும் உதவி புரியும். இந்தச் சீர்திருத்தங்கள், ஒழுங்குபடுத்துநராக எங்கள் நோக்கு மற்றும் பணியினை அடைவதற்கும், அதன் மூலம் தொழிற்றுறைக்கான மிகவும் உகந்த சூழல் ஒன்றை உருவாக்குவதற்குமான கருவியொன்றாக இருக்குமென நாங்கள் நம்புகிறோம்.

தற்போது IBSL ஆக அறியப்படுகின்ற காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குபடுத்துநர் என்ற பெயர் அடுத்த ஆண்டின் காலப்பகுதியில், "இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும். பெரும்பாலும் பின்பற்ற வேண்டிய சகல சம்பிரதாயங்களுடன் அண்மைய எதிர்காலத்தில் ஒப்புதல் பெறப்பட வேண்டிய மற்றும் சட்டபூர்வமாக்கப்பட வேண்டிய பெயர் மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

## பாராட்டு

முடிவாக, ஒழுங்குபடுத்துநரின் மிகப்பெரிய பலத்தின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் காப்புறுதித் தொழிற்றுறையில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு காப்புறுதி நடவடிக்கைகள் மீதான தீர்மானத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் சபையிலுள்ள என்னுடைய சக ஊழியர்களால் செய்யப்பட்ட தாராளமான உதவிகள் மற்றும் பெறுமதிமிக்க பங்களிப்புகள் ஆகியவற்றுக்காக எனது பாராட்டுகளைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

அத்துடன், காப்புறுதி குறைகேள் அதிகாரி, இலங்கை காப்புறுதிச் சங்கம், இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவகம் ஆகியன உள்ளிட்ட தொழிற்றுறை நாட்டதாரர்கள் தொடர்ச்சியாக எங்களுடன் பேணிய உன்னதமான ஒத்துழைப்பு மற்றும் நல்லுறவுக்காக அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

மேலும், IBSL இன் நோக்கங்களை அடைவதில் தங்களது அர்ப்பணிப்பையும் விரிதிறனையும் வழங்கியமைக்காக IBSL இன் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் அர்ப்பணிப்பை அங்கீகரித்து பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எதிர்வரும் ஆண்டுகளில் IBSL இன் நோக்கு மற்றும் பணிகளை நிறைவேற்றுவதில் அதன் மூலோபாயத்தை தொடர்ச்சியாக இவ் அணி செயற்படுத்துமென நான் உறுதியாக நம்புகிறேன்.



இந்திராணி சுகததாச
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



"IBSL ஆனது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாரிய நிதித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீதான தொழினுட்ப உதவியின் ஒரு பிரதான பெறுநராக இருப்பதைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறு நிதி முறைமை முழுவதையும் முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு, இலங்கையில் காப்புறுதித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டை இது எடுத்துக்காட்டுகிறது."

இலங்கையில் காப்புறுதித் துறையின் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து, மேற்பார்வை செய்து, வசதியளிப்பதற்கு இலங்கை காப்புறுதிச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மீளாய்வு ஒன்றையும் 2016 ஆம் ஆண்டிற்கான காப்புறுதித் தொழிற்றுறையின் செயலாற்றுகை மீதான விளக்கவுரை ஒன்றையும் வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

காப்புறுதித் தொழிற்றுறைச் சட்டத்தின் ஒழுங்குவிதியின் கீழ், காப்புறுதிதாரர்கள் மற்றும் காப்புறுதிதாரர்களாக வரக்கூடியவர்களின் நாட்டத்தைப் பாதுகாக்கின்ற நோக்கத்துடன் தொழில்முறைசார்ந்ததும் விவேகமானதுமான முறையில் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நேர்மையுடன் முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை காப்புறுதி சபை தேவைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு, சபையானது தொழிற்றுறையின் சிறந்த செயலாற்றுகை மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நிச்சயப்படுத்துவதற்காக சிறந்த அளவில் காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பை நிச்சயப்படுத்தல் என்னும் பிரதான நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

## பிரதான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை முனைப்புகள்

வியாபாரத்துடன் இணைந்துள்ள இடர்களை கருத்திலெடுத்து வடிவமைக்கப்பட்ட மூலதன வேலைச் சட்டகத்தின் விபரமானதும் உறுதியானதுமான மதிப்பீட்டின் ஒரு விளைவாக, இடர் அடிப்படையிலான மூலதன (RBC) விதிகளை நடைமுறைப்படுத்தியமை இலங்கை காப்புறுதி சபையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக இருக்கிறது. நடைமுறைப்படுத்தலின் பின்னரான விதி மற்றும் நடைமுறைகளது மதிப்பீட்டின் ஒரு மேலதிக படிமுறையாக, உலக வங்கியின் உதவியுடன் RBC இன் நடைமுறைப்படுத்தலின் விளைவுத்திறன் மற்றும் RBC விதியின் வினைத்திறன் ஆகியவற்றின் மீதான ஒரு தொடக்கநிலை மீளாய்வினை முன்னெடுத்தது. இந்த மீளாய்வானது எதிர்காலத்தில் தொழிற்றுறையின் விதி மற்றும் நடைமுறைகளை மேலும் சீராக்குவதற்கு உதவி புரியுமென நாங்கள் நம்புகிறோம்.

இவ்வாண்டில், புதிய இடர் அடிப்படையிலான மூலதன விதி நடைமுறைப்படுத்தல் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்காததற்காக இரண்டு காப்புறுதி வழங்குநர்களின் (insurers) இடைநிறுத்தல் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மீறல்கள் மீது சபையானது கண்டிப்பான அமுலாக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

காப்புறுதி ஆவணங்கள் பெற்றிருக்கவில்லை என்பதை காப்புறுதிதாரர்களின் முறைப்பாட்டிலிருந்து அறிந்துகொண்ட IBSL ஆனது, காப்புறுதி ஆவணங்களின் விநியோகத் திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் காப்புறுதிதாரர்களின் பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல்களை எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி வழங்குநர்களுக்கு வழிகாட்டலை வழங்கியமை காப்புறுதிதாரர் நாட்டங்களை ஊக்குவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தமாகக் காணப்படுகிறது.

காப்புறுதி ஆவணத்தைப் பெற்றதிலிருந்து 21 நாட்கள் எனும் நியம தணித்தல் காலப்பகுதி ஒன்றைக்கூட சகல நீண்ட கால காப்புறுதிகளுக்காகவும் IBSL அறிமுகப்படுத்தியது. இது காப்புறுதிதாரர்களால் காப்புறுதி ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அதிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பரிசீலிப்பதற்கும் அவை அவர்களுக்குத் திருப்தியாக அமையாவிட்டால் காப்புறுதியை இரத்துச் செய்ய அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் நோக்குடனும் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குநர் மற்றும் காப்புறுதித் தரகர்களின் பிரதான அலுவலர்களது வகிபாகம் மற்றும் பொறுப்புகளைக் கருத்திலெடுக்கின்ற IBSL, அந்தப் பிரதான அலுவலர்கள் கம்பனியின் வியாபார நடவடிக்கைகளின் பொதுக் கட்டுப்பாடு, வழிப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தலைமை நிறைவேற்றுத் தர நிலையினையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

RBC இற்கான அமுலாக்கத் தந்திரோபாயம் ஒன்றின் அபிவிருத்தி, வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தொடர்பில் காப்புறுதி வழங்குபவர் மற்றும் தரகர்களால் கையாளப்படும் முறைப்பாடுகள் மீதான வழிகாட்டல்களை விநியோகித்தல், காப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் மீது விசாரணைகளை நடத்துவது பற்றிய வழிகாட்டல்களை விநியோகித்தல், காப்புறுதி முகவர்கள் தொடர்பில் கூறப்பட்ட தவறான நடவடிக்கைகள் மீது விசாரணைகளை நடத்துவதில் சிறந்த நடைமுறைகளை விநியோகித்தல் மற்றும் காப்புறுதி முகவர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையை விநியோகித்தல் போன்ற தொழிற்துறைப் பரப்புகளுடன் IBSL ஆனது தனது ஒன்றிணைந்த நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் வெற்றிகரமாக இருக்கிறது.

## எதிர்கால முனைப்புகள்

IBSL ஆனது அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாரிய நிதித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீதான தொழினுட்ப உதவியின் ஒரு பிரதான பெறுநராக இருப்பதைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறு நிதி முறைமை முழுவதையும் முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு, இலங்கையில் காப்புறுதித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டை இது எடுத்துக்காட்டுகிறது. அவற்றுள் ஒன்று உலக வங்கியால் உதவியளிக்கப்பட்ட நிதித் துறை நவீனப்படுத்தல் செயற்றிட்டமாகும். இச்செயற்றிட்டத்தின் கீழ், காப்புறுதிச் சட்டங்கள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்துறை நியமங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு இருப்பதற்காகச் சீரமைப்புச் செய்வதை IBSL கருத்திற்கொண்டுள்ளது. இதுகூட மதிநுட்பமான தகவல் தொழினுட்ப மேடை ஒன்றுடன் இடர் அடிப்படையிலான மேற்பார்வை (RBS) இன் பூரணமான நடைமுறைப்படுத்தலை அடைந்துகொள்வதற்கு IBSL இற்கு உதவும். நுண்காப்புறுதிக்கான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைச் சட்டகத்தை அறிமுகப்படுத்தல் என்பது இச்செயற்றிட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட மற்றுமொரு பாரிய நடவடிக்கையாகும்.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் நுண் காப்புறுதி வகைகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பலின் உண்மையான நிலையினைப் புரிந்துகொள்வதற்காக உலக வங்கியின் உதவியுடன் நுண் காப்புறுதி மீதான ஒரு ஒழுங்குபடுத்தல் சட்டகத்தின் அபிவிருத்தி பற்றிய சந்தை ஆய்வொன்று நடத்தப்பட்டது. இவ்வாய்வானது இந்தப் பரப்புகளில் ஒழுங்குபடுத்தல் சீர்திருத்தமொன்றை ஆரம்பிப்பதற்கான ஒரு மேடையை உருவாக்கும்.

மற்றுமொரு பாரிய நிதித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டமாக இருப்பது ஆசிய அபிவிருத்தி வங்கியால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டமாகும். இதே போன்று, IBSL, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் காப்புறுதி குறைகேள் அதிகாரி அலுவலகம் (ஓம்புட்ஸ்மேன்) ஆகியவை உள்ளிட்ட பல அதிகாரசபைகளினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற காப்புறுதிதாரர் மனக்குறை தீர்க்கும் முறைமையினை நெறிப்படுத்துவதற்கு IBSL தொழினுட்ப உதவி கிடைக்கும். இந்தச் செயற்றிட்டம் பூர்த்தியடைந்ததும் காப்புறுதிதாரர்களின் மனக்குறைகளை அகற்றி அவர்களை மகிழ்விப்பதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட ஓர் செயன்முறையை இலங்கை கொண்டிருக்குமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். காப்புறுதி விழிப்புணர்வு மீதான ஒரு இடைவெளிப் பகுப்பாய்வை முன்னெடுப்பதற்கும் அதன் வாயிலாக காப்புறுதி பற்றிய பெரியளவிலான பொதுமக்கள் விழிப்புணர்வுக்கான ஒரு தந்திரோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்குமான தொழினுட்ப உதவியினைக்கூட IBSL பெற்றுக்கொள்ளும்.

## காப்புறுதித் துறையின் செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 16.22% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு காப்புறுதி வியாபாரங்களின் இரு துறைகளிலும் 16.27% எனும் மொத்த வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. எவ்வாறாயினும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் 20.40% இலிருந்து 18.26% ஆகக் குறைவடைந்திருந்தது. மாறாக, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சி 2016 ஆம் ஆண்டில் 13.18% இலிருந்து 14.73% இற்கு அதிகரித்திருந்தது. இது 2012 ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்டவற்றில் உயர்ந்தபட்ச வளர்ச்சி வீதமாகும்.

இவ்வாண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் (NITF) உழைக்கப்பெற்ற மீள்காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 35.62% இற்குத் தீவிரமாக அதிகரித்திருந்தது. இது பிரதானமாக, பொது மீள்காப்புறுதி வியாபாரத்தின் வெவ்வேறுபட்ட உப வகுப்புகளின் அகன்ற எல்லையின் ஏற்பிசைவு மற்றும் பொதுக் காப்புறுதித் துறையில் சித்தரிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி என்பவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ளது.

தொழிற்துறையில் உறுதியான வளர்ச்சி வீதங்கள் காணப்பட்ட போதிலும், உட்பாய்வு மட்டம்

தொடர்ந்தும் 1.21% எனும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் நீண்ட காலத்திற்கானது 0.54% மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கானது 0.67% எனவும் காணப்பட்டது. எவ்வாறாயினும், IBSL இன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் செயல் எல்லையினுள் வராத காரணத்தால் விவசாய, கமத்தொழில் காப்புறுதி சபை மற்றும் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய இரு நிறுவனங்கள் மூலமும் உழைக்கப்பெற்ற காப்புறுதிக் கட்டுப்பணமானது உட்பாய்வு வீதத்தைக் கணிப்பிடுவதற்காகக் கருதிலெடுக்கப்படவில்லை. அதேபோன்று, நுண் காப்புறுதி நிறுவனங்களால் உழைக்கப்பெற்ற காப்புறுதிக் கட்டுப்பணம் மற்றும் நுண் நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன் பாதுகாப்புக் காப்பீடுகள் மீதான கட்டுப்பணக் கட்டணங்கள் ஆகியனவும் உட்பாய்வு வீதத்தைக் கணிப்பிடுவதற்காகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. நபர் ஒருவருக்கான மொத்தக் கட்டுப்பணத்தினால் (GWP) வகைகுறிக்கப்படும் காப்புறுதி அடர்த்தி 5865 இலிருந்து 2016 ஆம் ஆண்டில் 6743 ஆக உயர்வடைந்திருக்கிறது. இது 15% அதிகரிப்பாகும்.

காப்புறுதித் தொழிற்றுறையின் சொத்துக்களது பெறுமதி 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 466,707 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 டிசெம்பர் 31 இல் 12.97% உறுதியாக வளர்ச்சியடைந்து ரூ. 527,228 மில்லியன் பெறுமதியினைக் காட்டியிருந்தது. இந்தத் தொகையில் பெரும்பகுதியான ரூ. 345,675 மில்லியனானது நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் தொகையாக இருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 26.6% என்னும் நீண்ட கால காப்புறுதிச் சொத்தின் வளர்ச்சி வீதமானது 2016 ஆம் ஆண்டில் 10.5% இற்குக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டில் 13% மறைக் கணியமாகக் காணப்பட்ட பொதுக் காப்புறுதிக்கான சொத்துப் பெறுமதி 2016 ஆம் ஆண்டில் 16% என்னும் நேர்க் கணியத்திற்கு அதிகரித்திருக்கிறது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரமானது இவ்வாண்டில் திருப்திகரமாகச் செயற்பட்டு 63,495 மில்லியன் ரூபா மொத்தக் கட்டுப்பணத்தினை உழைத்திருந்தது. நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களால் செலுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கைத் தொகை 2016 ஆம் ஆண்டில் ரூ. 22,622 மில்லியனாக இருந்தது. இது 2015 ஆம் ஆண்டின் ரூ. 20,934 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8% அதிகரிப்பாகும். மொத்த நீண்ட கால காப்புறுதி உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவில், முதிர்வுப் பயன்கள் தொகையான ரூ. 12,712 மில்லியனே அதிகூடிய தொகையாக இருக்கிறது. இவ்வாண்டில் செலுத்தப்பட்ட இயலாமைப் பயன்கள் 2015 ஆம் ஆண்டின் மொத்தப் பெறுமதியான 591 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 37% இனால் வளர்ச்சியடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டுகூட, காப்புறுதிக் கட்டுப்பணம் செலுத்தாமை (Policy Lapses) உயர் வீதமொன்றில் காணப்பட்டது. புதிய நீண்ட கால காப்புறுதிக் கட்டுப்பணம் செலுத்தாதோர் எண்ணிக்கை 96,502 ஆகப் பதிவுசெய்யப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையான 93,008 உடன் ஒப்பிடுகையில் 3.76% அதிகரிப்பைக் காட்டுகிறது. மேலும், மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் செலுத்தாதோரில் அதிகரிப்பொன்று இருப்பதைப் போல நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கான ஒரு எதிர்மறை உணர்வுச் சித்தரிப்பும் காணப்பட்டது.

பொதுக் காப்புறுதித் துறையை எடுத்துக்கொண்டால், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 14.73% இனால் வளர்ச்சியடைந்து மிகவும் ஒரு நேர்மறையான தோற்றத்தை வழங்கியதை எங்களால் காணக்கூடியதாக இருந்தது. சிறந்த செயலாற்றுகைக்காக ஒன்றிணைந்தமை காரணமாக ஆண்டின் காலப்பகுதியில் கையகப்படுத்தல்களும் சேர்க்கைகளும் (Mergers) ஏற்பட்டிருந்ததைக்கூட எங்களால் காணக்கூடியதாக இருந்தது.

வழமையாக மோட்டார் காப்புறுதி வியாபாரமானது பொதுக் காப்புறுதித் துறையில் முதன்மைமிக்க ஒன்றாக விளங்குகிறது. இது பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணத்தில் 62% ஆக இருக்கிறது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட வளர்ச்சி வீதமான 19.10% ஆனது 2016 ஆம் ஆண்டில் 15.64% இற்குக் குறைவடைந்திருப்பதை எங்களால் காணக்கூடியதாக இருந்தது. பொதுக் காப்புறுதித் துறையின் உட்பிரிவுகளான தீ அபாயக் காப்புறுதி, உடல்நலக் காப்புறுதி, நானாவிதக் காப்புறுதி மற்றும் SRCC&T காப்புறுதி வியாபாரங்கள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்திருக்கின்றன.

தீ அபாயக் காப்புறுதி 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.79% இனால் வளர்ச்சியடைந்திருந்தது. இதற்கு மீள உருவாகியிருந்த இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இருந்திருக்கலாம். 2015 ஆம் ஆண்டில் 3.37% என்ற மறைப் பெறுமானத்தைக் கொண்டிருந்த நானாவித வகைக் காப்புறுதியின் வளர்ச்சி வீதம் இவ்வாண்டில் 10.06% என்ற நேர்ப் பெறுமானத்தில் அதன் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. 2016 ஆம் ஆண்டும்கூட உரிமைக்கோரிக்கைகள் ஒரு உயர் வீதத்தில் செலுத்தப்பட்டிருந்தன. இது பிரதானமாக இலங்கையின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டினை விட இவ்வாண்டில் 3.83% வீதத்தினால் நிகர உரிமைக்கோரிக்கை (Claim) விகிதம் அதிகரித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

## தரகு வியாபாரத்தின் செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டில் 8.89% வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்த தரகுக் கம்பனியின் மொத்த கட்டுப்பணத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் அது 2% இனால் சரிவடைந்திருந்தது. மொத்தக் கட்டுப்பணத்திற்கான தரகுக் கம்பனிகளின் பங்களிப்பும் 12.44% இற்குக் குறைவடைந்திருக்கிறது. இது 2015 ஆம் ஆண்டில் 13.28% ஆகக் பதிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பங்களிப்பு பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் ஆகியவற்றின் முறையே 98.52% மற்றும் 1.47% ஆகியவற்றின் ஊடாக உழைக்கப்பெற்ற கட்டுப்பண வருமானத்தை உள்ளடக்குகிறது.

## பாராட்டுதல்

முடிவாக, IBSL இன் நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கு பலம்மிக்கதொரு மூலமாகக் கருதக்கூடியவர்களும் எங்களுக்கு வழிகாட்டல்களையும் உதவி - ஒத்தாசைகளையும் வழங்கியவர்களுமான தலைவர், சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் சபைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக IASL, SLIBA மற்றும் SLII ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் அலுவலகப் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக, இவ்வாண்டிற்காக அடையாளங் காணப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தங்களது அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் வழங்கிய இயலுமைமிக்க எமது பணிப்பாளர் அணியினர் மற்றும் அனுபவமிக்க அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுதல்கள் உரித்தாகட்டும்.

Damayanti Fernando

தமயந்தி பெர்னாண்டோ
*பணிப்பாளர் நாயகம்*



# சபை அங்கத்தவர்களும் அலுவலர்களும்

# சபை அங்கத்தவர்கள்




[1] திருமதி. இந்திராணி சுகததாச - தலைவர்
[2] திரு. ஏ.ஆர். தேசப்பிரிய
[3] திரு. பி. சமரசிறி
[4] திரு. டி.என்.ஆர். சிறிவர்த்தன
[5] தேசபந்து கலாநிதி அலி அஸ்கர் சாபிர் குலம்ஹுசைன்
[6] திரு. ஜெரோமி போலிங்

# சபை அங்கத்தவர்களின் அறிமுகம்

## [1] திருமதி. இந்திராணி சுகததாச - தலைவர்

திருமதி. இந்திராணி சுகததாச, ஒரு சிரேஷ்ட சிவில் சேவையாளராவார். இவர் இலங்கை நிர்வாக சேவை (SLAS) உறுப்பினராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். இவரது 35 வருட கால அரசாங்க சேவையில் அமைச்சுக்களிலுள்ள பல சிரேஷ்ட நிலைகளில் கடமையாற்றியிருந்ததுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றியிருந்தார்.

தற்போது, இலங்கை காப்புறுதி சபையின் தலைவராகச் சேவையாற்றுகின்ற அதேவேளை அவர் தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி. மற்றும் வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை ஆகியவற்றின் ஒரு பணிப்பாளராகவும் தொழிற்படுகிறார். அவர் முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கைத் தேயிலை சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய இளைஞர் மன்றம், தேசிய பெருந்தோட்ட முகாமை நிறுவகம் மற்றும் தேயிலை, இறப்பர், தெங்கு ஆராய்ச்சி நிறுவகங்கள் ஆகியவற்றின் ஓர் உறுப்பினராகவும் தொழிற்படுகிறார்.

திருமதி. சுகததாச, கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து சமூக விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டத்தையும் அவுஸ்திரேலியாவின் மோனஸ் பல்கலைக்கழகத்திலிருந்து முதுமாணிப் (MBA/MPA) பட்டத்தையும் பெற்றிருக்கிறார். இவர் Hubert H. Humphrey Fellowship (Fulbright) இன் ஒரு உறுப்பினராகவும் இருக்கிறார்.

2013 இல் வழங்கப்பட்ட அவுஸ்திரேலியாவின் Alumni Excellence விருது, முகாமைத்துவ நிறுவனத்தில் பெண்கள் அமைப்பினால் வழங்கப்பட்ட "Inspirational Woman 2014/15" விருது ஆகியவை உட்பட அவருக்கு வழங்கப்பட்ட பல விருதுகளின் ஊடாக அரசாங்க சேவைக்கான அவரது பங்களிப்பும் நாட்டின் எண்ணிறைந்த துறைகளில் அவர் வகித்த தலைமைத்துவமும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## [2] திரு. ஏ.ஆர். தேசப்பிரிய

திரு. ஏ.ஆர். தேசப்பிரிய, 30 வருட கால அரசாங்க சேவை அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். அவர் தற்போது இலங்கை நிர்வாக சேவையின் ஓர் சிறப்புத் தர அதிகாரி ஆவார்.

இவர் தனது சேவைக் காலத்தில், அரச துறையின் பல்வேறுபட்ட செயற்பாட்டுப் பகுதிகளிலும் சேவையாற்றியிருந்ததுடன் பொதுத் திறைசேரியின் பணிப்பாளர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிகளையும் வகித்திருக்கிறார்.

இவருடைய தற்போதைய பதவியை பொறுப்பேற்பதற்கு முன் இவர் திறைசேரிப் பிரதிச் செயலாளராகப் பணியாற்றியிருந்ததுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியிருந்தார். இவர் பிரதேச அபிவிருத்தி வங்கியின் சபைப் பணிப்பாளராகவும் நலன்புரி நன்மைகள் சபையின் ஒரு உறுப்பினராகவும் சேவையாற்றியிருந்தார்.

திரு. ஏ.ஆர். தேசப்பிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து அரச நிர்வாகத்தில் விஞ்ஞானமாணி பட்டமொன்றையும் சுலோவேனியா நாட்டின் லுப்லிஜனா பல்கலைக்கழகத்தில் இருந்து MBA பட்டத்தினையும் பெற்றிருக்கிறார்.

## [3] திரு. பி. சமரசிறி

திரு. பி. சமரசிறி, தற்போது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை மற்றும் நிதித் துறை ஒழுங்குபடுத்தலை மேற்பார்வை செய்யும் பிரதி ஆளுநராக இருக்கிறார். இந்த பிரதி ஆளுநர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவதற்கு முன், இவர் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர், நாணய சபைச் செயலாளர், இணக்க அதிகாரி மற்றும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் போன்ற பல சிரேஷ்ட நிலைகளில் சேவையாற்றியிருந்தார். அத்துடன், இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை (2009.01.29 தொடக்கம் 2015.01.20 வரை) இன் தலைவராகவும் இலங்கை வங்கியியலாளர் நிறுவகத்தின் (2011.09.27 தொடக்கம் 2015.01.20 வரை) துணைத் தலைவராகவும் சேவையாற்றியிருந்தார். தற்போது, இவர் இலங்கை வங்கியியலாளர் நிறுவகம் மற்றும் இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் ஆகியவற்றின் தலைவர் பதவிகளையும், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற "அபி வெனுவென் அபி நிதியத்தின்" முகாமைச் சபை ஆகியவற்றின் உறுப்பினர் பதவிகளையும் வகிக்கிறார்.

திரு சமரசிறி, கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் கலைமாணி சிறப்புப் பட்டத்தையும்

அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றிருக்கிறார். திரு. சமரசிறி, இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரம், பொருளாதாரக் கொள்கைகள், வங்கிகள் மற்றும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வையும், நிதி முறைமை ஸ்திரத்தன்மை, நிறுவன ஆளுகை, நாணய முகாமைத்துவம், வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கைகள், நிதிப் புலனாய்வு, நிதிசார் அறிக்கையிடல் மற்றும் பிரதேச அபிவிருத்தி ஆகிய பரப்புகளில் 35 வருட கால அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்.

திரு. சமரசிறி நான்கு புத்தகங்களை எழுதியுள்ளார். அவையாவன, -'මුදල් ගනුදෙනු, බැංකු සහ ආර්ථිකය' (2010 - ஆறு மீள்பதிப்புகள் / ஒரு திருத்திய பதிப்பு), 'මූලික ආර්ථික විද්‍යා මූලධර්ම විග්‍රහය' (2011 - ஒரு மீள்பதிப்பு / ஒரு திருத்திய பதிப்பு), 'ආර්ථික විද්‍යා මූලධර්ම සහ ප්‍රතිපත්ති' (2013 - ஒரு மீள்பதிப்பு) மற்றும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட (2017) "நிதி முறைமை பற்றிய ஒரு ஆய்வு". அத்துடன் பொருளாதாரம் மற்றும் நிதித் தலைப்புகளில் பல்வேறு பதிப்பு ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை இவர் வெளியிட்டுள்ளார்.

### [4] திரு. டி.என்.ஆர். சிறிவர்த்தன

திரு. டி.என்.ஆர். சிறிவர்த்தன, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் காலைமாணி சிறப்புப் பட்டத்தையும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் (LLB) பட்டத்தையும் பெற்றிருப்பதுடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள கார்டிப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து தகவல் தொழினுட்பவியல் மற்றும் புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச வியாபாரத்தில் முதுமாணி (LLM) பட்டத்தையும் பெற்றிருகிறார். இவர் தொழில்முறை ரீதியான ஓர் சட்ட வழிக்கறிஞரும் ஆவார். திரு. சிறிவர்த்தன, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 1988 ஆம் ஆண்டில் இணைந்துகொண்டார். தற்போது, அவர் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிக்கிறார். திரு. சிறிவர்த்தன, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு ஆகியவற்றின் ஓர் பதவிவழி உறுப்பினராகவும் இருக்கிறார்.

### [5] தேசபந்து கலாநிதி. அலி அஸ்ஹர் சாபிர் குலம்ஹுசைன்

தேசபந்து கலாநிதி அலி அஸ்கர் சாபிர் குலம்ஹுசைன் அவர்கள் தனது கலாநிதிப் பட்டத்தை யப்பான் டோக்கியோவிலும் இளமாணிப் பட்டத்தை இலண்டன் கிங்ஸ் கல்லூ ரியிலும் பெற்றிருந்தார். கலாநிதி குலம்ஹுசைன் இற்கு "தேசபந்து மானவகிதாவதி, லங்காபுத்ர" என்னும் மதிப்பார்ந்த நாமமும் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இவர் இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவகத்தின் ஒரு பணிப்பாளராகவும் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் சேவையாற்றுகிறார்.

கலாநிதி குலம்ஹுசைன், ஆதம்ஸ் கப்பிட்டல் பிஎல்சி., ஆதம் காபண் லிமிட்டெட், சிலோன் அன்ட் /பொறின் டிரேட்ஸ் பிஎல்சி., ஆதம்எக்ஸ்போ (பிரை) லிமிட்., ஸ்பைஸ் ஒப் லைவ் (பிரை) லிமிட், நெட்வேர்க் கொமியுனிகேசன் (பிரை.) லிமிட்., ஆதம் மெட்டல் (பிரை.) லிமிட்., ஆதம் எயார் கண்டிஷனர்ஸ் (பிரை.) லிமிட்., ஆதம் ஆட்டோமொபைல்ஸ் (பிரை.) லிமிட்., கொழும்பு அப்போதகறீஸ் கம்பனி லிமிட்., வர்த்தக வியாபார சம்மேளனம், ஹமில்டன் றிசோட் (பிரை.) லிமிட்., சிலோன் மற்றும் /பொறின் டிரேட் செர்ஜிடெக் (பிரை.) லிமிட்., வரையறுக்கப்பட்ட கொழும்பு சரக்கு மற்றும் போக்குவரத்துக் கம்பனி, டொட்வெல் அன்ட் கம்பனி லிமிட்டெட் ஆகியவற்றின் ஒரு பணிப்பாளராக சேவையாற்றுகிறார்.

### [6] திரு. ஜெரோமி போலிங்

திரு ஜெரோமி போலிங், லண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் ஓர் உறுப்பினர் என்பதுடன் அவர் தனது வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தை சிட்னி பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர், இலங்கை, அவுஸ்திரேலியா மற்றும் மாலைதீவுக்கிடையிலான காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பல வகைப்பட்ட காப்புறுதி / மீள்காப்புறுதி தரகர்களுக்காக பணியாற்றியுள்ளதுடன் காப்புறுதித் துறையில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் கொண்டிருக்கிறார்.

தற்போது, திரு. போலிங் அவர்கள் என்.எச்.ஜே. இடர் முகாமைத்துவ சேவைகள் பி./லி., ஒக்டாகொன் கன்செல்ட்டன்ஸ் பி./லி. மற்றும் என்டிலெஸ் அவுட்டோர்ஸ் பி./லி. ஆகியவற்றின் ஒரு பணிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி




[1] திருமதி. தமயந்தி பெர்னாண்டோ (பணிப்பாளர் நாயகம்)
[2] திருமதி. சாமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் - மேற்பார்வை)
[3] திருமதி. சாயா விதானவாசம் (பணிப்பாளர் - நிதியும் நிர்வாகமும்)
[4] திரு. ரணில் அங்குணவெல (பணிப்பாளர் - சட்டம்)
[5] திரு. சுதீரா சேனாரத்ன (பணிப்பாளர் - விசாரணை)
[6] திரு. ராஜன் நிருபசிங்கம் (உதவிப் பணிப்பாளர் - சட்டம்)
[7] திரு. பிம்சர விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் - சந்தை அபிவிருத்தியும் வெளிவாரி உறவுகளும்)
[8] செல்வி. சரோஜா குணதிலக (உதவிப் பணிப்பாளர் - மேற்பார்வை)

# அலுவலர்கள்




[1] திருமதி. டி.டபி.எஸ்.எஸ். சுபுலீ
[2] திருமதி. மெரினா டயஸ்
[3] திருமதி. சந்திமா கம்புருகமுவ
[4] திருமதி. சுஜீவா ரணசிங்க
[5] திருமதி. துசாரி விஜேகுணவர்த்தன
[6] திருமதி. கௌசாலி தயாரத்ன
[7] திரு. எத்திராஜ் சிறிகாந்தன்
[8] திருமதி. உபேந்திரா செனவிரத்ன
[9] திரு. லக்ஸ்மன் விஜேசிங்க
[10] திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
[11] திரு. சமிந்த லால் குமார
[12] செல்வி. உபலக்ஷி ரணசிங்க
[13] திருமதி. லக்மாலி அல்கம
[14] திருமதி. ரூவினி லியனகே
[15] திருமதி. தனுஜா அன்ரனி

# அலுவலர்கள்




[16] திருமதி. லசந்தி தொட்டஹேவா
[17] திரு. சமன் சேனாதீர
[18] திருமதி. வீணா தினேகா
[19] திரு. ரொஷான் த கொஸ்தா
[20] திருமதி. திலினி வாகிஸ்ரா
[21] திருமதி. விந்தியானி துலபிட்டிய
[22] திருமதி. பிரியங்கி த சில்வா
[23] திருமதி. மல்காரி விக்கிரமசிங்க
[24] திருமதி. சியாமலி அத்தநாயக்க
[25] திருமதி. சானிகா நாணயக்கார
[26] திருமதி. கோகிலா சிறிவர்த்தன
[27] திரு. சரித்த விக்கிரமசிங்க
[28] திருமதி. சதுரி பண்டார
[29] திரு. சனத் உதயங்க
[30] திருமதி. சசினி பிரேமலால்
[31] திரு. நளின் தலகல
[32] திருமதி. தேசிகா ரத்நாயக்க (படத்தில் இல்லை)
[33] திருமதி. ஹசினி பெரேரா (படத்தில் இல்லை)



# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 22
புள்ளிவிபர மீளாய்வு 32
தொழிற்பாடுகளின் மீளாய்வு 66

# பொது மீளாய்வு

## சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் சீரமைப்பு நிருவாகம்

### சட்டவாக்கம்

காப்புறுதிதாரர்கள் மற்றும் எதிர்காலக் காப்புறுதிதாரர்கள் ஆகியோரின் நாட்டங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் நேர்மையாகவும் தொழில்முறைரீதியாகவும் விவேகமான முறையிலும் இலங்கை காப்புறுதி வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துவதே இலங்கை காப்புறுதி சபையின் (இதன் பிறகு "சபை" எனக் குறிப்பிடப்படும்) நோக்கமும் பொறுப்பும் ஆகும்.

காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதித் தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் சேதச் சீராக்கங்கள் போன்றவற்றின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையுடன் சம்பந்தப்பட்ட சட்டரீதியான வேலைச் சட்டகத்தை 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறைச் சட்ட ஒழுங்குவிதிகள் (இதன் பிறகு "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) தருகின்றன.

இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதி (திருத்தச்) சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

### சார்நிலைச் சட்டவாக்கம்

இவ்வாண்டில் இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சார்நிலைச் சட்டவாக்கமானது, கீழே ஒழுங்குபடுத்தல் சீரமைப்புகளின் கீழ் விபரமாகத் தரப்படுகிறது.

**ஒழுங்குபடுத்தல் சீரமைப்புகள்**

**விதிகள்**

**காப்புறுதித் தரகர் ஒருவரால் செலுத்தப்படும் ஆகக்குறைந்த பங்கு மூலதனம்**

சபையானது 2016 யூன் 1 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 1969/40 இல் ஆகக்குறைந்த குறிப்பிடு மூலதன விதிகள் - 2016 இனை பிரசுரித்திருந்தது. சட்டத்தின் கீழ் தரகர் ஒருவராகப் பதிவுசெய்ய விரும்புகின்ற எந்தவொரு நபரும் இரண்டு மில்லியன் ஐநூறாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஒரு தொகையை கம்பனியின் குறிப்பிடு மூலதனமாகப் பேணவேண்டுமெனத் இவ்விதி தேவைப்படுத்துகிறது.

**சட்டப் பிரிவு 96A இன் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்**

**(i) வழிகாட்டல் இல. 2 இற்கான திருத்தம் - காப்புறுதிப் பத்திரம் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் அறிவிப்பு**

காப்புறுதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் காப்புறுதிதாரர்களிடமிருந்து அப்பத்திரம் கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்தும் அறிவிப்பினைப் எழுத்து மூலமாகப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் நடைமுறை ரீதியான கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு, அதனைத் திருத்தும் நோக்குடன் அக்கால எல்லையைச் சபையானது 7 நாட்களிலிருந்து 14 நாட்களாகத் திருத்தியுள்ளது. அதாவது, காப்புறுதிப் பத்திரமொன்று விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் காப்புறுதிதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் எழுத்துமூல அறிவிப்பை காப்புறுதி வழங்குநர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**(ii) வழிகாட்டல் இல. 08 – நீண்ட கால காப்புறுதிகளுக்கான நியம தணித்தல் காலப்பகுதி**

நீண்ட கால காப்புறுதிகளுக்கான நியம தணித்தல் காலப்பகுதி ஒன்று இல்லாமை அவதானிக்கப்பட்டிருந்தது, எனவே சபையானது சட்டப் பிரிவு 96 A இன் அடிப்படையில் சகல நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளுக்கும் ஓர் வழிகாட்டலை வழங்கியது. அதாவது, நீண்டகால காப்புறுதிதாரர்கள் காப்புறுதிப் பத்திரத்திலுள்ள விதிகளையும் நிபந்தனைகளையும் பரீட்சிப்பதற்காக காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்கள் எனும் காலப்பகுதி (தணித்தல் காலப்பகுதி / free-look period என அழைக்கப்படுகின்ற) ஒன்று வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர்கள் அக்காலப்பகுதியினுள் காப்புறுதியை இரத்துச் செய்வார்களாயின் காப்புறுதி வழங்குநர் பணத்தை மீளளிப்புச் செய்தலும் வேண்டும்: -

a) ஒதுக்கீடு செய்யப்படாத கட்டுப்பணம்
b) அடுத்த விலைமதிப்புத் திகதியில் அலகு விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் அலகுகளின் பெறுமதி (ஏதாவது இருப்பின்)
c) கழிக்கப்பட்டிருக்கும் ஏதாவது காப்புறுதிக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதி ஒப்பந்தப் பத்திரக் கட்டணங்கள் செலவிடப்பட்டிருக்கும் மருத்துவச் செலவுகள்

மேலே தரப்பட்ட வழிகாட்டலானது அலகு - கூட்டுக் காப்புறுதிகள்

உள்ளிட்ட சகல நீண்ட கால காப்புறுதிகளுக்கும் ஏற்புடையதாகும்.

**(iii) வழிகாட்டல் இல. 9 – காப்புறுதி வழங்குநர் மற்றும் காப்புறுதித் தரகர் ஒருவரின் முதன்மை அலுவலராக நியமிக்கப்பட வேண்டிய நபர் ஒருவரின் வகிபாகம், பொறுப்பு மற்றும் தகைமைகள்**

காப்புறுதி வழங்குநர் மற்றும் காப்புறுதித் தரகர் ஒருவரது முதன்மை அலுவலரின் வகிபாகம் மற்றும் பொறுப்பு மீதான தொழிற்றுறை நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, சபையினால் சட்டப் பிரிவு 96 A இன் அடிப்படையில் சகல காப்புறுதி வழங்குநர் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கு விநியோகிக்கப்பட்ட புதிய வழிகாட்டல் பின்வருமாறு:

*"காப்புறுதி வழங்குநர் ஒருவரின் அல்லது காப்புறுதித் தரகர் ஒருவரின் முதன்மை அலுவலர் ஆனவர் தலைமை நிறைவேற்று அதிகாரியாகவோ அல்லது முகாமைப் பணிப்பாளராகவோ அல்லது கம்பனியின் பணிப்பாளர் சபையின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான தனிநபர் ஒருவராகவோ இருத்தல் வேண்டும்."*

மேலுள்ள வழிகாட்டல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயல்வலுப்பெற்ற போதிலும், காப்புறுதி வழங்குநர் மற்றும் காப்புறுதித் தரகர்கள் மேலுள்ளவற்றுடன் இணக்கமடைவதற்காக அவர்களுக்கு 2017 மே மாதம் 12 ஆந் திகதி வரை சலுகைக் காலம் ஒன்று வழங்கப்பட்டது.

### தீர்மானம் # 1

இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL) மற்றும் காப்புறுதி வழங்குநரால் செய்யப்பட்ட குறிப்புரைகளை மீளாய்வு செய்து சபையினால் திருத்தம் செய்யப்பட்ட தீர்மானம் # 1

தீர்மானம் # 1 இற்குச் செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

- தொழினுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதி ஆகியவற்றின் வீதமொன்றாக உயர்ந்தபட்ச நிறுவனக் கடன் முதலீடு 5% இலிருந்து 10% இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்களால் பிணைக்கப்பட்ட பிணையங்கள் (asset backed securities) தொடர்பில் தொழினுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்ட கால காப்புறுதி ஆகியவற்றின் 5% இலிருந்து 10% அல்லது தனி வழங்கலின் 15%, இதில் எது குறைவானதோ அது அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

  எவ்வாறாயினும், நிறுவனக் கடன் தொடர்பில், ஆகக்குறைந்த 5% தொழினுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியானது "A" அல்லது அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட சாதனங்களில் (instruments) முதலீடு செய்யப்படல் வேண்டும்.

- தொழினுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதி ஆகியவற்றின் வீதமொன்றாக உயர்ந்தபட்ச அலகு நம்பிக்கை நிதி / கூட்டு நிதி முதலீடு 5% இலிருந்து 10% இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆகக்குறைந்தது 2.5% ஆனது முதலீட்டுத் தர தரப்படுத்தலைக் கொண்டிருக்கும் சாதனங்களில் இருத்தல் வேண்டும்.

- தொழினுட்ப ஒதுக்கம் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதி ஆகியவற்றின் வீதமொன்றாக சகல தொடர்புடைய கம்பனிகளிலும் செய்யப்படும் உயர்ந்தபட்ச முதலீடுகள் 7.5% இலிருந்து 10% இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

- ஒரு புதிய முதலீட்டு உருப்படியாக அதாவது பாராளுமன்றச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஏதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதாவது உரிமம் பெற்ற விசேட வங்கியுடனான வைப்புகளுக்கு 20% வரையான தொழினுட்ப ஒதுக்கமும் 20% வரையான நீண்ட கால காப்புறுதி நிதியும் அல்லது வங்கியிலுள்ள பங்குதாரர்கள் நிதியின் 15%, இதில் எது குறைந்ததோ அது அனுமதிக்கப்படுகிறது.

- ஒரு புதிய முதலீட்டு உருப்படியாக அதாவது நிறுவனம் (உரிமம்) / அல்லது கம்பனிகளின் குழுமம் ஒன்றின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்ட வைப்புகள் தவிர்ந்த, 20% வரையான தொழினுட்ப ஒதுக்கமும் 20% வரையான நீண்ட கால காப்புறுதி நிதியும் அனுமதிக்கப்படுகிறது.

### சுற்றறிக்கைகள்

**சுற்றறிக்கை # 36 – வெளிநாட்டு உடல்நலக் காப்புறுதி மீதான தெளிவுபடுத்தல்**

சுற்றறிக்கை # 36 இலும் அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட தகவல்களிலும் சொல்லப்பட்டுள்ள அதிகாரமளித்தல் கட்டணம் தொடர்பாக இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கத்தினால் (SLIBA) முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு, சபையானது சுற்றறிக்கை # 36 தொடர்பில் பின்வரும் தெளிவுபடுத்தல்களை வழங்கியது:

(a) சுற்றறிக்கை # 36 இல் குறிப்பிடப்பட்ட புதுப்பித்தல் கட்டணம் அதிகாரம் வழங்கலின் பின்னரான முதல் 3 வருடங்களுக்கு அறவிடப்பட மாட்டாது.

(b) அதன் பின்னர், அந்த புதுப்பித்தல் கட்டணம் வருடமொன்றுக்கு ரூ. 25,000/- ஆக இருக்கும்.

**சுற்றறிக்கை # 38 மற்றும் #39 - இலங்கை காப்புறுதி சபைக்கு காப்புறுதிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல்**

இச்சுற்றறிக்கைகள் பின்வருவனவற்றைச் செய்வதற்குச் சகல காப்புறுதிக் கம்பனிகளையும் தேவைப்படுத்துகிறது:

(1) ஒரு புதிய காப்புறுதியை அறிமுகப்படுத்திய திகதி குறித்த தகவலை சபைக்குத் தெரிவித்தல்:

IASL இன் கோரிக்கையை மீளாய்வு செய்ததன் பின்னர், காப்புறுதியை அறிமுகப்படுத்துவதற்கு முன், காப்புறுதி ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட காலப்பகுதி 3 மாதங்களிலிருந்து 45 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் இது நீண்ட கால காப்புறுதிகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். பொதுக் காப்புறுதிகள் அக்காப்புறுதிகளின் அறிமுகப்படுத்தல் திகதிக்கு முன்னர் சபையில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

(2) பொதுக் காப்புறுதிகள் (காப்புறுதி ஆவணங்கள், முன்மொழிவுப் படிவம், விளம்பரங்கள் போன்றவை) தொடர்பான ஆவணங்களைச் சபைக்குச் சமர்ப்பிப்பது அதனை அறிமுகப்படுத்தும் திகதியிலாகும்.

(3) மேலே (2) இல் கூறப்பட்ட உருப்படிகளுக்கு மேலதிகமாக நீண்ட கால காப்புறுதிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் குறிப்பிட்ட சில ஆவணங்களைச் சமர்ப்பிப்பது, அக்காப்புறுதிகளின் அறிமுகப்படுத்தல் திகதிக்கு ஆகக்குறைந்தது 45 நாட்களுக்கு முன்னராகும். நீண்டகால காப்புறுதிகள் தொடர்பாக அக்காப்புறுதிகளின் அறிமுகப்படுத்தல் திகதிக்கு ஆகக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட சில ஆவணங்கள்கூட இருக்கின்றன, அவையாவன:

a. முன்மொழிவுப் படிவத்திற்கு மேலதிகமாக விற்பனை மையத்தில் காப்புறுதிதாரர்களால் ஒப்பமிடப்படவேண்டிய வேறு ஏதாவது ஆவணங்கள்

b. பிரசுரங்கள் மற்றும் ஏனைய வேறு விற்பனை / சந்தைப்படுத்தல் விடயங்கள் (உதாரணம்: விலைமனு, விளக்கவுரைகள்)

c. காப்புறுதிக்கான ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டுச் சான்றிதழை வழங்கும் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளருக்கு சகல தொடர்புடைய ஆவணங்களும் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்ற முதன்மை அலுவலரிடமிருந்தான உறுதிமொழி மற்றும் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சகல ஆவணங்களிலும் தரப்பட்ட விபரங்கள் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டுச் சான்றிதழில் உள்ள தகவலுடன் ஒத்திருக்கிறது என்பதும்

d. கூறப்பட்ட காப்புறுதி / காப்புறுதிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் எந்தவொரு விடயமும் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்ற முதன்மை அலுவலரிடமிருந்தான எழுத்துமூல உறுதிமொழி

**மீள்காப்புறுதி நிறைவேற்றத்திற்குப் பொருத்தமான திருத்தப்பட்ட விதிகளும் நிபந்தனைகளும்**

காப்புறுதிக் கம்பனிகளின் மீள்காப்புறுதி தயார்படுத்தல்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் வேலைச்சட்டகம் ஒன்றை அணுகுதல் உட்படச் செய்யப்பட்ட சீரமைப்புகளை உறுதிப்படுத்துவதற்காக சபையானது மீள்காப்புறுதி நிறைவேற்றத்திற்குப் பொருத்தமான விதிகளையும் நிபந்தனைகளையும் திருத்தம் செய்துள்ளது.

மேலே கூறப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குச் செய்யப்பட்டிருக்கின்ற முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

**மீள்காப்புறுதிக் குழுக்கள்**

சபையானது அத்தகைய தயார்படுத்தல்களைக் கருத்திற்கொள்ளும் பொருட்டு, கூறப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த செயல்தரத்தினை முன்னெடுக்கின்ற ஒவ்வொரு மீள்காப்புறுதி வழங்குநரும் பரிந்துரைக்கப்பட்ட மீள்காப்புறுதிக் குழுவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட கோரிக்கையானது அத்தகைய மீள்காப்புறுதி குழுவுடனான நிறைவேற்றத்திற்கு ஆகக் குறைந்தது நான்கு வாரங்களுக்கு முன் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

**வரையறையற்ற பொறுப்புக் காப்பீடுகள்**

WCI காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழுள்ள, மோட்டார் காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் பொறுப்புக் காப்பீட்டின் கீழ் மூன்றாம் தரப்பு உடல் காயங்கள் தவிர்ந்த சகல வகுப்புகள் மற்றும் உப வகுப்புகளுக்காகவும் நேரடிக் காப்புறுதி வழங்குநர், அங்கு வரையறையற்ற மீள்காப்புறுதிப் பாதுகாப்பு இருந்தால் மட்டும் வரையறையற்ற காப்பீட்டை வழங்கலாம்.

**மீள்காப்புறுதி / இடர் மாற்ற நிகழ்ச்சித்திட்டம்**

காப்புறுதி வழங்குநர்கள் அவர்களது மீள்காப்புறுதி / இடர் மாற்ற நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான குறிப்பிட்ட சில

தகவல்களைச் சுருக்கமான வகையில் வருடாந்த அடிப்படையில் சபைக்கு அறிக்கையிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

**நிதி நிலைக்கான அச்சுறுத்தல்**

விதிகள், நிபந்தனைகள் மீறப்படுவதை உணரும்போது அல்லது அதன் நிதி நிலைமையில் பொருண்மைசார் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய ஏதாவது மீள்காப்புறுதிப் பிரச்சினைகள் உணரப்படும்போது காப்புறுதி வழங்குநர் அது தொடர்பில் சபைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

**ஒப்பந்தங்கள் உரிய நேரத்தில் முடிக்கப்படல்**

காப்புறுதி வழங்குநர்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட முதன்மையான மீள்காப்புறுதி விதிகளை உடனடியாக ஆவணப்படுத்த வேண்டும் என்பதுடன் முறைசார் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களை உரிய நேரத்தில் இறுதிப்படுத்துதலும் வேண்டும். முழுமையாக செயல்வலுப் பெறாத அல்லது குறிப்பாக சட்டப்படி போதுமானதல்லாத ஒப்பந்தங்கள் வரவு ஒன்றாக பரீட்சை மீதிக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடாது.

**இணைப்புச் செய்யப்பட்ட நீண்ட கால வியாபாரம் மீதான வழிகாட்டல்களின் பிரிவு 14.4 இற்கான திருத்தம்**

இணைப்புச் செய்யப்பட்ட நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மீதான வழிகாட்டல்களின் பிரிவு 14.4 ஆனது காப்புறுதியை ஆகக் குறைந்தது கடந்த மூன்று வருடங்களாகச் செயல்நிலையில் பேணாத காப்புறுதிதாரருக்கு காப்புறுதி வழங்குநர் ஒருவர் ஒப்புவித்தல் பெறுமதியை (surrender value) வழங்குவதைத் தடைசெய்கிறது.

எவ்வாறாயினும், சட்டப் பிரிவு 40 இன் விதிகள், காப்புறுதி ஒன்று முதல் மூன்று வருடங்களில் காலங்கடந்திருப்பினும்கூட விருப்புரிமையின் அடிப்படையில் காப்புறுதிதாரருக்கு ஒப்புவித்தல் பெறுமதி ஒன்றை கொடுப்பனவு செய்வதிலிருந்து காப்புறுதிக் கம்பனியொன்றைத் தடுக்கவில்லை.

காப்புறுதிதாரர்களின் நாட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, சட்டப் பிரிவு 40 (1) இன் ஏற்பாடுகள் வரிசையில், இணைப்புச் செய்யப்பட்ட நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மீதான வழிகாட்டல்கள் பிரிவு 14.4 இல் ஏற்பாடுகளைச் செய்வதற்காக, அந்தச் சட்டப் பிரிவு 14.4 இல் கூறப்பட்டிருந்த இறுதி வசனமான "காப்புறுதியை ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு தொடர்ச்சியாக செயல்நிலையில் வைத்திருக்காத எந்தவொரு காப்புறுதிதாரருக்கும் ஒப்புவித்தல் பெறுமதி கொடுப்பனவு செய்யப்படக் கூடாது" என்பதை அகற்றியதன் மூலம் இணைப்புச் செய்யப்பட்ட நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பான வழிகாட்டல்களின் பிரிவு 14.4 இனைச் சபை திருத்தியுள்ளது.

## சந்தைக் கட்டமைப்பு


**காப்புறுதி வழங்குநர்கள்**

சட்டப் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க, காப்புறுதி வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது பதிவுசெய்யப்படுவதாகக் கருதப்படுகின்ற நபர் அல்லாத எவரும் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை முன்னெடுக்க முடியாது.

சட்டப் பிரிவு 13 இன் அடிப்படையில், இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள எந்தவொரு நபரும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றைக் கூட்டிணைத்துப் பதிவுசெய்ய வேண்டும் என்பதுடன் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட சட்டநியதித் தேவைப்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றியதன் பின்னர் சட்டத்தின் கீழ் ஒரு காப்புறுதி வழங்குநராக உரிமம் (அனுமதி) ஒன்றினையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாண்டின் இறுதியில் காப்புறுதி வழங்குநர்களாக 29 கம்பனிகள் இயங்கியிருந்தன. செலிங்கோ டேக்புள் லிமிட்டெட் மீது விதிக்கப்பட்ட பதிவு இடைநிறுத்தலானது 2009 இலிருந்து தொடர்கிறது. காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளின் வகைகளை விளக்கப்படம் 1 தெளிவுபடுத்துகிறது. செயற்பட்டுக் கொண்டிருக்கும் 29 கம்பனிகளில், 3 கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டையும் முன்னெடுக்கின்ற கூட்டுக் காப்புறுதி வழங்குநர்களாக இருப்பதுடன், 12 கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் 14 கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் முன்னெடுக்கின்றன.

**விளக்கப்படம் 1**
**காப்புறுதி வழங்குநர்களால் முன்னெடுக்கப்படும் காப்புறுதி வியாபார வகைகள்**




**காப்புறுதித் தரகர்கள்**


ஒரு காப்புறுதித் தரகர் என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும், காப்புறுதித் தரகு வியாபாரத்தை முன்னெடுப்பதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான ஒரு கம்பனியாகும். தரகுக் கூலி அல்லது தரகு என்னும் வழிவகையின் மூலம் கொடுப்பனவைப் பெறும் எதிர்பார்ப்பில் காப்புறுதிக் கம்பனி அல்லது மீள்காப்புறுதிக் கம்பனி ஒன்றுடன் காப்புறுதி அல்லது மீள்காப்புறுதிக்காக காப்புறுதி வழங்குநர் சார்பாக, காப்புறுதிதாரர் ஒருவருக்கு அல்லது காப்புறுதி முன்மொழிவாளர் ஒருவருக்கு காப்புறுதி

வியாபாரத்தின் இடப்படுத்தலுக்கான இடையீட்டாளர்களாக இருப்பதே காப்புறுதித் தரகர்களின் தொழிற்பாடாகும்.

ஆண்டின் இறுதியில், காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்யப்பட்ட 55 கம்பனிகள் இருந்தன. இக்கம்பனிகளில் 39 கம்பனிகள் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் தரகு வியாபாரம் ஆகிய இரண்டிற்கும் பதிவுசெய்யப்பட்டுள்ள அதே நேரம் 16 கம்பனிகள் பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்திற்கு மாத்திரம் பதிவுசெய்துள்ளன.

இவ்வாண்டின் காப்புறுதித் தரகர்களால் முன்னெடுக்கப்பட்ட காப்புறுதித் தரகு வியாபாரத்தின் வகைகளை விளக்கப்படம் 2 தெளிவுபடுத்துகிறது.

விளக்கப்படம் 2
காப்புறுதித் தரகர்களால் முன்னெடுக்கப்பட்ட காப்புறுதித் தரகு வியாபாரத்தின் வகைகள்




### காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு காப்புறுதி வழங்குநருடன் அல்லது காப்புறுதி தரகருடன் பதிவு செய்யப்பட்டு, அந்தக் காப்புறுதி வழங்குநர் அல்லது காப்புறுதித் தரகருக்கான காப்புறுதி வியாபாரத்தில் தரகு ஒன்றைக் கேட்பதை அல்லது பெறுவதைக் கருத்திற்கொள்கின்ற நபர்கள் காப்புறுதி முகவர்கள் ஆவர்.


சட்டப் பிரிவு 34 இன் படி, காப்புறுதி வழங்குநர்கள் காப்புறுதி வியாபாரத்தைப் பெறுகின்ற ஒரு முக்கிய பரப்பல் வழியாக காப்புறுதி முகவர்கள் இருக்கின்றனர்.

காப்புறுதி வழங்குநர்களால் வழங்கப்பட்ட தகவலின்படி, இவ்வாண்டில் காப்புறுதி முகவர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 13,390 ஆகும். இது முன்னைய ஆண்டைவிட (16,879) 20% குறைவானதாகும்.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காப்புறுதி வழங்குநர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தனிநபர் காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை 43,816 ஆகும். இது முன்னைய ஆண்டைவிட (45,433) 3.56% குறைவானதாகும்.

விளக்கப்படம் 3 ஆனது காப்புறுதிக் கம்பனிகளுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதி முகவர்களை (தனிநபர்கள்) காட்டுகிறது.

விளக்கப்படம் 3
**2016.12.31** இல் உள்ளவாறான மொத்த முகவர்கள்





2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிநபர் காப்புறுதி முகவர்கள் அண்ணளவாக 386 ஆகும்.

### கம்பனி நிலைமையும் மூலதன மாற்றங்களும்

சபையில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களுள் 9 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. அவையாவன, ஏ.ஐ.ஏ. இன்சூரன்ஸ் லங்கா பி.எல்.சி., யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி., சொப்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. (ஏற்கனவே ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. என அறியப்பட்டது), எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் பி.எல்.சி., அமானா டேக்புள் பி.எல்.சி., அமானா டேக்புள் லைவ் பி.எல்.சி., ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி., ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. மற்றும் பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி.

விளக்கப்படம் 4 ஆனது பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குநர்களின் சதவீதத்தைக் காட்டுகிறது.

விளக்கப்படம் 4
பட்டியலிடப்பட்ட / பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குநர் நிலைமை




திருத்தப்பட்ட சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றில் காப்புறுதி வழங்குநர்கள் பட்டியலிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது. கூட்டுக் காப்புறுதிக் கம்பனிகள் 2015 பெப்ரவரியிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ தனது வியாபாரத்தை இரு வேறு கம்பனிகளாக பிரிப்பதற்கும் 2016 பெப்ரவரியிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ பட்டியலிடப்பட வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்பட்டிருந்தன.

திருத்தச் சட்டம் செயல்வலுப் பெற்றதன் பின்னர் காப்புறுதி வழங்குநராகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு புதிய கம்பனி, சபையினால் அனுமதி வழங்கப்பட்டு மூன்று வருட காலப்பகுதியினுள் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றில் பட்டியலிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

2011 யூன் மாதத்திற்கு முன் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களின் குறிப்பிடு மூலதனமானது 2015 பெப்ரவரி அல்லது அதற்கு முன் காப்புறுதி வியாபாரத்தின் ஒரு குறித்த வகைக்காக ஆகக் குறைந்தது ஐநூறு மில்லியன் ரூபாவுக்கு உயர்த்தப்பட வேண்டுமென சபையால் தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது.

2011 யூன் மாதத்தை அடுத்து பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் ஐநூறு மில்லியனுக்குக் குறையாத குறிப்பிடு மூலதனமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வீதவரி (Cess)

சட்டப் பிரிவு 7 இன் பிரகாரம், காப்புறுதிதாரர்களுக்கான பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்கு வதற்காக வீதவரி விதிப்புக்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. 2002 யூலை 9 ஆந் திகதிய வர்த்தமான அறிவித்தலின் மூலம், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகரக் கட்டுப்பணத்தின் 0.2% ஆகவும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகரக் கட்டுப்பணத்தின் 0.4% ஆகவும் இது குறிப்பிடப்பட்டு காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வீதவரி சேகரிப்பு 2003 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டிற்கான வீதவரி சேகரிப்புத் தொகை ரூ.408 மில்லியனைக் கொண்டிருந்தது. அட்டவணை 1 ஆனது வீதவரி மற்றும் காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி ஆகியவற்றின் நகர்வைக் காட்டுகிறது.

### காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம்

காப்புறுதி வழங்குநர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட வீதவரியானது சட்டப் பிரிவு 103 இன் அடிப்படையில் தாபிக்கப்பட்ட காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்படுகிறது.

கூடிய அளவில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவுக்கு காப்புறுதிதாரர்கள் மற்றும் எதிர்காலக் காப்புறுதிதாரர்களின் நன்மையின் பொருட்டு பின்வரும் நோக்கங்களுக்காக, வேறு வழியாக, இந்நிதி பயன்படுத்தப்படலாம் -


a) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதித் தொழிற்றுறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குச் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் காப்புறுதித் தொழிற்றுறையின் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட வேறு செலவுகள் ஆகியவற்றை ஈடுசெய்தல்.

b) சபையின் நடவடிக்கைகள், பொறுப்பு நிறைவேற்றம் மற்றும் தத்துவங்கள், தொழிற்பாடுகள், கடமைகள் ஆகியவற்றை ஆற்றுதல் போன்றவற்றிற்கு சபையினால் செலவிடப்பட்ட செலவுகளை ஈடுசெய்தல்

காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைப்பதற்காகக் கிடப்பிலுள்ள தொகை அரச பிணையங்களில் முதலிடப்படுகிறது.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி, நிதியத்திலுள்ள திரண்ட தொகை ரூ. 3,292 மில்லியன் ஆகும். இது கடந்த ஆண்டில் இருந்த தொகையின் (ரூ.2,643 மில்லியன்) 24.56% அதிகரித்த ஓர் தொகை ஆகும்.

அட்டவணை 1
**வீதவரி மற்றும் காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம்**




### காப்புறுதி விதிப்பனவு

எந்தவொரு பொதுக் காப்புறுதி வியாபார வகைக்கும் தற்போது விதிப்பனவுகள் எதுவும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி மற்றும் பணியாளர் இழப்பீட்டுக் காப்புறுதி போன்றவற்றுக்கு ஏற்கனவே இருந்த விதிப்பனவுகள் முறையே 2002, 2005 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டன.

### சட்டப் பிரயோகத்திற்கான விதிவிலக்குகள்

1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமநல காப்புறுதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விவசாய, கமநலக் காப்புறுதி சபை, 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச் சபை ஆகியவற்றுக்கு சட்டப் பிரிவு 12(3) இன் பிரகாரம், சட்ட ஏற்பாடுகளைப் பிரயோகிக்க முடியாது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை

நிதியச் சட்டத்தினால் (NITF சட்டம்) தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையானது திருத்தச் சட்டம் ஒன்றினால் சபையின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

NITF சட்டத்தின் பிரகாரம், NITF ஆனது நிதி, திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்ட வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத நிதியத்தை உள்வாங்கிக்கொண்டது. NITF சார்பாக வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத இடர்களுக்கு எதிராக காப்புறுதியை வழங்குகின்ற காப்புறுதி வழங்குநர்கள் அவற்றின் மீது வசூலிக்கப்பட்ட கட்டுப்பணங்களை NITF இற்குச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரால் கணிப்பிடப்பட வேண்டிய மீள்காப்புறுதியிட விரும்புகின்ற பொறுப்பின் 50% இனை விஞ்சாத ஒரு சதவீதத்தை NITF உடன் மீள்காப்புறுதியிடுவதற்கு மீள்காப்புறுதி வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரையும் 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட சட்டம் தேவைப்படுத்துகிறது.

வர்த்தமானப் பத்திரிகை இல. 1791/4 இன் பிரகாரம், காப்புறுதி வழங்குநரால் நுழையப்பெற்ற நீண்ட கால மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்ந்த, ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்தும் எழுகின்ற மொத்தப் பொறுப்புக்கள் மீது 30% இனை NITF உடன் மீள்காப்புறுதியிடுவதற்கு 2013 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் தேவைப்படுத்தப்படுகின்றனர். முன்னர் இச்சதவீதமானது 20% ஆகக் காணப்பட்டது.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதிப் பாதுகாப்புக்கான தேசிய அவை (NCRS)

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்புக்கான தேசிய அவையானது போக்குவரத்து அமைச்சின் ஆளுகையின் கீழ் இருக்கிறது. மோட்டார் வாகனக் காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் NCRS இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்கு மூன்றாந் தரப்புக் காப்புறுதிக் கட்டுப்பணங்களில் 1% இனைப் பங்களிப்புச் செய்யத் தேவைப்படுத்தப்படுகின்றனர். சபையானது NCRS இன் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இடித்துவிட்டு ஓடுகின்ற மோட்டார் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக இப்பங்களிப்புத் தொகை பயன்படுத்தப்படுகிறது.

### நிதித் துறை மேற்பார்வை அவை (FSOC)

இலங்கை மத்திய வங்கியால் (CBSL) தாபிக்கப்பட்ட உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் அவையானது "நிதித் துறை மேற்பார்வை அவை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த உயர் மட்டக் குழுவானது நிதிச் சந்தைகளின் ஒழுங்கான அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கை வழிகாட்டல்கள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் சகல நிதிசார் ஒழுங்குபடுத்தல் முகவர்களும் முழுமையான நிதி முறைமையில் அக்கறையுடைய தகவல்களை ஒருங்கிணைத்து பரிமாறிக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்குமென அமைக்கப்பட்டது. IBSL இன் சபை FSOC இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

### இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL) 1989 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் இதில் அங்கத்துவம் பெறுவதற்குத் தகைமை யுடையவர்கள் ஆவர்.

சகல காப்புறுதிக் கம்பனிகளினதும் தலைமை நிறைவேற்று அதிகாரிகளை (CEO) உள்ளடக்கிய IASL இன் நிறைவேற்றுக் குழு ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் முகாமைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பின்வரும் குழுக்கள் அவர்களது உரிய பரப்புகளுடன் தொடர்புடைய விடயங்கள் மீது நிறைவேற்றுக் குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்வதன் மூலம் உதவியளிக்கின்றன.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொதுக் காப்புறுதி மன்றம்
- நிதித் தொழினுட்ப உப குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள முகாமைத்துவ உப குழு
- தகவல் தொழினுட்ப உப குழு
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மன்றம்
- காப்பீட்டை ஆயுட்காலமுறைக் கணிப்பீடு செய்யும் உப குழு

IASL இன் பிரதான நோக்கங்கள்:

1. தமது அங்கத்தவர்கள் மற்றும் காப்புறுதி செய்கின்ற பொதுமக்களின் பொதுவான அக்கறைகள் மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதிக்கின்ற அம்சங்களில் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்காக வழங்கப்படக்கூடிய வாய்ப்புகளின் பொருட்டு சகல காப்புறுதி வழங்குநர்களையும் ஒன்றாக இணைத்தல்
2. காப்புறுதியிடும் பொதுமக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை விருத்திசெய்ய சீரான / மிகச் சரியான நடவடிக்கைகள் மற்றும்

உயர் ஒழுக்கநெறி நியமங்கள் ஆகியவற்றை மேம்படுத்தலும் பராமரித்தலும்

3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் பெறுமதி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
4. சட்டமியற்றல் / ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைக் கண்காணித்தலும், ஸ்திரத்தன்மை மற்றும் தொழிற்றுறையின் வளர்ச்சி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கலும்
5. ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் நுட்பங்களை மீளாய்வு செய்து பரீட்சிப்பதுடன் அவற்றில் இலங்கைச் சந்தைக்குப் பொருத்தமான மிகச் சிறந்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளல்
6. இலங்கையில் இயங்குகின்ற தொழில்சார் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் / குழுமங்கள் அத்துடன் மீள் காப்புறுதிப் பங்காளர்கள் ஆகியோருடன் பங்காளராவதன் மூலம் கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாக காப்புறுதித் தொழிற்றுறையை ஊக்குவித்தல், துடிப்புடன் உதவியளித்தல் மற்றும் தொழில்சார் மனப்பான்மையை மேம்படுத்தல்

**இலங்கை காப்புறுதித் தரகர்களின் சங்கம் (SLIBA)**

இலங்கை காப்புறுதித் தரகர்களின் சங்கம் (SLIBA) என்பது சபையால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதித் தரகர்களின் ஓர் சங்கம் ஆகும். சட்டப் பிரிவு 79 இன் பிரகாரம், காப்புறுதித் தரகர்களாக பதிவுசெய்ய எதிர்பார்க்கின்ற சகல விண்ணப்பதாரிகளும் சபையில் காப்புறுதித் தரகர் ஒருவராகப் பதிவு செய்வதற்கு முன்னர் இச்சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுகொள்வது கட்டாயமானதாகும். அங்கத்தவர்கள் SLIBA இனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

**SLIBA இன் பிரதான நோக்கங்கள்:**

1. காப்புறுதித் தரகர் ஒருவரின் வகிபாகம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்
2. சக அங்கத்தவர்களின் தொழினுட்ப அறிவை மேம்படுத்துதலும், உயர் மட்ட ஆற்றல்சார் மற்றும் தொழில்சார் மனப்பான்மையைக் கட்டியெழுப்பலும்
3. காப்புறுதி சம்பந்தப்பட்ட பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு அங்கத்தவர்களை ஊக்கப்படுத்தலும் அவர்களுக்கு உதவி செய்தலும் மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளலும்
4. ஒழுங்குபடுத்துநர், காப்புறுதி வழங்குநர் மற்றும் பொதுமக்களுடன் நல்லெண்ணத்தையும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய தொடர்புகளையும் பேணுதல்.

**இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII)**

1982 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII) என்பது ஒரு இலாப நோக்கற்ற நிறுவனம் என்பதுடன் இதன் பிரதான நோக்கம், காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர்களின் திறன்களையும் அறிவையும் அபிவிருத்தி செய்வதாகும். காப்புறுதி வழங்குநர் மூலமாகவும் அதன் அங்கத்தவர்களின் வருடாந்தச் சந்தா மூலமாகவும் செய்யப்படும் பங்களிப்பின் ஊடாக SLII இற்கான நிதி கிடைக்கப்பெறுகிறது.

**SLII இன் பிரதான நோக்கங்கள்:**

1. **காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அல்லது பணி புரியும் SLII இன் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவர் அல்லாதவருக்கோ அவர்களின் சொந்த அனுகூலத்திற்காக மட்டுமன்றி அந்த வியாபாரத்தை மிகவும் விளைதிறன்மிக்க வகையில் நடத்துவதை ஒழுங்கமைப்பதையும் நோக்காகக் கொண்டு, தொழில்சார் மனப்பான்மை, முன்னேற்றம் மற்றும் பொதுவான அபிவிருத்தி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான ஒரு மத்திய நிறுவனத்தை வழங்குதலும் பராமரித்தலும் மற்றும் அறிவுறுத்தல் வழங்குவதும் தொழிற்றுறையின் தொழில்சார் மனப்பான்மையைப் பேணுவதும்**
2. காப்புறுதி பற்றிய அறிவை விருத்திசெய்வதன் பொருட்டு டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகைமைகளைப் பெறுவதற்கான பாடநெறிகளை நடத்துதல்
3. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் ஊடாக காப்புறுதியின் எந்தவொரு பிரிவிலும் காணப்படும் எந்தவொரு பாடத்தினதும் தொழில்சார் கற்கையினை ஊக்குவிப்பதற்காகவும் அதற்கு உதவுவதற்காகவும் பரீட்சைகளை நடாத்துதல்
4. தொழில்சார் அலுவல்கள், நாட்டங்கள் மற்றும் கடமைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்துதல், ஆவணங்களை வாசித்து விரிவுரைகளை நடத்துதல், குறிப்புகள், பதிவேடுகளைத் திரட்டி நிகழ்வுகளைப் பதிவுசெய்தல் மற்றும் அங்கத்தவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்
5. SLII இன் அங்கத்தவர்களின் நாட்டங்கள் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்கு அவர்கள் மீதான

தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மேலும் அவர்களுடைய முன்னேற்றம், மற்றும் பொதுவான காப்புறுதி அதிகாரிகள் மற்றும் குறிப்பிட்ட SLII இன் அங்கத்தவர்கள் ஆகியோரின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய எந்தவொரு ஊக்குவிப்பையும் செய்தல்

SLII ஆனது இலண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவகத்துடன் இணைந்துள்ளதுடன் இலண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவகம், இந்தியாவின் காப்புறுதி நிறுவகம் மற்றும் இந்தியாவின் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகம் போன்ற தொழில்சார் குழுமங்களின் பரீட்சித்தல்களையும் செயற்படுத்துகிறது. காப்புறுதித் தொழிற்றுறையில் பணிபுரியும் ஆட்களுக்காக காப்புறுதியில் குறுகிய கால டிப்ளோமா பாடநெறிகளை நிறுவகம் நடத்துகிறது.

காப்புறுதி முகவர்களாக நிறுவனம் பெற விரும்புகின்ற ஆட்களுக்காக முன் - ஆட்சேர்ப்புச் சோதனை களை நடத்துவதற்கான பொறுப்பை சபையானது நிறுவகத்திடம் ஒப்படைத்திருக்கிறது. நிறுவகம், காப்புறுதி வியாபாரத்தின் இரு வகைகள் தொடர்பிலும் முன் - ஆட்சேர்ப்புச் சோதனைகளைத் தொடர்ந்தும் நடத்துகிறது.

**காப்புறுதி குறைகேள் அதிகாரி**

இலங்கை காப்புறுதிச் சங்கம் கலாநிதி. விக்கிரம வீரசூரியவை காப்புறுதிக் குறைகேள் அதிகாரியாக 2005 சனவரியில் நியமித்திருந்தது. IASL உடன் நுழைந்த MOU இற்கிணங்க, காப்புறுதி குறைகேள் அதிகாரியும் IASL இன் அங்கத்தவர்களாக உள்ள காப்புறுதிக் கம்பனிகளும் காப்புறுதிதாரர்களால் காப்புறுதி குறைகேள் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்து தீர்ப்பதற்கு மிகச் சிறப்பாகச் செயற்படுவார்கள்.

**காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)**

காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் (IAIS) ஓர் உறுப்பினர் என்ற வகையில், காப்புறுதியின் முக்கிய கோட்பாடுகள் மற்றும் IAIS இன் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் சம்பந்தமான வெளியீடுகள், வழிகாட்டல்களை சபையானது ஒழுங்குமுறையாகப் பெறுகிறது. IAIS இனால் பரிந்துரைக்கப்பட்ட பிரதான சில கோட்பாடுகள் இலங்கையின் காப்புறுதித் தொழிற்றுறையின் விளைதிறன்மிக்க மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்காக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கக் குறியீடுகள்

| | காப்புறுதிக் கம்பனியின் முழுமையான பெயர் | வருடாந்த அறிக்கை நோக்கத்திற்கான கம்பனி லேபல்கள் |
|---|---|---|
| 1 | ஏ.ஐ.ஏ. காப்புறுதி லங்கா பி.எல்.சி. | ஏ.ஐ.ஏ. லைவ் |
| 2 | ஏ.ஐ.ஜி. காப்புறுதிக் கம்பனி | ஏ.ஐ.ஜி. |
| 3 | அலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | அலையன்ஸ் ஜெனரல் |
| 4 | அலையன்ஸ் லைவ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | அலையன்ஸ் லைவ் |
| 5 | அமானா டேக்புள் பி.எல்.சி. | அமானா ஜெனரல் |
| 6 | அமானா டேக்புள் லைவ் லிமிட். | அமானா லைவ் |
| 7 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. | ஆர்பிகோ |
| 8 | சொப்ற்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. | சொப்ற்லொஜிக் லைவ் |
| 9 | பெயார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிட். | பெயார்பெஸ்ட் |
| 10 | செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | செலிங்கோ ஜெனரல் |
| 11 | செலிங்கோ லைவ் இன்சூரன்ஸ் லிமிட். | செலிங்கோ லைவ் |
| 12 | கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | கொன்டினென்டல் |
| 13 | கோப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட். | கோப்பரேட்டிவ் ஜெனரல் |
| 14 | கோப்லைவ் இன்சூரன்ஸ் லிமிட். | கோப்லைவ் |
| 15 | எச்.என்.பி. அஸ்சூரன்ஸ் பி.எல்.சி. | எச்.என்.பி. லைவ் |
| 16 | எச்.என்.பி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | எச்.என்.பி. ஜெனரல் |
| 17 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. | ஜனசக்தி லைவ் |
| 18 | ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | ஜனசக்தி ஜெனரல் |
| 19 | லைவ் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட். | எல்.ஐ.சி. |
| 20 | எல்.ஓ.எல்.சி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | எல்.ஓ.எல்.சி. ஜெனரல் |
| 21 | எல்.ஓ.எல்.சி. லைவ் அஸ்சூரன்ஸ் லிமிட். | எல்.ஓ.எல்.சி. லைவ் |
| 22 | எம்.பி.எஸ்.எல். இன்சூரன்ஸ் கம்பனி லிமிட். | எம்.பி.எஸ்.எல். |
| 23 | நஷனல் இன்சூரன்ஸ் டிரஸ்ட் ∴பண்ட் | என்.ஐ.டி.எப். |
| 24 | ஓறியன்ற் இன்சூரன்ஸ் லிமிட். | ஓறியன்ற் |
| 25 | பீள்பள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட். | பீள்பள்ஸ் |
| 26 | சீமாசகித்த சணச ரக்ஷண சமாகம | சணச |
| 27 | ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லிமிட். | எஸ்.எல்.ஐ.சி. |
| 28 | யூனியன் அஸ்சூரன்ஸ் ஜெனரல் லிமிட். | யூனியன் ஜெனரல் |
| 29 | யூனியன் அஸ்சூரன்ஸ பி.எல்.சி. | யூனியன் லைவ் |

**புள்ளிவிபர மீளாய்வில் காணப்படும் அட்டவணைகள் மற்றும் விளக்கப்படங்களில் உள்ள தரவுகள் பற்றி பொருள் விளக்கம் அளிக்கும்போது கருத்தில் எடுக்க வேண்டிய குறிப்புகள்.**

1. (அ) மீள்நிலைப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமானங்கள் (2015 ஆம் ஆண்டு வரை)
   (ஆ) தற்காலிகப் பெறுமானங்கள்
2. NITF இற்கு வழங்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மீள்காப்புறுதிக் கட்டுப் பணத்தினுடைய கட்டாய அளிப்பினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மீள்காப்புறுதி கட்டுப்பண வருமானம்
3. NITF இனால் செயற்படுத்தப்பட்ட பயிர் மற்றும் கடன் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிக் கூற்று, 2014 ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித் தொழிற்றுறையின் புள்ளிவிபர கணிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது.
4. ஏ.ஐ.ஏ. ஜெனரல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டும் ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட்டும் 2016 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டிருக்கின்றன.
5. சொப்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. முன்னர் ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. ஆக அழைக்கப்பட்டது.
6. ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆனது 2015 ஆம் ஆண்டில் பெயாபக்ஸ் ஏசியா லிமிட்டெட் இனால் கையகப்படுத்தப்பட்டதுடன் அது பெயார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆக அழைக்கப்படுகிறது.
7. யூனியன் ஜெனரல் லிமிட்டெட் ஆனது பெயார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிட்டெட்டுடன் 2017 பெப்ரவரி 28 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இணைக்கப்பட்டிருக்கிறது.
8. ஏ.ஐ.ஜி. இன்சூரன்ஸ் லிமிட்டெட் RBC திரட்டுகளை IBSL இற்குச் சமர்ப்பிப்பதற்குச் தேவைப்படுத்தப்படவில்லை.
9. NITF ஆனது 2016 ஆம் ஆண்டில் RBC திரட்டுகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

# புள்ளிவிபர மீளாய்வு

## இலங்கை காப்புறுதித் தொழிற்றுறை பற்றிய ஓர் கண்ணோட்டம்

சவால்மிக்க சூழல் நிலவிய போதிலும், 2016 ஆம் ஆண்டானது இலங்கை காப்புறுதித் தொழிற்றுறைக்கு ஓர் சாதகமான நிலையுடன் முடிவடைந்திருந்தது. இவ்வாண்டில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகளில் இருந்து உழைக்கப்பெற்ற மொத்தக் கட்டுப்பணம் (GWP) கூட்டாக 16.27% (2015 : 16.22%) எனும் ஒரு வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. இதற்கு நேரொத்த கட்டுப்பண வருமானத் தொகை ரூ.142,969 மில்லியன் (2015: ரூ.122,962 மில்லியன்) ஆக இருந்தது. நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரு துறைகளிலும் காணப்பட்ட கட்டுப்பணங்களின் அதிகரிப்பினால் முன்னைய ஆண்டைப் போலவே, 2016 ஆம் ஆண்டிலும் GWP இன் வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டிருந்தது. நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகளின் வளர்ச்சி வீதங்கள் முறையே 18.26% (2015 : 20.40%) மற்றும் 14.73% (2015 : 13.18%) ஆகும். இது விளக்கப்படம் 1 இல் காட்டப்பட்டுள்ளது. 2016 இல், உலகளாவிய நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி கட்டுப்பணங்கள் முறையே 5.4% மற்றும் 2.4% வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன. அத்துடன் வளர்ந்துவரும் சந்தைகள், குறிப்பாக வளர்ந்துவரும் ஆசியா, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துறை ஆகிய இரண்டிலும் உலகளாவிய கட்டுப்பண வளர்ச்சியின் பிரதான இயக்குநராக இருந்தது.


*குறிப்பு :- சுவிஸ் உலகளாவிய காப்புறுதி மீளாய்வு 2016 மற்றும் கண்ணோட்டம் 2017.*

2016 இல் நீண்ட கால காப்புறுதித் துறை உழைத்த GWP தொகை ரூ. 63,495 மில்லியன் ஆகும். இது 2015 ஆம் ஆண்டில் உழைக்கப்பெற்ற GWP தொகையான ரூ. 53,691 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.26% இனால் அதிகரித்திருக்கிறது. குறிப்பிடத்தக்க இந்த வளர்ச்சிக்கு, அதிகரிக்கப்பட்ட ஆயுள் காப்புறுதி மீதான விழிப்புணர்வு, சக்திவாய்ந்த வாடிக்கையாளர் தேவைப்பாடுகளுக்கு வழங்குவதற்காக இளைப்பாற்றுத் தீர்வுகள் மற்றும் முதலீட்டுக் காப்புறுதிகள் போன்ற புதிய ஆயுள் காப்புறுதிகளை அறிமுகப்படுத்தியமை, வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தியமை போன்ற காரணிகள் காரணமாக அமைந்திருந்தன.

2016 இல் பொதுக் காப்புறுதித் துறை உழைத்த GWP தொகை ரூ.79,474 மில்லியன் ஆகும். இது 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட GWP தொகையான ரூ.69,271 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 14.73% அதிகரித்த தொகையாகும். முக்கிய சந்தைகள் மீதான கவனக்குவிப்பு, புத்தாக்க பொதுக் காப்புறுதிகளின் அறிமுகம், நிறுவன இடர் முகாமைத்துவ தந்திரோபாயங்களின் நடைமுறைப்படுத்தல், இடர்த் தேர்வு மற்றும் விலையிடல் மீதான கவனக்குவிப்பு போன்றவற்றின் மூலம் பொதுக் காப்புறுதிச் சந்தையில் நிலவுகின்ற கடுமையான போட்டியின் மத்தியில் வருடா வருடம் பொதுக் காப்புறுதி வழங்குநர்களால் அவர்களுடைய கட்டுப்பணங்களை திடமான முறையில் அதிகரிப்பதற்கு இயலுமாக இருந்தது.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி அளிப்புகளிலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் (NITF) உழைக்கப்பெற்ற மீள்காப்புறுதி கட்டுப்பண வருமானம் ரூ. 2,357 மில்லியன் ஆகும். இது 2015 ஆம் ஆண்டில் உழைக்கப்பெற்ற மீள்காப்புறுதி கட்டுப்பண வருமானமான ரூ.1,738 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 35.62% என்னும் ஓர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். பிரதானமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வெவ்வேறு வகைகளின் ஒரு பரந்த பரப்பிலிருந்தான மீள்காப்புறுதி வியாபாரத்தின்

விளக்கப்படம் 1
காப்புறுதித் தொழிற்றுறையின் கட்டுப்பண வருமானமும் வளர்ச்சி வீதமும்



அட்டவணை 1
கட்டுப்பண வருமானமும் ஊடுருவலும்

| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பண வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 37,477 | 41,676 | 44,596 | 53,691 | 63,495 |
| கட்டுப்பண வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 53,213 | 58,284 | 61,202 | 69,271 | 79,474 |
| மொத்தக் கட்டுப்பண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்லியனில்) | 90,690 | 99,960 | 105,798 | 122,962 | 142,969 |
| மொத்தக் கட்டுப்பண வருமானத்தின் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 10.48 | 10.22 | 5.84 | 16.22 | 16.27 |
| மீள்காப்புறுதி கட்டுப்பண வருமானம் (ரூ. மில்லியனில்) | 464 | 1,042 | 2,041 | 1,738 | 2,357 |
| நடப்புச் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ. பில்லியனில்) * | 8,732 | 9,592 | 10,448 | 10,952 | 11,839 |
| GDP வளர்ச்சி வீதம் % * | 9.10 | 3.40 | 4.90 | 4.84 | 4.38 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணம்) | 1.04 | 1.04 | 1.01 | 1.12 | 1.21 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் கட்டுப்பணம்) | 0.43 | 0.43 | 0.43 | 0.49 | 0.54 |
| ஊடுருவல் % (GDP இன் சதவீதமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டுப்பணம்) | 0.61 | 0.61 | 0.59 | 0.63 | 0.67 |
| காப்புறுதி அடர்த்தி - (மொத்தக் கட்டுப்பண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) ரூ. | 4,440 | 4,857 | 5,094 | 5,865 | 6,743 |
| சனத்தொகை '000 (நடு ஆண்டு) * | 20,424 | 20,579 | 20,771 | 20,966 | 21,203 |

* மூலம் : இலங்கை மத்திய வங்கியும் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமும்

ஏற்பனவு காரணமாக NITF இன் மீள்காப்புறுதிக் கட்டுப்பணமானது 2016 இல் கணிசமான அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2016 ஆம் ஆண்டில் 4.38% எனும் மிதமான வீதத்தால் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.84% உடன் ஒப்பிடுகையில் இது சற்றுக் குறைந்த ஓர் வீதமாக இருக்கிறது. முன்னைய வருடங்களைப் போலவே GDP இற்கான மிக உயர்ந்த பங்களிப்பினை சேவைத் துறை செய்திருந்தது. இது 2016 ஆம் ஆண்டின் மொத்த GDP இல் 57% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கைத்தொழில்துறை, வரிகள் குறைந்த மானியங்கள், விவசாயத் துறை என்பன காணப்பட்டன. இவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முறையே 27.1%, 8.4%, 7.5% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் 4.2% என்னும் எதிர்மறை வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. இதற்கான பிரதான காரணமாக இருப்பது ஆண்டு நெடுகிலும் நிலவிய பாதகமான காலநிலை நிலைமையேயாகும்.

2016 இல் காப்புறுதிக் கட்டுப்பணத்தைப் பிரதிபலிக்கும் காப்புறுதி ஊடுருவல் ஆனது (penetration) ஆனது GDP தொகையின் 1.21% ஆக இருக்கிறது. 2015 இல் பதிவுசெய்யப்பட்ட வீதமான 1.12% உடன் ஒப்பிடுகையில் 2016 இல் காப்புறுதி ஊடுருவல் அதிகரித்திருந்த போதிலும், இது ஆசியான் வலயத்திலுள்ள ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன்னும் குறைவானதாகவே இருக்கிறது. 2016 இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுருவல் ஆனது 0.54% ஆக இருந்ததுடன் (2015: 0.49%) பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடுருவல் 0.67% (2015: 0.63%) ஆகவும் இருந்தது. 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஊடுருவல் வீதங்களுடன் ஒப்பிடுகையில் இரண்டு வகைகளிலும் சற்று உயர்ச்சி பதிவாகியிருக்கிறது.

பிரதானமாக சனத்தொகையின் குறைந்தளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அதிகரித்த காப்புறுதி கட்டுப்பண வருமானம் காரணமாக 2015 ஆம் ஆண்டில் ரூ.5,865 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த சனத்தொகையிலுள்ள நபர் ஒருவரின் காப்புறுதி கட்டுப்பண வருமானத்தைப் பிரதிபலிக்கின்ற காப்புறுதி அடர்த்தியானது 2016 ஆம் ஆண்டில் 14.97% இனால் வளர்ச்சியடைந்து ரூ.6,743 மில்லியனுக்கு அதிகரித்திருக்கிறது.

## NITF இன் பயிர் மற்றும் கடன் பாதுகாப்புத் திட்டம்

வங்கியியல் சட்டம், நிதிக் கம்பனிகள் சட்டம் மற்றும் காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதிகள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட சகல வங்கிகளும், நிதிக் கம்பனிகளும் காப்புறுதிக் கம்பனிகளும் பயிர்க் காப்புறுதி வரிவிதிப்புக்கு உட்பட்டவைகளாகும். இதற்கிணங்க, இந்த நிறுவனங்கள் 2013 ஆம் ஆண்டின் 12 ஆம்

இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இற்கு இணக்கமான வகையில் பயிர்க் காப்புறுதி வரியொன்றாக NITF இற்கு மதிப்பாண்டு ஒன்றிற்கான வரிக்குப் பிந்திய அவர்களது இலாபத்தின் ஒரு வீதத்தினைச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த வரி NITF இனால் தாபிக்கப்பட்ட பயிர் மற்றும் கடன் பாதுகாப்புத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

2016 இல், NITF ஆனது ரூ.1,511 மில்லியன் வீதவரியைச் சேகரித்திருந்தது. இத்தொகை 2015 ஆம் ஆண்டில் ரூ.1,259 மில்லியனாகக் காணப்பட்டது. சேகரிக்கப்பட்ட வீதவரிகள் பிரதானமாக அரச பிணையங்களில் முதலீடு செய்யப்படுகின்றன. 2016 இல் இவ்வாறு முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ.1,541 மில்லியன் ஆகும். 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.212 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இப்பிரிவின் மொத்தச் சொத்துக்கள் தீவிரமாக மேம்பாடடைந்திருக்கின்றன.

NITF இனால் சமர்ப்பிக்கப்பட்ட பயிர் மற்றும் கடன் பாதுகாப்புத் திட்டத்தின் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் புள்ளிவிபர அறிக்கைப் பகுப்பாய்விலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன.

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள்

நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தேசிய மீள்காப்புறுதி வழங்குநர் ஆகியோருக்குச் சொந்தமான சொத்துக்களை உள்ளடக்கிய காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தச் சொத்துக்களாக (பிரிவுகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களை நீக்கியதன் பின்னரான) 2016 டிசெம்பர் 31 இல் ரூ.527,228 மில்லியன் தொகையினை NITF கொண்டிருந்தது. இது 2015 டிசெம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதியான ரூ.466,707 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.97% அதிகரிப்பாக இருக்கிறது.


2016 டிசெம்பர் 31 இல், மொத்தத் தொழிற்றுறைச் சொத்துக்களின் பெரும்பகுதியான ரூ.345,675 மில்லியன் சொத்துக்களை (2015: ரூ.312,713 மில்லியன்) நீண்ட கால காப்புறுதி வழங்குநர்கள் வைத்திருந்தனர். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டில் 10.54% வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கின்றன. 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூ. 175,745 மில்லியன் ஆகும். (2015: ரூ.151,177 மில்லியன்). இது 16.25% வளர்ச்சியாகும். 2016 டிசெம்பர் 31 இல் NITF வைத்திருந்த மீள்காப்புறுதி வியாபாரத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி ரூ.5,915 மில்லியன் ஆகும். இது 2015 டிசெம்பர்

**அட்டவணை 2**
**காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள்**

| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்ட கால காப்புறுதி (ரூ. மில்லியன்) | 190,642 | 216,275 | 247,061 | 312,713 | 345,675 |
| பொதுக் காப்புறுதி (ரூ. மில்லியன்) | 137,730 | 155,636 | 174,588 | 151,177 | 175,745 |
| மீள்காப்புறுதி (ரூ. மில்லியன்) | 640 | 1,453 | 2,139 | 3,604 | 5,915 |
| மொத்தம் (ரூ. மில்லியன்) | ***322,986** | ***365,760** | ***421,105** | ***466,707** | ***527,228** |

* பிரிவுகளுக்கிடையேயான கொடுக்கல் - வாங்கல்கள் நீக்கப்பட்டிருக்கின்றன.

விளக்கப்படம் 2
**காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் வளர்ச்சி வீதம்**



31 இல் பதிவுசெய்யப்பட்டிருந்த சொத்துக்கள் பெறுமதியான ரூ.3,604 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதமான 64.12% இனைப் பதிவுசெய்திருந்தது. சொத்துக்களின் மேலே குறிப்பிடப்பட்ட அதிகரிப்பானது பிரதானமாக நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி அத்துடன் மீள்காப்புறுதி வியாபாரங்களின் கட்டுப்பண வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். இது காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் NITF இன் சொத்து அடிப்படைகளில் விரிவாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

## காப்புறுதிக் கம்பனிகளது சொத்துக்களின் பரம்பல்

2015 டிசெம்பர் 31 மற்றும் 2016 டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் உள்ளபடியான நீண்ட கால காப்புறுதி, பொதுக் காப்புறுதி மற்றும் NITF இன் மீள்காப்புறுதிப் பிரிவின் கீழ், காப்புறுதிக் கம்பனிகள் மத்தியில் சொத்துக்களின் பரம்பல் பற்றிய விபரங்கள் அட்டவணை 3 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன. கலப்புக் காப்புறுதி வழங்குநர், SLIC இன் பிரிவுகளுக்கிடையேயான (inter-segment) கொடுக்கல் வாங்கல் மீதி ரூ.108 மில்லியன் (2015: ரூ.788 மில்லியன்) தவிர்ந்த 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான காப்புறுதி வழங்குநர்களின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ.527,228 மில்லியன் (2015: ரூ.466,707 மில்லியன்) ஆகும்.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான காப்புறுதித் தொழிற்றுறையின் சொத்துக்களின் பெரும்பகுதி, அதாவது 33.56% (2015:35.77%) இனை வைத்திருப்பது SLIC ஆகும். இதன் பெறுமதி ரூ.176,933 மில்லியன் (2015 : ரூ.166,947 மில்லியன்) ஆகும். 2016 ஆம் ஆண்டில் SLIC இன் சொத்துக்கள் 5.98% இனால் வளர்ச்சி அடைந்திருந்தபோதிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவர்களின் சொத்துக்களின் பங்கு 2.21% இனால் குறைவடைந்திருந்தது. 2016 டிசெம்பர் 31 இல் நீண்ட காலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களின் கீழ் SLIC வைத்திருந்த சொத்துக்கள் முறையே ரூ. 109,732 மில்லியன் (2015: ரூ. 103,093 மில்லியன்) மற்றும் ரூ. 67,308 மில்லியன் (2015: ரூ. 64,642 மில்லியன்) ஆகும்.

2016 டிசெம்பர் 31 இல் காப்புறுதித் தொழிற்றுறையின் மொத்தச் சொத்துக்களில் 18.30% இனை செலிங்கோ லைவ் வைத்திருந்தது. இதன் பெறுமதி ரூ. 96,458 மில்லியன் (2015: ரூ. 80,235 மில்லியன்) ஆகும். இது 20.22% வளர்ச்சியாகும். 2016 டிசெம்பர் 31 இல் மூன்றாவது, நான்காவது ஐந்தாவது பெரியளவிலான சொத்துப் பங்குகளை முறையே ஏ.ஐ.ஏ. லைவ், யூனியன் லைவ், செலிங்கோ ஜெனரல் ஆகியன கொண்டிருந்தன. இவை மொத்த தொழிற்றுறைச் சொத்துக்களின் முறையே 8.79%, 6.77%, 4.44% ஆகிய சதவீதங்களில் இருந்தன. 2016 டிசெம்பர் 31 இல் ஏ.ஐ.ஏ. லைவ் ஆனது வைத்திருந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.46,321 மில்லியன் (2015 : ரூ.45,957 மில்லியன்) என்பதுடன் யூனியன் லைவ் மற்றும் செலிங்கோ ஜெனரல் ஆகியன வைத்திருந்த சொத்துக்களின் பெறுமதிகள் முறையே ரூ.35,693 மில்லியன் மற்றும் ரூ.23,406 மில்லியன் (2015 இல் முறையே ரூ.31,013 மில்லியன் மற்றும் ரூ.19,634 மில்லியன்) என்பனவாகும். இந்த ஐந்து கம்பனிகளும் ஒருங்கே மொத்தக் காப்புறுதித் தொழிற்றுறையின் சொத்துக்களின் 71.86% இனை வைத்திருப்பதுடன் மீதியாகவுள்ள காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் NITF என்பன மொத்தச் சொத்துக்களில் மீதியாகவுள்ள 28.14% இனை வைத்திருக்கின்றன.

## காப்புறுதிக் கம்பனிப் பங்குதாரர்களின் நிதி

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தப் பங்குதாரர்களின் நிதியினை அட்டவணை 4 சித்தரிக்கிறது. 2015 டிசெம்பர் 31 இல் ரூ.136,151 மில்லியனாக இருந்த இத்தொகை 2016 டிசெம்பர் 31 இல் ரூ.137,406 மில்லியனாகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பங்குதாரர்களின் நிதி 0.92% எனும் சிறிதளவான அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தது. 2016 டிசெம்பர் 31 இல் இருந்த மொத்தப் பங்குதாரர்களின் நிதியானது ரூ.40,911 மில்லியன் குறிப்பிடு மூலதனத்தையும் ரூ.96,495 மில்லியன் ஒதுக்கத் தொகையினையும் உள்ளடக்கி யிருந்தது.

கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் எஸ்.எல்.ஐ.சி. ஆனது மொத்தப் பங்குதாரர்களின் நிதியில் பெரும்பகுதியைக் கொண்டிருந்தது. இது 2016 டிசெம்பர் 31 இல் ரூ.58,636 மில்லியன் (2015 : ரூ.63,677 மில்லியன்) ஆகக் காணப்பட்டதுடன் இதன் சதவீதம் மொத்தக் காப்புறுதித் தொழிற்றுறை பங்குதாரர்கள் நிதியின் 42.67% (2015: 46.77%) ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதானமாக கைக்கொள் இலாபத்தில் ஏற்பட்ட குறைவு காரணமாக 2015 ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் எஸ்.எல்.ஐ.சி. இன் பங்குதாரர்களின் நிதி 7.92% இனால் குறைவடைந்திருக்கிறது. 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான எஸ்.எல்.ஐ.சி. இன் குறிப்பிடு மூலதனத் தொகை ரூ.6,000 மில்லியன் என்பதுடன் மொத்த ஒதுக்கம் ரூ.52,636 மில்லியன் ஆகும். மொத்தப் பங்குதாரர் நிதியில் 8.67% மற்றும் 6.40% ஆகக்

அட்டவணை 3

மொத்தச் சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு


| காப்புறுதி வழங்குநர் | 2015 (அ) | | | | | 2016 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நீண்ட கால காப்புறுதி (ரூ.'000) | பொதுக் காப்புறுதி (ரூ.'000) | மீள் காப்புறுதி (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % | நீண்ட கால காப்புறுதி (ரூ.'000) | பொதுக் காப்புறுதி (ரூ.'000) | மீள் காப்புறுதி (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 45,957,291 | | | 45,957,291 | 9.85 | 46,320,851 | | | 46,320,851 | 8.79 |
| ஏ.ஐ.ஏ. ஜெனரல் | | 5,987,146 | | 5,987,146 | 1.28 | | | | | |
| ஏ.ஐ.ஜி. | | 205,104 | | 205,104 | 0.04 | | 124,979 | | 124,979 | 0.02 |
| அலையன்ஸ் ஜெனரல் | | 4,106,848 | | 4,106,848 | 0.88 | | 5,211,062 | | 5,211,062 | 0.99 |
| அலையன்ஸ் லைவ் | 1,947,125 | | | 1,947,125 | 0.42 | 2,571,072 | | | 2,571,072 | 0.49 |
| அமானா ஜெனரல் | | 2,603,687 | | 2,603,687 | 0.56 | | 2,869,633 | | 2,869,633 | 0.54 |
| அமானா லைவ் | 2,405,537 | | | 2,405,537 | 0.52 | 2,726,295 | | | 2,726,295 | 0.52 |
| ஆர்பிகோ | 1,160,691 | | | 1,160,691 | 0.25 | 1,592,136 | | | 1,592,136 | 0.30 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 9,814,621 | | | 9,814,621 | 2.10 | 9,917,606 | | | 9,917,606 | 1.88 |
| பெயார்பெஸ்ட் | | 2,489,014 | | 2,489,014 | 0.53 | | 2,945,827 | | 2,945,827 | 0.56 |
| செலிங்கோ ஜெனரல் | | 19,634,062 | | 19,634,062 | 4.21 | | 23,406,292 | | 23,406,292 | 4.44 |
| செலிங்கோ லைவ் | 80,235,165 | | | 80,235,165 | 17.19 | 96,458,087 | | | 96,458,087 | 18.30 |
| கொன்டினென்டல் | | 2,636,838 | | 2,636,838 | 0.56 | | 3,584,797 | | 3,584,797 | 0.68 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | | 3,049,379 | | 3,049,379 | 0.65 | | 3,761,264 | | 3,761,264 | 0.71 |
| கோப் லைவ் | 1,714,017 | | | 1,714,017 | 0.37 | 1,799,701 | | | 1,799,701 | 0.34 |
| எச்.என்.பி. லைவ் | 10,022,562 | | | 10,022,562 | 2.15 | 12,199,440 | | | 12,199,440 | 2.31 |
| எச்.என்.பி. ஜெனரல் | | 2,777,034 | | 2,777,034 | 0.60 | | 3,492,537 | | 3,492,537 | 0.66 |
| ஜனசக்தி லைவ் | 19,323,791 | | | 19,323,791 | 4.14 | 19,049,957 | | | 19,049,957 | 3.61 |
| ஜனசக்தி ஜெனரல் | | 12,331,132 | | 12,331,132 | 2.64 | | 21,322,088 | | 21,322,088 | 4.04 |
| எல்.ஐ.சி. | 2,050,066 | | | 2,050,066 | 0.44 | 2,270,553 | | | 2,270,553 | 0.43 |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | | 3,100,033 | | 3,100,033 | 0.66 | | 4,068,265 | | 4,068,265 | 0.77 |
| எல்.ஓ.எல்.சி.லைவ் | 1,943,775 | | | 1,943,775 | 0.42 | 2,806,697 | | | 2,806,697 | 0.53 |
| எம்.பி.எஸ்.எல். | 539,232 | 1,386,401 | | 1,925,633 | 0.41 | 604,563 | 1,086,971 | | 1,691,534 | 0.32 |
| என்.ஐ.டி.எப். | | 8,417,578 | 3,604,151 | 12,021,729 | 2.58 | | 11,903,131 | 5,915,066 | 17,818,197 | 3.38 |
| ஓறியன்ற் | | 1,108,327 | | 1,108,327 | 0.24 | | 1,713,218 | | 1,713,218 | 0.32 |
| பீப்பள்ஸ் | | 6,642,095 | | 6,642,095 | 1.42 | | 6,718,278 | | 6,718,278 | 1.27 |
| சனச | 1,492,252 | 644,100 | | 2,136,352 | 0.46 | 1,932,832 | 521,765 | | 2,454,597 | 0.47 |
| எஸ்.எல்.ஐ.சி. | 103,093,318 | 64,641,960 | | 166,947,465 | 35.77 | 109,732,183 | 67,308,495 | | 176,933,175 | 33.56 |
| யூனியன் லைவ் | 31,013,818 | | | 31,013,818 | 6.65 | 35,693,463 | | | 35,693,463 | 6.77 |
| யூனியன் ஜெனரல் | | 9,416,163 | | 9,416,163 | 2.02 | | 15,706,231 | | 15,706,231 | 2.98 |
| மொத்தம் | **312,713,263** | **151,176,901** | **3,604,151** | **466,706,502** | **100** | **345,675,436** | **175,744,833** | **5,915,066** | **527,227,831** | **100** |

*குறிப்பு:*

எஸ்.எல்.ஐ.சி. இன் மொத்தச் சொத்துக்கள் 2016 டிசெம்பர் 31 இல் இருந்தவாறான பிரிவுகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல் மீதி ரூ. 108 மில்லியனை (2015 : ரூ. 788 மில்லியன்) நீக்கியதன் பின்னர் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

விளக்கப்படம் 3

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் கம்பனி வாரியான பகுப்பாய்வு**




கணக்கிடப்பட்ட முறையே செலிங்கோ லைவ் மற்றும் செலிங்கோ ஜெனரல் ஆகியவற்றின் 2016 டிசெம்பர் 31 இல் இருந்தபடியான தொகைகள் முறையே ரூ.11,912 மில்லியன் மற்றும் ரூ.8,791 மில்லியன் (2015 இல் முறையே ரூ.9,446 மில்லியன் மற்றும் ரூ. 7,883 மில்லியன்) ஆகும். இவை மொத்தப் பங்குதாரர் நிதியில் இரண்டாம், மூன்றாம் இடங்களைக் கொண்டிருக்கின்றன. 2016 டிசெம்பர் 31 இல் இருந்தபடியான மொத்தக் காப்புறுதி தொழிற்றுறையின் பங்குதாரர்கள் நிதியில் 5.87% மற்றும் 5.79% ஆகியவற்றை முறையே கொண்டிருந்த ஜனசக்தி

அட்டவணை 04

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்கள் நிதி

| காப்புறுதி வழங்குநர் | 2015 (அ) | | 2016 (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தப் பங்குதாரர் நிதி (ரூ.'000) | % | குறிப்பிடு மூலதனம் (ரூ.'000) | மொத்த ஒதுக்கம் (ரூ.'000) | மொத்தப் பங்குதாரர் நிதி (ரூ.'000) | % |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 6,362,871 | 4.67 | 511,922 | 4,849,062 | 5,360,984 | 3.90 |
| ஏ.ஐ.ஏ. ஜெனரல் | 1,930,279 | 1.42 | | | | |
| ஏ.ஐ.ஜி. | (168,098) | (0.12) | 812,215 | (751,090) | 61,125 | 0.04 |
| அலையன்ஸ் ஜெனரல் | 986,717 | 0.72 | 500,000 | 473,471 | 973,471 | 0.71 |
| அலையன்ஸ் லைவ் | 214,407 | 0.16 | 739,624 | (586,985) | 152,638 | 0.11 |
| அமானா ஜெனரல் | 1,693,459 | 1.24 | 1,860,001 | (82,163) | 1,777,838 | 1.29 |
| அமானா லைவ் | 515,594 | 0.38 | 500,000 | 26,119 | 526,119 | 0.38 |
| ஆர்பிகோ | 647,253 | 0.48 | 675,565 | 18,245 | 693,810 | 0.50 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 2,437,935 | 1.79 | 1,062,500 | 899,667 | 1,962,167 | 1.43 |
| பெயார்பெஸ்ட் | 585,389 | 0.43 | 1,400,000 | (583,433) | 816,567 | 0.59 |
| செலிங்கோ ஜெனரல் | 7,882,870 | 5.79 | 500,200 | 8,290,869 | 8,791,069 | 6.40 |
| செலிங்கோ லைவ் | 9,446,370 | 6.94 | 500,001 | 11,411,827 | 11,911,828 | 8.67 |
| கொண்டினென்டல் | 1,032,611 | 0.76 | 750,000 | 444,534 | 1,194,534 | 0.87 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 1,515,717 | 1.11 | 1,115,368 | 549,990 | 1,665,358 | 1.21 |
| கோப் லைவ | 537,746 | 0.39 | 500,000 | (43,798) | 456,202 | 0.33 |
| எச்.என்.பி. லைவ் | 2,511,343 | 1.84 | 1,171,875 | 1,703,455 | 2,875,330 | 2.09 |
| எச்.என்.பி. ஜெனரல் | 922,601 | 0.68 | 1,150,000 | (178,272) | 971,728 | 0.71 |
| ஜனசக்தி லைவ் | 7,756,986 | 5.70 | 4,853,752 | 3,213,237 | 8,066,989 | 5.87 |
| ஜனசக்தி ஜெனரல் | 4,485,180 | 3.29 | 5,878,017 | 2,078,105 | 7,956,122 | 5.79 |
| எல்.ஐ.சி. | 683,448 | 0.50 | 500,000 | 154,645 | 654,645 | 0.48 |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | 811,870 | 0.60 | 700,000 | 311,703 | 1,011,703 | 0.74 |
| எல்.ஓ.எல்.சி. லைவ் | 262,770 | 0.19 | 800,000 | (216,730) | 583,270 | 0.42 |
| எம்.பி.எஸ்.எல். | 333,209 | 0.24 | 1,080,022 | (988,123) | 91,899 | 0.07 |
| என்.ஐ.டி.எப். | 8,654,939 | 6.36 | | 7,887,578 | 7,887,578 | 5.74 |
| ஓறியன்ற் | 517,290 | 0.38 | 825,000 | (207,455) | 617,545 | 0.45 |
| பீப்பள்ஸ் | 2,250,995 | 1.65 | 1,350,000 | 1,278,367 | 2,628,367 | 1.91 |
| சணச | 850,573 | 0.62 | 1,042,846 | 324,771 | 1,367,617 | 1.00 |
| எஸ்.எல்.ஐ.சி. | 63,677,120 | 46.77 | 6,000,000 | 52,635,550 | 58,635,550 | 42.67 |
| யூனியன் லைவ் | 3,464,928 | 2.54 | 1,000,000 | 2,866,192 | 3,866,192 | 2.81 |
| யூனியன் ஜெனரல் | 3,346,435 | 2.46 | 3,131,949 | 715,354 | 3,847,303 | 2.80 |
| மொத்தம் | **136,150,806** | **100** | **40,910,856** | **96,494,691** | **137,405,547** | **100** |

லைவ் மற்றும் ஜனசக்தி ஜெனரல் ஆகியவை வைத்திருந்த பங்குதாரர்கள் நிதித் தொகைகள் முறையே ரூ.8,067 மில்லியன் மற்றும் ரூ.7,956 மில்லியன் (2015 இல் முறையே ரூ.7,757 மில்லியன் மற்றும் ரூ.4,485 மில்லியன்) என்பனவாகும். இவை பங்குதாரர்களின் நிதி தொடர்பில் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் காணப்பட்டன.


## பிரதான நிதித் துறைகள் மத்தியில் மொத்தச் சொத்துக்களின் பரம்பல்

2016 டிசெம்பர் 31 இல், பொருளாதாரத்தின் பிரதான நிதித் துறைகளின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ.15,411.4 பில்லியன் ஆகும். 2015 டிசெம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்ட தொகையான ரூ.13,830.8 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் இச்சொத்துக்கள் 11.43% இனால் அதிகரித்திருக்கின்றன. நிதித் துறைக்குச் சொந்தமான பெரும்பாலான சொத்துக்களை வங்கியியல் துறை வைத்திருந்ததுடன் இது மொத்தச் சொத்துக்களில் 68.6% இனைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. 2016 டிசெம்பர் 31 இல் மொத்த நிதித் துறைச் சொத்துக்களில்

16.5% இனை ஒப்பந்தச் சேமிப்பு நிறுவனங்கள் வைத்திருந்ததுடன் அவை வைத்திருந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.2,537.2 பில்லியன் ஆகும். கடந்த ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூ.2,257.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.39% அதிகரிப்பினை இது காட்டுகிறது. 2016 டிசெம்பர் 31 இல், ஏனைய வைப்புகள் எடுக்கின்ற நிதி நிறுவனங்கள், நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 8.1% இனை பிரதிநிதித்துவப்படுத்திய அதே வேளை விசேடத்துவ நிதி நிறுவனங்கள், நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 3.4% சதவீதம் எனக் கணக்கிடப்பட்டன. 2016 டிசெம்பர் 31 இல், பிரதான நிதித் துறைகளின் மொத்தச் சொத்துக்களில் 3.4% இனை காப்புறுதித் துறை கொண்டிருந்ததுடன் (2015 : 3.4%) இதன் பெறுமதி ரூ.527.2 பில்லியன் (2015 : ரூ. 466.7 பில்லியன்) ஆகும்.

விளக்கப்படம் 4

**2016 டிசெம்பர் 31 இல் பிரதான நிதித் துறைகளின் மொத்தச் சொத்துக்களின் பரம்பல்**




## கிளைகள், ஊழியர்கள் மற்றும் காப்புறுதி வழங்கும் முகவர்கள்

தீவு பூராகவும் சிதறிக் கிடக்கின்ற வாடிக்கையாளர்களை அணுகுவதற்கு தமது கிளை வலையமைப்புகள், முகவர்கள் போன்ற பல்வேறு பரப்பல் வழிகளைக் காப்புறுதி வழங்குநர்கள் பயன்படுத்துகின்றனர். அட்டவணை 06 இல் சித்தரிக்கப்பட்டதைப் போன்று, 2016 டிசெம்பர் 31 இல் உள்ள தரவுகளின்படி காப்புறுதிக் கம்பனிகள் நாடுபூராகவும் 1971 கிளைகளை இயக்குகின்றன. இது 2015 ஆம் ஆண்டில் இயக்கப்பட்டிருந்த 1872 கிளைகளுடன் ஒப்பிடுகையில் 5.29% இனால் வளர்ச்சி கண்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. இதில் ஆகக்கூடிய எண்ணிக்கையிலான கிளைகள் மேல் மாகாணத்தில் அமைந்திருந்தன. இதன் எண்ணிக்கை 657 ஆகும். இவ்வெண்ணிக்கையானது ஒட்டுமொத்த கிளை வலையமைப்பில் 33.33% ஆகக் காணப்படுகிறது. தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் என்பன முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைகளில் உள்ளன. இம்மாகாணங்களிலுள்ள கிளை வலையமைப்புகளின் எண்ணிக்கை முறையே 234 மற்றும் 196 ஆகும். இதேவேளை ஊவா மாகாணத்திலேயே ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான கிளைகள் அமைந்திருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கை 120 ஆகும். 2016 ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள கிளை வலையமைப்புகளின் எண்ணிக்கையானது முறையே 15.11% மற்றும் 6.45% இனால் அதிகரிக்கப்பட்டன. இது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் போருக்குப் பிந்திய அபிவிருத்தியைப் பிரதிபலிக்கிறது. 2016 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணம்

அட்டவணை 05

பிரதான நிதித் துறைகளின் மொத்தச் சொத்துக்களின் பரம்பல்

| நிதித் துறைகள் | சொத்துக்களின் பரம்பல் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % |
| வங்கியியல் துறை | 6,377.0 | 70.3 | 7,187.5 | 69.6 | 8,442.0 | 70.3 | 9,503.7 | 68.7 | 10,575.8 | 68.6 |
| ஏனைய வைப்புகளை எடுக்கின்ற நிதி நிறுவனங்கள் | 621.2 | 6.9 | 756.4 | 7.3 | 857 | 7.1 | 1044.2 | 7.5 | 1246.7 | 8.1 |
| விசேடத்துவ நிதி நிறுவனங்கள் | 310.4 | 3.4 | 378 | 3.7 | 441 | 3.7 | 557.8 | 4.0 | 522.8 | 3.4 |
| ஒப்பந்தச் சேமிப்பு நிறுவனங்கள் | 1,429.6 | 15.8 | 1,632.5 | 15.8 | 1,853.6 | 15.4 | 2,257.5 | 16.3 | 2,537.2 | 16.5 |
| காப்புறுதிக் கம்பனிகள் | 323.0 | 3.6 | 365.8 | 3.6 | 421.1(a) | 3.5 | 466.7 (a) | 3.4 | 527.2 (b) | 3.4 |
| மொத்தம் | **9,061.2** | **100** | **10,320.2** | **100** | **12,015.0** | **100.0** | **13,830.8** | **100.0** | **15,411.4** | **100.0** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

*குறிப்பு :* காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மீள்குறிப்பீடு செய்யப்பட்டன

தவிர்ந்த நாட்டின் ஏனைய சகல மாகாணங்களிலும் உள்ள கிளைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. வடமேல் மாகாணத்தில் 2015 ஆம் ஆண்டில் இயங்கிய 188 கிளைகள் இவ்வாண்டில் 178 ஆகக் குறைக்கப்பட்டிருந்தன.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளதன்படி, சகல காப்புறுதிக் கம்பனிகளுக்காகவும் பணிபுரிகின்ற ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 16,896 ஆகப் (2015 இல் 15,830) பதிவுசெய்யப்பட்டிருந்தன. இது 6.73% வளர்ச்சியாகும். 2016 டிசெம்பர் 31 இல் உள்ள தரவுகளின்படி, சகல காப்புறுதிக் கம்பனிகளிலும் உள்ள மொத்த ஊழியர்களில் 10,949 ஊழியர்கள் மேல் மாகாணத்தில் (2015 இல் 10,484) இருக்கின்றனர். இது 64.80% (2015 இல் 66.23%) ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ள தரவுகளின்படி, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் பணி புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அவை முறையே 1088 உம் 880 உம் (2015 இல் முறையே 986 உம் 841 உம்) ஆகும். ஆகக் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்கள் பணிபுரியும் மாகாணம் ஊவா மாகாணம் ஆகும். இங்கு 478 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவ்வெண்ணிக்கை காப்புறுதிக் கம்பனிகளில் பணிபுரியும் மொத்த ஊழியர்களின் 2.83% மாத்திரமே ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள சகல மாகாணங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


அட்டவணை 06

**2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் டிசெம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளபடியான கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் எண்ணிக்கை**

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** |
| மத்திய மாகாணம் | 178 | 196 | 841 | 880 | 4,433 | 4,245 |
| கிழக்கு மாகாணம் | 124 | 132 | 480 | 553 | 2,201 | 2,223 |
| வட மத்திய மாகாணம் | 132 | 145 | 579 | 617 | 2,642 | 2,520 |
| வட மேல் மாகாணம் | 188 | 178 | 883 | 919 | 4,326 | 4,094 |
| வட மாகாணம் | 139 | 160 | 430 | 570 | 3,335 | 3,387 |
| சப்ரகமுவ மாகாணம் | 140 | 149 | 687 | 842 | 2,845 | 2,745 |
| தென் மாகாணம் | 232 | 234 | 986 | 1,088 | 4,827 | 4,915 |
| ஊவா மாகாணம் | 108 | 120 | 460 | 478 | 2,207 | 2,422 |
| மேல் மாகாணம் | 631 | 657 | 10,484 | 10,949 | 17,333 | 17,265 |
| மொத்தம் | **1,872** | **1,971** | **15,830** | **16,896** | **44,149** | **43,816** |

அட்டவணை 06

**2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் டிசெம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளபடியான கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் எண்ணிக்கை**




2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி, காப்புறுதிக் கம்பனிகளுடன் இணைந்துள்ள முகவர்களின் மொத்த எண்ணிக்கை 43,816 ஆகும். 2015 டிசெம்பர் 31 இல் இயங்கிய 44,149 முகவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது 0.75% குறைவானதாகும். முன்னைய ஆண்டுகளைப் போன்றே, அதிகளவு எண்ணிக்கையிலான முகவர்கள் மேல் மாகாணத்தில் செயற்பட்டிருந்தனர். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி இவர்களின் எண்ணிக்கை 17,265 (2015 இல் 17,333) ஆகும். இவ்வெண்ணிக்கை காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த முகவராண்மைப் படையின் 39.40% ஆகும். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளதன்படி ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான முகவர்கள் கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை 2,223 (2015:


2,201) ஆகும். நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் காப்புறுதிக் கம்பனிகளின் பெரும்பாலான கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் மேல் மாகாணத்தில் அதிக கவனத்தைச் செலுத்தியிருப்பதை அட்டவணை 6 இல் சித்தரிக்கப்பட்டுள்ள விடயங்கள் புலப்படுத்துகின்றன.

## காப்புறுதிக் கம்பனிகளின் பரப்பல் வழிகள்

விளக்கப்படம் 6 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, காப்புறுதி வழங்குநர்கள் தங்களுடைய வாடிக்கையாளர்களை அணுகுவதற்கு முகவர்கள், தரகர்கள், நேரடிச் சந்தைப்படுத்தல், வங்கியூடாக காப்புறுதியிடல் மற்றும் ஏனைய பரப்பல் வழிவகைகளைப் பயன்படுத்துகின்றனர். முகவர்கள், நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் மேலாதிக்கம் மிக்க பரப்பும் சக்தியாகச் செயற்படுகின்றனர். 2016 இல், முகவர்கள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் GWP இல் 87.41% இனை (2015 இல் 89.90%) உழைத்திருந்தனர். நேரடிச் சந்தைப்படுத்தல் மற்றும் வங்கியூடான காப்புறுதியிடுதல்கள் என்பன நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மற்றுமொரு முக்கிய பரப்பல் வழியாக இருந்திருந்ததுடன் இவை முறையே 2016 ஆம் ஆண்டின் GWP இல் 6.18% இனையும் 4.91% இனையும் உழைத்திருந்தன. (இவை 2015 இல் முறையே 4.81% ஆகவும் 3.98% ஆகவும் காணப்பட்டன). மற்றைய பரப்பல் வழிகளும் தரகர்களும் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் 0.99% இனையும் 0.51% இனையும் மாத்திரமே உழைத்திருந்தன.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான மூன்று பரப்பல் வழிகளான நேரடிச் சந்தைப்படுத்தல், முகவர்கள் மற்றும் தரகுக் கம்பனிகள் ஆகியன 2016 ஆம் ஆண்டில் முறையே 40.01%, 25.73% மற்றும் 17.89%

விளக்கப்படம் 6
காப்புறுதிக் கம்பனிகளின் பரப்பல் வழிகள்




| | நீண்ட காலம் 2015 (அ) | பொது 2015 (அ) | நீண்ட காலம் 2016 (ஆ) | பொது 2016 (ஆ) |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 89.90 | 29.06 | 87.41 | 25.73 |
| தரகர்கள் | 0.42 | 18.48 | 0.51 | 17.89 |
| நேரடி | 4.81 | 35.61 | 6.18 | 40.01 |
| வங்கியூடாக | 3.98 | 3.62 | 4.91 | 3.50 |
| ஏனையவை | 0.88 | 13.23 | 0.99 | 12.87 |

இனை உழைத்திருந்தன. (இவை 2015 இல் முறையே 35.61%, 29.06% மற்றும் 18.48% ஆக இருந்தன). மற்றைய பரப்பல் வழிகள் 2016 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி GWP இன் 12.87% இனை உழைத்திருந்தன. இது 2015 இல் பதிவுசெய்யப்பட்ட 13.23% உடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைவானதாகும். வங்கியூடான காப்புறுதியிடல் பொதுக் காப்புறுதி GWP இல் 3.5% இனை உழைத்திருந்தது. இது 2015 இல் உழைக்கப்பெற்ற 3.62% இனையே பெரும்பாலும் ஒத்திருந்தது.

## நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

### மொத்தக் கட்டுப்பணம் (GWP)

2016 இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் சிறப்பாகச் செயற்பட்டு, ரூ.63,495 மில்லியனை (2015 இல் ரூ.53,691 மில்லியன்) கட்டுப்பணத் தொகையாக உழைத்திருந்ததன் மூலம் 18.26% என்ற பாராட்டத்தக்க வளர்ச்சி வீதத்தினை அடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2015 இல் அடையப்பெற்ற 20.40% என்ற வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் வளர்சியில் சிறிது தொய்வு காணப்பட்டுள்ளது.

செலிங்கோ லைவ் 2016 இல் ரூ.15,028 மில்லியன் கட்டுப்பணத்தை (2015 இல் 13,457 மில்லியன்) உழைத்ததன் மூலம் நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் தொடர்ந்தும் சந்தை முன்னணியாளராக விளங்கியது. இது மொத்த கட்டுப்பணத்தில் 23.67% ஆகக் (2015: 25.06%) கணக்கிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செலிங்கோ லைவ் இனுடைய சந்தைப் பங்கு கடந்த மூன்று வருடங்களாக படிப்படியாகக் குறைவடைந்திருக்கிறது. எஸ்.எல்.ஐ.சி. மற்றும் ஏ.ஐ.ஏ லைவ் என்பன 2016 ஆம் ஆண்டில் முறையே ரூ.11,894 மில்லியன் (2015: ரூ.10,470 மில்லியன்) மற்றும் ரூ.10,104 மில்லியன் (2015: 8,433 மில்லியன்) தொகைகளை கட்டுப்பணத் தொகைகளாகப் பதிவுசெய்திருந்ததன் மூலம் கட்டுப்பணத்தின் அடிப்படையில் ஆயுள் காப்புறுதிச் சந்தையில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றிருந்தன. இவற்றின் சந்தைப் பங்குகள் முறையே 18.73% உம் 15.91% உம் ஆகும். எஸ்.எல்.ஐ.சி. இன் சந்தைப் பங்கு 2016 இல் 0.77% இனால் குறைவடைந்திருந்த அதே வேளை ஏ.ஐ.ஏ. லைவ் இனால் தனது சந்தைப் பங்கினை


அட்டவணை 7

கம்பனி வாரியாக மொத்தக் கட்டுப்பணமும் சந்தைப் பங்கும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2012 | | 2013 | | 2014 | | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம்(ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 6,495,863 | 17.33 | 6,863,047 | 16.47 | 7,266,574 | 16.29 | 8,433,333 | 15.71 | 10,103,915 | 15.91 |
| அலையன்ஸ் லைவ் | 532,142 | 1.42 | 828,790 | 1.99 | 823,456 | 1.85 | 919,144 | 1.71 | 1,040,272 | 1.64 |
| அமானா லைவ் | 364,759 | 0.97 | 542,986 | 1.30 | 679,029 | 1.52 | 928,294 | 1.73 | 843,899 | 1.32 |
| ஆர்பிகோ | 101,900 | 0.27 | 206,494 | 0.50 | 297,439 | 0.67 | 482,447 | 0.90 | 745,386 | 1.17 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 2,034,084 | 5.43 | 2,520,283 | 6.05 | 3,048,148 | 6.84 | 4,091,042 | 7.62 | 5,635,701 | 8.87 |
| செலிங்கோ லைவ் | 10,829,470 | 28.90 | 11,122,906 | 26.69 | 12,002,524 | 26.91 | 13,456,828 | 25.06 | 15,027,600 | 23.67 |
| கோப் லைவ் | 312,056 | 0.83 | 337,623 | 0.81 | 402,046 | 0.90 | 494,598 | 0.92 | 462,159 | 0.73 |
| எச்என்பி. லைவ் | 1,500,028 | 4.00 | 2,014,547 | 4.83 | 2,342,867 | 5.25 | 2,788,715 | 5.19 | 3,554,078 | 5.60 |
| ஜனசக்தி லைவ் | 2,025,075 | 5.40 | 2,193,662 | 5.26 | 2,170,419 | 4.87 | 2,550,782 | 4.75 | 2,943,963 | 4.64 |
| எல்ஜி.சி. | 303,344 | 0.81 | 322,268 | 0.77 | 348,767 | 0.78 | 386,885 | 0.72 | 474,312 | 0.75 |
| எல்ஓ.எல்சி. லைவ் | 106,238 | 0.28 | 274,798 | 0.66 | 592,422 | 1.33 | 1,209,578 | 2.25 | 1,896,558 | 2.99 |
| எம்பி.எஸ்எல். | 192,780 | 0.51 | 251,720 | 0.60 | 294,299 | 0.66 | 203,235 | 0.38 | 235,533 | 0.37 |
| சணச | 203,616 | 0.54 | 283,975 | 0.68 | 260,867 | 0.58 | 311,434 | 0.58 | 367,649 | 0.58 |
| எஸ்எல்ஐசி. | 7,369,031 | 19.66 | 8,397,718 | 20.15 | 8,121,159 | 18.21 | 10,470,079 | 19.50 | 11,893,640 | 18.73 |
| யூனியன் லைவ் | 5,106,323 | 13.63 | 5,515,063 | 13.23 | 5,945,499 | 13.33 | 6,964,390 | 12.97 | 8,270,751 | 13.03 |
| மொத்தம் | 37,476,709 | 100 | 41,675,880 | 100 | 44,595,516 | 100 | 53,690,783 | 100 | 63,495,416 | 100 |
| வளர்ச்சி வீதம் (%) | 6.58 | | 11.20 | | 7.01 | | 20.40 | | 18.26 | |

விளக்கப்படம் 7

கம்பனி வாரியாக மொத்தக் கட்டுப்பணத்தின் சந்தைப் பங்கு - 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நீண்ட கால காப்புறுதி வியாபாரம்





0.2% இனால் சற்று உயர்த்த முடிந்திருந்தது. யூனியன் லைவ் மற்றும் சொப்ட்லொஜிக் லைவ் என்பன முறையே ரூ.8,271 மில்லியன் (2015:ரூ.6,964 மில்லியன்) மற்றும் ரூ.5,636 மில்லியன் (2015: ரூ.4,091 மில்லியன்) பெறுமதியான கட்டுப்பணங்களைச் சம்பாதித்திருந்ததுடன் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் நான்காவது, ஐந்தாவது மிகப்பெரிய சந்தைப் பங்குகளை வைத்திருந்தன. யூனியன் லைவ் மற்றும் சொப்ட்லொஜிக் லைவ் ஆகியன முறையே 2016 ஆம் ஆண்டில் அடைந்துகொண்ட சந்தைப் பங்கின் சதவீதம் 13.03% மற்றும் 8.87% எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பிரதானமாக வெவ்வேறுபட்ட வாடிக்கையாளர் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு புத்தாக்க ஆயுள் காப்புறுதியினை அறிமுகப்படுத்தியதன் காரணமாக கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் சொப்ட்லொஜிக் லைவ் இன் சந்தைப் பங்கு படிப்படியாக அதிகரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மொத்தக் கட்டுப்பணத்திற்கு உயர்ந்தளவு பங்களிப்பை வழங்கும் ஐந்து பங்களிப்பாளர்களின் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குநர்கள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

விளக்கப்படம் 8 இல் சித்தரிக்கப்பட்டதைப் போன்று, செலிங்கோ லைவ், எஸ்.எல்.ஐ.சி.,


விளக்கப்படம் 8
மொத்தக் கட்டுப்பணத்தின் உயர்ந்தளவு ஐந்து பங்களிப்பாளர்களின் சந்தைப் பங்கும் 2012 தொடக்கம் 2016 வரையான ஆண்டுகளுக்கான ஏனைய காப்புறுதி வழங்குநர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்




| | செலிங்கோ லைவ் | எஸ்.எல்.ஐ.சி. | ஏ.ஐ.ஏ. லைவ் | யூனியன் லைவ் | சொப்ட்லொஜிக் லைவ் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 28.90 | 19.66 | 17.33 | 13.63 | 5.43 | 15.05 |
| 2013 | 26.69 | 20.15 | 16.47 | 13.23 | 6.05 | 17.41 |
| 2014 | 26.92 | 18.21 | 16.29 | 13.33 | 6.84 | 18.41 |
| 2015 (அ) | 25.06 | 19.50 | 15.71 | 12.97 | 7.62 | 19.14 |
| 2016 (ஆ) | 23.67 | 18.73 | 15.91 | 13.03 | 8.87 | 19.79 |

ஏ.ஐ.ஏ. லைவ், யூனியன் லைவ் மற்றும் சொப்ட்லொஜிக் லைவ் ஆகியன 2016 இல் நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் உயர்ந்தளவு சந்தைப் பங்குகளை அடைந்திருந்த ஐந்து காப்புறுதி நிறுவனங்களாகும். இந்த ஐந்து உயர்ந்தளவு மொத்தக் கட்டுப்பண உழைப்பாளர்களும் 2016 ஆம் ஆண்டின் மொத்த நீண்ட காலக் காப்புறுதி மொத்தக் கட்டுப்பணத்தின் 80.21% இனைக் கூட்டாகச் சேகரித்திருந்தனர். இச்சதவீதம் 2015 இல் பதிவுசெய்யப்பட்ட 80.86% இனைப் பெரிதும் ஒத்திருக்கிறது. நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் உள்ள மற்றைய 10 கம்பனிகள் 2016 ஆம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதி மொத்தக் கட்டுப்பணத்தின் 19.79% இனை (2015: 19.14%) உழைத்திருந்தனர். நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் உள்ள சிறியளவிலான கம்பனிகளின் மொத்தச் சந்தைப் பங்கானது விளக்கப்படம் 8 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் படிப்படியாக அதிகரித்திருந்தது.

விளக்கப்படம் 9
காப்புறுதிக் கம்பனிகளால் கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம




| | 2012 | 2013 | 2014 | 2015 (a) | 2016 (b) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 77,717 | 45,457 | 436,518 | 430,617 | 591,147 |
| இறப்பு | 789,166 | 1,358,337 | 1,889,289 | 1,640,801 | 1,549,791 |
| ஒப்புவிப்புகள் | 2,823,924 | 5,677,638 | 7,184,611 | 5,267,864 | 5,295,957 |
| முதிர்வுநிலை நன்மைகள் | 7,860,715 | 9,839,833 | 9,754,751 | 11,687,811 | 12,712,720 |
| வேறு நன்மைகள் | 1,920,859 | 1,388,698 | 1,378,929 | 1,906,560 | 2,472,666 |

## காப்புறுதிக் கம்பனிகளால் கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் (Claims) – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2015 ஆம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதி வழங்குநர்கள் செலுத்தியிருந்த மொத்த உரிமைக் கோரிக்கைகளுக்கான பணத்தொகையான ரூ.20,934 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 இல் 8.06% உயர்வடைந்து ரூ.22,622 மில்லியன் என்ற மொத்த உரிமைக்கோரிக்கைத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. விளக்கப்படம் 9 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, அங்கவீன நன்மைகள், இறப்பு நன்மைகள், ஒப்புவிப்புகள், முதிர்வுநிலை நன்மைகள் மற்றும் வேறு நன்மைகள் போன்றவை காப்புறுதிதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த உரிமைக் கோரிக்கைகளினுள் அடங்குகின்றன. 2016 இல் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த உரிமைக் கோரிக்கைகளில் 56.20% ஆனவை முதிர்வுநிலை நன்மைகளாகும். இது 2015 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட வீதமான 55.83% உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றினைக் காட்டுகிறது. 2016 இல் ஒப்புவிப்பு நன்மைகளுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை 5,296 மில்லியன் ஆகும். இது 2015 இல் செய்யப்பட்ட ரூ.5,268 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறியளவான அதிகரிப்பொன்றினைக் காட்டுகிறது. 2016 இல் வேறு நன்மைகள், இறப்பு நன்மைகள், அங்கவீன நன்மைகள் போன்றவற்றுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைகள் முறையே ரூ.2,473 மில்லியன், ரூ.1,550 மில்லியன் மற்றும் ரூ.591

மில்லியன் என்பனவாகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் இறப்பு நன்மைகள் குறைவடைந்திருந்ததுடன், ஏனைய சகல வகை நன்மைகளும் அதிகரித்திருந்தன.

## காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2016 இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கையினை அட்டவணை 8 சித்தரிக்கிறது. இதில் 2016 ஆம் ஆண்டிற்கான 316,424 உரிமைக் கோரிக்கைகள் (2015: 296,640) உள்ளடக்கப்பட்டுள்ளன. 2016 இல் கொடுப்பனவு செய்யப்பட்ட இந்த மொத்த உரிமைக்கோரிக்கைகளில் 129,241 வேறு நன்மைகள் வகையைச் சேர்ந்த உரிமைக் கோரிக்கைகளாகவும், 122,788 முதிர்வுநிலை நன்மைகள் வகையைச் சேர்ந்த உரிமைக்கோரிக்கை களாகவும் 46,484 ஒப்புவிப்பு நன்மைகள் வகையைச் சேர்ந்த உரிமைக்கோரிக்கைகளாகவும் 9,493 அங்கவீன நன்மைகள் உரிமைக்கோரிக்கைகளாகவும் 8,418 இறப்பு நன்மை உரிமைக்கோரிக்கை களாகவும் இருந்தன. மரணச்சடங்குச் செலவுகள், கடுமையான சுகவீனம், உயிர் பிழைத்தல் நன்மைகள் போன்ற வேறு நன்மை உரிமைக்கோரிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் மொத்த உரிமைக் கோரிக்கைகளில் 40.84% இனைக் (2015: 37.87%) கொண்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் மொத்த உரிமைக் கோரிக்கைகளில் 38.80% ஆனவை முதிர்வுநிலை நன்மைகளாக (2015: 40.68%) இருந்தன. வேறு நன்மை உரிமைக்கோரிக்கைகளும் முதிர்வுநிலை உரிமைக்கோரிக்கைகளும் கூட்டாக மொத்த உரிமைக்கோரிக்கைகளில் 79.65% இனை பிரதிநிதித்துவம் செய்திருந்தன. 2016 இல் அங்கவீன உரிமைக்கோரிக்கைகள் தவிர்ந்த ஏனைய சகல வகை நீண்ட கால காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அங்கவீன உரிமைக்கோரிக்கைகள் 2016 இல் 32.58% இனால் குறைவடைந்திருந்தது.

அட்டவணை 8

**காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 578 | 6,980 | 8,120 | 14,081 | 9,493 |
| இறப்பு | 4,358 | 5,284 | 5,795 | 6,747 | 8,418 |
| ஒப்புவிப்புகள் | 24,631 | 41,964 | 46,312 | 42,814 | 46,484 |
| முதிர்வுநிலை நன்மைகள் | 102,465 | 102,050 | 107,353 | 120,661 | 122,788 |
| வேறு நன்மைகள் | 51,773 | 99,257 | 84,835 | 112,337 | 129,241 |
| மொத்தம் | **183,805** | **255,535** | **252,415** | **296,640** | **316,424** |

## நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள்

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி 2016 டிசெம்பர் 31 இல் ரூ.345,675 மில்லியன் ஆக இருந்தது. இது 2015 டிசெம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூ.312,713 மில்லியனுடன் ஒப்பிடப்பட்டு அட்டவணை 9 இல் காட்டப்பட்டுள்ளது. நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு 10.54% இனால் வளர்ச்சி கண்டிருந்தது.

2016 டிசெம்பர் 31 இல் இருந்த மொத்தச் சொத்துக்களில் ரூ.162,232 மில்லியன் (2015: ரூ.137,144 மில்லியன்) அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டன. இது நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் மொத்தச் சொத்துத் தொகுப்பில் (portfolio) 46.93% (2015: 43.86%) ஆகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின்


அட்டவணை 9

**2015 மற்றும் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளபடியான சொத்துக்களின் திரட்டு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| சொத்து வகை | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ.'000 | % | ரூ.'000 | % |
| அரச கடன் பிணையங்கள் | 137,144,420 | 43.86 | 162,232,470 | 46.93 |
| உரிமையாண்மைகள் | 47,794,233 | 15.28 | 43,034,584 | 12.45 |
| நிறுவனக் கடன் | 52,284,234 | 16.72 | 71,374,515 | 20.65 |
| காணியும் கட்டடமும் | 7,595,272 | 2.43 | 9,825,371 | 2.84 |
| வைப்புகள் | 39,231,457 | 12.55 | 28,243,650 | 8.17 |
| அலகு நம்பிக்கைகள் | 2,393,458 | 0.77 | 1,939,392 | 0.56 |
| காப்புறுதிக் கடன்கள் | 5,349,620 | 1.71 | 5,878,223 | 1.70 |
| ஏனைய சொத்துக்கள் | 18,377,218 | 5.87 | 20,681,724 | 5.99 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,543,353 | 0.81 | 2,465,505 | 0.71 |
| மொத்தம் | **312,713,263** | **100** | **345,675,434** | **100** |

காப்புறுதித் துணைக் கம்பனிகளால் செய்யப்பட்ட முதலீடுகளின் தொகை ரூ.6.8 மில்லியனும் உரிமையாண்மை முதலீடுகளில் உள்ளடக்கப்பட்டன.

விளக்கப்படம் 10
**2015 மற்றும் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதிகளில் உள்ளபடியான சொத்துக்களின் திரட்டு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




இறுதியில் அது 18.29% இனால் அதிகரித்திருந்தது. சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டதான அரச பிணையங்களில் நீண்ட கால காப்புறுதி நிதியில் ஆகக்குறைந்தது 30% இனை முதலீடு செய்யும் தேவைப்பாடுகளுடன் நீண்ட கால காப்புறுதி வழங்குநர்கள் இணக்கமாகச் செயற்படுகின்றனர் என்பதைச் சபையானது உறுதிசெய்கிறது. சபையினால் விநியோகிக்கப்பட்ட தீர்மான இல. 1 இற்கு இணங்க, நீண்ட கால காப்புறுதி நிதியின் மீதிச் சொத்துக்களை முதலீடு செய்வதற்கும் காப்புறுதி வழங்குநர்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் ஏனைய பிரதான சொத்து வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனக் கடன்களில் முதலீடுகள், உரிமையாண்மைகள் மற்றும் வைப்புகள் என்பன, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான மொத்தச் சொத்துக்களில் முறையே 20.65%, 12.45% மற்றும் 8.17% ஆக இருந்தன. 2016 டிசெம்பர் 31 இல் இருந்த நிறுவனக் கடன்கள் ரூ.71,375 மில்லியன் ஆகும். 2015 டிசெம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டிருந்த தொகையான ரூ.52,284 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் இது 36.51% வளர்ச்சியைக் காட்டுகிறது.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி உரிமையாண்மைகளில் முதலீடு செய்த தொகை ரூ.43,034 மில்லியனாக இருந்தது. 2015 டிசெம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டிருந்த தொகையான ரூ.47,794 மில்லியனுடன் ஒப்பிடுகையில் உரிமையாண்மைகளில் 9.96% குறைவு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது ஒப்பீட்டு ரீதியில், பங்குச் சந்தையில் பலவீனமான செயற்பாடுகளைப் பிரதிபலிக்கிறது. 2016 டிசெம்பர் 31 இல் வைப்புகள் கணிசமானளவு குறைவடைந்திருந்தது. 2015 டிசெம்பர் 31 இல் பதிவாகியிருந்த வைப்புகளின் பெறுமதியான ரூ.39,231 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் பதிவாகியிருந்த தொகையானது குறிப்பிடத்தக்க வீதமான 28.01% குறைவடைந்து ரூ.28,244 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

பிரதான முதலீட்டு வகைகளான அரச பிணையங்கள், நிறுவனக் கடன்கள், உரிமையாண்மைகள் மற்றும் வைப்புகள் என்பன கூட்டாக, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களில் 88.2% (2015: 88.41%) எனக் கணக்கிடப்பட்டது. மீதி 11.8% (2015: 11.59) உம் காணியும் கட்டடமும், ஏனைய சொத்துக்கள், காப்புறுதிக் கடன்கள் போன்றவற்றில் வைத்திருக்கப்பட்டன.

## முதலீட்டு வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 10 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் முதலீடு செய்யப்பட்டதிலிருந்து ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 2016 இல் ரூ.27,652 மில்லியனாகக் (2015 இல் ரூ.23,370 மில்லியன்) காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 18.32% வளர்ச்சியாகும். 2016 இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சராசரி முதலீடுகள் 17.98% அதிகரித்து ரூ.287,291 மில்லியனை (2015 இல் ரூ.243,507 மில்லியன்) அடைந்திருந்தது. 2016 இல் நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் சராசரி முதலீட்டு விளைச்சல் 9.63% ஆகும். இது கிட்டத்தட்ட 2015 இல் இருந்த 9.60% இற்குச் சமனானதாகும்.

2016 இல் 11.67% (2015: 10.71%) முதலீட்டு விளைச்சலை ஈட்டிய பெரும்பாலான முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த அரச கடன் பிணையங்களிலுள்ள முதலீடுகள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தன. 2016 இல் மொத்த உரிமையாண்மைகளிலிருந்து ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானம்

ரூ. 66 மில்லியன் (2015: ரூ. 1,126 மில்லியன்) ஆகும். பிரதானமாக 2016 இல் ஏற்பட்ட ரூ. 1,003 மில்லியன் மூலதன இழப்பு காரணமாக 94.14% என்ற ஒரு கடுமையான வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டிருந்தது. இது பங்குச் சந்தையின் பலவீனமான செயற்பாட்டைப் பிரதிபலிக்கிறது. 2016 இல் நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் பங்கிலாப வருமானம் ரூ. 1070 மில்லியன் ஆகும். 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த பங்கிலாபத் தொகையான ரூ. 1355 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 21.03% வீழ்ச்சியாகும்.

2016 இல் நிறுவனக் கடன்கள் ரூ.61,829 மில்லியன் (2015 இல் ரூ.46,514 மில்லியன்) சராசரி முதலீட்டிற்காக ரூ.6712 மில்லியன் (2015 இல் ரூ.4983 மில்லியன்) முதலீட்டு வருமானமொன்றினை ஈட்டியிருந்தன. இது 10.86% (2015: 10.71%) முதலீட்டு விளைச்சல் ஒன்றை ஈட்டியிருந்தது.

2016 இல் வைப்புகள் 9.12% முதலீட்டு விளைச்சலை ஈட்டியிருந்தன. இது 2015 இல் 9.63% ஆகக் காணப்பட்டிருந்தது. 2015 இல் ஈட்டப்பட்ட ரூ. 3692 மில்லியனை 2016 இல் ஈட்டப்பட்ட ரூ. 3077 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானத்தில் வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. 2016 இல் அலகு நம்பிக்கைகள் மற்றும் காப்புறுதிக் கடன்கள் என்பன ஒப்பீட்டளவில் குறைந்த முதலீட்டு வருமானங்களை ஈட்டியிருந்தன. இவற்றின் முதலீட்டு விளைச்சல் விகிதங்கள் முறையே 4.09% (2015: 5.00%) மற்றும் 3.14% (2015: 1.91%) ஆகும்.

## விநியோகிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் நடைமுறையிலுள்ள காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்


2016 இல், நீண்ட கால காப்புறுதி வழங்குநர்கள் 662,701 புதிய ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களை விநியோகித்திருந்தனர். 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 740,511 புதிய காப்புறுதிப் பத்திரங்களுடன் ஒப்பிடுகையில் இது 10.51% வீழ்ச்சியாகும். இதற்கிணங்க, நடைமுறையிலுள்ள மொத்த ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 2,895,542 இனை (2015: 2,889,763) அடைந்திருந்தது. விளக்கப்படம் 11 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, நடைமுறையிலுள்ள மொத்த ஆயுள் காப்புறுதிப் பத்திரங்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக படிப்படியாக அதிகரித்திருப்பதானது, நீண்ட கால காப்புறுதி வியாபாரம் நாட்டில் தொடர்ச்சியாக விரிவடைவதைப் பிரதிபலிக்கிறது.

அட்டவணை 10

முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் திரட்டு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| வகை | 2015 (அ) | | | 2016 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) |
| அரச கடன் பிணையங்கள் | 13,290,740 | 124,148,732 | 10.71 | 17,465,206 | 149,688,445 | 11.67 |
| - திறைசேரி முறிகள் | 11,970,779 | | | 15,977,679 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 87,053 | | | 113,045 | | |
| - ஏனையவை (கடன் வட்டி) (REPO) | 1,232,908 | | | 1,374,481 | | |
| உரிமையாண்மை | 1,126,509 | 19,404,953 | 5.81 | 66,180 | 25,397,883 | 0.26 |
| - மூலதன வருமானம் / நட்டம் | (229,010) | | | (1,003,896) | | |
| - பங்கிலாபம் | 1,355,519 | | | 1,070,076 | | |
| நிறுவனக் கடன்கள் | 4,983,436 | 46,513,842 | 10.71 | 6,712,215 | 61,829,374 | 10.86 |
| - தனிச்சங்கள் | 4,981,814 | | | 6,663,836 | | |
| - வணிகப் பத்திரங்களும் ஏனையவையும் | 1,622 | | | 48,379 | | |
| காணியும் கட்டடமும் | 59,670 | 6,752,377 | 0.88 | 72,101 | 8,710,321 | 0.83 |
| வைப்புகள் | 3,692,445 | 38,352,681 | 9.63 | 3,076,907 | 33,737,553 | 9.12 |
| - வங்கி | 3,434,582 | | | 2,852,632 | | |
| - நிதிக் கம்பனிகள் | 257,863 | | | 224,276 | | |
| அலகு நம்பிக்கை | 115,364 | 2,307,124 | 5.00 | 88,530 | 2,166,425 | 4.09 |
| காப்புறுதிக் கடன்கள் | 104,908 | 5,484,510 | 1.91 | 174,662 | 5,569,566 | 3.14 |
| ஏனையவை | (3,432) | 542,365 | (0.63) | (3,970) | 191,702 | (2.07) |
| மொத்தம் | **23,369,639** | **243,506,586** | **9.60** | **27,651,831** | **287,291,269** | **9.63** |

விளக்கப்படம் 11
விநியோகிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் நடைமுறையிலுள்ள காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்




| | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | 2016 (அ) |
|---|---|---|---|---|---|
| விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 514,516 | 546,292 | 545,303 | 740,511 | 662,701 |
| நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 2,438,340 | 2,477,695 | 2,604,667 | 2,889,763 | 2,895,542 |
| ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை - மொத்த சனத்தொகையின் சதவீதமாகழு | 11.9 | 12.0 | 12.5 | 13.8 | 13.7 |
| நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை – தொழிற்படையின் சதவீதமாக * | 28.8 | 28.1 | 29.6 | 33.6 | 36.2 |


* மூலம் – நடு ஆண்டு தொழிற் படை மற்றும் சனத்தொகை – குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

2016 இல் ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மொத்தச் சனத்தொகையில் 13.7% ஆக இருந்தது. இது 2015 ஆம் ஆண்டில் 13.8% ஆகப் பதிவாகியிருந்தது. எனவே 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் சிறிதளவு வீழ்ச்சி பதிவாகியிருக்கிறது. மேலும், 2015 ஆம் ஆண்டில் 33.6% ஆக இருந்த தொழிற் படையில் ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 36.2% இற்கு உயர்வடைந்திருக்கிறது. இந்தப் புள்ளிவிபரம் நாட்டில் ஆயுள் காப்புறுதியின் ஊடுருவல் குறைந்த மட்டத்தில் இருப்பதைப் பிரதிபலிப்பதுடன் ஆயுள் காப்புறுதி வழங்குநர்களின் ஆற்றல் மேலும் விருத்திசெய்யப்பட வேண்டும் என்பதையும் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதயும் உணர்த்துகிறது.

## காப்புறுதிப் பத்திரங்களின் காலக்கெடு முடிவடைதல் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2016 இல், புதிதாக காலக்கெடு முடிவடைந்த ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 96,502 ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டில் புதிதாக காலக்கெடு முடிவடைந்த ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையான 93,008 உடன் ஒப்பிடுகையில் இது 3.76% அதிகரிப்பாகும். மேலும், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலக்கெடு முடிவடைகின்ற 403,423 காப்புறுதிப் பத்திரங்கள் இருந்தன. 2015 ஆம் ஆண்டில் பதிவாகிய 364,567 உடன் ஒப்பிடுகையில் இது 10.66% இனால் அதிகரித்திருக்கிறது. விளக்கப்படம் 12 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, 2016 இல் புதிதாக காலக்கெடு முடிவடைகின்ற காப்புறுதிப் பத்திரங்கள், விநியோகிக்கப்பட்ட புதிய காப்புறுதிப் பத்திரங்களின் 14.56% ஆக இருந்ததுடன் இது 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 12.56% உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றாகும். 2016 இல் காலக்கெடு முடிவடைகின்ற மொத்தக் காப்புறுதி பத்திரங்கள், நடைமுறையிலுள்ள மொத்த காப்புறுதிப் பத்திரங்களின் 13.93% ஆக இருந்ததுடன் இது 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 12.62% உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றாகும்.

விளக்கப்படம் 12
2012 முதல் 2016 வரையில், காலக்கெடு முடிந்துள்ள காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கையும் அதன் விகிதமும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்




| | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | 2016 (அ) |
|---|---|---|---|---|---|
| புதிதாக காலக்கெடு முடிவடைந்த காப்புறுதிப் பத்திரங்கள் | 94,936 | 107,906 | 103,500 | 93,008 | 96,502 |
| காலக்கெடு முடிவடைந்த மொத்தக் காப்புறுதிப் பத்திரங்கள் | 332,707 | 366,506 | 362,664 | 364,567 | 403,423 |
| புதிதாக காலக்கெடு முடிவடைந்த காப்புறுதிப் பத்திரங்கள் - விநியோகிக்கப்பட்ட புதிய காப்புறுதிப் பத்திரங்களின் சதவீதமாக | 18.45 | 19.75 | 18.98 | 12.56 | 14.56 |
| காலக்கெடு முடிவடைந்த மொத்த காப்புறுதிப் பத்திரங்கள் - நடைமுறையிலுள்ள மொத்தக் காப்புறுதிப் பத்திரங்களின் சதவீதமாக | 13.64 | 14.79 | 13.92 | 12.62 | 13.93 |

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன் தீர்க்கும் நிலை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

கடன் தீர்ப்பனவு எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம் - RBC) விதிகள் - 2015 ஆனது 2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெற்றிருந்தது. RBC விதிகள் 2015 இன் கீழ், காப்புறுதி வழங்குநர்கள், போதியளவு மூலதனத்

தேவைப்பாடுகளுடன் இணக்கமாகும் பொருட்டு, ஆகக்குறைந்த மொத்த கிடைக்கத்தக்க மூலதனமாக (TAC) ரூ.500 மில்லியனை பேணுவதற்கும் மூலதன போதியளவு விகிதத்தை (CAR) 120% இல் பேணுவதற்கும் தேவைப்படுத்தப்படுகின்றனர். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் போதியளவு மூலதனத் தேவைப்பாடுகளை அட்டவணை 11 பிரதிபலிப்பதுடன் மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் (TAC), இடர் அடிப்படையிலான மூலதனத் தேவை (RCR), ஒப்புவிப்புப் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC), மூலதன போதியளவு விகிதம் (CAR) ஆகியவற்றையும் விளக்குகிறது.

எம்.பி.எஸ்.எல். தவிர்ந்த ஏனைய சகல நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களும் 2016 டிசெம்பர் 31 இல் ஆகக்குறைந்த தேவைப்பாடான ரூ. 500 மில்லியனை விட அதிகமான தொகையினை மொத்தக் கிடைக்கத்தக்க மூலதனமாகப் பேணியிருந்தனர். எனவே, எம்.பி.எஸ்.எல். ஆனது 2016 டிசெம்பர் 31 இல், மொத்தக் கிடைக்கத்தக்க தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்காததால் சபையினால் விநியோகிக்கப்பட்ட அமுலாக்கத் தந்திரோபாயத்தின்படி, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2016 டிசெம்பர் 31 இல் சகல காப்புறுதிக் கம்பனிகளும் ஆகக்குறைந்த மூலதன போதியளவு விகிதத் தேவைப்பாடான 120% இனை திருப்திப்படுத்தியிருந்ததுடன் எம்.பி.எஸ்.எல். தவிர்ந்த ஏனைய சகல கம்பனிகளும் மூலதன போதியளவு விகிதத்தினை 160% இலும் விஞ்சிய அளவில் பேணியிருந்தமை பதிவாகியிருந்தது. நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் சராசரியான மூலதன போதியளவு விகிதம், 2016 டிசெம்பர் 31 இல் 307% ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது.

அட்டவணை 11

**கடன் தீர்க்கும் நிலையின் கம்பனி வாரியான பகுப்பாய்வு - 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | TAC (ரூ.'000) | RCR (ரூ.'000) | SVCC (ரூ.'000) | CAR (%) |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 21,107,662 | 3,755,882 | 5,853,682 | 361 |
| அலையன்ஸ் லைவ் | 904,050 | 299,909 | 110,061 | 301 |
| அமானா லைவ் | 558,175 | 295,943 | - | 189 |
| ஆர்பிகோ | 1,232,234 | 211,019 | 63,453 | 584 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 8,570,469 | 2,761,510 | 4,386,958 | 195 |
| செலிங்கோ லைவ் | 43,094,498 | 12,847,731 | - | 335 |
| கோப் லைவ் | 710,201 | 358,399 | - | 198 |
| எச்.என்.பி. லைவ் | 5,274,682 | 1,058,500 | 1,185,311 | 445 |
| ஜனசக்தி லைவ் | 4,128,936 | 1,540,195 | - | 268 |
| எல்.ஐ.சி. | 664,289 | 201,984 | 44,722 | 329 |
| எல்.ஓ.எல்.சி. லைவ் | 887,316 | 392,696 | - | 226 |
| எம்.பி.எஸ்.எல். | 105,905 | 73,229 | - | 145 |
| சணச | 962,477 | 175,114 | 481,480 | 200 |
| எஸ்.எல்.ஐ.சி. | 76,297,822 | 18,502,136 | 4,591,874 | 412 |
| யூனியன் லைவ் | 14,346,884 | 3,492,978 | - | 411 |
| **மொத்தம் / ஒட்டுமொத்தம்** | **178,845,599** | **45,967,226** | **16,717,540** | **307** |

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கத்தக்க மூலதன (TAC) தேவைப்பாடுகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நீண்ட கால காப்புறுதி வழங்குநர்கள் தொடர்பான மொத்த கிடைக்கத்தக்க மூலதனத் தொகுப்பினை (composition) அட்டவணை 12 சித்தரிக்கிறது. RBC விதிகள் 2015 இன் கீழ், அடுக்கு 1 (Tier 1) மற்றும் அடுக்கு 2 (Tier 2) மூலதனத்தைக் கூட்டி கழிப்பனவாகக் காட்டப்பட்டுள்ள உருப்படிகளைக் கழிப்பதன் மூலம் மொத்தக் கிடைக்கத்தக்க மூலதனம் (TAC) கணிப்பிடப்படுகிறது. விதியின்படி, அடுக்கு 2 மூலதனமானது அடுக்கு 1 மூலதனத்தின் 50% இனை விஞ்ச முடியாது.

நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் TAC மொத்தமாக ரூ.178,846 மில்லியன் ஆகும். இதில் அடுக்கு 1 இன் மூலதனத் தொகை ரூ.197,663 மில்லியனும் அடுக்கு 2 இன் மூலதனத் தொகை ரூ.2,129 மில்லியனும் கழிப்பனவுத் தொகை ரூ.20,946 மில்லியனும் அடங்கியுள்ளன.

அடுக்கு 1 மூலதனமானது விநியோகிக்கப்பட்டதும் முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்பட்டதுமான சாதாரண பங்குகளும் பங்குக் கட்டுப்பணங்களும், மூலதன ஒதுக்கங்கள், கொடுப்பனவு செய்யப்பட்ட திரட்சியற்ற (non-cumulative) மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகள் போன்ற உருப்படிகளை உள்ளடக்கியுள்ள அதேவேளை, அடுக்கு 2 மூலதனமானது திரண்ட மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள், மீட்கப்படக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் போன்வற்றை உள்ளடக்கியுள்ளது. நன்மதிப்பு, அனுமதிக்கத்தகாத காணியும்

கட்டடமும், ஏனைய அசையா ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணம், வரி வருமதிகள் போன்றவை RBC விதிகள் - 2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள கழிப்பனவுகளுக்கான சில உதாரணங்களாகும்.

## காப்புறுதிக் கம்பனிகளின் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவை (RCR) ஒப்பீடுகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி, கம்பனி வாரியான RCR பகுப்பாய்வினை அட்டவணை 13 சித்தரிக்கிறது. இது RBC வேலைச்சட்டகத்தின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ள பிரதான இடர் வகைகளை உள்ளடக்கியுள்ளது. சந்தை இடர், பொறுப்பு இடர் மற்றும் கவனக்குவிப்பு இடர் என்பன நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் மூன்று பிரதான இடர் வகைகள் ஆகும். நீண்ட கால காப்புறுதி வழங்குநர்களின் மொத்தச் சந்தை இடர் ரூ.36,078 மில்லியனாக இருந்த அதேவேளை பொறுப்பு இடர் மற்றும் கவனக்குவிப்பு இடர் என்பன முறையே ரூ. 12,299 மில்லியன் மற்றும் ரூ. 4,388 மில்லியன் ஆகக் காணப்பட்டன. பன்முகப்படுத்தலின் பின்னரான மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் சந்தை இடர் 78.49% எனக் கணக்கிடப்பட்டுள்ள அதேவேளை

அட்டவணை 12

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி, மொத்த கிடைக்கத்தக்க மூலதனத்தின் (TAC) கம்பனி வாரியான பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பரில் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | அடுக்கு 1 (ரூ'000) | அடுக்கு 2 (ரூ'000) | கழிப்பனவுகள் (ரூ'000) | மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 22,311,313 | 706,096 | 1,909,747 | 21,107,662 |
| அலையன்ஸ் லைவ் | 1,016,314 | - | 112,264 | 904,050 |
| அமானா லைவ் | 599,272 | 2,169 | 43,266 | 558,175 |
| ஆர்பிகோ | 1,315,661 | - | 83,426 | 1,232,234 |
| சொப்ட்லொஜிக் லைவ்* | 9,382,070 | 24,903 | 836,504 | 8,570,469 |
| செலிங்கோ லைவ் | 49,142,742 | 164,078 | 6,212,323 | 43,094,498 |
| கோப் லைவ் | 819,473 | 28,298 | 137,570 | 710,201 |
| எச்.என்.பி. லைவ் | 7,182,455 | - | 1,907,773 | 5,274,682 |
| ஜனசக்தி லைவ் | 11,151,926 | - | 7,022,990 | 4,128,936 |
| எல்.ஐ.சி. | 771,618 | - | 107,329 | 664,289 |
| எல்.ஓ.எல்.சி. லைவ் | 1,038,669 | - | 151,353 | 887,316 |
| எம்.பி.எஸ்.எல். | 119,013 | - | 13,108 | 105,905 |
| சணச | 1,148,629 | 1,221 | 187,373 | 962,477 |
| எஸ்.எல்.ஐ.சி. | 76,829,505 | 47,562 | 579,245 | 76,297,822 |
| யூனியன் லைவ் | 14,834,023 | 1,154,364 | 1,641,503 | 14,346,884 |
| மொத்தம் | **197,662,681** | **2,128,692** | **20,945,774** | **178,845,599** |

அட்டவணை 13

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் மூதனத் தேவைப்பாட்டின் (RCR) கம்பனி வாரியான பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பர் 31 இல் உள்ளவாறு (ரூ'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | கவனக் குவிப்பு இடர் | சந்தை இடர் | மீள் காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | செயற்பாட்டு இடர் | பன்முகப்படுத்தலுக்கு முன்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) | பன்முகப்படுத்தலுக்குப் பின்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) |
| ஏ.ஐ.ஏ. லைவ் | 522,912 | 767,887 | 2,030,977 | - | 1,690,531 | 463,209 | 5,475,515 | 3,755,882 |
| அலையன்ஸ் லைவ் | 2,383 | 26,590 | 237,185 | 151 | 135,930 | 23,405 | 425,645 | 299,909 |
| அமானா லைவ் | 27,764 | 196,859 | 65,729 | 966 | 44,432 | 27,250 | 363,000 | 295,943 |
| ஆர்பிகோ | 18,054 | 122,189 | 69,027 | 108 | 21,027 | 15,737 | 246,142 | 211,019 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 65,587 | 298,230 | 1,846,349 | - | 1,652,722 | 98,046 | 3,960,933 | 2,761,510 |
| செலிங்கோ லைவ் | 888,650 | 504,103 | 11,231,956 | 10,420 | 2,129,986 | 938,552 | 15,703,667 | 12,847,731 |
| கோப் லைவ் | 26,005 | 27,078 | 281,091 | - | 129,581 | 17,905 | 481,660 | 358,865 |
| எச்.என்.பி. லைவ் | 124,489 | 279,699 | 410,127 | 974 | 664,619 | 118,356 | 1,598,264 | 1,058,500 |
| ஜனசக்தி லைவ் | 252,149 | 391,641 | 807,429 | 332 | 480,274 | 185,849 | 2,117,673 | 1,540,195 |
| எல்.ஐ.சி. | 17,884 | 31,769 | 143,027 | 86 | 56,344 | 21,541 | 270,651 | 201,984 |
| எல்.ஓ.எல்.சி. லைவ் | 1,072 | 1,490 | 305,867 | 3,349 | 237,107 | 28,020 | 576,905 | 392,696 |
| எம்.பி.எஸ்.எல். | 4,306 | 16,065 | 13,324 | - | 64,742 | 5,966 | 104,403 | 73,229 |
| சணச | 33,918 | 6,138 | 132,674 | 931 | 12,410 | 18,792 | 204,862 | 175,114 |
| எஸ்.எல்.ஐ.சி. | 881,248 | 1,435,350 | 15,814,201 | - | 3,523,200 | 1,090,956 | 22,744,956 | 18,502,136 |
| யூனியன் லைவ் | 184,021 | 282,811 | 2,688,718 | 357 | 1,456,248 | 347,117 | 4,959,272 | 3,492,978 |
| மொத்தம் | **3,050,441** | **4,387,899** | **36,077,682** | **17,673** | **12,299,153** | **3,400,699** | **59,233,546** | **45,967,692** |

அட்டவணை 14

கம்பனி வாரியான மொத்தக் கட்டுப்பண விபரமும் சந்தைப் பங்கு விபரமும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதி வழங்குநர் | 2012 | | 2013 | | 2014 (அ) | | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | கட்டுப்பணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) |
| ஏ.ஐ.ஏ. ஜெனரல் | 2,143,252 | 4.03 | 2,428,675 | 4.17 | 2,655,577 | 4.34 | 3,297,840 | 4.76 | | |
| ஏ.ஐ.ஜி. | 819,448 | 1.54 | 880,060 | 1.51 | 414,805 | 0.68 | 3,141 | 0.00 | (279) | -0.00 |
| அலையன்ஸ் ஜெனரல் | 1,397,127 | 2.63 | 1,964,907 | 3.37 | 2,723,406 | 4.45 | 3,244,844 | 4.68 | 4,247,691 | 5.34 |
| அமானா ஜெனரல் | 1,125,838 | 2.12 | 1,432,135 | 2.46 | 1,285,418 | 2.10 | 1,438,732 | 2.08 | 1,474,186 | 1.85 |
| பெயார்பெஸ்ட் | 1,133,240 | 2.13 | 1,556,386 | 2.67 | 1,638,126 | 2.68 | 1,908,901 | 2.76 | 2,361,614 | 2.97 |
| செலிங்கோ ஜெனரல் | 10,434,917 | 19.61 | 10,311,479 | 17.69 | 11,431,680 | 18.68 | 12,921,561 | 18.65 | 15,276,512 | 19.22 |
| கொன்டினென்டல் | 1,545,225 | 2.90 | 1,330,515 | 2.28 | 1,761,747 | 2.88 | 2,309,413 | 3.33 | 3,087,793 | 3.89 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 1,135,011 | 2.13 | 1,272,941 | 2.18 | 1,358,932 | 2.22 | 1,691,705 | 2.44 | 2,420,130 | 3.05 |
| எச்.என்.பி. ஜெனரல் | 1,635,306 | 3.07 | 1,767,361 | 3.03 | 2,182,915 | 3.57 | 2,577,224 | 3.72 | 2,982,385 | 3.75 |
| ஜனசக்தி ஜெனரல் | 5,773,429 | 10.85 | 6,318,626 | 10.84 | 6,491,556 | 10.61 | 7,406,160 | 10.69 | 10,137,864 | 12.76 |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | 1,295,133 | 2.43 | 1,485,521 | 2.55 | 1,815,486 | 2.97 | 2,476,961 | 3.58 | 3,096,834 | 3.90 |
| எம்.பி.எஸ்.எல். | 1,049,147 | 1.97 | 1,132,789 | 1.94 | 961,225 | 1.57 | 1,159,208 | 1.67 | 972,976 | 1.22 |
| என்.ஐ.டி.எப். | 3,518,528 | 6.61 | 4,973,357 | 8.53 | 5,295,759 | 8.65 | 4,961,413 | 7.16 | 6,329,318 | 7.96 |
| ஓரியன்ற் | 308,547 | 0.58 | 355,001 | 0.61 | 491,127 | 0.80 | 746,935 | 1.08 | 810,728 | 1.02 |
| பீஎ்பள்ஸ் | 2,795,448 | 5.25 | 3,085,041 | 5.29 | 3,286,063 | 5.37 | 3,637,404 | 5.25 | 4,121,918 | 5.19 |
| சணச | 308,142 | 0.58 | 322,592 | 0.55 | 344,041 | 0.56 | 349,527 | 0.50 | 414,294 | 0.52 |
| எஸ்.எல்.ஐ.சி. | 12,359,188 | 23.23 | 12,549,763 | 21.53 | 12,113,994 | 19.79 | 13,583,222 | 19.61 | 15,177,984 | 19.10 |
| யூனியன் ஜெனரல் | 4,436,052 | 8.34 | 5,116,966 | 8.78 | 4,950,741 | 8.09 | 5,557,189 | 8.02 | 6,561,571 | 8.26 |
| மொத்தம் | **53,212,978** | **100** | **58,284,115** | **100** | **61,202,599** | **100** | **69,271,380** | **100** | **79,473,521** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **13.39** | | **9.53** | | **5.01** | | **13.18** | | **14.73** | |

அதனைத் தொடர்ந்து பொறுப்பு இடர் மூலதனக் கட்டணமும் கவனக்குவிப்பு இடர் மூலதனக் கட்டணமும் முறையே 26.76% எனவும் 9.55% எனவும் கணக்கிடப்பட்டுள்ளன. செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம் மற்றும் கடன் இடர் மூலதனக் கட்டணம் என்பன மொத்த இடர் கட்டணங்களில் 7.40% இனையும் 6.64% இனையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மீள்காப்புறுதி இடரானது மொத்த இடர் கட்டணங்களில் 0.04% இனை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது.


## பொதுக் காப்புறுதி வியாபாரம்

### மொத்தக் கட்டுப்பணம்

2016 இல், பொதுக் காப்புறுதிச் சந்தையில் பதினேழு (17) செயல்நிலை காப்புறுதிக் கம்பனிகள் வலுவாகப் போட்டியிட்டன. நிருமாணத் தொழிற்றுறையின் வளர்ச்சி, வாகனங்கள் மீதான உயர்ந்த தீர்வைகள், மக்கள்தொகை மாற்றம், சாதகமற்ற காலநிலை நிலைமைகள் மற்றும் பரிசோதனைக்காக அவர்களது மீள்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தினுள் இடப்பட்டிருந்த காப்புறுதியின் நடமாடும் வழங்கல்கள் போன்ற காரணங்களால் பொதுக் காப்புறுதி வழங்குநர்களுக்கான வாய்ப்புகள், போக்குகள் மற்றும் சவால்களுடன்

விளக்கப்படம் 13

கம்பனி வாரியான மொத்தக் கட்டுப்பணத்தின் சந்தைப் பங்கு – 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் காப்புறுதி வியாபாரம்




*ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் லிமிட்டெட் ஆனது பெயார்பெக்ஸ் ஏசியா லிமிட்டெட்டினால் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது பெயார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிட்டெட் என அழைக்கப்படுகிறது.

இவ்வாண்டு நிரம்பியுள்ளது. பொதுக் காப்புறுதிச் சந்தையின் மத்தியிலான போட்டியானது பொதுக் காப்புறுதிச் செயற்பாட்டாளர்களுக்கிடையேயான கொள்வனவுகள் மற்றும் ஒன்றிணைப்புகளுடன் மேலும் மேம்பட்டுள்ளது. பெயாபக்ஸ் ஏசியா லிமிட்டெட் ஆனது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே யூனியன் ஜெனரல் இன் பெரும்பாலான பங்குகளை வைத்திருந்ததன் மூலமும் ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் இன் 100% பங்குகளையும் கொள்வனவு செய்ததன் மூலமும் பொதுக் காப்புறுதிச் சந்தையினுள் நுழைந்திருந்தது.

பொதுக் காப்புறுதி வியாபாரம் வருடா வருடம் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகையினைக் காட்டுவதுடன் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 14.73% என்ற வளர்ச்சி வீதம் ஒன்றினையும் (2015: 13.18%) பதிவு செய்திருந்தது. மேலும், பொதுக் காப்புறுதி வியாபாரம் 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்ய ரூ.69,271 மில்லியன் GWP உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் ரூ.79,474 மில்லியன் GWP இனைப் பதிவுசெய்ததன் மூலம் தொழிற்றுறை வருமானத்திற்கு சாதகமான பங்களிப்பினை நல்கியிருந்தது.

அட்டவணை 14 மற்றும் விளக்கப்படம் 13 ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, எஸ்.எல்.ஐ.சி. இனை விடச் சற்று மிகையான கட்டுப்பணத்தின் மூலம் செலிங்கோ ஜெனரல் ஆனது சந்தையில் முன்னணி வகித்திருந்தது. அதன் கட்டுப்பண வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட தொகை ரூ.15,277 மில்லியன் ஆகும். மேலும், இக்கம்பனி கைப்பற்றியுள்ள சந்தைப் பங்கு 19.22% (2015: 18.65%) ஆகும். 2015 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ரூ.12,922 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 18.22% வளர்ச்சியொன்றினைக் காட்டுகிறது. 2016 ஆம் ஆண்டில் எஸ்.எல்.ஐ.சி. ஆனது ரூ.15,178 மில்லியனை (2015: ரூ. 13,583 மில்லியன்) GWP ஆகப் பதிவு செய்திருந்ததன் மூலம் இரண்டாவது பெரிய சந்தைப் பங்கினைக் கைப்பற்றியிருந்தது. இதன் சந்தைப் பங்கின் சதவீதம் 19.10% ஆகும். ஜனசக்தி ஜெனரல் ஆனது ஏ.ஐ.ஏ. ஜெனரல் கம்பனியைக் கொள்வனவு செய்ததன் மூலம் தொடர்ச்சியாகத் தனது வியாபாரத்தை விரிவாக்கம் செய்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் ரூ.10,138 மில்லியனுக்கான 36.88% இன் மூலம் GWP இனை மேம்படுத்தியிருந்தது.


யூனியன் ஜெனரல் ஆனது 2016 இல் 8.26% (2015: 8.02%) சந்தைப் பங்கினைக் கைப்பற்றியிருந்ததன் மூலம் தொடர்ந்தும் நான்காவது பெரிய சந்தைப் பங்கினைக் கொண்ட கம்பனியாகத் திகழ்கிறது. இதன் கட்டுப்பண வருமானம் ரூ.6,562 மில்லியன் (2015: ரூ. 5,557 மில்லியன்) ஆகும்.

2016 இல் என்.ஐ.டி.எப். ஆனது ரூ.6,329 மில்லியனை (2015 இல் ரூ.4,961 மில்லியன்) கட்டுப்பண வருமானமாகச் சம்பாதித்திருந்ததன் மூலம் ஐந்தாவது பெரிய சந்தைப் பங்கான 7.96% (2015: 7.16%) இனை அடைவதற்கான தனது மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகையினை வெளிக்காட்டியிருந்தது. அதற்கிணங்க, அவர்களது கட்டுப்பண வருமானம் வருடா வருடம் 27.58% இனால் வளர்ச்சி அடைந்திருக்கிறது.

அலையன்ஸ் ஜெனரலாலும் பீப்பள்ஸ் இன்சூரன்சினாலும் 2016 ஆம் ஆண்டில் முறையே 5.34% (2015: 4.68%) மற்றும் 5.19% (2015: 5.25%) சந்தைப் பங்குகளை அடைய முடிந்திருந்தது.

2015 இல் பதிவாகியிருந்த GWP உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் கோப்பரேட்டிவ்

விளக்கப்படம் 14
2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான GWP இற்கான உயர் ஐந்து பங்களிப்பாளர்களின் சந்தைப் பங்கும் ஏனைய காப்புறுதி வழங்குநர்களும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்




| | செலிங்கோ | எஸ்.எல்.ஐ.சி. | ஜனசக்தி | யூனியன் ஜெனரல் | என்.ஐ.டி.எப். | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 19.61 | 23.23 | 10.85 | 8.34 | 6.61 | 31.37 |
| 2013 | 17.69 | 21.53 | 10.84 | 8.78 | 8.53 | 32.62 |
| 2014 (அ) | 18.68 | 19.79 | 10.61 | 8.09 | 8.65 | 34.18 |
| 2015 (அ) | 18.65 | 19.61 | 10.69 | 8.02 | 7.16 | 35.86 |
| 2016 (ஆ) | 19.22 | 19.10 | 12.76 | 8.26 | 7.96 | 32.70 |

(அ) மீள்குறிப்பிட்ட கணக்காய்வு செய்யப்பட்ட எண்கள்
(ஆ) மாகாண எண்கள்

குறிப்பு:
NITF இனால் சேகரிக்கப்பட்ட வரி 2014 இலிருந்து கணிபீட்டுக்கு சேர்க்கப்படவில்லை.

ஜெனரல், கொண்டினென்டல் மற்றும் அலையன்ஸ் ஜெனரல் ஆகியவற்றினால் சம்பாதிக்கப்பட்ட GWP இல் துரித வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த மூன்று கம்பனிகளும் 2015 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த அவர்களது GWP உடன் ஒப்பிடுகையில் 30% இற்கும் அதிகமான வளர்ச்சியினைக் கொண்டிருக்கின்றன.

## மொத்தக் கட்டுப்பணத்திற்குப் பங்களிப்புச் செய்யும் உயர் ஐந்து பங்களிப்பாளர்களினதும் ஏனைய காப்புறுதி வழங்குநர்களினதும் சந்தைப் பங்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

விளக்கப்படம் 14 ஆனது கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் நிலவும் ஐந்து பிரதான பங்களிப்பாளர்களினதும் ஏனைய காப்புறுதி வழங்குநர்களினதும் சந்தைப் பங்குகள் பற்றிய விபரத்தைக் காட்டுகிறது. பொதுக் காப்புறுதிச் சந்தையில் முன்னணி வகிக்கும் போட்டியாளர்களான செலிங்கோ மற்றும் எஸ்.எல்.ஐ.சி. ஆகியவற்றிற்கிடையே கடும்போட்டி நிலவியிருந்த போதிலும் 2016 இல் இவை இரண்டும் மொத்தமாக 38.32% சந்தைப் பங்கினை அடைந்திருந்தன. செலிங்கோ மேலும் தனது சந்தைப் பங்கினைத் தொடர்ச்சியாக விரிவுபடுத்தியிருந்ததுடன் 2016 இல் 19.22% என்ற பெரியளவு சந்தைப் பங்கினை அடைவதற்கும் அதனால் இயலுமாக இருந்தது.

எஸ்.எல்.ஐ.சி. இன் கட்டுப்பண வருமானம் 11.74% இனால் வளர்ச்சி கண்டிருந்தபோதிலும் 2015 ஆம் ஆண்டில் இருந்த சந்தைப் பங்குச் சதவீதமான 19.61% உடன் ஒப்பிடுகையில் 2016 இல் 19.10% என்ற சற்று வீழ்ச்சி நிலையை அது அடைந்திருந்தது. இதனால் இக்கம்பனி இரண்டாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் இருந்த சந்தைப் பங்குச் சதவீதமான 10.69% உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 12.76% இனை அடைந்திருந்ததன் மூலம் ஜனசக்தி ஜெனரல் ஆனது தனது சந்தை நிலையினை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது.

யூனியன் ஜெனரல் ஆனது இவ்வாண்டில் 8.26% (2015: 8.02%) சந்தைப் பங்குடன் நேர்முக வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்ததுடன் சந்தையில் நான்காவது பெரிய பங்களிப்பாளராக வந்திருந்தது. என்.ஐ.டி.எப். இனால் 7.96% (2015: 7.16%) பங்குடன் சந்தையில் ஐந்தாவது இடத்தினைப் பாதுகாக்க முடிந்திருந்தது. இந்த ஐந்து கம்பனிகளும் கூட்டாக மொத்த GWP இற்கு 67.30% இனைப் பங்களிப்புச் செய்திருந்தன. மீதியாகவுள்ள கம்பனிகளின் ஒட்டுமொத்த சந்தைப் பங்கு வருடா வருடம் 3.16% இனால் குறைவடைந்து 32.70% இல் இருந்தது. இதற்கான பிரதான காரணமாக இருப்பது ஏ.ஐ.ஏ. ஜெனரல் ஆனது ஜனசக்தி ஜெனரல் உடன் இணைந்துகொண்டமை ஆகும்.

## மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2012 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வினை அட்டவணை 15 உம் விளக்கப்படம் 15 உம் காட்டுகின்றன. இந்நோக்கத்திற்காக தீ அபாயக் காப்புறுதி, கடல் அபாயக் காப்புறுதி, மோட்டார், உடல்நலம், நானாவிதம் மற்றும் SRCC & T ஆகியன உப வகைகளாகக் கருதப்பட்டன.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தை முன்னகர்த்திச் செல்கின்ற ஒரு சக்தியான மோட்டார் காப்புறுதி வியாபாரமானது மொத்தக் கட்டுப்பணத்தின் 62.02% இனைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. 2015 ஆம் ஆண்டில் ரூ. 42,622 மில்லியனாக இருந்த மோட்டார் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணம் 2016 ஆம் ஆண்டில் ரூ. 49,288 மில்லியனாக அதிகரித்திருக்கிறது. வாகனங்கள் மீது விதிக்கப்பட்ட விதிப்பனவுகளுடன் விலைகள் உயர்வடைந்தமையே 2016 ஆம் ஆண்டில் மோட்டார் காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் 15.64% வளர்ச்சியை அடைவதற்குப் பிரதானமாக பங்களிப்புச் செய்திருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 19.10% என்ற வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் நிதி வசதிகளைப் பெறுவதில் காணப்பட்ட இறுக்கமான நிலைமைகளுடன் மோட்டார் காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சி வீதத்தில் ஒரு தொய்வு காணப்பட்டிருந்தது.

உடல்நலப் பராமரிப்புத் துறையில் தனியார் துறைப் பங்களிப்பில் ஏற்பட்ட திடமான வளர்ச்சியுடன் சமீபத்திய கடந்த காலத்தில் உடல்நலக் காப்புறுதிக்கான அதிகளவான வாய்ப்புகள் முதியோர் களுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. உடல்நலமும் சத்திரசிகிச்சையும் பொதுக் காப்புறுதிச் சந்தையில் உள்ள இரண்டாவது பெரிய உபவகையைச் சேர்ந்தவைகளாகும். மொத்தக் கட்டுப்பணத்திற்கான இதன் பங்களிப்பு ரூ. 9,972 மில்லியனாக (2015 இல் ரூ. 8,534 மில்லியன்) இருந்தது. இது வருடா வருடம் 16.84% வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது. அரச துறை ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப் பட்ட என்.ஐ.டி.எப். இன் அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டமானது உடல்நல உபவகைக்காக 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 1,954 மில்லியனையும் ரூ. 1,637 மில்லியனையும் பங்களிப்புச் செய்திருக்கிறது.

2015 ஆம் ஆண்டில் 3.95% ஆக இருந்த மொத்தக் கட்டுப்பணத்திற்கான தீ அபாயக்

அட்டவணை 15

மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | மொத்தக் கட்டுப்பணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 5,474,094 | 6,303,725 | 6,353,292 | 6,604,074 | 7,448,714 |
| கடல் அபாயம் | 1,927,096 | 1,796,969 | 1,911,944 | 1,996,862 | 2,082,933 |
| மோட்டார் | 31,844,102 | 33,331,917 | 35,786,941 | 42,622,205 | 49,287,639 |
| உடல்நலம் | 5,948,640 | 7,292,091 | 7,593,386 | 8,534,364 | 9,971,746 |
| நானாவிதம் | 5,737,870 | 7,015,630 | 6,721,836 | 6,495,454 | 7,149,163 |
| **எஸ்.ஆர்.சி.சி. உட்படுத்தப் படாத உப மொத்தம்** | **50,931,801** | **55,740,332** | **58,367,399** | **66,252,959** | **75,940,195** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி | 2,281,177 | 2,543,783 | 2,835,200 | 3,018,421 | 3,533,326 |
| **மொத்தம்** | **53,212,978** | **58,284,115** | **61,202,599** | **69,271,380** | **79,473,521** |

| வகை | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 1.75 | 15.16 | 0.79 | 3.95 | 12.79 |
| கடல் அபாயம் | 14.72 | (6.75) | 6.40 | 4.44 | 4.31 |
| மோட்டார் | 16.40 | 4.67 | 7.37 | 19.10 | 15.64 |
| உடல்நலம் | 5.57 | 22.58 | 4.13 | 12.39 | 16.84 |
| நானாவிதம் | 5.66 | 22.27 | (4.19) | (3.37) | 10.06 |
| **உப மொத்தம்** | **13.38** | **9.44** | **4.71** | **13.51** | **14.62** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி | 13.69 | 11.51 | 11.46 | 6.46 | 17.06 |
| **மொத்தம்** | **13.39** | **9.53** | **5.01** | **13.18** | **14.73** |


| வகை | பங்குச் சதவீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 10.29 | 10.82 | 10.38 | 9.53 | 9.37 |
| கடல் அபாயம் | 3.62 | 3.08 | 3.12 | 2.88 | 2.62 |
| மோட்டார் | 59.84 | 57.19 | 58.47 | 61.53 | 62.02 |
| உடல்நலம் | 11.18 | 12.51 | 12.41 | 12.32 | 12.55 |
| நானாவிதம் | 10.78 | 12.04 | 10.98 | 9.38 | 9.00 |
| **உப மொத்தம்** | **95.71** | **95.64** | **95.37** | **95.64** | **95.55** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி | 4.29 | 4.36 | 4.63 | 4.36 | 4.45 |
| **மொத்தம்** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** |

காப்புறுதியின் பங்களிப்பு இவ்வாண்டில் 12.79% என்ற சாதகமானதொரு வளர்ச்சியினைப் பதிவுசெய்திருந்தது. 2016 இல், தீ அபாயக் காப்புறுதி வியாபாரம் ரூ. 7,449 மில்லியனை (2015 இல் ரூ. 6,604 மில்லியன்) ஈட்டியிருந்தது. இயற்கை அனர்த்தங்கள் மீதான இடரைக் காப்புறுதி செய்வதற்கான கேள்வியை உருவாக்கியிருந்த அண்மைய இயற்கை அனர்த்தங்களுடன் இதன் வளர்ச்சியினை விபரிக்கலாம். மொத்தக் கட்டுப்பணத்திற்கான நானாவித வகைக் காப்புறுதிகளின் பங்களிப்புத் தொகை ரூ. 7,149 மில்லியன் ஆகும். இது 2016 ஆம் ஆண்டிற்கான மொத்தக் கட்டுப்பணத்தின் 9.00% ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடல் அபாயக் காப்புறுதி வியாபார மொத்தக் கட்டுப்பணம் 2016 ஆம் ஆண்டில் 4.31% இனால் சற்று அதிகரித்திருக்கிறது.

என்.ஐ.டி.எப். இன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாதம் (SRCC & T) ஆகியவற்றால் ஏற்படத்தக்க இடர்களை உள்ளடக்குவதற்குச் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணங்கள் 2016 ஆம் ஆண்டில் ரூ. 3,533 மில்லியன் ஆகும். SRCC & T கட்டுப்பணம் 2016 ஆம் ஆண்டின் மொத்தக் கட்டுப்பணத்தில் 4.45% இனைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 17.06% இனால் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விளக்கப்படம் 15

**2012 தொடக்கம் 2016 வரையான மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு – பொதுக் காப்புறுதி வியாபாரம்**




| | 2012 | 2013 | 2014 (a) | 2015 (a) | 2016 (b) |
|---|---|---|---|---|---|
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி | 4.29 | 4.36 | 4.63 | 4.36 | 4.45 |
| நானாவிதம் | 10.78 | 12.04 | 10.98 | 9.38 | 9.00 |
| உடல்நலம் | 11.18 | 12.51 | 12.41 | 12.32 | 12.55 |
| மோட்டார் | 59.84 | 57.19 | 58.47 | 61.53 | 62.02 |
| கடல் அபாயம் | 3.62 | 3.08 | 3.12 | 2.88 | 2.62 |
| தீ அபாயம் | 10.29 | 10.82 | 10.38 | 9.53 | 9.37 |
| தொழிற்றுறை வளர்ச்சி | 13.39 | 9.53 | 5.01 | 13.18 | 14.73 |

## நானாவித காப்புறுதி வியாபார மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு

2016 மற்றும் 2015 ஆம் ஆண்டில் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பல்வேறு காப்புறுதிப் வகைகளிலிருந்தும் உழைக்கப்பெற்ற மொத்தக் கட்டப்பணம் பற்றிய விபரத்தை அட்டவணை 16 காட்டுகிறது.

இவ்வாண்டில் தொடர்புடைய செம்மையாக்கங்கள் செய்யப்பட்டதன் பின்னரான நானாவித காப்புறுதி வியாபாரங்களிலிருந்து உழைக்கப்பெற்ற முழு மொத்தக் கட்டுப்பணத் தொகை ரூ.7,149 மில்லியனை அட்டவணை 16 சித்தரிக்கிறது. இத்தொகை 2015 ஆம் ஆண்டில் ரூ. 6,495 மில்லியனாக அறிக்கை யிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க, நானாவித வகைகளிலிருந்தான மொத்தக் கட்டுப்பண வருமானம் வருடா வருடம் 10.06% மேம்பாடடைந்திருக்கிறது.

தனிநபர் விபத்து என்பது நானாவித காப்புறுதி வியாபார வகையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க ஒரு வியாபாரமாகும். இது வருடா வருடம் 6.70% என்னும் சிறிதளவான வளர்ச்சி ஒன்றினைப் பதிவு செய்திருக்கிறது. பயணக் காப்புறுதி, வங்கியியலாளர்களின் நட்டஈடு மற்றும் பணியாளர்கள் இழப்பீட்டுக் காப்புறுதி போன்ற சில நானாவித காப்புறுதி வகைகளில் வருடா வருடம் மிதமான வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. உற்பத்திப் பொறுப்பு மற்றும் பொதுப் பொறுப்பு வகைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. அவற்றின் பெறுமதிகள் முறையே ரூ. 124 மில்லியன் (2015: ரூ. 58 மில்லியன்) மற்றும் ரூ. 384 மில்லியன் (2015: ரூ. 244 மில்லியன்) ஆகும். முழு நானாவித மொத்தக் கட்டுப்பணத்தில் குறிப்பிட்டளவு தொகையினை பிரதிநிதித்துவப்படுத்தும் விமானத்திற்கான பௌதிகரீதியான சேதங்களுக்கான காப்புறுதி வருடா வருடம் 4.93% என்ற எல்லையளவு வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது.

ஏனைய காப்புறுதி வியாபார வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள, ஏனைய வகைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வியாபாரங்களில் சகல இடர்களின்போதும் ஏற்படும்

அட்டவணை 16

**2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான நானாவித காப்புறுதிக் கட்டுப்பணத்திலுள்ள மொத்தக் கட்டுப்பணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு**

| வகை | மொத்தக் கட்டுப்பணம் ரூ.'000 | |
|---|---|---|
| | **2015 (அ)** | **2016 (ஆ)** |
| உரித்து (title) | 415,571 | 494,808 |
| தனிநபர் விபத்து | 1,430,133 | 1,511,589 |
| ஒப்பந்தகாரர்களின் சகல இடர்களும் | 221,761 | 31,073 |
| தொழில்சார் நட்டஈடு | 174,138 | 183,392 |
| பயணக் காப்புறுதி | 383,737 | 432,136 |
| நம்பிக்கைப்பொறுப்பு உத்தரவாதம் | 160,492 | 115,482 |
| திருட்டு | 252,501 | 340,621 |
| காப்புப் பெட்டகத்திலுள்ள பணம் உள்ளிட்ட இடைவழியில் உள்ள காசு | 400,750 | 434,201 |
| இடைவழியிலுள்ள பொருட்கள் | 75,097 | 81,776 |
| உற்பத்திப் பொறுப்பு | 58,066 | 124,342 |
| பொதுப் பொறுப்பு | 244,081 | 384,272 |
| வங்கியியலாளர்களின் நட்டஈடு | 343,449 | 396,791 |
| விமானத்தின் பௌதிகரீதியான சேதம் | 649,067 | 681,071 |
| WCI | 477,939 | 535,430 |
| ஏனையவை | 1,535,640 | 1,767,912 |
| **உப மொத்தம்** | **6,822,422** | **7,514,896** |
| கழி: என்.ஐ.டி.எப். இற்குச் செலுத்தும் மொத்த SRCC & T | (308,223) | (341,091) |
| இணைக்காப்புறுதிக் கட்டுப்பணம் | (18,745) | (24,643) |
| முழு நானாவிதக் காப்புறுதியினதும் மொத்தக் கட்டுப்பணம் | **6,495,454** | **7,149,162** |

பௌதிக ரீதியான சேதங்கள், தனிநபர் காப்புறுதிகள் மற்றும் என்.ஜ.டி.எப். இன் இயற்கை அனர்த்தக் காப்புறுதி போன்றவை பிரதான இடம் வகிக்கின்றன. ஏனைய காப்புறுதி வகையின் கீழுள்ள என்.ஜ.டி.எப். இன் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தின் தொகை ரூ. 300 மில்லியன் ஆகும்.


## மொத்தக் கட்டுப்பணம், மீள்காப்புறுதிக் கட்டுப்பணம், காப்புறுதிதாரர்களால் வைத்திருக்கப்படுபவை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளின் மீள்காப்புறுதி பற்றிய விபரங்களும், காப்புறுதிக் கம்பனிகளால் வைத்திருக்கப்படும் மொத்தக் கட்டுப்பண மட்டமும் அட்டவணை 17 இலும் விளக்கப்படம் 16 இலும் விளக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 17 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதைப் போன்று, பொதுக் காப்புறுதி வியாபார ஒட்டுமொத்த வைத்திருப்பு மட்டமானது மொத்தக் கட்டுப்பணத்தில் (எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி. தவிர்ந்த) 84.34% ஆகும். 2016 ஆம் ஆண்டில் இதற்குரிய தொகை ரூ. 75,940 மில்லியன் ஆகும். பரந்தளவில், ஒட்டுமொத்த வைத்திருப்பு மட்டமானது கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் ஓரளவு மேம்பட்டிருக்கிறது. என்.ஜ.டி.எப். இற்கான கட்டாய அளிப்புத் தொகை உள்ளிட்ட மொத்த மீள்காப்புறுதி இடப்படுத்தலானது 2016 இல் ரூ. 11,890 மில்லியன் (2015: ரூ. 10,419 மில்லியன்) ஆகும்.

மோட்டார் காப்புறுதி வியாபாரத்தில் பெரிதும் தங்கியிருக்கின்ற பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் இடர் பொதுவாக காப்புறுதிக் கம்பனிகளால் வைத்திருக்கப்படுகிறது. இதற்கிணங்க, மோட்டார் உப வகைக்கான

விளக்கப்படம் 16
மீள்காப்புறுதிக் கட்டுப்பணமும் காப்புறுதிதாரர்களின் வைத்திருப்பும் – பொதுக காப்புறுதி வியாபாரம்ள




வைத்திருப்பு 97.49% என்னும் உயர்ந்த பெறுமதியாக இருந்ததுடன் இது கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் நியாயமானளவு ஸ்திரமானதாகக் காணப்பட்டது.

தீ அபாய உப வகையானது தீ அபாய மொத்தக் கட்டுப்பணத்தின் உயர்ந்தளவு அளிப்பு வீதமான 80.25% இனை பதிவுசெய்திருந்தது. 2016 இல், பொதுக் காப்புறுதி வியாபாரத்தைப் பாதித்திருந்த பிரதான நிகழ்வுகளில் ஒன்றாக வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவும் காணப்பட்டன. இவை நாட்டின் பல பகுதிகளிலும் பாரிய சேதங்களை ஏற்படுத்தியிருந்தன. எவ்வாறாயினும், பிரதானமாக மீள்காப்புறுதி வழங்குநர்களால் இடர் பங்கிடப்படுதலும் பகிரப்படுதலும் நிகழ்த்தப்படுவதன் காரணமாக தீ அபாயக் காப்புறுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த இயற்கை அனர்த்தமானது பொதுக் காப்புறுதி வழங்குநர்களுக்கு சமாளிக்கத்தக்கதொரு சவாலாக மாறியிருக்கிறது.

கடல் அபாயக் காப்புறுதி வியாபாரம்கூட ஓர் உயர்ந்தளவு இடரைக் கொண்டிருக்கிறது. இது குறிப்பிட்டளவுக்கு மீள்காப்புறுதியிடப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் கடல் அபாயக் காப்புறுதி வியாபார அளிப்பு வீதம் மொத்த கட்டுப்பணமான ரூ.2,083 மில்லியனில் 57.99% ஆகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டைப் போலவே, உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தை உள்ளடக்கிய நானாவித வகை வியாபாரமானது உயர்ந்தளவு தொகையை வைத்திருந்ததுடன் அது 2016 இல் மொத்தக் கட்டுப்பணத்தில் 79.75% ஆகக் காணப்பட்டது. நானாவித உபவகையில் கிட்டத்தட்ட 58.24% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தின் வைத்திருப்புத் தொகை கடந்த சில வருடங்களாக 94% இற்கும் அதிகமாகக் காணப்படுகிறது.

## நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணத் தொகை, கொடுப்பனவு செய்யப்பட்ட நிகர உரிமைக்கோரிக்கைத் தொகை, நிகர உரிமைக்கோரிக்கை விகிதம், நிகர செலவு விகிதம் மற்றும் நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 18 மற்றும் விளக்கப்படம் 17 ஆகியவற்றில்

சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, SRCC & T உள்ளடங்கலாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் மொத்த நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணத் தொகை ரூ.62,729 மில்லியன் ஆகும். இத்தொகை 2015 இல் ரூ.54,296 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணத்தில் பதிவுசெய்யப்பட்ட 15.53% வளர்ச்சி வீதமானது மொத்தக் கட்டுப்பண வளர்ச்சியில் சாதகமான செல்வாக்கைச் செலுத்தியிருந்தது.

நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணத்தின் (SRCC & T தவிர்ந்த) வீதமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட நிகர உரிமைக்கோரிக்கைத் தொகையாக விபரிக்கக்கூடிய நிகர உரிமைக்கோரிக்கை விகிதமானது 2016 இல் 68.99% ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் 3.94% இனால் உயர்வடைந்திருக்கிறது. இதற்கான பிரதான காரணமாக இருப்பது தீ அபாயக் காப்புறுதி வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வெள்ளபெருக்கு உரிமைக்கோரிக்கைகளுக்காக

அட்டவணை 17

**மொத்தக் கட்டுப்பணம், மீள்காப்புறுதிக் கட்டுப்பணம் மற்றும் காப்புறுதி வழங்குநர்களின் வைத்திருப்புத் தொகை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | மொத்தக் கட்டுப்பணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 5,474,094 | 6,303,725 | 6,353,292 | 6,604,074 | 7,448,714 |
| கடல் அபாயம் | 1,927,096 | 1,796,969 | 1,911,944 | 1,996,862 | 2,082,933 |
| மோட்டார் | 31,844,102 | 33,331,917 | 35,786,941 | 42,622,205 | 49,287,639 |
| உடல்நலம் | 5,948,640 | 7,292,091 | 7,593,386 | 8,534,364 | 9,971,746 |
| நானாவிதம் | 5,737,870 | 7,015,630 | 6,721,836 | 6,495,454 | 7,149,163 |
| உப மொத்தம் | **50,931,801** | **55,740,332** | **58,367,399** | **66,252,959** | **75,940,195** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி | 2,281,177 | 2,543,783 | 2,835,200 | 3,018,421 | 3,533,326 |
| மொத்தம் | **53,212,978** | **58,284,115** | **61,202,599** | **69,271,380** | **79,473,521** |

| வகை | மீள்காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 4,140,877 | 4,823,731 | 5,075,545 | 5,137,042 | 5,977,635 |
| கடல் அபாயம் | 1,326,369 | 998,976 | 1,171,768 | 1,154,511 | 1,207,948 |
| மோட்டார் | 478,478 | 864,394 | 636,603 | 1,115,036 | 1,237,867 |
| உடல்நலம் | | | | | |
| நானாவிதம் | 2,752,627 | 2,700,309 | 2,634,795 | 3,012,362 | 3,466,989 |
| மொத்த மீள்காப்புறுதிக் கட்டுப்பணம் | **8,698,351** | **9,387,410** | **9,518,711** | **10,418,951** | **11,890,438** |

| வகை | வைத்திருப்புத்தொகை (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 1,333,216 | 1,479,994 | 1,277,747 | 1,467,033 | 1,471,080 |
| கடல் அபாயம் | 600,727 | 797,994 | 740,176 | 842,351 | 874,985 |
| மோட்டார் | 31,365,623 | 32,467,523 | 35,150,338 | 41,507,169 | 48,049,772 |
| உடல்நலம் | | | | | |
| நானாவிதம் | 8,933,884 | 11,607,412 | 11,680,427 | 12,017,455 | 13,653,920 |
| மொத்த நிகரக் கட்டுப்பணம் | **42,233,450** | **46,352,923** | **48,848,688** | **55,834,008** | **64,049,757** |

| வகை | மொத்தக் கட்டுப்பணத்தின் சதவீதமாக வைத்திருப்புத் தொகை (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 24.36 | 23.48 | 20.11 | 22.21 | 19.75 |
| கடல் அபாயம் | 31.17 | 44.41 | 38.71 | 42.18 | 42.01 |
| மோட்டார் | 98.50 | 97.41 | 98.22 | 97.38 | 97.49 |
| உடல்நலம் | | | | | |
| நானாவிதம் | 76.45 | 81.13 | 81.59 | 79.96 | 79.75 |
| ஒட்டுமொத்த வைத்திருப்பு விகிதம் | **82.92** | **83.16** | **83.69** | **84.27** | **84.34** |

என்.ஐ.டி.எப். இன் SRCC & T கட்டுப்பணங்களுக்கு மீள்காப்புறுதிக் கட்டுப்பண விபரங்கள் ஏற்புடையதல்ல.

அட்டவணை 18

நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணம், நிகர கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள், நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் மற்றும் நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 1,452,556 | 1,405,887 | 1,241,985 | 1,283,463 | 1,163,958 |
| கடல் அபாயம் | 546,598 | 806,277 | 753,643 | 797,026 | 866,027 |
| மோட்டார் | 29,499,705 | 31,346,284 | 33,826,829 | 37,958,834 | 44,563,153 |
| உடல்நலம் | 8,192,094 | 5,204,603 | 7,079,162 | 8,071,777 | 9,281,651 |
| நானாவிதம் | | 5,640,974 | 4,402,900 | 3,270,599 | 3,579,810 |
| **உப மொத்தம்** | **39,690,954** | **44,404,025** | **47,304,518** | **51,381,699** | **59,454,599** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி (சி) | 2,185,222 | 2,406,477 | 2,692,730 | 2,914,630 | 3,274,297 |
| மொத்தம் | **41,876,175** | **46,810,502** | **49,997,248** | **54,296,329** | **62,728,895** |

| வகை | நிகர கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 506,092 | 810,281 | 717,626 | 300,439 | 1,102,964 |
| கடல் அபாயம் | 321,562 | 432,748 | 266,560 | 209,845 | 254,417 |
| மோட்டார் | 18,351,251 | 19,514,319 | 20,281,109 | 24,274,415 | 29,248,879 |
| உடல்நலம் | 6,386,324 | 4,029,410 | 6,252,704 | 6,958,816 | 8,172,403 |
| நானாவிதம் | | 2,133,310 | 1,522,689 | 1,677,736 | 2,237,849 |
| **உப மொத்தம்** | **25,565,230** | **26,920,068** | **29,040,687** | **33,421,251** | **41,016,513** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி (சி) | 12,565 | - | 56,897 | 780 | (1,286) |
| மொத்தம் | **25,577,795** | **26,920,068** | **29,097,585** | **33,422,031** | **41,015,227** |

| வகை | நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| தீ அபாயம் | 34.84 | 57.63 | 57.78 | 23.41 | 94.76 |
| கடல் அபாயம் | 58.83 | 53.67 | 35.37 | 26.33 | 29.38 |
| மோட்டார் | 62.21 | 62.25 | 59.96 | 63.95 | 65.63 |
| உடல்நலம் | 77.96 | 77.42 | 88.33 | 86.21 | 88.05 |
| நானாவிதம் | | 37.82 | 34.58 | 51.30 | 62.51 |
| **உப மொத்தம்** | **64.41** | **60.63** | **61.39** | **65.05** | **68.99** |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி (சி) | 0.57 | - | 2.11 | 0.03 | (0.04) |
| மொத்தம் | 61.08 | 57.51 | 58.20 | 61.55 | 65.38 |

| விபரம் | நிகரச் செலவுகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| SRCC & T தவிர்ந்த ஏனைய சகல வகை பொதுக் காப்புறுதி வியாபாரங்களுக் குமான நிகரச் செலவுகள் | 14,807,142 | 17,359,623 | 19,524,543 | 19,134,713 | 21,603,696 |
| எஸ்.ஆர்.சி.சி. அன்ட் டி (சி) | 386,071 | 414,422 | 466,435 | 486,985 | 653,529 |
| மொத்தம் | **15,193,213** | **17,774,045** | **19,990,978** | **19,621,698** | **22,257,224** |

| விபரம் | நிகரச் செலவு விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| SRCC & T தவிர்ந்த ஏனைய சகல பொதுக் காப்புறுதி வியாபார வகைகளுக்குமான நிகரச் செலவுகள் | 37.31 | 39.09 | 41.27 | 37.24 | 36.34 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் நிகரச் செலவு விகிதம் | 36.28 | 37.97 | 39.98 | 36.14 | 35.48 |


| விபரம் | நிகர இணைந்த விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (அ) | 2014 (அ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| SRCC & T தவிர்ந்த ஏனைய சகல பொதுக் காப்புறுதி வியாபார வகைகளுக்குமான நிகர இணைந்த விகிதம் | 101.72 | 99.72 | 102.67 | 102.29 | 105.32 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் நிகர இணைந்த விகிதம் | 97.36 | 95.48 | 98.18 | 97.69 | 100.87 |

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளாகும். 2015 இல் 23.41% ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்த தீ அபாயக் காப்புறுதி வியாபாரத்தின் உரிமைக்கோரிக்கை விகிதமானது வெள்ளப்பெருக்கிற்கான உரிமைக்கோரிக்கைகள் காரணமாக 2016 இல் 94.76% இற்குத் தீவிரமாக அதிகரித்திருந்தது.

கடந்த வருடங்களைப் போலவே, பொதுக் காப்புறுதிச் சந்தையை முன்னகர்த்திச் செல்லும் ஒரு சக்தியாக விளங்கும் மோட்டார் காப்புறுதி ஆனது 2016 இல் ஆகக்கூடிய உரிமைக்கோரிக்கைத் தொகையான ரூ. 29,249 மில்லியனை (2015 இல் ரூ.24,274 மில்லியன்) பதிவுசெய்திருந்தது. மூன்றாம் தரப்பினர் உரிமைக்கோரிக்கைகள்

விளக்கப்படம் 17

நிகர உழைக்கப்பெற்ற கட்டுப்பணம், நிகர கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள், நிகரச் செலவுகள், நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் மற்றும் நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்




உள்ளடங்கிய மோட்டார் காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் 2016 இல் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த உரிமைக்கோரிக்கைகளில் (SRCC & T தவிர்ந்த) 71.31% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியிலிருந்த சராசரி மோட்டார் காப்புறுதி உரிமைக்கோரிக்கை விகிதம் 62.80% ஆகும்.

உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தின் நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் 2016 இல் 88.05% என்னும் உயர் வீதத்தில் காணப்பட்டமையால், உடல்நலக் காப்புறுதி வியாபாரத்தில் உயர்ந்தளவுக் கிரயம் ஏற்பட்டிருந்தமைகூட சகல காப்புறுதிக் கம்பனிகளுக்கும் ஓர் சவால்மிக்க விடயமாகக் காணப்பட்டது. உடல்நலக் காப்புறுதி உபவகைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட நிகர உரிமைக்கோரிக்கைத் தொகையானது கடந்த நான்கு வருட காலப்பகுதியில் இரட்டிப்பு மடங்காகியுள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே, ஏனைய உப வகைகளுடன் ஒப்பிடுகையில் கடல் அபாயக் காப்புறுதி குறைந்தளவான உரிமைக்கோரிக்கை விகிதமான 29.38% (2015 இல் 26.33%) இனைப் பதிவு செய்திருந்தது. 2015 இல் 51.30% ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்த நானாவித உரிமைக் கோரிக்கைகள்கூட 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்திருந்து 62.51% ஆகக் காணப்பட்டது.

பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் கடந்த ஐந்து வருடத்தில் பதிவுசெய்திருந்ததிலும் பார்க்க மிக உயர்ந்த செலவுப் பெறுமதியான (SRCC & T உள்ளடங்கலாக) ரூ.22,257 மில்லியனை 2016 இல் பதிவுசெய்திருந்தன. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் நிகரச் செலவினம் 13.43% இனால் அதிகரித்திருக்கிறது. என்.ஐ.டி.எப். இன் SRCC & T இனைக் கருத்திற்கொண்டுள்ள நிகரச் செலவுகள் 2016 இல் குறிப்பிடத்தக்களவான 34.20% இனால் உயர்வடைந்து ரூ.654 மில்லியனாகக் காணப்பட்டது.

உயர்ந்தளவு உரிமைக்கோரிக்கை விகிதத்தின் தாக்கமானது 2015 இல் 97.69% ஆக இருந்த தொழிற்றுறை இணைந்த விகிதத்தை 2016 இல் 100.87% இற்குக் கொண்டுசென்று மோசமான நிலையினை ஏற்படுத்தியிருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தொழிற்றுறை இணைந்த விகிதமானது SRCC & T இன்றி மேலும் மோசமடைந்து 105.32% இனைப் பதிவு செய்திருந்தது. இதற்கிணங்க, பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் நிதிச் செயற்பாடுகளை அழுத்தத்திற்கு உள்ளாக்கியிருந்த உயர்ந்தளவு இணைந்த விகிதமானது 2016 இல் உழைக்கப்பெற்ற முதலீட்டு வருமானத்துடன் ஓரளவிற்குச் சமாளிக்கப்பட்டது.

## மொத்தக் கட்டுப்பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற காப்புறுதிகளின் எண்ணிக்கை - மொத்தக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 19 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, 2016 இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பல்வேறு உப


அட்டவணை 19

மொத்தக் கட்டுப்பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற காப்புறுதிகளின் எண்ணிக்கை - மொத்தக் காப்புறுதி வியாபாரம்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| தீ அபாயம் | 186,478 | 177,749 | 188,578 | 227,800 | 249,479 |
| கடல் அபாயம் | 154,528 | 158,893 | 186,447 | 190,720 | 192,276 |
| மோட்டார் | 3,473,925 | 3,795,059 | 4,004,162 | 4,531,187 | 5,137,485 |
| 3 ஆந் தரப்பினர் மாத்திரம் | 1,997,502 | 2,126,037 | 2,229,153 | 2,460,596 | 2,619,902 |
| முற்றடக்கமானது | 1,476,423 | 1,669,022 | 1,775,009 | 2,070,591 | 2,517,583 |
| உடல்நலம் | 10,262 | 11,609 | 13,716 | 15,053 | 16,277 |
| நானாவிதம் | 215,828 | 186,131 | 204,285 | 202,038 | 246,505 |
| மொத்தம் | **4,041,021** | **4,329,441** | **4,597,188** | **5,166,798** | **5,842,022** |

விளக்கப்படம் 18

பொதுக் காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் விபரங்கள் - 2015 மற்றும் 2016 டிசெம்பர் 31 இல்




வகைகளிலிருந்தும் மொத்தக் கட்டுப்பணத்தைச் சம்பாதிப்பதற்கு பங்களிப்புச் செய்த காப்புறுதிகளின் மொத்த எண்ணிக்கை 5,842,022 ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் மொத்தக் காப்புறுதிகளின் எண்ணிக்கை 675,224 இனால் அதிகரித்திருக்கிறது. இதில் பெரும்பாலானவை மோட்டார் காப்புறுதி உப வகையினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தன. இந்த உப வகையினுள் 2,619,902 எண்ணிக்கையிலான மூன்றாந் தரப்புக் காப்புறுதிகளும் 2,517,583 எண்ணிக்கையிலான முற்றடக்கமான காப்புறுதிகளும் அடங்குகின்றன. சொந்த இடரினை காப்புறுதி செய்வதற்குப் பதிலாக கட்டாயத் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதற்காகவே காப்புறுதிகள் பெறப் படுகின்றன என்பதையே குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மூன்றாந் தரப்புக் காப்புறுதிகள் பெறப்பட்டுள்ளமை புலப்படுத்துகிறது. சகல உப வகைகளுக்குமான காப்புறுதிகள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்தன.

## பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள்

அட்டவணை 20 உம் விளக்கப்படம் 18 உம் 2015 மற்றும் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களது அடர்த்தியினை விளக்குகின்றன. 2016 டிசெம்பர் 31 இல் இருந்த பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ. 175,745 மில்லியன் (2015: ரூ. 151,177 மில்லியன்) ஆகும். இது, 2015 டிசெம்பர் 31 இல் இருந்த மொத்தச் சொத்துக்களின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 16.25% அதிகரிப்பாகும்.

2016 இல் பொதுக் காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் வளர்ச்சியினை மீள்காப்புறுதி

அட்டவணை 20

**2015 மற்றும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான சொத்துக்களின் பரம்பல் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| சொத்து வகை | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ.'000 | % | ரூ.'000 | % |
| அரச கடன் பிணையங்கள் | 37,945,076 | 25.10% | 40,023,689 | 22.77% |
| உரிமையாண்மைகள் | 38,857,477 | 25.70% | 38,671,251 | 22.00% |
| நிறுவனக் கடன் | 8,875,048 | 5.87% | 11,653,728 | 6.63% |
| காணியும் கட்டடமும் | 9,205,309 | 6.09% | 11,929,216 | 6.79% |
| வைப்புகள் | 14,252,282 | 9.43% | 10,991,819 | 6.25% |
| அலகு நம்பிக்கைகள் | 1,830,044 | 1.21% | 1,142,394 | 0.65% |
| தங்கத்தில் முதலீடு | 2,491 | 0.00% | 2,706 | 0.00% |
| மீள்காப்புறுதி வருமதிகள் | 6,994,637 | 4.63% | 19,656,806 | 11.18% |
| காப்புறுதிதாரர்கள் மற்றும் இடையீட்டாளர் களிடமிருந்து கட்டுப்பண வருமதிகள் | 15,067,357 | 9.97% | 17,623,296 | 10.03% |
| ஆதனம் பொறி மற்றும் இயந்தியம் | 3,923,283 | 2.60% | 4,725,025 | 2.69% |
| ஏனைய சொத்துக்கள் | 11,823,451 | 7.82% | 16,819,619 | 9.57% |
| காசும் காசுச் சமானங்களும் | 2,400,448 | 1.59% | 2,505,284 | 1.43% |
| மொத்தம் | **151,176,903** | **100.00%** | **175,744,834** | **100.00%** |

வருமதிகள் உந்தியிருந்தன. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஏனைய சில பெரியளவான தீ விபத்துகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளுடன் மீள்காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வருமதிகள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 180% இற்கும் மேலாக அதிகரித்திருந்தன. இதற்கிணங்க, 2015 இல் மொத்தச் சொத்துக்களில் 4.63% இனை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்திய மீள்காப்புறுதி வருமதிகள் 2016 இல் மொத்தச் சொத்துக்களில் 11.18% இனை பிரதிநிதித்துவப் படுத்துமளவுக்கு உயர்ந்திருந்தன.

மேலும், 2016 இல் என்.ஐ.டி.எப்., தேசிய இயற்கை அனர்த்தத் திட்டத்தின் மீது ரூ. 2600 மில்லியனை மீள்காப்புறுதி வழங்குநர்களிடமிருந்தான வருமதிகளாகப் பதிவுசெய்திருந்தது.

அரச பிணையங்கள், நிரற்படுத்தப்பட்ட உரிமையாண்மைகள் (துணைக் கம்பனிகள் மற்றும் சங்கங்கள் தவிர்ந்த), நிறுவனக் கடன்கள், வைப்புகள் மற்றும் அலகு நம்பிக்கைகள் போன்றவற்றில் செய்யப்பட்ட பிரதான நிதி முதலீடுகளின் மொத்தப் பெறுமதி, 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.81,896 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் சற்றுக் குறைந்து ரூ.81,333 மில்லியனாகக் காணப்பட்டது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான முதலீட்டு வகையான அரச பிணையங்கள் 2016 டிசெம்பர் 31 இல் ரூ.40,024 மில்லியன் (2015: ரூ.37,945 மில்லியன்) பெறுமதியைக் கொண்டிருந்தன. இது வருடா வருடம் சிறிதளவு முன்னேற்றத்தை பதிவுசெய்கிறது. ஆண்டு நெடுகிலும், சட்டத்தினாலும் தீர்மானம் 1 இற்கிணங்க மீதிச் சொத்துக்களிலும் விதிக்கப்பட்டவாறு தொழினுட்ப ஒதுக்கங்களில் ஆகக்குறைந்தது 20% இனை அரச பிணையங்களில் காப்புறுதிக் கம்பனிகள் முதலீடு செய்வதை சபை உறுதிசெய்கிறது.

2016 இல் உரிமையாண்மை முதலீடுகள் 22% இனைப் (2015 இல் 25.70%) பிரதிநிதித்துவம் செய்திருந்தன. இதன் பெறுமதி ரூ. 38,671 மில்லியன் (2015: ரூ. 38,857 மில்லியன்) ஆகும். துணைக் கம்பனிகள் மற்றும் சங்கங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள உரிமையாண்மை முதலீடுகளின் தொகை முறையே ரூ.21,012 மில்லியன் மற்றும் ரூ.138 மில்லியன் ஆகும். பிரித்து வைக்கப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் பிரித்தல் செயன்முறையின் விளைவாக துணைக்கம்பனிகளின் முதலீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

நிறுவனக் கடன்கள் பிரதான முதலீட்டு வகைகளில் ஒன்றாகத் தொடர்ந்தும் இருந்தன. இது

அட்டவணை 21
முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் விபரங்கள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | 2015 (அ) | | | 2016 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடுகள் (ரூ. '000) | முதலீட்டு விளைச்சல் விகிதம் (%) |
| அரச கடன் பிணையங்கள் | 2,781,455 | 37,141,315 | 7.79 | 3,606,681 | 41,373,424 | 8.72 |
| - திறைசேரி முறிகள் | 1,752,572 | | | 2,280,620 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 269,009 | | | 389,743 | | |
| - ஏனையவை (கடன் வட்டி) | 759,874 | | | 936,318 | | |
| உரிமையாண்மை | 1,193,471 | 43,368,459 | 2.75 | 7,592,784 | 38,764,364 | 19.59 |
| - மூலதன வருமானம் / நட்டம் | 95,623 | | | (721,850) | | |
| - பங்கிலாபம் | 1,097,848 | | | 8,314,634 | | |
| நிறுவனக் கடன்கள் | 973,871 | 8,420,483 | 11.57 | 1,091,382 | 10,264,388 | 10.63 |
| - தனிச்சங்கள் | 952,410 | | | 1,069,242 | | |
| - வணிகப் பத்திரங்கள் | 21,129 | | | 22,140 | | |
| - சொத்துக்கள் பிணைக்கப்பட்ட பிணையங்கள் | - | | | - | | |
| - ஏனைய நிதிக் கருவிகள் | 331 | | | - | | |
| காணியும் கட்டடமும் | 6,050 | 10,600,939 | 0.06 | 5,000 | 10,567,263 | 0.05 |
| வைப்புகள் | 1,042,428 | 17,504,150 | 5.96 | 1,055,745 | 12,622,051 | 8.36 |
| - வங்கி | 815,653 | | | 867,690 | | |
| - நிதிக் கம்பனிகள் | 226,775 | | | 188,055 | | |
| அலகு நம்பிக்கை | 142,907 | 2,096,078 | 6.82 | 93,396 | 1,486,219 | 6.28 |
| தங்கம் | - | 56,491 | - | - | 2,599 | |
| ஏனையவை | 644,947 | 933,475 | 69.09 | 357,120 | 563,319 | 63.40 |
| மொத்தம் | **6,785,129** | **120,121,390** | **5.65** | **13,802,108** | **115,643,627** | **11.94** |

வருடா வருடம் 31.31% இனால் அதிகரித்திருந்தன. வைப்புகள் மற்றும் அலகு நம்பிக்கைகளிலும் செய்யப் பட்டுள்ள முதலீடுகள் முறையே 22.88% மற்றும் 37.58% இனால் குறிப்பிட்டளவு குறைந்திருக்கின்றன.

2016 இல் கட்டுப்பண வருமதிகள் தொகையான ரூ. 17,623 மில்லியன் ஆனது பொதுக் காப்புறுதி வியாபார மொத்தச் சொத்துக்களில் 10.03% இனைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இது, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.96% அதிகரித்திருக்கிறது.

### முதலீட்டு வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகள் பற்றிய விபரத்தினை அட்டவணை 21 காட்டுகிறது. 2016 இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சராசரி முதலீட்டுத் தொகை ரூ. 115,644 மில்லியன் ஆகும். இது, 2015 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 120,121 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 3.37% இனால் குறைவடைந்திருக்கிறது. 2016 இல் காணப்பட்ட சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுடன் பொதுக் காப்புறுதிச் சந்தையானது ரூ.13,802 மில்லியன் (2015 இல் ரூ.6,785 மில்லியன்) முதலீட்டு வருமானத்தைப் பதிவு செய்திருந்தது. இது 11.94% (2015 இல் 5.65%) என்ற ஒட்டுமொத்த முதலீட்டினை விளைவித்திருந்தது.

2016 இல் முதலீட்டு வருமானத்தின் வளர்ச்சியானது பிரதானமாக உரிமையாண்மை முதலீடுகளிலிருந்து உழைக்கப்பெற்ற ரூ.8315 மில்லியன் பங்கிலாப வருமானம் காரணமாக ஏற்பட்டதொன்றாகும். இந்தப் பங்கிலாப வருமானமானது காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நிரற்படுத்தப்படாத துணைக் கம்பனி முதலீட்டிலிருந்து அவரால்

அட்டவணை 22

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன் தீர்க்கும் நிலையின் கம்பனி வாரியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பர் 31 இல் | | |
|---|---|---|---|
| | TAC (ரூ.'000) | RCR (ரூ.'000) | CAR (%) |
| அலையன்ஸ் ஜெனரல் | 716,952 | 561,811 | 128% |
| அமானா ஜெனரல் | 642,596 | 230,434 | 279% |
| பெயார்பெஸ்ட் | 693,250 | 500,678 | 138% |
| செலிங்கோ ஜெனரல் | 4,927,626 | 2,881,910 | 171% |
| கொன்டினென்டல் | 981,939 | 362,136 | 271% |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 947,299 | 694,984 | 136% |
| எச்.என்.பி. ஜெனரல் | 745,532 | 444,704 | 168% |
| ஜனசக்தி ஜெனரல் | 5,303,227 | 2,870,381 | 185% |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | 1,087,551 | 546,416 | 199% |
| எம்.பி.எஸ்.எல். | (112,016) | 393,947 | -28% |
| ஓறியன்ற் | 524,830 | 219,733 | 239% |
| பீள்பள்ஸ் | 2,642,587 | 817,615 | 323% |
| சணச | 144,816 | 81,599 | 177% |
| எஸ்.எல்.ஐ.சி. | 24,371,298 | 13,970,143 | 174% |
| யூனியன் ஜெனரல் | 1,894,126 | 1,280,347 | 148% |
| மொத்தம் | **45,511,612** | **25,856,839** | **181%** |

அறிக்கையிடப்பட்டிருந்தது. மேற்படி பங்கிலாப வருமானம் தவிர, ஒட்டுமொத்த நிரற்படுத்தப்பட்ட உரிமையாண்மைச் சந்தையும் 2016 ஆம் ஆண்டில் குறைந்தளவான செயலாற்றுகையினையே காட்டியிருந்தன. நிறுவனக் கடன்கள் தொடர்ந்தும் 10.63% என்ற கவர்ச்சிகரமான முதலீட்டு விளைச்சலைக் காட்டியிருந்தன. நிறுவனக் கடன்களில் செய்யப்பட்ட சராசரி முதலீடுகள் 2016 இல் ரூ.10,264 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது 2015 இல் ரூ.8,420 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மிகப்பெரிய முதலீட்டு வகையாக இருந்த அரச பிணையங்களில் செய்யப்படும் முதலீடுகள் இவ்வாண்டின் ரூ.41,373 மில்லியனைப் (2015 இல் ரூ.37,141 மில்லியன்) பதிவு செய்திருந்தன. 2016 இல் இந்த முதலீட்டிலிருந்து உழைக்கப்பெற்ற வருமானம் ரூ.3,607 மில்லியன் (2015 இல் ரூ.2781 மில்லியன்) ஆகும். 2015 இல் பதிவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டு விளைச்சல் வீதமான 7.49% உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் விளைச்சல் வீதமான 8.72% ஆனது சற்று உயர்வானதாகும்.

வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் செய்யப்பட்ட சராசரி முதலீடுகள் தொகை ரூ. 12,622 மில்லியன் ஆகும். 2015 இல் பதிவுசெய்யப்பட்ட 17,504 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத் தக்கதொரு வீழ்ச்சியாகும். வைப்புகள் சம்பாதித்திருந்த முதலீட்டு வருமானம் ரூ. 1,056 மில்லியன் (2015 இல் ரூ.1,042 மில்லியன்) ஆகும். 2016 இல் வட்டி வீத அதிகரிப்புடனான முதலீட்டு விளைச்சல் வீதம் 8.36% (2015: 5.96%) ஆகும்.

### காப்புறுதிக் கம்பனிகளின் கடன் தீர்க்கும் நிலை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆளுகை வேலைச் சட்டகத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் சகல காப்புறுதிக் கம்பனிகளுக்காகவும் சபையினால் இடர் அடிப்படையிலான மூலதன வேலைச் சட்டகம் 2016 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் (TAC), இடர் மூலதனத் தேவைப்பாடு (RCR) மற்றும் மூலதன போதியளவு விகிதம் (CAR) ஆகியவை பற்றிய விபரங்களை அட்டவணை 22 வழங்குகிறது. 2016 டிசெம்பர் 31 இல் தொழிற்றுறைச் சராசரி CAR ஆனது 181% ஆகும். இரண்டு கம்பனிகளைத் தவிர ஏனைய சகல பொதுக் காப்புறுதி வழங்குநர்களும் 2016 டிசெம்பர் 31 இல், ஆகக்குறைந்த CAR தேவைப்பாடான 120% உடனும் ஆகக்குறைந்த TAC தேவைப்பாடான ரூ.500 மில்லியனுடனும் இணக்கமாகியிருந்தனர்.

இணக்கமாகியிருக்காத கம்பனிகளுக்கு எதிராக சபையினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், 120% இற்கும் அதிகமாகவும் எல்லையைவிடக் குறைவாகவும் CAR இனைக் கொண்டிருந்த கம்பனிகள் RBC மீதான அமுலாக்கத் தந்திரோபாயத்தின் பொருட்டு நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன.

### காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கத்தக்க மூலதனத் (TAC) தேவைப்பாடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

2016 டிசெம்பர் 31 இல் தனிப்பட்ட பொதுக் காப்புறுதிக் கம்பனிகளால் பதிவு செய்யப்பட்ட அடுக்கு 1 மூலதனம், அடுக்கு 2 மூலதனம், கழிவுகள் மற்றும் TAC ஆகியவற்றை அட்டவணை 23 காட்டுகிறது. கைக்கொள் இலாபத்திற்காக கம்பனிகளால் விநியோகிக்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள், மூலதன ஒதுக்கங்கள் மற்றும் ஏனைய செம்மையாக்கங்களின் பெறுமதி 2016 இல் ரூ.72,674 மில்லியன் ஆகும். விதியின்படி, அடுக்கு 2 மூலதனமானது அடுக்கு 1 மூலதனத்தின் 50% இனை விஞ்ச முடியாது.

எவ்வாறாயினும், கழிப்பனவுத் தொகையாக ரூ. 35,967 மில்லியன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கழிப்பனவுகள் அனுமதிக்கத்தகாத கடன்கள் மற்றும் முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள், தொக்கு, பிணையச் சொத்துக்கள், பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

### காப்புறுதிக் கம்பனிகளால் கொடுப்பனவு செய்யப்பட்ட இடர் கட்டணங்களின் ஒப்பீடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறு இடர் கட்டணங்களின் கம்பனி வாரியான தொகுப்பினை அட்டவணை 24 விளக்குகிறது.

அட்டவணை 23

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கிடைக்கத்தக்க மூலதனத்தின் (TAC) கம்பனி வாரியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பர் 31 இல் | | | |
|---|---|---|---|---|
| | அடுக்கு 1 (ரூ.'000) | அடுக்கு 2 (ரூ.'000) | கழிப்பனவுகள் (ரூ.'000) | மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் |
| அலையன்ஸ் ஜெனரல் | 999,002 | - | 282,050 | 716,952 |
| அமானா ஜெனரல் | 1,713,037 | 234,332 | 1,304,773 | 642,596 |
| பெயார்பெஸ்ட் | 835,174 | - | 141,924 | 693,250 |
| செலிங்கோ ஜெனரல் | 8,844,082 | - | 3,916,456 | 4,927,626 |
| கொன்டினென்டல் | 1,185,551 | - | 203,612 | 981,939 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 1,482,620 | 252,906 | 788,228 | 947,299 |
| எச்.என்.பி. ஜெனரல் | 931,186 | - | 185,654 | 745,532 |
| ஜனசக்தி ஜெனரல் | 7,441,407 | 130,046 | 2,268,227 | 5,303,227 |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | 1,175,044 | - | 87,493 | 1,087,551 |
| எம்.பி.எஸ்.எல். | 62,351 | (16,373) | 157,994 | (112,016) |
| ஓறியன்ற் | 608,852 | - | 84,022 | 524,830 |
| பீள்பள்ஸ் | 2,714,485 | - | 71,899 | 2,642,587 |
| சணச | 254,324 | 2,873 | 112,381 | 144,816 |
| எஸ்.எல்.ஐ.சி. | 40,464,696 | 8,200,354 | 24,293,751 | 24,371,298 |
| யூனியன் ஜெனரல் | 3,962,665 | - | 2,068,539 | 1,894,126 |
| **மொத்தம்** | **72,674,477** | **8,804,139** | **35,967,005** | **45,511,611** |

அட்டவணை 24

**2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் மூலதனத் தேவைப்பாட்டின் (RCR) கம்பனி வாரியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குநர் | 2016 (ஆ) டிசெம்பர் 31 இல் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் (ரூ.'000) | கவனக் குவிப்பு இடர் (ரூ.'000) | சந்தை இடர் (ரூ.'000) | மீள் காப்புறுதி இடர் (ரூ.'000) | பொறுப்பு இடர் (ரூ.'000) | செயற்பாட்டு இடர் (ரூ.'000) | பன்முகப்படுத்தலுக்கு முன்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) (ரூ.'000) | பன்முகப்படுத்தலுக்கு பின்னரான மொத்த இடர் மூலதன கட்டணம் (RCR) |
| அலையன்ஸ் ஜெனரல் | 2,180 | 237,304 | 125,373 | 20,422 | 406,967 | 39,619 | 831,864 | 561,811 |
| அமானா ஜெனரல் | 15,513 | 140,204 | 27,537 | 6,822 | 127,351 | 27,433 | 344,861 | 230,434 |
| பெயார்பெஸ்ட் | - | 316,750 | 25,965 | 2,586 | 361,380 | 29,165 | 735,846 | 500,678 |
| செலிங்கோ ஜெனரல் | 90,887 | 1,157,908 | 995,151 | 160,111 | 1,577,597 | 192,609 | 4,174,263 | 2,881,910 |
| கொன்டினென்டல் | 30,840 | 89,610 | 113,388 | 25,043 | 251,418 | 30,216 | 540,514 | 362,136 |
| கோப்பரேட்டிவ் ஜெனரல் | 46,195 | 297,635 | 271,396 | 8,005 | 305,284 | 37,250 | 965,766 | 694,984 |
| எச்.என்.பி. ஜெனரல் | 32,197 | 147,137 | 123,060 | 12,596 | 312,514 | 29,638 | 657,142 | 444,704 |
| ஜனசக்தி ஜெனரல் | 227,382 | 653,929 | 1,584,176 | 81,982 | 1,311,500 | 171,627 | 4,030,597 | 2,870,381 |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் | 5,119 | 116,550 | 247,856 | 17,959 | 383,579 | 35,969 | 807,031 | 546,416 |
| எம்.பி.எஸ்.எல். | 7,643 | 319,052 | 19,556 | 19,040 | 147,104 | 10,870 | 523,264 | 393,947 |
| ஓறியன்ற் | 20,370 | 130,676 | 39,334 | 10,125 | 88,783 | 14,058 | 303,347 | 219,733 |
| பீஸ்பள்ஸ் | 93,365 | 73,974 | 375,411 | 7,187 | 601,762 | 62,820 | 1,214,520 | 817,615 |
| சனச | 3,355 | 24,241 | 46,220 | 3,161 | 26,624 | 4,916 | 108,517 | 81,599 |
| எஸ்.எல்.ஐ.சி. | 129,353 | 6,889,726 | 6,599,729 | 101,869 | 2,540,763 | 672,625 | 16,934,066 | 13,970,143 |
| யூனியன் ஜெனரல் | 29,950 | 362,984 | 449,803 | 169,577 | 778,664 | 90,518 | 1,881,495 | 1,280,347 |
| மொத்தம் | **734,348** | **10,957,679** | **11,043,956** | **646,485** | **9,221,289** | **1,449,335** | **34,053,093** | **25,856,838** |

நியாயமான உயர்ந்தளவு வட்டி வீதச் சூழலுடன், 2016 இல் சந்தை இடரானது பன்முகப்படுத்தலுக்கு முன்னரான மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் 32.43% இனைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து கவனக்குவிப்பு இடர் காணப்பட்டது. சில கம்பனிகள் ஏற்றுக்கொள்ளத்தக்க சதவீதத்தையும் மீறிய வகையில் காணி மற்றும் கட்டடம் போன்ற முதலீடுகள் மீது உயர்ந்தளவு கவனத்தைக் செலுத்தியிருந்தன. இதன் விளைவாக ஒட்டுமொத்த கவனக்குவிப்பு இடர் கட்டணங்கள் ரூ.10,958 மில்லியனுக்கு உயர்வடைந்தன. கட்டுப்பணம் மற்றும் உரிமைக்கோரிக்கைப் பொறுப்பினை உள்ளடக்கியிருக்கின்ற பொறுப்பு இடர் கட்டணமானது மொத்த இடர் கட்டணங்களில் 27.08% இனைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தன.

கடன் இடர் கட்டணம் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கின்ற பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் தரப்படுத்தப்பட்ட மற்றும் நியாயமானளவு குறைந்த இடர் கொண்ட முதலீடுகளில் பிரதானமாக முதலீடு செய்திருக்கின்றன. மீள்காப்புறுதி இடர்கூட ரூ.646 மில்லியன் குறைந்த இடர் கட்டணத்தை பதிவு செய்திருந்தன.

## புதிய, மீள்புதுப்பித்த மற்றும் நடைமுறையிலுள்ள காப்புறுதிகள் பற்றிய விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 25 இல் சித்தரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் நடைமுறையிலுள்ள காப்புறுதிகளின்

அட்டவணை 25

புதிய, மீள்புதுப்பித்த மற்றும் நடைமுறையிலுள்ள காப்புறுதிகள் பற்றிய விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய காப்புறுதிகள் | மீள்புதுப்பித்த காப்புறுதிகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் இருந்த காப்புறுதிகள் | புதிய காப்புறுதிகள் | மீள்புதுப்பித்த காப்புறுதிகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் இருந்த காப்புறுதிகள் |
| தீ அபாயம் | 79,430 | 164,512 | 199,257 | 104,523 | 182,708 | 236,422 |
| கடல் அபாயம் | 158,616 | 18,893 | 149,844 | 165,754 | 24,821 | 162,518 |
| மோட்டார் | 1,994,966 | 2,561,100 | 4,504,969 | 2,250,464 | 2,882,007 | 5,009,271 |
| - 3 ஆந் தரப்பு மாத்திரம் | 1,074,995 | 1,392,811 | 2,464,924 | 1,168,151 | 1,452,760 | 2,627,651 |
| - முற்றடக்கமான | 919,971 | 1,168,289 | 2,040,045 | 1,082,313 | 1,429,247 | 2,381,620 |
| உடல்நலம் | 8,012 | 7,718 | 13,990 | 8,829 | 7,377 | 15,401 |
| நானாவித காப்புறுதி | 140,756 | 55,282 | 181,786 | 187,055 | 78,094 | 223,900 |
| மொத்தம் | **2,381,780** | **2,807,505** | **5,049,846** | **2,716,625** | **3,175,007** | **5,647,512** |

மொத்த எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 5,647,512 ஆக இருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5,049,846 காப்புறுதிகளுடன் ஒப்பிடுகையில் 11.84% வளர்ச்சி ஒன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. 2016 இல், நடைமுறையிலிருந்த மொத்தக் காப்புறுதிகளில் 88.70% இனை மோட்டார் காப்புறுதி பிரதிநிதித்துவப் படுத்தியது. இதில் 2,627,651 மூன்றாந் தரப்புக் காப்புறுதிகளும் 2,381,620 முற்றடக்கமான காப்புறுதிகளும் உள்ளடங்குகின்றன. 2015 இன் இறுதியில் நடைமுறையிலிருந்த 199,257 தீ அபாயக் காப்புறுதியானது 2016 இல் 236,422 ஆக உயர்வடைந்திருந்தது. ஆண்டின் காலப்பகுதியில், காப்புறுதிக் கம்பனிகள் 2,716,625 புதிய காப்புறுதிகளை எழுதியிருந்தன. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.06% இனால் அதிகரித்திருப்பதைக் காணலாம். 2015 ஆம் ஆண்டில் மீளவும் புதுப்பிக்கப்பட்ட 2,807,505 காப்புறுதிகளுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3,175,007 காப்புறுதிகள் மீளவும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.

### மீள்காப்புறுதி வியாபாரம்

முதன்மை காப்புறுதி வழங்குநர்களுக்கு மீள்காப்புறுதியினை வழங்குகின்ற இலங்கையின் ஒரேயொரு நிறுவனமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் செயற்படுகிறது. 2012 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1791/4 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்ததன்படி, சகல முதன்மை காப்புறுதி வழங்குநர்களும் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதியிலிருந்தும் எழுகின்ற அவர்களது மொத்தப் பொறுப்பில் 30% இனை என்.ஐ.டி.எப். இற்கு அளிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், என்.ஐ.டி.எப். ரூ.2,357 மில்லியனை மீள்காப்புறுதிக் கட்டுப்பண வருமானமாக சம்பாதித்திருக்கிறது. 2015 ஆம் ஆண்டில் சம்பாதிக்கப்பட்ட மீள்காப்புறுதிக் கட்டுப்பண வருமானமான ரூ.1,738 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 35.64% அதிகரிப்பாகும். கட்டுப்பண வருமானத்தில் எற்பட்ட இந்த அதிகரிப்பானது பிரதானமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பல்வேறு வகைகளினதும் ஒரு பரந்த எல்லையிலிருந்து மீள்காப்புறுதி வியாபாரத்தின் ஏற்பிசைவு காரணமாக ஏற்பட்டுள்ளது.

என்.ஐ.டி.எப். ஆனது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மீளளிப்பு மீள்காப்புறுதி ஏற்பாடுகளை ரூ.384 மில்லியன் செலவில் இடப்படுத்தியிருக்கிறது.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மீள்காப்புறுதிக் கட்டுப்பணம் 14.12% இனால் அதிகரித்திருக்கிறது. இவ்வாண்டிற்கான கட்டுப்பணத் தொகை ரூ. 11,890 மில்லியன் (2015: ரூ. 10,419 மில்லியன்) ஆகும். இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாக இருப்பது, குறிப்பாக தீ அபாயக் காப்புறுதி வியாபாரத்தில் குறைவடைந்த வைத்திருப்பு மட்டங்கள் ஆகும்.

2016 டிசெம்பர் 31 இல், என்.ஐ.டி.எப். இன் மீள்காப்புறுதி வியாபாரம் கொண்டுள்ள மொத்தச் சொத்துக்கள் தொகை ரூ. 5,915 மில்லியன் ஆகும். 2015 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3604 மில்லியன் பெறுமதியான சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் இது 64.12% இனால் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடி, என்.ஐ.டி.எப். இனுடைய மீள்காப்புறுதி வியாபாரம் ரூ.1,863 மில்லியனை (2015: ரூ. 2,915 மில்லியன்) அரச பிணையங்களில் முதலீடு செய்திருக்கிறது. இது ரூ.221 மில்லியனை (2015: ரூ. 186 மில்லியன்) முதலீட்டு வருமானமாகச் சம்பாதித்திருக்கிறது. அதிக எண்ணிக்கையிலான உரிமைக் கோரிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்ததன் காரணமாக, இவ்வாண்டின் காலப்பகுதியில் அரச கடன் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 295 மீள்காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் என்.ஐ.டி.எப். இற்குக் கிடைத்திருந்ததுடன் அதற்காக மொத்தமாக ரூ.6,832 மில்லியனை என்.ஐ.டி.எப். கொடுப்பனவும் செய்திருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட நிகர உரிமைக்கோரிக்கைகளுக்கான தொகை ரூ. 3,432 மில்லியன் (2015: ரூ: 1,243 மில்லியன்) ஆகும். இது 195.37% (2015: 67.41%) என்ற உரிமைக்கோரிக்கை விகிதத்தை விளைவாக்கியிருந்தது. இதற்கான பிரதான காரணமாக அமைவது 2016 மே மாதத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த கடுமையான வெள்ளப் பெருக்காகும்.

என்.ஐ.டி.எப். இன் மீள்காப்புறுதி வியாபாரம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.581 மில்லியனைச் செலவுசெய்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகையான ரூ.507 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 14.55% அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பின் காரணமாக செலவு விகிதம் 33.01% (2015: 27.5%) ஆகக் காணப்பட்டது. இதற்கிணங்க, மொத்த உரிமைக்கோரிக்கை விகிதமும் செலவு விகிதமும் சேர்த்து மொத்தமாக 228.38% ஆகக் காணப்பட்டது. இது 2015 இல் பதிவாகியிருந்த 94.91% உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவான 133.47%

அட்டவணை 26

**காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் ஊடாக உழைக்கப்பெற்ற மொத்தக் கட்டுப்பணம் - 2016**

| | | மொத்தக் கட்டுப்பணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| தரகுக் கம்பனியின் பெயர் | | ரூ. ('000) | சந்தைப் பங்கு (%) | ரூ. ('000) | சந்தைப் பங்கு (%) | ரூ. ('000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏ.டி.இசட். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 13,896 | 5.29 | 399,937 | 2.28 | 413,833 | 2.33 |
| 2 | எயிட்கென் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 779 | 0.30 | 472,843 | 2.70 | 473,622 | 2.66 |
| 3 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 126 | 0.05 | 613,059 | 3.50 | 613,185 | 3.45 |
| 4 | அலியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 21,812 | 8.30 | 85,599 | 0.49 | 107,411 | 0.60 |
| 5 | அசற்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 1,303,079 | 7.44 | 1,303,079 | 7.33 |
| 6 | சி.எப். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 150 | 0.06 | 2,429,095 | 13.87 | 2,429,245 | 13.67 |
| 7 | கொலம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 5,745 | 2.19 | 221,790 | 1.27 | 227,535 | 1.28 |
| 8 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 45,467 | 17.30 | 2,231,903 | 12.74 | 2,277,370 | 12.81 |
| 9 | டெல்மேஜ்இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 21,174 | 8.06 | 981,334 | 5.60 | 1,002,508 | 5.64 |
| 10 | ஈ.ஏ.பி. - ஆர்.எம்.எஸ். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 118,583 | 0.68 | 118,583 | 0.67 |
| 11 | ஈக்குவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 104,787 | 0.60 | 104,787 | 0.59 |
| 12 | எசேஜீ கரிம்ஜீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 20,742 | 7.89 | 397,284 | 2.27 | 418,026 | 2.35 |
| 13 | பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 22,758 | 8.66 | 1,388,300 | 7.93 | 1,411,058 | 7.94 |
| 14 | போசைட் இன்சூரன்ஸ் அன்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 433,209 | 2.47 | 433,209 | 2.44 |
| 15 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேவிசஸ் (பிரை.) லிமிட் | 68 | 0.03 | 116,011 | 0.66 | 116,079 | 0.65 |
| 16 | லைவ் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை.) லிமிட். | 1,125 | 0.43 | 195,184 | 1.11 | 196,310 | 1.10 |
| 17 | மேர்க்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 292,692 | 1.67 | 292,692 | 1.65 |
| 18 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | 6,608 | 2.51 | 1,309,517 | 7.48 | 1,316,125 | 7.40 |
| 19 | புரோகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 2,103 | 0.80 | 265,416 | 1.52 | 267,518 | 1.51 |
| 20 | புரொடெக்சன் அன்ட் அஷ்யூரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 653,102 | 3.73 | 653,102 | 3.67 |
| 21 | ரிலயன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 25,507 | 9.71 | 474,854 | 2.71 | 500,361 | 2.81 |
| 22 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 6,699 | 2.55 | 821,427 | 4.69 | 828,127 | 4.66 |
| 23 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | | - | 889,079 | 5.08 | 889,079 | 5.00 |
| 24 | ஸ்ரடெஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 23,319 | 8.88 | 92,194 | 0.53 | 115,513 | 0.65 |
| 25 | செனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | 1,150 | 0.44 | 212,212 | 1.21 | 213,361 | 1.20 |
| | உப மொத்தம் | **219,228** | **83.44** | **16,502,490** | **94.20** | **16,721,718** | **94.05** |
| | ஏனைய காப்புறுதித் தரகுக் கம்பனிகள் (33) | **43,517** | **16.56** | **1,015,285** | **5.80** | **1,058,802** | **5.95** |
| | முழு மொத்தம் | **262,745** | **100** | **17,517,775** | **100** | **17,780,520** | **100** |


இனால் அதிகரித்திருக்கிறது. இந்த கடுமையான இணைந்த விகிதம் ஏற்படக் காரணம் 2016 காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கிற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளும் செலவிடப்பட்ட செலவினங்களும் ஆகும்.

## காப்புறுதித் தரகுக் கம்பனிகள்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐம்பத்தெட்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் சந்தையில் இயங்கியிருந்ததுடன் அவை ரூ.17,781 மில்லியனை மொத்தக் கட்டுப்பணமாக (GWP) உழைத்திருந்தன. இதற்கிணங்க, காப்புறுதித் தரகு வியாபாரத்தின் ஊடாக உழைக்கப்பெற்ற முழு மொத்தக் கட்டுப்பணமானது 2015

விளக்கப்படம் 19

**2007 தொடக்கம் 2016 வரை காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் ஊடாக உழைக்கப்பெற்ற மொத்தக் கட்டுப்பணம்**




| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொதுக் காப்புறுதி மொத்தக் கட்டுப்பணம் (ரூ. மில்லியன்) | 7,393 | 8,781 | 8,698 | 9,317 | 10,193 | 12,532 | 14,189 | 14,559 | 16,124 | 17,518 |
| நீண்ட காலக் காப்புறுதி மொத்தக் கட்டுப்பணம் (ரூ. மில்லியன்) | 158 | 195 | 188 | 243 | 296 | 195 | 191 | 158 | 206 | 263 |
| தரகுக் கம்பனிகளின் பங்களிப்பு - முழு மொத்தக் கட்டுப்பணத்தின் சதவீதமாக | 14.55 | 15.43 | 15.44 | 14.43 | 12.78 | 14.03 | 14.39 | 13.91 | 13.28 | 12.44 |

நீண்ட காலக் காப்புறுதி மொத்தக் கட்டுப்பணம் (ரூ. மில்லியன்) பொதுக் காப்புறுதி மொத்தக் கட்டுப்பணம் (ரூ. மில்லியன்) தரகுக் கம்பனிகளின் பங்களிப்பு - முழு மொத்தக் கட்டுப்பணத்தின் சதவீதமாக

இல் உழைக்கப்பெற்ற ரூ.16,330 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 இல் 8.89% வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. இந்த முழு மொத்தக் கட்டுப்பணமானது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகியவற்றால் உழைக்கப்பெற்ற முறையே ரூ.263 மில்லியன் மற்றும் ரூ.17,518 மில்லியன் கட்டுப்பண வருமானங்களை உள்ளடக்கியிருக்கிறது. உழைக்கப்பெற்ற முழு மொத்தக் கட்டுப்பணத்தில் 98.52% இனை பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் மீதி 1.48% இனை மாத்திரம் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்தக் கட்டுப்பணம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை நோக்கிய காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பங்களிப்பு 2016 இல் முக்கியமற்றதாகவே இருந்தது. நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் (ரூ. 63,495 மில்லியன்) முழு மொத்தக் கட்டுப்பணத்தின் 0.41% மாத்திரமே தரகர்கள் ஊடாக சம்பாதிக்கப்பட்டிருந்தன. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் முழு மொத்தக் கட்டுப்பணத்தின் 22.04% இனை காப்புறுதித் தரகுக் கம்பனிகள் உழைத்திருந்தன. இதன் பெறுமதி ரூ. 79,474 மில்லியன் (SRCC & T கட்டுப்பணம் உள்ளடங்கலாக) ஆகும்.

2016 இல், இருபத்தைந்து காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ஒவ்வொன்றும் ரூ. 100 மில்லியனையும் விஞ்சிய அளவு மொத்தக் கட்டுப்பணத்தைப் பெற்றிருந்ததுடன் இந்த காப்புறுதித் தரகுக் கம்பனிகள் கூட்டாக உழைத்திருந்த மொத்தக் கட்டுப்பணத் தொகை ரூ.16,722 மில்லியன் ஆகும். மீதியாகவுள்ள முப்பத்திமூன்று காப்புறுதித் தரகுக் கம்பனிகளும் ரூ.1059 மில்லியனை உழைத்திருந்தன. அவை பற்றிய விபரம் அட்டவணை 26 இல் தரப்பட்டுள்ளது.

# செயற்பாட்டு மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகள்

#### 1. வருமானங்களின் மீளாய்வு

**a) வருடாந்த சட்டநியதி வருமானங்கள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு அறிக்கைகள்**

சட்ட ஏற்பாடுகளின்படி, காப்புறுதிக் கம்பனிகள் நிதியாண்டு முடிவடைந்து அடுத்துவரும் ஆறு மாதங்களுக்குள் வருடாந்த சட்டநியதி வருமானங்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஆகியவற்றைச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள் தங்களது வருடாந்த சட்டநியதி வருமானங்களுடன் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு அறிக்கையையும் பொழிப்புரை ஒன்றினையும் சபைக்குச் சமர்ப்பிக்கத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன.

சபையானது திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன் அத்திரட்டுகளின் துல்லியத்தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட விதிகள், சட்ட ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அவை கொண்டுள்ள இணக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவற்றைக் கூர்ந்து ஆராய்கிறது. சபையானது திரட்டுகளின் மீளாய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டநியதித் தேவைப்பாடு களிலிருந்தான விலகல்கள் பற்றி சம்பந்தப்பட்ட கம்பனிகளுடன் உரையாடுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவற்றைத் திருத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்குகிறது. மேலும், திரட்டுகளின் மீளாய்வின்போது அவதானிக்கப்பட்ட குறிப்பிட்ட சில விடயங்கள்கூட சபையினால் நடத்தப்பட்ட வேலைத்தலப் (site) பரிசீலனைகளின்போது தெரிவிக்கப்படுகிறது.

**b) இடர் மதிப்பீட்டுப் பொழிப்புரை (RAS)**

காப்புறுதிக் கம்பனிகள் ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் இடர் மதிப்பீட்டுப் பொழிப்புரையை (RAS) சபைக்குத் தாக்கல்செய்யத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. சபையானது கம்பனியின் தொழிற்பாடுகள் பற்றிய ஓர் கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, நிறுவன மற்றும் உரிமையாண்மைக் கட்டமைப்பு, வியாபாரத் தகவல்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் அத்துடன் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், உரிமைக்கோரிக்கை நிருவாகம், இடர் முகாமைத்துவம் போன்ற தொழிற்பாடுகள் பற்றி இடர் மதிப்பீட்டுப் பொழிப்புரையில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்கிறது.

**c) மீள்காப்புறுதி ஒழுங்கமைப்புகள்**

சட்டப் பிரிவு 31(1) இன் அடிப்படையில், வருடாந்தம் காப்புறுதிக் கம்பனிகள் தமது மீள்காப்புறுதி ஒழுங்கமைப்புகள் பற்றிச் சபைக்கு அறிவிக்கத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. காப்புறுதி வழங்குநர்கள் சபையால் விநியோகிக்கப்பட்ட மீள்காப்புறுதிக்கான தகைமைகள் மீதான விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணக்கமாக இருப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். சபையால் குறித்துரைக்கப்பட்ட தரமிடல் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மீள்காப்புறுதி வழங்குநர்களிடமிருந்து மீள்காப்புறுதிகள் பெறப்படுவதையும் காப்புறுதிகள் உரிய வகைகளுக்காகப் பெறப்படுவதையும் என்.ஐ.டி.எப். இற்கு காப்புறுதி வழங்குநர்களால் அளிப்புச் செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குநர்களின் மீள்காப்புறுதி ஒழுங்கமைப்புகளைச் சபை மீளாய்வு செய்கிறது. சபையால் அவதானிக்கப்பட்ட ஏதாவது இணக்கமின்மைகள் அல்லது விலகல்கள் காணப்படுமாயின் அவை பற்றி நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் திருத்தங்களை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, சகல காப்புறுதி வழங்குநர்களும் அவர்களது விருப்பத்திற்குரிய மீள்காப்புறுதி ஒழுங்கமைப்புகளைக் காலாண்டிற்கு ஒருமுறை சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர். சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரமிடல் தேவைப்பாடுகளை திருப்திசெய்கின்ற ஒழுங்கமைக்கப்பட்ட மீள்காப்புறுதி வழங்குநர்களிடமிருந்து விருப்பத்திற்குரிய காப்புறுதிகள் பெறப்பட்டுள்ளன என்பதையும் என்.ஐ.டி.எப். இற்கான கட்டாய அளிப்புகள் விருப்பத்திற்குரிய காப்புறுதிகளில் பொருத்தமானவாறு உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக

ஒழுங்கமைப்புகளை சபை மீளாய்வு செய்கிறது. நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்ட சபையினால் அவதானிக்கப்பட்ட ஏதாவது இணக்கமின்மை அல்லது விலகல்களுக்குரிய என்.ஐ.டி.எப். இன் நோக்கல்கள் பெறப்படுகின்றன.

### d) காலாண்டுத் திரட்டுகள்

2016 ஆம் ஆண்டில், 2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த இடர் அடிப்படையிலான மூலதன (RBC) வேலைச்சட்டகத்தின் கீழ் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தம் செய்யப்பட்ட காலாண்டுத் திரட்டு வடிவமைப்புக்கேற்ப காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் காலாண்டுத் திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு RBC திரட்டுகள், அவற்றின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்காகவும் அவை சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கமாகவிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் என சபையினால் மீளாய்வு செய்யப்பட்டன.

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிற்குமான கட்டுப்பண வருமானம், ஈட்டப்படுகின்ற இலாபம் மற்றும் நிகர இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரினதும் காலாண்டுச் செயலாற்றுகையினை மதிப்பீடு செய்யும் பொருட்டு சபையானது திரட்டுகளைப் பகுப்பாய்வு செய்கிறது. மேலும், காப்புறுதி வழங்குநர்களின் காலாண்டுச் செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்காக இலாபத்தன்மை, செலவுகள் மற்றும் உரிமைக்கோரிக்கைகள் மீதான ஒரு முற்றடக்க விகிதப் பகுப்பாய்வும் முன்னெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் சகல காப்புறுதி வழங்குநர்களினதும் நிதி நிலைமையானது அவர்களின் சொத்துக்கள் மற்றும் பரிப்புகளின் நிலை, மூலதனப் போதுமை விகிதம் (கடன் தீர்க்கும் நிலை), திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஆண்டுமுழுவதும் தொடர்ச்சியாகக் கணக்காணிக்கப்படுகிறது. காலாண்டுத் திரட்டுகளில் மீளாய்வின் போது அவதானிக்கப்பட்ட ஏதாவது இணக்கமின்மை, முரண்பாடுகள் போன்றவற்றை தரப்பட்ட கால எல்லையினுள் திருத்தம் செய்வதற்காக சம்பந்தப்பட்ட கம்பனிகளுடன் தொடர்பாடப்படுகிறது.

சட்ட ஏற்பாடுகள், சபையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அத்துடன் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடலின் ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் காலாண்டுத் திரட்டுகள் இணக்கமாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக, காலாண்டுத் திரட்டுகளுடன் இணக்கச் சான்றளிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு காப்புறுதி வழங்குநர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

### e) மாதாந்தத் திரட்டுகள்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஒவ்வொரு மாதம் முடிவடைந்து 21 நாட்களுக்குள் RBC வேலைச்சட்டகத்தின் கீழ் தங்களுடைய மாதாந்தத் திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கு எட்டு காப்புறுதிக் கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டன. இந்த முடிவு எடுக்கப்பட்டதற்கான காரணம், இந்தக் கம்பனிகளால் இணக்கமின்மைகள் அறிக்கையிடப்பட்டதால் அவர்களுடைய நிதி நிலைமை மற்றும், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகும் தன்மை ஆகியவற்றை அடிக்கடி ஆராய வேண்டியிருந்தமையாகும். அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குநர்களின் செயலாற்றுகை மற்றும் நிதி நிலைமை ஆகியன தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன. ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைகள் மற்றும் முரண்பாடுகள் அவதானிக்கப்படுமிடத்து சபையானது நிர்ணயிக்கப்பட்ட கால எலலையினுள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

## 2. கடன் தீர் எல்லை விதிகளுடனான இணக்கத்தைக் கண்காணித்தல்

கடன் தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகள் - 2015 இற்கு இணங்க, ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிற்குமான ஆகக் குறைந்த தேவைப்பாட்டு மூலதனப் போதுமை விகிதம் (CAR) மற்றும் மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் ஆகியவற்றைப் பேணுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்தத் திரட்டுகளுடன் சேர்த்து தமது கடன் தீர் எல்லைக் கணிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு காப்புறுதி வழங்குநர்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அத்தகைய

கணிப்பீடுகள் கடன் தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுடன் இணக்கமாகியுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபையால் மீளாய்வு செய்யப்படுகின்றன. கடன் தீர் எல்லைத் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு காப்புறுதி வழங்குநர்களால் இயலாமல் இருப்பின் அல்லது கணிப்பீடுகள் துல்லியமற்றதாகக் காணப்படின், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றினுள் அவற்றை கடன் தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுடன் இணக்கமாக்குவதற்கும் அவற்றைச் சீராக்குவதற்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு சபை அவர்களை அறிவுறுத்துகிறது.

## 3. முதலீட்டு விவரணங்களுடனான இணக்கத்தைக் கண்காணித்தல்

### a) அரச பிணையங்களில் முதலீடு

காப்புறுதி வழங்குநர்கள் சட்டப் பிரிவு 25 இற்கு இணங்க, தொழினுட்ப ஒதுக்கச் சொத்துக்களில் 20% இற்கு குறையாத வீதத்தையும் நீண்ட காலக் காப்புறுதி நிதிச் சொத்துக்களில் 30% இற்குக் குறையாத வீதத்தையும் அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். சபையானது சமர்ப்பிக்கப்பட்ட திரட்டுகளின் அடிப்படையில் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படைகள் மீது, கூறப்பட்ட ஏற்பாடுகளுடனான இணக்கத்தைக் கண்காணிக்கிறது. அரச பிணையங்களில் செய்யப்படும் முதலீடுகளின் உரிமை மற்றும் துல்லியத்தன்மையினை உறுதிப் படுத்துவதற்காக சபையானது இலங்கை மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்ட வைத்திருப்புக் கூற்றுக்களை (Statements of Holding) மீளாய்வு செய்கிறது. இங்கு முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்படுமாயின் அவற்றை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றினுள் திருத்துமாறு அத்தகைய கம்பனிகள் அறிவுறுத்தப்படுகின்றன.

### b) தீர்மானத்தின்படியான ஏனைய முதலீடுகள்

2011 மார்ச் 1 ஆந் திகதியத் தீர்மானம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றுக்கிணங்க, தொழினுட்ப ஒதுக்கங்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதி ஆகியவற்றின் மீதிச் சொத்துக்களை ஒவ்வொரு காப்புறுதி வழங்குநரும் முதலீடு செய்தல் வேண்டும். தீர்மானம் 1 உடன் இணக்கமாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக தொழினுட்ப ஒதுக்கங்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதி ஆகியவற்றின் முதலீட்டு விபரங்களை சபை மீளாய்வு செய்கிறது. ஏதாவது இணக்கமின்மைகள் அவதானிக்கப்படின், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவற்றுக்குத் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குநர்களுக்கு சபை அறிவிக்கிறது.

## 4. RBC மீதான அமுலாக்க உபாயங்கள்

RBC அடிப்படையில் மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளைப் பேணுவதற்குத் தவறிய காப்புறுதிக் கம்பனிகள் காணப்படுமாயின், சபையானது தலையிட்டு, அக்கம்பனிகளின் இணக்கமின்மையைச் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறது. சபையானது ஆகக்குறைந்த தேவைப்பாடுகளின் அடிப்படையில் RBC மீதான அமுல்படுத்தல் உபாயம் ஒன்றினை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அதற்கிணங்க, மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்காத ஐந்து காப்புறுதிக் கம்பனிகள் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தல் உபாயத்துடன் இணக்கமாவதற்குத் தேவைப்படுத்தப்பட்டன. இது நெருக்கடியான நிலைமை ஒன்றிற்கு இட்டுச்செல்லக்கூடிய நிதி நிலைமை மற்றும் கடன் தீர்ப்பனவு அக்கறைகள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க சீரழிவொன்று ஏற்படுவதற்கு முன் மேற்பார்வைத் தலையீட்டை ஆரம்பிப்பதற்கு சபையினை இயலச்செய்திருந்தது.

## 5. வேலைத்தலப் பரிசீலனைகள்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடர் அடிப்படையிலான மேற்பார்வை முறையியலை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதிக் கம்பனிகளில் ஐந்து வேலைத்தலப் பரிசீலனைகளை சபை நடத்தியிருந்தது. 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வேலைத்தலப் பரிசீலனைகளுக்குரிய பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருப்பது கம்பனிகளுக்கிடையில் தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத் (ERM) தொழிற்பாட்டைச் செல்லுபடியாக்குவதும் அதனை விளங்கிக்கொள்ளச் செய்வதுமாகும். இதற்கு மேலதிகமாக சட்ட ஏற்பாடுகள் மற்றும் சபையால் விநியோகிக்கப்பட்ட ஏனைய விதிகள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் இணக்கத்தினை மதிப்பிடுவதற்காக சபையானது அவற்றினை மீளாய்வு செய்திருந்தது. காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாடுகள், பொறுப்பு மதிப்பீடு, நடைமுறைகள் மற்றும் முறைமைகளுடன் தொடர்புடைய அதிக தகவல்களை திரட்டும் பொருட்டு சிரேஷ்ட நிலையிலுள்ள

காப்புறுதி வழங்குநர்கள், உள்ளக / வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர்கள் ஆகியோருடன் நேர்முகங்கள் நடத்தப்பட்டன. காப்புறுதிக் கம்பனிகளின் பணச் சலவைக்கு (AML) எதிரான வழிகாட்டல்களுடனான இணக்கமும்கூட வேலைத்தல பரிசீலனைகளின்போது அறுதியீடு செய்யப்பட்டன.

காப்புறுதி வழங்குநர்களின் பிரதிபலிப்புகளைப் பெறும் பொருட்டு, மேம்படுத்தல்களுக்காகச் சபையின் பரிந்துரைகளுடன் வேலைத்தலப் பரிசீலனைகளின்போது செய்யப்பட்ட அவதானிப்புகள் பற்றி சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குநர்களுடன் தொடர்பாடப்பட்டது.

## 6. இலங்கை மத்திய வங்கிக்குத் தகவல்களின் சமர்ப்பிப்பு

சபையானது இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை ஸ்திரத்தன்மை திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் காப்புறுதித் தொழிற்றுறையின் செயற்பாடு தொடர்பான நிதித் தகவல்களைச் சமர்ப்பித்துள்ளது.

காப்புறுதித் தொழிற்றுறையின் செயற்பாடானது கட்டுப்பண வருமானம், இலாபத்தன்மை, திரவத்தன்மை போன்ற காலாண்டுத் திரட்டுகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டது.

## 7. தொழிற்றுறைக் கையேடு 2015

சபையானது 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதித் தொழிற்றுறையின் தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களைச் சேகரித்து, காப்புறுதித் தொழிற்றுறை மற்றும் நாட்டதாரர்களின் (அக்கறையுடையோர்) நன்மைக்காக “தொழிற்றுறைக் கையேடு” ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தக் கையேடு, மொத்தச் சொத்துகள், காப்புறுதி வியாபாரத்தின் வெவ்வேறு வகைகளுக்கான மொத்தக் கட்டுப்பணம், காப்புறுதிக் கம்பனிகளின் முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று அத்துடன் வைத்திருப்பு விகிதம், உரிமைக்கோரிக்கை விகிதம், இணைந்த விகிதம் போன்ற விகிதங்கள் போன்ற தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

## 8. காப்புறுதி ஆயுட்கால முறை கணிப்பீட்டுச் சான்றளிப்பு

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டிற்காகவும் 2016 மார்ச் 31 அல்லது 2016 யூன் 30 இல் உள்ளவாறான காலாண்டுத் திரட்டுகளுக்காக (கடன்தீர் எல்லை [இடர் அடிப்படையிலான மூலதனம்] விதிகள் - 2015 இன் கீழ்) நியமனம் செய்யப்பட்டுள்ள காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு வல்லுநரிடமிருந்து சான்றளிப்பு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு காப்புறுதி வழங்குநர்களை தேவைப்படுத்த சபை முடிவெடுத்துள்ளது. RBC விதிகளுடன் இணக்கத்தினை ஆரம்பிப்பதில் மூலதனப் போதுமை நிலைமைகளில் விழிப்புடன் இருப்பதற்கு காப்புறுதி வழங்குநர்களைத் தூண்டுவதன் மூலம் அவர்களுக்கு நன்மையளிக்கும் நோக்கிலேயே இது தேவைப்படுத்தப்பட்டது.

## 9. காப்புறுதி மேற்பார்வை இயலுமையைக் கட்டியெழுப்பல்

உலக வங்கியானது 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி முதல் செப்ரெம்பர் 2 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் “காப்புறுதி மேற்பார்வையின் இயலுமையைக் கட்டியெழுப்பல்” மீதான ஒரு குறுகிய கால செயற்றிட்டம் ஒன்றினை நடத்தியிருந்தது. RBC ஆட்சி மற்றும் RBS வேலைச்சட்டகம் ஆகியவற்றின் ஏற்பனவினைத் தொடர்ந்து, RBC மற்றும் RBS அறிக்கையிடல் செயன்முறைகளின் விளைதிறன்மிக்க நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை அலுவலர்களின் நடவடிக்கைகளையும் இயலுமையையும் மேம்படுத்தல் ஆகியவை தொடர்பில் சபைக்கு உதவுதல் என்பது இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. சபையானது செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக உலக வங்கி ஆலோசகர்களின் பங்குபற்றலுடன் மூன்று வேலைத்தல பரிசீலனைகளை நடத்தியிருந்ததுடன் RBC விதியின் நடைமுறைப்படுத்தல் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக தொழிற்றுறைச் செயற்பாட்டாளர்களுக்காக வேலைப்பட்டறை ஒன்றையும் நடாத்தியிருந்தது. இங்கு கலந்துரையாடப்பட்ட பிரதான பிரச்சினைகளில் மதிப்பீட்டு அடிப்படைகள், எதிர்க்கணிய ஒதுக்கங்கள், பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயம், இடர் கட்டணங்கள், தகைப்புச் சோதனை போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து உருவாகும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

## 10. உலக வங்கியின் தொழினுட்ப உதவிச் செயற்றிட்டம்

முன்மொழியப்பட்ட "இலங்கை நிதித் துறை நவீனப்படுத்தல்" செயற்றிட்டத்திற்கு இணங்க, உலக வங்கியின் அணி ஒன்று 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபையில் தயாரிப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தது. இப்பணிகளின் நோக்கமானது 'காப்புறுதி மேற்பார்வை இயலுமையைக் கட்டியெழுப்பல்' மீதான செயற்றிட்டத்தின் பகுதிகள் தொடர்பாக சபையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை முன்னெடுப்பதும் நடைமுறைப்படுத்தல் ஒழுங்குகள் மற்றும் செயற்றிட்ட வடிவமைப்பு போன்றவற்றுடன் தொடர்புடைய ஏனைய சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதும் ஆகும்.

### காப்புறுதித் தரகுக் கம்பனிகள்

#### 1. காலாண்டுத் திரட்டுகள், மாதாந்தத் திரட்டுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு

2010 பெப்ரவரி 25 ஆந் திகதிய 1642/16 (முதலாவது அட்டவணை) ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலின்படி, காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 45 நாட்களுக்குள் அவற்றின் காலாண்டுத் திரட்டுகளை சபையிடம் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளன.

பெரும்பாலான காப்புறுதித் தரகுக் கம்பனிகள் உரிய காலத்தில் அவற்றின் காலாண்டுத் திரட்டுகளைச் சபைக்குச் சமர்ப்பித்திருந்தன. சபையானது காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் நிதி நிலைமையினையும் செயலாற்றுகையினையும் மதிப்பீடு செய்வதற்காக அந்தக் காலாண்டுத் திரட்டுகளை மீளாய்வு செய்திருந்தது. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளிலிருந்தான விலகல்கள் திருத்தப்படும் பொருட்டு அது பற்றி சம்பந்தப்பட்ட கம்பனிகளுடன் தொடர்பாடப்பட்டது.

காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளை, நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்தது. சபையானது அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்திருந்தது. ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளிலிருந்தான விலகல்கள் திருத்தப்படும் பொருட்டு அது பற்றி சம்பந்தப்பட்ட காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

#### 2. கட்டுப்பணச் சேகரிப்புகளின் கண்காணிப்பு

சட்டப் பிரிவு 89 இன்படி, காப்புறுதித் தரகுக் கம்பனிகள் அவர்களால் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணத்தை அவை சேகரிக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டின் காலப்பகுதியில், காலாண்டுத் திரட்டுகளை மீளாய்வு செய்ததன் ஊடாகவும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தலப் பரிசீலனைகள் ஊடாகவும் சட்டப் பிரிவு 89 உடன் இணக்கமாகச் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது பற்றி சபையால் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டது. ஏதாவது இணக்கமின்மைகள் அவதானிக்கப்படின் அத்தகைய காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கு எதிராக சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

#### 3. வேலைத்தலப் பரிசீலனை

சபையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கமாகவுள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்காக காப்புறுதித் தரகுக் கம்பனிகளில் நிதியாண்டின் காலப்பகுதியில் எட்டு வேலைத்தலப் பரிசீலனைகள் நடத்தப்பட்டன. வேலைத்தலப் பரிசீலனையின்போது செய்யப்பட்ட அவதானிப்புகள் அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளுடன் சம்பந்தப்பட்ட காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டதுடன் தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் எந்தவொரு மீறுகைகளுக்காகவும் சபையினால் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

#### 4. பதிவுகளைப் புதுப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்காக தமது வருடாந்த உரிமங்களை (அனுமதிப் பத்திரங்களை) புதுப்பிப்பதற்காக காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. உரிமங்களைப் புதுப்பிப்பதற்கு முன் அவர்களது நிதி நிலையினை உறுதி செய்வதற்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டுத் திரட்டுகள் என்பன சபையால் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

# ஒழுங்குபடுத்தல் மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளைப் பதிவுசெய்தல்

ஆண்டின் காலப்பகுதியில் புதிய பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கிணங்க, பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குநர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் 29 ஆகவே காணப்பட்டது.

பின்னிணைப்பு I: சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள சகல காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்களையும் அவற்றால் முன்னெடுக்கப்பட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி வியாபாரத்தின் வகை / வகைகளையும் காட்டுகிறது.

### புதிய காப்புறுதித் தரகுக் கம்பனிகளைப் பதிவுசெய்தலும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகளது புதுப்பித்தலும்

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த காப்புறுதித் தரகர்களாக பதிவுசெய்வதற்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இவ்வாண்டில் சபையால் விலக்கிக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்வதற்கு 5 புதிய விண்ணப்பங்களைச் சபை பெற்றிருந்ததுடன் இவ்வாண்டின் காலப்பகுதியில் சபையால் 3 புதிய பதிவுகள் வழங்கப்பட்டன. மேலும், 2 பதிவுசெய்யப்பட்ட (பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்காக) காப்புறுதித் தரகர்கள், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்குப் பதிவுசெய்வதற்கான கோரிக்கையையும் விடுத்திருந்தனர்.

இவ்வாண்டில், 2017 ஆம் ஆண்டிற்கான பதிவு புதுப்பித்தலை எதிர்பார்த்து 55 காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் சபைக்குக் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், சட்டத்தில் கூறப்பட்டதன்படி, தேவையான தேவைப்பாடுகளை அவை நிறைவேற்றியிருந்த காரணத்தால் சகல கம்பனிகளுக்கும் 2017 ஆம் ஆண்டிற்காகப் பதிவுகள் புதுப்பித்து வழங்கப்பட்டன.

பின்னிணைப்பு II : சபையில் பதிவுசெய்யப்பட்ட சகல காப்புறுதித் தரகுக் கம்பனிகளினது பெயர்களும், அவற்றால் முன்னெடுக்கப்பட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி வியாபாரத்தின் வகை / வகைகளும் காட்டப்பட்டுள்ளன.

## அமுலாக்க நடவடிக்கை

### காப்புறுதிக் கம்பனிகள்

#### இடைநிறுத்தல்கள்

எறிவுசெய்யப்பட்ட RBC கணிப்பீடுகள் உண்மையான RBC கணிப்பீடுகளிலிருந்து பொருண்மைசார் வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவை RBC மூலதனப் போதுமை தேவைப்பாடுகளுடன் இணக்கமாக உள்ளன எனவும் தங்களுடைய காப்புறுதி ஆயுட்காலமுறை கணிப்பீட்டு வல்லுநர்களிடமிருந்தான எழுத்துமூல உறுதிப்படுத்தல் ஒன்றை வழங்குவதற்கு ஒரு காப்புறுதிக் கம்பனி தேவைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தேவையான கடன் தீர் எல்லைத் தொகையுடனான இணக்கத்தை நிரூபிப்பதற்கு அக்கம்பனி தவறியதால், 2016 யூலை 25 ஆந் திகதியிலிருந்து 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அந்தக் கம்பனி இடைநிறுத்தப்பட்டது.

சபையால் வகுத்தமைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தவறியமைக்காகவும் கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகள், தனிமைப்படுத்தல் தேவைப்பாடுகள் போன்றவற்றுடனான இணக்கத்தை நிரூபிப்பதற்குத் தவறியமைக்காகவும் 2016 அக்டோபர் 4 ஆந் திகதியில் இருந்து 2016 அக்டோபர் 25 ஆந் திகதி வரை இன்னுமொரு காப்புறுதிக் கம்பனியும் சபையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட இடைநிறுத்தமானது சபையால் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடனான இணக்கத்தை அடையும்வரை 2016 அக்டோபர் 26 இல் மேலும் நீடிக்கப்பட்டது. அதே சமயம், மேற்கூறப்பட்ட காப்புறுதிக் கம்பனி செலுத்த முடியாமல் இருக்கின்ற நேர்வு ஒன்றிற்கான ஏதாவது உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவினை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிப்பதாக தாய்க் கம்பனியால் பொறுப்பேற்புக் கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க, தற்போதிருக்கின்ற பொதுக் காப்புறுதிகளின் புதுப்பிப்பு மற்றும் ஏற்பிசைவுகளின் பொருட்டு மாத்திரம் இடைநிறுத்தத்தை விலக்கிக்கொள்வதற்குச் சபை தீர்மானித்தது. மேலும் மேற்கூறப்பட்ட பொறுப்பேற்றலுக்காக தாய்க் கம்பனி இன்னுமொரு சபைத் தீர்மானத்தையும் பொறுப்பேற்றல் ஒன்றினையும் சமர்ப்பித்திருந்தது. அதில் அவற்றின் பங்குகள் வெளிப்படுத்தப்படும்வரை காப்புறுதிக் கம்பனியால் செலுத்துதல்களைச் செய்ய முடியாமலிருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஏதாவது காப்புறுதி உரிமைக்கோரிக்கைக்கான கொடுப்பனவை தொடர்ச்சியாகச் செலுத்துவதற்கும் உத்தரவாதம் அளித்திருந்தது. அதற்கிணங்க, சபையானது 2017 சனவரி 9 ஆந் திகதி இடைநிறுத்தத்தினை விலக்கிக்கொண்டது.

2009 ஆம் ஆண்டில் செலிங்கோ டேக்புள் லிமிட்டெட் மீது

விதிக்கப்பட்ட இடைநிறுத்தம் தொடரப்பட்டது. செலிங்கோ டேக்புள் லிமிட்டெட்டின் உரிமைகோரிக்கையாளர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளின் மதிப்பீடு இவ்வாண்டின் காலப்பகுதியில் இறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும் செலிங்கோ டேக்புள் லிமிட்டெட்டிற்கு எதிராக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்குகள் காரணமாக உரிமைக்கோரிக்கைகளுக்கான தீர்ப்பனவுகளை முடிக்க முடியவில்லை.

சட்டப் பிரிவு 18(1) இன் அடிப்படையில், காப்புறுதி வியாபாரத்தை முற்றிலுமாகவோ அல்லது காப்புறுதி வியாபாரத்தின் குறிப்பிட்ட வகை அல்லது உப - வகை ஒன்றின் பொருட்டோ, மற்றவற்றுக்கிடையே சபையினால் கணிப்பிடப்பட்டதான அத்தகைய தொகையின் கடன்தீர் எல்லையைப் பேணத் தவறியமைக்காக மற்றும் சட்டத்தின் ஏதாவது ஏற்பாடு, அல்லது அவற்றின் கீழ் செய்யப்பட்ட ஏதாவது ஒழுங்குவிதி அல்லது விதி, அல்லது சட்டத்தின் கீழ் சபையினால் விதிக்கப்பட்ட ஏதாவது நிபந்தனை அல்லது தரப்பட்ட ஏதாவது வழிகாட்டல் அல்லது செய்யப்பட்ட கணிப்பீட்டினை மீறியிருப்பின் சபையானது காப்புறுதி வழங்குநர் ஒருவரின் பதிவினை இரத்துச் செய்யலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

**எச்சரிக்கைகள்**

(1) 2015 மார்ச் 31, யூன் 30 மற்றும் செப்ரெம்பர் 30 ஆகிய திகதிகளில் முடிவடைந்த காலாண்டுகளுக்காக இலங்கை காப்புறுதி சபைக்குச் (IBSL) சமர்ப்பிக்கப்பட்ட அவர்களது காலாண்டுத் திரட்டுகளில் பிழையான மற்றும் துல்லியமற்ற தகவல்களை வழங்கியமைக்காக காப்புறுதிக் கம்பனி ஒன்றின் சபை உறுப்பினர்களை இலங்கை காப்புறுதி சபை எச்சரித்திருக்கிறது.

(2) சட்டப் பிரிவு 57 இன் அடிப்படையில், சபையானது 2015 இல் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்கு வழிகாட்டல் ஒன்றை வழங்கியிருந்தது. அதாவது ஒவ்வொரு மாதமும் முடிவடைந்ததிலிருந்து 15 நாட்களுக்குள் மாதாந்தத் திரட்டுகளை வழங்குமாறு தேவைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியானது 2016 ஏப்ரல் மாதத்திற்கான திரட்டினை சமர்ப்பிப்பதற்குத் தவறியிருந்தது. எனவே சபையானது சட்ட ஏற்பாடுகளை மீறியமைக்காக, குறிப்பாக முன்னர் வழங்கப்பட்ட வழிகாட்டலை மீறியமைக்காக அக்கம்பனியை எச்சரித்திருக்கிறது.

## அமுல்படுத்தல் நடவடிக்கை

### காப்புறுதித் தரகுக் கம்பனிகள்

**இடைநிறுத்தல்கள்**

- காலாண்டுத் திரட்டுகளைச் சமர்ப்பிக்காத காரணத்தால் சட்டப் பிரிவு 84(1) இன் அடிப்படையில், ஒரு காப்புறுதித் தரகுக் கம்பனியின் பதிவானது 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி தொடக்கம் 2016 அக்டோபர் 05 ஆந் திகதி வரை இடைநிறுத்தப்பட்டது. கூறப்பட்ட பதிவானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பிக்காத காரணத்தால் சட்டப் பிரிவு 84(1) இன் அடிப்படையில் நவெம்பர் மாதக் காலப் பகுதியில் மீளவும் இடைநிறுத்தப்பட்டது. கம்பனி தொடர்ச்சியாக கணக்காய்வு செய்யப்பட்ட அதன் நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுவதன் காரணமாக சபையானது 2016 நவெம்பர் 24 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதன் பதிவினை இரத்துச் செய்தது.

  சட்டப் பிரிவு 84(1) இன் அடிப்படையில், அதன் கீழ் நிரற்படுத்தப்பட்டுள்ள காரணங்களுக்காக தரகர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதிவினை சபையானது இடைநிறுத்தலாம் அல்லது இரத்துச் செய்யலாம்.

- ஒரு காப்புறுதித் தரகுக் கம்பனியின் பதிவானது சட்டப் பிரிவு 84(1) இன் அடிப்படையில் காலாண்டுத் திரட்டுகளைச் சமர்ப்பிக்காமை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. கம்பனி அதன் காலாண்டுத் திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தொடர்ச்சியாகத் தவறியிருந்ததால் சபையானது 2016 யூன் 16 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அக்கம்பனியின் பதிவினை இரத்துச் செய்தது.

- இன்னும் இரண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகள், காலாண்டுத் திரட்டுகளைச் சமர்ப்பிக்காமை காரணமாக சட்டப் பிரிவு 84(1) இன் அடிப்படையில் 2016 அக்டோபர் 04 ஆந் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டதுடன் உரிய திரட்டுகளை அக்கம்பனிகள் சமர்ப்பித்தபோது இடைநிறுத்தல்கள் விலக்கிக்கொள்ளப்பட்டன.

**எச்சரிக்கைகள்**

- காப்புறுதித் தரகுக் கம்பனியொன்று சட்டப் பிரிவு 86(1) உடன் இணக்காததன் காரணமாக சபையால் அக்கம்பனிக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டது.

  2010 பெப்பரவரி 25 ஆந் திகதிய வர்த்தமான அறிவித்தல் இல. 1642/16 இல் பிரசுரிக்கப்பட்ட விதி 7 உடன்

சேர்த்து வாசிக்கப்படுகின்ற சட்டப் பிரிவு 86(1) ஆனது வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டால் அன்றி, தரகுக் கம்பனியின் முதல் தர அலுவலர் மற்றும் ஒரு பணிப்பாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட காலாண்டுத் திரட்டுகளை ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்துகிறது.

- இன்னுமொரு எச்சரிக்கைக் கடிதம் சட்டப் பிரிவு 82(1)(e) இனை மீறியமைக்காக காப்புறுதித் தரகுக் கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்டது.

  ஒரு கம்பனி காப்புறுதித் தரகர் ஒருவராக பதிவுசெய்ய வேண்டுமாயின், அக்கம்பனி வேறு ஏதேனும் வியாபாரங்களில் ஈடுபடக்கூடாது என்பதுடன் அது காப்புறுதித் தரகு வியாபாரத்தை முன்னெடுக்கின்ற தனி ஒரு நோக்கத்திற்காக கூட்டிணைக்கப்படுவதற்கு சட்டப் பிரிவு 82(1)(e) தேவைப்படுத்துகிறது.

## ஒழுங்குபடுத்தல்/ஆலோசனை நடவடிக்கைகள்

1. மறு அறிவித்தல் வழங்கப்படும்வரை, காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்வதற்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதை 2012 ஏப்ரல் 27 ஆந் திகதி முதல் சபை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. காப்புறுதித் தரகர்களாக பதிவுசெய்வதை எதிர்பார்த்து அதிக எண்ணிக்கையிலான கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதைக் கவனத்திற்கொண்டு இவ்வாண்டின் காலப்பகுதியில் அந்தத் தற்காலிக நிறுத்தத்தை நீக்கிக்கொள்வதற்குச் சபை தீர்மானித்தது.

2. சபையானது 2015 ஆம் ஆண்டில் காப்புறுதிக் கம்பனி ஒன்றுக்கு குறிப்பிட்ட வழிகாட்டல்களை வழங்கியிருந்தது. அதாவது, சபையின் முன்கூட்டிய எழுத்துமூல ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளாது, ஏதாவது இணை நிறுவனம், துணைக் கம்பனி அல்லது தாய்க் கம்பனி அல்லது இதன் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய குழுமக் கம்பனி ஒன்றின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட ஏதாவது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடுவதிலிருந்து விலகியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அறிவுறுத்தப்பட்ட வழிகாட்டல்களில் ஒன்றுடன் இணக்கமாவதற்கு கால நீடிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேற்சொல்லப்பட்ட காப்புறுதிக் கம்பனி சபையின் ஒப்புதலை நாடியிருந்தது. சபையானது அதன் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு, இறுதி நீடிப்பினை வழங்கியது.

3. 2002 செப்ரெம்பர் 23 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை இல. 1255/3 இன் விதி 2(c)(ii) மற்றும் 2010 அக்டோபர் 5 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 1674/4 இனால் செய்யப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் முன் - ஆட்சேர்ப்புப் சோதனைக்குத் தோற்றுவதற்காக எதிர்கால காப்புறுதி முகவர்களால் செய்யப்பட்ட குறிப்பிட்டளவான கோரிக்கைகளுக்கு அவர்களுடைய தகைமைகளின் அடிப்படையில் சபை ஒப்புதல் வழங்கியிருந்தது.

   காப்புறுதி முகவர் தகைமை விதிகளில் (2002 செப்ரெம்பர் 23 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை இல. 1255/3 மற்றும் 2010 அக்டோபர் 5 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 1674/4 இனால் செய்யப்பட்ட திருத்தங்கள்) விதி 2 (c) (i) இன் அடிப்படையில், காப்புறுதி முகவர் ஒருவராகப் பதிவுசெய்வதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளில் ஒன்று, கணிதம் அல்லது எண்கணிதத்தில் ஒரு சாதாரண சித்தி மற்றும் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் ஒன்றில் ஒரு சாதாரண சித்தி ஆகியவற்றுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதாகும். எவ்வாறாயினும், விதி 2(c)(ii) இன் அடிப்படையில், விதி 2(c)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்குச் சமனான அல்லது அதனைவிட உயர்ந்த தகைமையில் ஏதாவது வேறு தொடர்புபட்ட பயிற்சித் தகைமையை நபர் ஒருவர் பெற்றிருப்பின், அத்தகைமை வகை ரீதியான அடிப்படையில், காப்புறுதி முகவர் தகைமைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டத்திற்குச் சமனான ஒன்றாக சபையினால் கருதப்படலாம்.

4. காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு "பிரஞ்சு ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகத்தின் இணை உறுப்பினர் (FIAF)" மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் இடைநேர்வு (சேதார) ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டுச் சங்கத்தின் இணை உறுப்பினர் (CAS)" தகைமைகள் சபையால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. FIAF மற்றும் CAS என்பன முன்னைய சட்டப் பிரிவு 114 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட ஒப்புதல்கள் இரண்டு காப்புறுதி வழங்குநர்களுக்கு அவர்களுடைய

காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு ஆலோசகர்களின் முன்மொழியப்பட்ட புதிய நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்கியது.

**சட்டப்பிரிவு 114(1) இன் படி, "ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு வல்லுநர்" என்பது -**

(a) இங்கிலாந்தின் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகத்தின் அல்லது ஸ்கொட்லாந்தின் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு பீடத்தின் ஒரு இணை உறுப்பினர் அல்லது சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்சார் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகத்தின் ஒரு இணை உறுப்பினர் அல்லது

(b) சம்பந்தப்பட்ட ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு விடயங்களில் 10 வருடங்களுக்குக் குறையாத பின் தகைமை அனுபவங்களுடன் பந்தி (a) இல் குறிப்பிடப்பட்ட ஏதாவது தொழில்சார் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு நிறுவகங்களின் ஓர் இணையாளர்.

5. இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால் (SLII) பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சுயமாகவே கூட்டிணைத்தல் செய்முறையில் இருந்ததன் காரணமாக, "காப்புறுதி" என்ற சொல்லை அதன் பெயரின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துவதற்காக இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால் (SLII) செய்யப்பட்ட கோரிக்கையை சபை ஏற்றுக்கொண்டது.

சட்டப் பிரிவு 96 இன் அடிப்படையில், காப்புறுதி வழங்குநராக அல்லது காப்புறுதித் தரகராக சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவர் அல்லது காப்புறுதி வழங்குநர் அல்லது காப்புறுதித் தரகர் போன்று காப்புறுதி முகவர் ஒருவர் அல்லாத எந்தவொரு நபரும் சபையின் எழுத்துமூல ஒப்புதல் இன்றி தனது பெயரின் ஒரு பகுதியாகவோ, தலைப்பு அல்லது விளக்கமாகவோ, "காப்புறுதி" என்ற சொல்லை அல்லது அதன் ஏதாவது சொல்லிலக்கணத்தை அல்லது ஏதாவது மொழியிலுள்ள அதேபோன்ற வேறு ஏதாவது சொல்லைப் பயன்படுத்துவதோ, அவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவாறு அந்தப் பெயரில், தலைப்பில் அல்லது விளக்கத்தில் அத்தகைய நபர் காப்புறுதி வியாபாரத்தை முன்னெடுப்பதோ, அல்லது ஏதாவது விலைப்பட்டியல் தலைப்புகளில் அறிவித்தல் அல்லது விளம்பரங்களில் அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஏதாவது பிரதிநிதித்துவத்தைச் செய்வதோ கூடாது

'காப்புறுதி' என்ற நாமத்தைப் பயன்படுத்துதல் அல்லது அதன் ஏதாவது சொல்லிலக்கணத்தைப் பயன்படுத்துதல், அல்லது வேறு ஏதாவது மொழியிலுள்ள இதேபோன்ற சொல்லை அதன் பெயரின் பகுதியாக, தலைப்பாக அல்லது அதன் நடவடிக்கைகளின் விளக்கமாகப் பயன்படுத்துவதிலிருந்து காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்களின் ஒரு சங்கத்தினை மேலுள்ள பிரிவுகள் தடைசெய்ய மாட்டாது எனத் தரப்பட்டுள்ளது.

6. சட்டத்தின் விதி 8(2)(a) மற்றும் பிரிவு 32 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 94 இன் பிரகாரம், பட்டயக் காப்புறுதி நிறுவனத்தினால் (CII) அளிக்கப்பட்ட இணை உறுப்பினர் தகைமைக்குச் சமனான தகைமையொன்றாக இருக்கின்ற இந்திய காப்புறுதி நிறுவகத்தால் (CII) அளிக்கப்பட்ட இணை மற்றும் துணை உறுப்பினர் தகைமையினை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியக் காப்புறுதி நிறுவகம் சபையைக் கோரியிருந்தது.

இந்திய காப்புறுதி நிறுவகத்தால் அளிக்கப்பட்ட இணை மற்றும் துணைத் தகைமைக்காக வழங்கப்பட்ட நன்மதிப்பு ஒப்பீட்டுரீதியில் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தினால் அளிக்கப்பட்ட இணை மற்றும் துணை உறுப்பினர் தகைமைக்குச் சமனாக இந்திய காப்புறுதி நிறுவகத்தால் அளிக்கப்பட்ட தகைமையைக் கருத முடியாது என சபை தீர்மானித்திருந்தது.

7. காப்புறுதிக் கம்பனியொன்று அதன் இரு துணைக் கம்பனிகளில் ஒவ்வொன்றும் 250 மில்லியன் பெறுமதியான முதலீடுகளைச் செய்வதற்கு சபையின் ஒப்புதலை நாடியிருந்தது. அத்துடன் கூறப்பட்ட முதலீடுகள் பங்குதாரர்களின் நிதியத்திலிருந்து செய்யப்படும் எனவும் கூறியிருந்தது.

சட்டப் பிரிவு 57 இன் கீழ் சபையால் முன்னர் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம், விண்ணப்பதாரி வைத்திருக்கும் கம்பனிக்கு உரிமையாண்மை, கடன் சாதனம் போன்றவற்றின் வடிவில், அதன் குழுமக் கம்பனிகளில் எந்தவொரு முதலீட்டினையும் செய்வதற்கு அனுமதிக்கப் படவில்லை.

முன்னைய சந்தர்ப்பம் ஒன்றில், கூட்டுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கு அவை பிரிக்கப்படுவதற்கு முன் தேவையான மாறுதல்களைச்

செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு சபை தீர்மானித்திருந்தது. இவ்வழிகாட்டல் புதிய காப்புறுதிக் கம்பனிகளுக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும். எவ்வாறாயினும், விண்ணப்பதாரி பேணுகின்ற மூலதனப் போதுமை விகிதம் (CAR) மற்றும் மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் (TAC) ஆகியன தேவைப்பாட்டு எல்லைக்கும் மேலாக நல்ல நிலையில் இருப்பதையும் அதேபோன்று தொடர்புடைய ஏனைய விபரங்களும் நல்ல நிலையில் இருப்பதையும் விசேடமாகக் கருத்திற்கொண்டு சபையானது மேற்கூறப்பட்ட முதலீட்டிற்கு தனது ஒப்புதலை வழங்கியது.

8. சட்டப் பிரிவு 102 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட சபையின் அவதானிப்புகளை வழங்குமாறு இரண்டு பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தன. இக்கோரிக்கையானது சொல்லப்பட்ட இரு கம்பனிகளினதும் இணைப்புக்கான மாவட்ட நீதிமன்றின் ஒப்புதலைப் பெறுவதன் பொருட்டு அந்நீதிமன்றத்தின் பார்வைக்காகச் சமர்ப்பிப்பதற்கென விடுக்கப்பட்டிருந்தது. சபையானது இணைப்புக்கான அதன் அவதானிப்புகளை வழங்கியது.

    சட்டப் பிரிவு 102 இன் படி, காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு இடமாற்றங்கள் மற்றும் இணைப்புகள் தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களும் மாவட்ட நீதிமன்றம் ஒன்றினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஒப்புதலுக்காக விண்ணப்பிக்கும்போது, அத்தகைய இடமாற்றம் மற்றும் இணைப்பு பற்றிய சபையின் அவதானிப்புகளின் பிரதி ஒன்றும் நீதிமன்றத்தின் பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. இலங்கையிலுள்ள பல்வேறு காப்புறுதிக் கம்பனிகளிலிருந்தும் அக்கம்பனிகளின் சம்மதத்துடன் தரவுகளை சேகரிப்பதன் மூலம் 'einsurance.lk' என்ற களப் பெயரின் (domain name) கீழ், 'காப்புறுதித் தகவல் மையம்' ஒன்றினை உருவாக்க எண்ணியுள்ளதாக சபைக்கு அறிவித்திருந்ததுடன் அதன் பெயரின் ஒரு பகுதியாக "காப்புறுதி" என்ற நாமத்தை பயன்படுத்துவதற்கு சட்டப் பிரிவு 96 இன் கீழ் சபையின் ஒப்புதலையும் நாடியிருந்தது.

    விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் அவற்றின் மீதான IASL, SLIBA இலிருந்து பெற்றுக்கொண்ட மேலதிக நோக்கினையும் ஆராய்ந்து பார்த்ததன் பின்னர், முன்மொழிவு செய்யப்பட்ட இணையத்தளம் / வியாபார மாதிரி காப்புறுதித் தரகர் ஒருவராகவோ அல்லது காப்புறுதி முகவர் ஒருவராகவோ கருதப்பட முடியாதது என்பதால் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்வதில்லை எனச் சபை தீர்மானித்தது.

10. மாலைதீவுக் காப்புறுதிக் கம்பனி ஒன்றினை மீள்காப்புறுதி வழங்குநர் ஒருவராகப் பட்டியலிடுவதற்கான கோரிக்கை ஒன்றினை காப்புறுதிக் கம்பனியொன்று செய்திருந்தது. எவ்வாறாயினும், சட்டப் பிரிவு 31(1) இன் கீழ், காப்புறுதி வழங்குநர்களால் இணங்கப்பட வேண்டிய விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட தரமிடல் ஒன்றினை முன்மொழியப்பட்ட வெளிநாட்டு காப்புறுதி வழங்குநர் கொண்டிருக்காத காரணத்தால் இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு சபையானது அவர்களுடைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளவில்லை.

11. திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளின் பிரகாரம், பணிப்பாளர்களை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தொகை விண்ணப்பங்களுக்கு சபை ஒப்புதல் வழங்கியிருந்தது.

12. சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், முதன்மை அதிகாரிகளை நியமிப்பதற்கான ஒப்புதலை எதிர்பார்த்து காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தொகை விண்ணப்பங்களுக்கு சபை ஒப்புதல் வழங்கியிருந்தது.


13. இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் பிரகாரம் மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளுக்கு சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

# விசாரணை மீளாய்வு

சபையானது காப்புறுதிதாரர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கின்ற அதன் ஒட்டுமொத்த நோக்கத்தின் கீழ், உரிமைக்கோரிக்கை செய்பவர்களால் சபைக்குத் தெரிவிக்கப்படுகின்ற உரிமைக்கோரிக்கைத் தீர்ப்பனவுடன் தொடர்புடைய, காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் உரிமைக்கோரிக்கை செய்பவர்கள் ஆகியோருக்கு இடையிலான பிணக்குகளை விசாரணை செய்து தீர்ப்பதற்கான அதிகாரத்தைச் சபை கொண்டுள்ளது. அத்துடன் சபையானது ஏதாவது காப்புறுதி வழங்குநர், தரகர் அல்லது முகவரின் சந்தை நடத்தை தொடர்பாக எழுகின்ற முறைப்பாடுகளையும் விசாரணை செய்கிறது.

ஒரு பிணக்கு அல்லது ஒரு முறைப்பாடு சபைக்கு பாரப்படுத்தப்படும்போது (ஒரு காப்புறுதி வழங்குநர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக) யாருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டதோ அத்தரப்பினருக்கு அவர்களது நியாயங்களைச் சொல்வதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படும். தேவையாயின், மேலதிக தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் பிணக்கிற்கான தரப்புகளிடமிருந்து பெறப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக தேவைப்படுமாயின், முடிவொன்றை எடுப்பதில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரசபைகளுடனும் சுயாதீன நிபுணர்களுடனும் ஆலோசனை செய்கிறது.

**விளக்கப்படம் 2**
**2016 ஆம் ஆண்டு காலப்பகுதிப் பரிந்துரைகளின் மாதாந்தப் பகுப்பாய்வு**





## 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் மொத்தப் பரிந்துரைகள்

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில், 353 புதிய விடயங்கள் சபைக்குப் பாரப்படுத்தப்பட்டன. மொத்தமாக 345 விடயங்கள் இவ்வாண்டில் தீர்க்கப்பட்டன அல்லது முடிவுசெய்யப்பட்டன. தீர்க்கப்பட்ட விடயங்களில் 72 உரிமைக்கோரிக்கைகள் சபையின் தலையீட்டின் மூலம் காப்புறுதி வழங்குநர்களால் அளிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கான மொத்தப் பெறுமதி ஏறத்தாழ 21.5 மில்லியன் ரூபாய்கள் ஆகும்.


கடந்த ஐந்து (5) வருட காலப்பகுதியில், மொத்தமாக 1475 விடயங்கள் சபைக்குப் பாரப்படுத்தப் பட்டிருந்தன. விளக்கப்படம் 1 இன்படி, ஆகக்கூடிய எண்ணிக்கையிலான பரிந்துரைகள் மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியிலேயே பதிவாகியிருக்கின்றன. சபையினால் நடத்தப்பட்ட பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களின் பயனாக பொதுமக்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்ற விழிப்புணர்வு இவ்வாண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்த பரிந்துரைகளின் எண்ணிக்கைக்கான காரணமாக இருக்கலாம்.

விளக்கப்படம் 2 ஆனது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபைக்குப் பாரமளிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கையினது மாதாந்த அடிப்படையிலான தொகுப்பினைக் காட்டுகிறது.

**விளக்கப்படம் 1**
**கடந்த ஐந்து (5) வருட காலப்பகுதியின் மொத்த வருடாந்தப் பரிந்துரைகள்**



**விளக்கப்படம் 3**
**2016 ஆம் ஆண்டில் பாரப்படுத்தப்பட்ட மொத்த விடயங்களின் வகையீடு**




ஆகக்கூடிய எண்ணிக்கையிலான பரிந்துரைகள் (36) நவெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த அதே நேரம் ஏப்ரல் மாதத்தில் ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான (17) பரிந்துரைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் சராசரியாக மாதமொன்றுக்கு 30 விடயங்கள் சபைக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்றன. சனவரி, பெப்ரவரி, யூன், அக்டோபர், நவெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்கள் சராசரிக்கும் மேற்பட்ட பரிந்துரைகளைப் பதிவுசெய்திருக்கின்றன.

2016 ஆம் ஆண்டில் பாரப்படுத்தப்பட்ட மொத்த விடயங்களின் கூட்டமைவினை விளக்கப்படம் 3 தருகிறது. மீளாய்வு ஆண்டின் பெரும்பாலான பரிந்துரைகள், அதாவது 229 (65%) பரிந்துரைகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புபட்டதாகவும் 93 (26%) பரிந்துரைகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுகின்றன.

மீதி 31 (9%) பரிந்துரைகள் பொதுவானதாகக் காணப்பட்டதுடன் இவற்றை வியாபாரத்தின் குறிப்பிட்ட வரிசையில் வகைப்படுத்த முடியாதிருக்கிறது. மொத்தப் பரிந்துரைகளின் கூட்டமைவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 இல் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தைக் கொண்டிருக்கவில்லை.

## நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகள்

அட்டவணை 1 ஆனது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பில் பாரப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரச்சினை - வாரியான பகுப்பாய்வைக் காட்டுகிறது.

அட்டவணை 1 இல் காட்டப்பட்டதைப் போன்று, நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக பாரப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளில் அதிகமானவை ஏற்பனவின்மை அல்லது பொறுப்பின் மறுதலிப்பு சம்பந்தப்பட்டவையாக இருந்தது. சபைக்குப் பாரப்படுத்தப்பட்ட பிணக்குகளின்படி, பொறுப்பு மறுதலிப்புக்கான பிரதான காரணம் காப்புறுதி தொடங்கப்பட்டபோது அல்லது காப்புறுதி புதுப்பிக்கப்பட்டபோது முக்கிய விடயங்கள் வெளிப்படுத்தப்படாமை அல்லது பிறழ்கூற்றுகள் காணப்பட்டிருந்தமை ஆகும்.

காப்புறுதி ஒப்பந்தங்கள் இயலுமான உச்சளவு நம்பிக்கையில் சட்ட விதிமுறைகளால் ஆளுகை செய்யப்படுகின்றன. ஒப்பந்தம் ஒன்றினுள் நுழைவதற்கான தீர்மானத்துடன் தொடர்புபட்ட முக்கிய விடயங்கள் மற்றும் விதிமுறைகள் பற்றி காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு தரப்பும் (அதாவது காப்புறுதி வழங்குநரும் காப்புறுதிதாரரும்) மற்றைய தரப்புக்கு வெளிப்படுத்த வேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நீண்ட கால காப்புறுதி ஒப்பந்தங்களில், முன்மொழிவு செய்பவர், காப்புறுதி செய்பவரால் தேவைப்படுத்தப்படும் சகல தகவல்களையும் வழங்குவதற்கும் அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையாகவும் துல்லியமாக இருப்பதை உறுதிசெய்வதில் நியாயமான கவனத்தைச் செலுத்துவதற்குமான கடமையைக் கொண்டிருக்கிறார். காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும்போது வெளிப்படுத்துகை பற்றிய மேற்கூறப்பட்ட கடமை தொடர்பில் பொதுமக்கள் மத்தியில்

அட்டவணை 1
நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகள் : பிரச்சினை வாரியாக

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| உரிமைக்கோரிக்கை மறுதலிப்பு | 32 | 34.40 |
| அளிக்கப்பட்ட நன்மைகள் தொடர்பில் உடன்பாடின்மை | 23 | 24.73 |
| இரத்துச்செய்வதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான கோரிக்கை | 20 | 21.50 |
| ஏனையவை | 18 | 19.35 |
| மொத்தம் | 93 | 100.00 |

விழிப்புணர்வு காணப்படவில்லை என்பது சபையினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின்போது பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பெறப்பட்ட பின்னூட்டங்களின் உள்ளடக்கங்களிலிருந்து அவதானிக்கப்பட்டிருக்கிறது. எனவே தொழிற்றுறையைக் கருத்திற்கொண்டு, விற்பனை மையங்களில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல் ஊடாகவும், வழங்கப்படும் தகவல்களின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமும் இப்பிரச்சினைகளைச் சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உரிமைக்கோரிக்கை மறுதலிப்பு தொடர்பில், குறிப்பிட்ட வெளிப்படுத்துகை செய்யப்படாமை அல்லது பிறழ்கூற்றுகள் வழங்கப்பட்டிருந்தமையானது மோசடியாகவா அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பது எண்பிக்கப்படும் வேளையில் சபை தலையிட்டு, உரிமைக் கோரிக்கை செய்தவர்களுக்கு உதவ முடியும்.

உரிய திகதிக்கு முன் கட்டுப்பணம் செலுத்தத் தவறியமை காரணமாக உரிமைக்கோரிக்கை செய்யப்பட்ட நேரத்தில் காப்புறுதி காலங்கடந்திருந்ததன் காரணமாகவும் உரிமைக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. காப்புறுதிப் பத்திரத்தில் காப்புறுதிக் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டிய காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே குறிப்பிட்ட கால எல்லையினுள் தாம் கட்டுப்பணம் செலுத்துவதை உறுதிப்படுத்திக்கொள்வதை ஒப்பந்தரீதியான கடமையாக காப்புறுதிதாரர்கள் கொண்டிருக்கின்றனர். கட்டுப்பணமாகச் செலுத்தப்பட்ட ஏதாவது பணத்தொகையைப் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டினை வழங்க, காப்புறுதி வழங்குநர்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தப் பற்றுச்சீட்டு மாத்திரமே ஏதாவது பிணக்குகள் தொடர்பில் காப்புறுதிதாரர்களால் சமர்ப்பிக்கப்படக்கூடிய ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாகும். சபைக்குப் பாரப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில், கட்டுப்பணம் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டிருந்தால் மாத்திரமே சபையால் உதவியளிக்க முடியும்.

நன்மைகளாக அளிக்கப்பட்ட பெறுமதியுடன் உடன்படாமைக்கான பிரதான காரணமாக, காப்புறுதி ஒப்பந்த வாசகங்களை விளங்கிக்கொள்ளாமையும் காப்புறுதி வழங்குநர்களால் வழங்கப்பட்ட போதியதற்ற விளக்கங்களும் விபரிப்புகளும் காணப்பட்டிருந்தன.

உடன்பாடின்மைக்குத் தீர்வு காண்பதன் பொருட்டு, நேரடியாக அல்லது சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குநரின் ஊடாக உரிமைக்கோரிக்கை செய்தவருக்குத் தேவையான விளக்கங்கள் வழங்கப்பட்டன. அளிக்கப்பட்ட நன்மைகள் காப்புறுதி நிபந்தனைகளுக்கேற்பக் காணப்படாமை வெளிப்படுத்தப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்கள் அல்லது கணிப்பீட்டு அடிப்படை வெளிப்படுத்தப்படாதிருந்த ஒரு சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், உரிமைக்கோரிக்கையாளரின் நன்மை கருதி, தாங்கள் வழங்குகின்ற நன்மைகளை மீளாய்வு செய்யுமாறு சபையினால் காப்புறுதி வழங்குநர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

சில காப்புறுதிதாரர்கள் பிரதானமாக தவறான கருத்துக்கள் மற்றும் நிதிரீதியான கஷ்டங்கள் போன்றவை காரணமாக காப்புறுதிக் காலப்பகுதியில், காப்புறுதியை இரத்துச் செய்யுமாறும் கட்டுப்பணங்களை மீள வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். எவ்வாறாயினும், நீண்ட கால காப்புறுதிகளைப் பெற்ற காப்புறுதிதாரர்களுக்கு, அவர்களுக்கு வழங்கப்பட்ட தணிப்புக் காலப் பகுதியினுள் (அதாவது காப்புறுதி ஆவணங்களைப் பெற்றதிலிருந்து 21 நாட்களுக்குள்) காப்புறுதியை இரத்துச்செய்தாலன்றி, கட்டுப்பணங்களாகச் செலுத்தப்பட்ட தொகைகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கான உரித்துக் கிடையாது. ஆயினும் விதிவிலக்கான சில சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அதாவது காப்புறுதிதாரர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற துன்பங்களை கருத்திற்கொண்டு நிவாரணம் ஒன்றை வழங்குவதற்கு காப்புறுதி வழங்குநர் உடன்பட்டால், சபையானது அக்கோரிக்கை தொடர்பில் தலையீடு செய்யாது.

மேலுள்ளவை தொடர்பில் பாரமளிக்கப்பட்ட பிணக்குகளுக்கான வழிமுறையை அடையாளம் கண்டதன் மீது, விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (அறிவு இடைவெளியைச் சுருக்குதல்) மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் தலையீடுகள் (காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் இடையீட்டாளர்களின் சந்தை வழிகாட்டல் நடவடிக்கைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான) ஆகியவற்றின் ஊடாக அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

## பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகள்

பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பில் சபைக்குப் பாரப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரச்சினை வாரியான ஒரு பகுப்பாய்வினை அட்டவணை 2 தருகிறது.

உரிமைக்கோரிக்கைகளின் மறுதலிப்புக்கான பிரதான காரணங்களாக இருப்பவை உரிமைக் கோரிக்கையுடன் தொடர்புடைய விடயங்களின் பிறழ்கூற்று மற்றும் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அல்லது உத்தரவாதங்களின்

அட்டவணை 2

பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான விடயங்கள் : பிரச்சினை வாரியாக

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| உரிமைக்கோரிக்கை மறுதலிப்பு | 146 | 63.75 |
| அளிக்கப்பட்ட நன்மைகள் தொடர்பில் உடன்பாடின்மை | 45 | 19.66 |
| உரிமைக்கோரிக்கையை தீர்ப்பனவு செய்வதில் தாமதம் | 13 | 5.67 |
| ஏனையவை | 25 | 10.92 |
| மொத்தம் | 229 | 100.00 |

மீறுகை என்பனவாகும். பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் பாரப்படுத்தப்பட்ட விடயங்களில் பெரும்பாலானவை, மொத்தக் கட்டுப்பணத்தில் அவை கொண்டுள்ள பங்குகளின் சதவீதத்தைப் போன்று மோட்டார் காப்புறுதி வகையுடன் தொடர்புபட்டவையாக இருந்தன. மோட்டார் உரிமைக்கோரிக்கைகளின் மறுதலிப்புக்கான பிரதான காரணங்களாக இருப்பவை செலுத்தப்பட வேண்டிய கால எல்லையினுள் கட்டுப்பணம் செலுத்தப்படாமை காரணமாக பிந்தைய உரிமைக்கோரிக்கை அறிவிப்பு, செலுத்துநர் பதிலீடு (driver substitution) மற்றும் காப்புறுதியானது நடைமுறையில் இல்லாதிருத்தல் என்பனவாகும். உரிமைக்கோரிக்கை மறுதலிப்புகள் தொடர்பில், உரிமைக்கோரிக்கையுடன் தொடர்புடைய விடயங்களில் மோசடியும் வேண்டுமென்றே செய்தலும் அல்லது பொறுப்பற்ற பிறழ்கூற்றுகள் என்பன காணப்படாதிருக்கும்போது மட்டுமே சபையானது உரிமைக்கோரிக்கையாளர்களுக்கு உதவும்.

காப்புறுதி வழங்குநர்கள் அவர்களது தீர்மானங்களை எழுத்துமூலம் அறிவிக்கும்போது காணப்படுகின்ற தெளிவின்மை மற்றும் விபரங்கள் போதியளவில் இருக்காமை என்பனவே அளிக்கப்பட்ட நன்மைகள் தொடர்பில் உடன்பாடு ஏற்பட்டிருக்காமைக்கான பிரதான காரணங்களாக இருந்தன. சம்பந்தப்பட்ட பிணக்குகளில் பலவற்றை, காப்புறுதி வழங்குநர்கள் மூலம் அவர்களது தீர்மானங்கள் தொடர்பில் தேவையான விளக்கங்களை வழங்க வசதிசெய்ததன் ஊடாகத் தீர்க்கக்கூடியதாக இருந்தது. உரிமைக் கோரிக்கைகளைத் தீர்ப்பனவு செய்வதில் காணப்பட்ட தாமதத்துடன் தொடர்புபட்ட சகல பிணக்குகளும் சபையின் தலையீடு காரணமாக தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## ஏனைய பரிந்துரைகள்

மீளாய்வு ஆண்டின்போது சபைக்குப் பாரமளிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் (31), பிரதானமாக நியாயமற்ற முடிவுறுத்தல் மற்றும் முகவர்களின் கல்வித் தகைமைகள் பற்றியதாக இருந்தன. சட்டத்தின் கீழ், சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## வியாபார ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல்

1. **காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்கள் மூலம் முறைப்பாடுகளைக் கையாள்வது தொடர்பான வழிகாட்டல்கள்**

   வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாள்வதில் காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய வழிகாட்டல்கள் 2016 அக்டோபர் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையினால் விநியோகிக்கப்பட்டன. இவ்வழிகாட்டலின் நோக்கம், வாடிக்கையாளர்களுக்கான நியாயமான தீர்வினை உறுதிப்படுத்தும் பொருட்டு காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளால் உரிய காலத்திலும் நியாயமான முறையிலும் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வைத்திருப்பதை வசதிப்படுத்துவதாகும்.

   இந்த வழிகாட்டலானது முறைப்பாடுகள் முகாமைத்துவக் கொள்கை ஒன்றை வைத்திருப்பதற்கும் நுகர்வோரின் தகவலுக்காக முறைப்பாடுகள் கையாளும் நடைமுறை ஒன்றை வெளியிடுவதற்கும் கம்பனிகளை தேவைப்படுத்துகிறது. அத்துடன் தங்களுடைய சேவையின் தரத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு முறைப்பாடுகள் பற்றிய பதிவுகளைப் பேணுவதற்கும் அவற்றுக்கான மூல காரணத்தை பகுப்பாய்வு செய்வதற்கும் காப்புறுதி வழங்குநர்களையும் தரகர்களையும் இது தேவைப்படுத்துகிறது. காப்புறுதிதாரர்களின் நாட்டத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒருமைப்பாட்டுடன் தொழில்முறைசார்ந்த மற்றும் விவேகமான முறையில் இலங்கையில் காப்புறுதி வியாபாரம் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சபையின் நோக்கம் மற்றும் பொறுப்புகள் வரிசையில் இத்தகைய வழிகாட்டல்களின் விநியோகம் காணப்படுகிறது.

2. **காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் மீதான விசாரணைகளை நடத்துவது பற்றிய வழிகாட்டல்கள்**

   தொழிற்றுறையின் தொழில்சார் மனப்பான்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான

ஆகக்குறைந்த நியமங்களைக் குறிப்பிட்டு, 2017 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், சபையானது வழிகாட்டல்களை விநியோகித்துள்ளது. வழிகாட்டல்களின்படி, விசாரணையாளர்கள் தங்களது கடமைகளை சுயாதீனமாகவும் நடுநிலையாகவும் ஆற்றுவதை உறுதிப்படுத்துகின்ற அதேநேரம் அந்தரங்கத்தன்மையைப் பேணிக்கொண்டு காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் உரிமைக்கோரிக்கை செய்பவர்கள் ஆகிய இரு தரப்பினரது அக்கறைகளிலும் கவனமாக இருப்பதற்கும் காப்புறுதிக் கம்பனிகள் எதிர்பார்க்கின்றன. வழிகாட்டல்கள்கூட உரிமைக்கோரிக்கை செய்பவர்கள், சாட்சியாளர்கள், தகவல் அளிப்பவர்கள் போன்றவர்களுடனான தொழில்முறைசார்ந்த கையாளுதல்களில் விசாரணையாளர்கள் அதிக கவனம் எடுக்கவேண்டுமென தேவைப்படுத்துகிறது.

### 3. காப்புறுதி முகவர்கள் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கான கூட்டுக் குழு

காப்புறுதி முகவர்கள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடித் தீர்மானம் எடுப்பதற்காக சபையின் பிரதிநிதித்துவத்துடன் இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL), இலங்கை காப்புறுதித் தரகர்களின் சங்கம் (SLIBA) மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவகம் (SLII) ஆகியன இணைந்து ஒரு கூட்டுக் குழு ஒன்றினை அமைத்திருந்தன. மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பன கீழே தரப்படுகின்றன:

#### கல்வித் தகைமைகளைச் சரிபார்த்தல்

காப்புறுதி முகவர்களாகப் பதிவுசெய்கின்ற நபர்களின் கல்வித் தகைமைகளைச் சரிபார்க்கும் செயன்முறையை நெறிப்படுத்துவதற்காக IASL இனால் வடிவமைக்கப்பட்ட முன்மொழிவுக்குச் சபை ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கிணங்க, எதிர்கால முகவர்களின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் சரிபார்ப்பினை, குறித்த காப்புறுதி வழங்குநர் அல்லது தரகர் மூலம் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. SLII இனால் நடத்தப்பட்ட முகவர்களின் முன் - ஆட்சேர்ப்புச் சோதனையின் பெறுபேறுகள் அடங்கிய சான்றிதழ், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சரிபார்க்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே வழங்கப்படும்.

#### விசாரணைகளை நடத்துவதிலுள்ள நன்னெறிகள்

தவறான நடவடிக்கைகளுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட காப்புறுதி முகவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும்போது காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்களால் பின்பற்றப்பட வேண்டியதும் கூட்டுக் குழுவினால் விருத்திசெய்யப்பட்டதுமான நன்னெறிகளுக்குச் சபை ஒப்புதல் அளித்திருந்தது. இந்த நன்னெறிகள் 2016 அக்டோபர் 1 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெற்றிருந்தது. அத்துடன் இந்நன்னெறிகள் தொழிற்றுறை நடைமுறைகளை நியமப்படுத்தும் நோக்கத்திற்காகவும் விசாரணைகளை முன்னெடுப்பதில் உரிய வழிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் என விநியோகிக்கப்பட்டதாகும். விசாரணைகளை நடத்துவதற்காக வரையறை செய்யப்பட்ட நடைமுறைகளில் காப்புறுதி வழங்குநர்களும் தரகர்களும் தெளிவினைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதில் இந்த நன்னெறிகளும் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருத்தல் வேண்டும்.

#### வியாபாரத்திற்குத் துணைபுரியும் நிரந்தர அலுவலர்களின் தகைமைகள்

கூட்டுக் குழுவில் செய்யப்பட்ட கலந்தாய்வினைக் கருத்திற்கொண்டு, விற்பனைகள் / விற்பனை முகாமைத்துவத்தில் ஈடுபடுத்தும் பொருட்டு, காப்புறுதி வழங்குநர்களினதும் தரகர்களினதும் நிரந்தரப் பதவியணிக்காகப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற சகலருக்கும் காப்புறுதி முகவர்களை ஒத்த அல்லது அதற்கு மேலான பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள், காப்புறுதி முகவர்களுக்கு ஏற்புடையதான ஆகக்குறைந்த கல்வித் தகைமை களைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் சபை தீர்மானித்திருந்தது.

#### நடத்தைக் கோவை

கூட்டுக் குழுவில் செய்யப்பட்ட கலந்தாய்வினை அடிப்படையாகக் கொண்டு IASL ஆனது சபையினது ஆலோசனையின் பேரில், சகல காப்புறுதி முகவர்களும் தங்களுடைய தொழில்சார் கடமைகளைச் செய்கையில் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டிய தொழில்சார் கோட்பாடுகள்

மற்றும் ஒழுக்கநெறி நியமங்கள் வகுத்தமைக்கப்பட்டுள்ள நடத்தைக் கோவை ஒன்றினை விருத்தி செய்துள்ளது. இக்கோவைக்கு 2017 மார்ச் இல் சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. மோட்டார் காப்புறுதி

**நிதி / குத்தகைக் கம்பனிகளால் நிரப்பப்பட்ட முன்மொழிவுப் படிவங்களை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதி வழங்கல்கள் (வாகனங்களின் முழு உடமையாளர்கள்)**

குத்தகை வாகனங்கள் தொடர்பில், காப்புறுதிதாரர்களால் கையொப்பமிடப்படாததும், நிதி / குத்தகைக் கம்பனிகளால் நிரப்பப்பட்டதுமான முன்மொழிவுப் படிவங்களை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதிகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டதைக் கருத்திற் கொண்டு, சபையானது, அவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிமைக்கோரிக்கைகளைப் பெறுவதில் காப்புறுதிதாரர்களின் நாட்டங்கள் தாக்கம் செலுத்தாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையைக் கொண்டுவருமாறு IASL ஐக் கோரியிந்தது. இதற்குப் பதிலளித்த IASL இன் அங்கத்தவர்கள் (பொதுக் காப்புறுதி வழங்குநர்கள்), காப்புறுதிதாரர்களால் கையொப்பமிடப்பட்டி ருக்காத அத்தகைய முன்மொழிவுப் படிவங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த உரிமைக்கோரிக்கைகளை நிராகரிக்காமல் இருப்பதற்கான இணக்கத்தினைத் தெரிவித்திருந்தனர்.

**மொத்த இழப்பு உரிமைக்கோரிக்கைகள் தொடர்பான மதிப்பீடுகள் மீதான பிணக்குகள்**

IASL இனால் முன்மொழியப்பட்ட பொறிமுறைக்குச் சபை ஒப்புதல் அளித்துள்ளது. அதாவது, மொத்த இழப்பு மோட்டார் உரிமைக்கோரிக்கை ஒன்று தொடர்பான மதிப்பீடு பற்றிய ஏதாவது பிணக்கு ஏற்படும் பட்சத்தில், மதிப்பீட்டுக் கம்பனிகளின் குழு (தெரிவுசெய்யப்பட்டு IASL இணையத்தளத்தில் வெளியீடு செய்யப்பட வேண்டியுள்ள) ஒன்றிடமிருந்து மாற்று மதிப்பீடு ஒன்றினை பெற்றுக்கொள்வதே அந்தப் பொறிமுறையாகும். மேலும், மாற்று மதிப்பீடானது வாடிக்கையாளரால் (அவரது கிரயத்தில்) பெறப்பட வேண்டும் எனவும் அந்தப் பெறுமதி காப்புறுதி வழங்குநரால் மதிப்பிடப்பட்ட மூல அளிப்புப் பெறுமதியை விடக் குறைவாக இருப்பின், அந்தக் குறைவான பெறுமதியை காப்புறுதி வழங்குநர் கருத்திற்கொள்ள வேண்டியதில்லை.

**காப்புறுதி ஆவணங்களின் ஒப்படைப்பு**

காப்புறுதித் தரகர்கள், நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள் மற்றும் வங்கிகள் ஊடாக விநியோகிக்கப்பட்ட காப்புறுதிகளுடன் தொடர்புடைய, காப்புறுதிதாரர்களுக்கான காப்புறுதி ஆவணங்களை ஒப்படைப்பதில் தொழிற்றுறைக்கு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு, காப்புறுதிதாரருக்குத் தாமதமின்றி ஒரு பிரதியை வழங்கும் பொருட்டு, அத்தகைய நிறுவனங்களுக்கு (பிரதி ஒன்றுடன்) காப்புறுதி ஆவணங்களை ஒப்படைப்பதற்கு காப்புறுதி வழங்குநர்களை அனுமதிக்கின்ற காப்புறுதி ஆவணத்தின் வழங்கல் மீதான வழிகாட்டல் #2 இனை சபை திருத்தியுள்ளது. அத்துடன் காப்புறுதிதாரர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, காப்புறுதி வழங்குநர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாட்டினை, காப்புறுதி ஆவணத்தின் பிரதியொன்றாக இருக்கின்ற காப்புறுதிச் சான்றிதழ் அல்லது காப்புறுதி நிரலின் ஊடாக எந்தவொரு காப்புறுதி வழங்குநர் கிளையிலிருந்தும் கோரிக்கை செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

5. விளம்பரங்களின் உள்ளடக்கங்கள்

சட்டப் பிரிவு 99 இன்படி, காப்புறுதி வழங்குநர்களால் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் பிழையான, தவறான அல்லது பொதுமக்களைத் தவறாக வழிநடத்துகின்ற தகவல்களையோ அல்லது விடயங்களையோ உள்ளடக்கியிருத்தல் கூடாது. காப்புறுதி வழங்குநர்கள் சார்பில், காப்புறுதிச் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளும் செல்லிடப்பேசி வலையமைப்பு இயக்குநர்களால் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட சில விளம்பரங்கள், பொதுமக்களைத் தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்களைக் கொண்டிருந்தன. எனவே இவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குநர்களுக்கு வழிகாட்டப்பட்டன. அதற்கிணங்க விளம்பரங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளி உறவுகள் (MDER) மீளாய்வு

காப்புறுதியானது சமூகத்திலுள்ள இடர்களைக் காப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற தனித்தன்மையானதும் இன்றியமையாததுமான நிதிச் சாதனம் ஒன்றாக பொருளாதாரம் ஒன்றின் நிலைபேறான வளர்ச்சியில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. பொருளாதாரம் ஒன்றிற்காகவும் இடர் தணிப்புக்கான ஒரு கருவியாகவும் காப்புறுதியின் முக்கியத்துவம் காணப்பட்டபோதிலும் காப்புறுதியானது ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போல இலங்கையில் இன்னும் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பொதுமக்கள் தங்களுக்காகவும் தங்களது குடும்பத்தினருக்காகவும் முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது அவர்களுக்குத் தேவையான அறிவுடன் அவர்கள் காணப்படுவதை உறுதிப்படுத்துவதில் 'காப்புறுதி பற்றிய விழிப்புணர்வு' ஒரு முக்கிய பங்கினை ஆற்றுகிறது. காப்புறுதி பற்றி உருவாகிக்கொண்டிருக்கின்ற விழிப்புணர்வானது காப்புறுதியின் வகைகள் மற்றும் எண்ணக்கருக்கள் பற்றி அவர்கள் விளங்கிக்கொள்ளும் தன்மையை மேம்படுத்துவதற்குப் பொதுமக்களை இயலச்செய்வதுடன் இடர்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றி விழிப்புடன் இருப்பதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்கும் அவர்களது குறிப்பிட்ட தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய காப்புறுதிகள் தொடர்பில் தெரிந்த முடிவுகளை எடுப்பதற்கும் அவர்களை இயலச்செய்கிறது.

சபையின் ஒரு பகுதியாக இருக்கின்ற பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொடர்பான அறிவு வழங்குதல் என்பது காப்புறுதிச் சந்தை வாய்ப்புகள் சமூகம், கல்வி மற்றும் கலாசார பின்னணிகள் எதுவாக இருப்பினும் சகல குடிமக்களாலும் அனுபவிக்கப்பட வேண்டிய வளங்களின் ஓர் முக்கியமான பங்கினை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

'காப்புறுதி பற்றிய கல்வியறிவுடைய சமூகம்' ஒன்றினை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் சபையானது மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவதற்கு எண்ணிறைந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு நடத்தியுள்ளது. தொடர்பாடலின் பல்வேறுபட்ட வழிமுறைகள் ஊடாக நடத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே முன்வைக்கப்பட்டுள்ளன:

## விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

### பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்டங்கள்

அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள கிராம நிலதாரிகள், காவல் துறையினர், திவிநெகும உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்ற அரச உத்தியோகத்தர்களை இலக்காகக்கொண்டு பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சபை தொடர்ந்தும் நடத்துகிறது. சபையானது குறித்த பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் நிருவாக உத்தியோகத்தர்கள் போன்றோரின் உதவியுடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நடத்தியுள்ளது. அவற்றில் பங்குபற்றியவர்களுக்கு சபையின் வகிபாகம் (காப்புறுதித் தொழிற்றுறையின் ஒழுங்குபடுத்துநராக), ஆயுள் மற்றும் சொத்துக்களுக்கான இடரைக் காப்பீடு செய்வதற்கான காப்புறுதி ஒன்றைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் காப்புறுதி ஒன்றினைப் பெறும்போதும் பேணும்போதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய பிரதான காரணிகள் போன்றவை தொடர்பில் விழிப்புணர்வு செய்யப்பட்டது. அரச சேவையில் அடிமட்ட நிலையில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுடனான இடைவினையானது காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் மனநிலைகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய பின்னூட்டத்தைப் பெறுவதற்கு சபை உத்தியோகத்தர்களுக்கான வாய்ப்பொன்றினை வழங்கியது.

798 கிராமசேவை நிலதாரிப் பிரிவுகளை உள்ளடக்கி மாத்தறை, ஹோமாகம, பொல்ஹகவெல, உகண, கேகாலை, ஹாலி-எல, தொம்பே, வென்னப்புவ, படல்கும்புர, திக்வெல்ல, வலல்லவிட்ட மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களில் பிரதேச நாள் கூட்டங்களின்போது பன்னிரெண்டு (12) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த அண்ணளவான 1858 அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.


Programme at a Divisional Secretariat

### ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பிரதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக வர்த்தக சமூகம்,

பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளநிலைப் பட்டதாரிகள் ஆகியோருக்காக பின்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைச் சபை நடத்தியது :

- 2016 மார்ச் 31 இல் வர்த்தக சமூகத்தினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தில் (NCCSL) நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் NCCSL மற்றும் சபையினால் கூட்டாக ஒருங்கிணைக்கப்பட்டு ஒழுங்குசெய்யப்பட்டது.

- மொரட்டுவையிலுள்ள பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மற்றும் பிரின்சஸ் ஒப் வேல்ஸ் கல்லூ ரி ஆகியவற்றில் க.பொ.த. உயர் தர வர்த்தகப் பிரிவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூ ரியின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

- பெந்தோட்டை பிரதேச சபையின் கோரிக்கையின் பேரில், எல்பிட்டிய கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர் தர வர்த்தகப் பிரிவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக காப்புறுதி பற்றிய வேலைப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. இவ்வேலைப்பட்டறை பெந்தோட்டை காமினி மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது.

- சப்ரகமுவ பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கையின் மீது, சபையானது வங்கியியல் மற்றும் காப்புறுதியில் பி.எஸ். சி. இளநிலைப் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற குழு ஒன்றிற்கு, காப்புறுதி மீதான சமகாலப் பிரச்சினைகள் பற்றிய செயலமர்வு ஒன்றினை ஒழுங்குசெய்திருந்தது.



National Chamber of Commerce of Sri Lanka (NCCSL)

**இலத்திரனியல் ஊடகங்கள் மூலமான விழிப்புணர்வு**

பொதுமக்களில் பெரும்பகுதியினரை சென்றடைவதற்கு விளைதிறன்மிக்க தொடர்பாடல் அலைவரிசை ஒன்றாக இலத்திரனியல் ஊடகத்தின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்த சபையானது, மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டையும் வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டையும் நடத்தியிருந்தது. காப்புறுதியுடன் தொடர்புடைய விடயங்கள் மீது பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் சபையின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்:

- 'கோப்பி மேசை (Coffee Table)' - சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் (ITN) ஒளிபரப்பப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கலந்துரையாடல்.

- 'ரூபாயும் உணர்வும் (Rupees & Sense)' - சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் (ITN) ஒளிபரப்பப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கலந்துரையாடல்.

- 'சார பிரபா கிர – Sara Praba Gira' (සාර ප්‍රභා ගිර), - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (SLBC) வர்த்தக சேவையில் (වෙළඳ සේවය) ஒலிபரப்பப்பட்ட வானொலி நேரடிக் கலந்துரையாடல்.

மேலும், இலங்கை காப்புறுதிச் சங்கத்தினால் (IASL) ஒழுங்குசெய்யப்பட்ட "ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதம் 2016" ஐ முன்னிட்டு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிட்டி எப். எம். அலைவரிசையில் மணித்தியாலச் செய்திகளது அறிவிப்பின் பின்னர் நாள் ஒன்றுக்குப் பத்துத் (10) தடவைகள் வீதம் ஆயுள் காப்புறுதி தொடர்பான முன்பதிவுசெய்யப்பட்ட குறுஞ் செய்திகள் அம்மாதக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்டன.



Radio Programme

**அச்சு ஊடகங்கள் மூலமான விழிப்புணர்வு**

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் சபையானது பின்வரும் ஊடக அறிக்கைகளையும் ஊடக அறிவிப்புகளையும் வெளியிட்டிருந்தது:

**ஊடக அறிக்கைகள்**

- 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான காப்புறுதித் தொழிற்றுறையின் செயலாற்றுகை
- காப்புறுதித் தொழிற்றுறைச் செயலாற்றுகை - காலாண்டு 01, 2016.
- தொழிற்றுறைச் செயலாற்றுகை - 2016 இன் முதல் அரையாண்டு.
- காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் தரகர்களுக்கான, முறைப்பாடு கையாள்வதற்கான வழிகாட்டல்கள்

**ஊடக அறிவித்தல்கள்**

- "பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல்" என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக்

கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பற்றிய வருடாந்த அறிவித்தல்.

- "மோட்டார் காப்புறுதி" பற்றிய முக்கிய விடயங்கள் மீதான ஒரு அறிவித்தல்: காப்பீட்டினை பெற்றுக்கொள்ளும்போது வாகனத்தின் சந்தைப் பெறுமதி, காப்புறுதி வட்டி போன்றவற்றுக்கான பிரதான விடயங்களை வெளிப்படுத்தப்படுத்துவதன் முக்கியத்துவம்
- உரிமம் பெற்ற காப்புறுதி வழங்குநர்களுடன் மாத்திரம் சபையால் மேற்கொள்ளப்படும் செயல் தொடர்புகள் பற்றிய "முக்கிய அறிவித்தல்" என்ற தலைப்பிலான ஓர் அறிவித்தல்

**ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் 01 ஆந் திகதி "தேசிய காப்புறுதி நாள்" ஆகப் பிரகடனம்**


இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL), தேசிய காப்புறுதி நாளாக ஒவ்வொரு வருடமும் செப்ரம்பர் 01 ஆந் திகதியினை பிரகடனப்படுத்துவதற்குத் தேவையான ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் உதவியை நாடியிருந்தது. நிதி அமைச்சிலிருந்து ஆரம்பகட்ட ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சபை நிதி அமைச்சுடன் தொடர்புகொண்டதுடன் இதன் பொருட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டிய சம்பந்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை வரைவதிலும் நிதி அமைச்சுடன் இணைந்து பணியாற்றியது. அதற்கிணங்க, "தேசிய காப்புறுதி நாள்" ஆக ஒவ்வொரு வருடத்தினதும் செப்ரெம்பர் 01 ஆந் திகதியைப் பிரகடனப்படுத்துவதற்காக நிதி அமைச்சினால் செய்யப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புலளித்திருந்தது.

**வெளியீடுகள்**

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் பிரதானமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய பின்வரும் வெளியீடுகள் (மூன்று மொழிகளிலும்) தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன:

- 'காப்புறுதிதாரர் ஒருவராக உங்களின் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்துகொள்ளுங்கள்' என்பது பற்றிய துண்டு வெளியீடு
- 'உடல்நலக் காப்புறுதி - உங்களுக்குத் தெரியவேண்டியது என்ன' என்பது பற்றிய துண்டு வெளியீடு

மேலே குறிப்பிடப்பட்ட ஊடக அறிக்கைகள், ஊடக அறிவித்தல்கள் மற்றும் துண்டு வெளியீடுகள் என்பன சபையின் இணையத்தளத்திலும் காணப்படுகின்றன.



6. What are the factors that affect Health Insurance premium?

The older a person is, the premium will also be higher, since an older person is more prone to illnesses compared to a younger person. Hence, the age is a major factor that determines the premium. Previous medical history of your family and yourself is another major factor that determines the premium. If no previous medical history exists relating to illnesses, premium will be lower. Depending on the insurance company, 'claim free' years can also be a factor in determining the amount of the renewal premium as it might benefit you with a reduction in the premium by certain percentage.

7. Do you understand your Health Insurance policy?

Before you enroll in a particular health insurance plan, make sure that you read and understand the policy document. You can request for a specimen policy document for this purpose from the insurance company. The health insurance policy will list all of the benefits that are covered and it will also tell you if any benefit has limitations, what illnesses/services are not covered at all and the requirements to be fulfilled in the event of a claim.

For more information -

Market Development and External Relations Unit
Insurance Board of Sri Lanka
Level 11, East Tower
World Trade Centre
Colombo 01
Telephone: 011 2396184-9
Fax: 011 2396190
Email: info@ibsl.gov.lk
Website: www.ibsl.gov.lk

IBSL is a statutory authority established for the purpose of developing, supervising and regulating the insurance industry in Sri Lanka with a view to safeguarding the interests of policyholders and potential policyholders.

Health Insurance Policies -
What you should know ?

1. What is Health Insurance ?

'Health Insurance' in essence reimburses your medical expenses to the extent of your health insurance cover. A health insurance policy, like other insurance policies, is a 'contract' between an insurer and an individual/group. In such cover, the insurer agrees to indemnify expenses related to health at a particular "premium" subject to the terms and conditions specified in the policy. Generally, the period of cover of a health insurance policy is one (01) year, i.e. annual policy.

2. Why is Health Insurance important ?

A health insurance policy protects you from sudden and unexpected expenses of hospitalization or other covered health events, such as critical illness, personal accident, etc., which would otherwise impose a pressure on household savings or even lead to indebtedness. In addition, depending on the health insurance policy that you purchase, you may get routine and preventive care.

3. What types of Health Insurance products are available ?

The widespread form of health insurance products in Sri Lanka cover expenses incurred due to hospitalization. A variety of other health insurance products are also available that offer a range of health covers, depending on the need and choice of the insured. The insurance company usually provides either direct payment to hospitals or reimburses the expenses associated with illnesses/injuries. Health insurance is offered as standalone policies or as a rider/endorsement to a life insurance policy.

4. How to choose a Health Insurance Plan that best fits your needs ?

In order to find out what kind of coverage you need, and to avoid paying for a cover that you do not need, you should carefully consider the products available in the market to select a product that best fits your needs.

5. What happens if you have a 'pre-existing condition' ?

It is a condition related to health (such as diabetes, heart disease, or cancer) that existed prior to obtaining a health insurance policy. It is significant, because, insurance companies do not generally cover such pre-existing conditions. The pre-existing conditions may be considered for coverage after a waiting period, depending on the policy type and the policy conditions.

You have a DUTY...

To act in good faith

To maintain the insurance policy

To understand the policy document

To co-operate in processing a claim

IBSL

Know your
Rights and Duties
as an insurance policyholder

You have a RIGHT...

To be informed

To get what you pay for

To be treated in good faith

To redress

For further information:

Market Development and External Relations Unit
Insurance Board of Sri Lanka
Level 11, East Tower
World Trade Centre
Colombo 01.
Telephone: 011 2396184-9
Fax: 011 2396190
Email: www.ibsl.gov.lk
Website: www.ibsl.gov.lk

துண்டு வெளியீடுகள்

## ஏனைய ஈடுபாடுகள்

### காப்புறுதி வகை இடைவெளிப் பகுப்பாய்வு

சகல காப்புறுதி வகைகளும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் பிரிவு 37 மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் காப்புறுதிதாரர்களின் நாட்டங்கள்ள் போதுமானளவுக்கு பாதுகாக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிப் பரிசீலிக்கும் நோக்கத்திற்காக சபைக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு காப்புறுதி வகைகளிலிருந்து, காப்புறுதிதாரர்களின் நாட்டத்தில், காப்புறுதி வகைகளை மேலும் விருத்திசெய்யும் பொருட்டு நன்மைக் கட்டமைப்பு மற்றும் காப்புறுதி நிபந்தனைகளின் இடைவெளிகளை அடையாளம் காணும் நோக்குடன் ஆய்வு செய்வதற்காக சபையானது வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட காப்புறுதி வகையினை அடையாளங் காண்கிறது. மீளாய்வு மற்றும் திருத்தங்களின் பின்னர் இடைவெளிகளை இணைப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய மோட்டார், உடல்நலம் மற்றும் தீ அபாயக் காப்புறுதிகள் பற்றித் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் சபை அங்கத்தவர்களுக்கு அவர்களின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. ஒப்புதலைப் பெறுவதன் மீது, அறிக்கைகளில் அடங்கியுள்ள பரிந்துரைகள் கருத்துக்கள் / பதில்களுக்காக தொழிற்றுறைக்கு (IASL) அனுப்பப்பட்டுள்ளன.

### OECD உலகளாவிய காப்புறுதிச் சந்தைப் போக்குகளுக்கான பங்களிப்பு

"உலகளாவிய காப்புறுதிச் சந்தைப் போக்குகள்" என்ற தலைப்பில், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (OECD) வருடாந்தக் கண்காணிப்பு அறிக்கையில் பிரசுரிப்பதற்காக இலங்கை காப்புறுதி தொழிற்றுறை தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் சபையால் வழங்கப்பட்டன. இலங்கை காப்புறுதித் தொழிற்றுறையுடன் சம்பந்தப்பட்ட முற்றடக்கமான தரவுகளை ஒரு சர்வதேச வெளியீட்டு நிறுவனம் பிரசுரிப்பது இதுவே முதல் தடவையாகும். "உலகளாவிய காப்புறுதிச் சந்தைப் போக்குகள் 2016" இல் உள்ளவைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

### பொதுமக்களின் விசாரணைகளுக்கான பதில்கள்

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில், காப்புறுதித் தொழிற்றுறையுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் வழிகாட்டலை எதிர்பார்த்து பொதுமக்கள், காப்புறுதிதாரர்கள் மற்றும் ஏனைய பல்வேறு அக்கறையுடைய தரப்பினரால் செய்யப்பட்ட எண்ணிலடங்கா விசாரணைகளுக்கு சபை பதிலளித்திருந்தது.

# நிருவாக மீளாய்வு

## அலுவலர்கள்

நிறுவனம் ஒன்றின் வெற்றியானது அதன் தொழிற்பாடுகளில் பங்குகொள்கின்ற நபர்களின் நிபுணத்துவத்தின் மீது பெரியளவில் தங்கியிருக்கிறது. அந்த வகையில், மனித வளம் என்பது சபையின் வெற்றிகரமான தந்திரோபாயத்தின் முதுகெலும்பாக இருக்கிறது என நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையின் காப்புறுதித் தொழிற்றுறையானது சகல காப்புறுதிதாரர்கள் மற்றும் காப்புறுதிதாரர்களாக வரக்கூடியவர்கள் ஆகியோரின் நாட்டங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒருமைப்பாட்டுடன் முன்னெடுக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தும் ஒட்டுமொத்த நோக்கத்தையும் அடைந்து கொள்வதை நோக்கிய தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக சபையானது நிறுவனக் கட்டமைப்பினைத் தாபித்து, தேவையான தொழிற்பாடுகளை அடையாளம் காண்கிறது.

சபையானது மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் தேவையான தொழில்வல்லுநர்களின் உரிய நேர ஆட்சேர்ப்பின் ஊடாக மனித வளத்தை வலுப்படுத்துவதற்காக பல முக்கியமான முயற்சிகளை எடுத்திருந்தது. அத்தகைய முயற்சிகளை அடையும்பொருட்டு, பணிப்பாளர் ஒருவரும் உதவிப் பணிப்பாளர் ஒருவரும் நிரந்தரப் பதவியணிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதுடன் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு வல்லுநர் ஒருவரும் மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். அத்துடன் சபையானது அதனது அலுவலர்களுக்கான சாரதி ஒருவரையும் ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான சபையின் மொத்த அலுவலர் பலம் 42 ஆகக் காணப்பட்டது.

அலுவலர்களின் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:

## அலுவலர் சேமநலன்

ஊழியர்களை நல்லபடியாக கவனித்துக்கொள்வது அவர்களை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு முக்கிய காரணியாக இருப்பதுடன் அவர்களுடைய மன உறுதியையும் அது அதிகரிக்கச் செய்கிறது. எனவே, சபையானது தனது ஊழியர்களுக்கு உள்ளக மற்றும் வெளியக மருத்துவத் திட்ட ங்கள், தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி, வாகனம் மற்றும் இடர் கடன் திட்டங்கள், விழா முற்பணம் போன்ற கவர்ச்சிகரமான நலன்புரி விடயங்களை வழங்குகிறது.

| வகை | 2015 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 1,752,935/- | 2,021,522/- |
| மாநாடுகளும் வெளிநாட்டுப் பயிற்சியும் | 8,144,101/- | 8,370,750/- |

## பயிற்சி

நிறுவன இலக்குகளை அடைவதற்காக அறிவு மற்றும் வேலையுடன் தொடர்புடைய திறன்களை அலுவலர்கள் பெற்றுக்கொள்வதை மேம்படுத்துவதற்காக பரந்தளவான காப்புறுதிகளை உள்ளடக்கிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி மீது கவனஞ் செலுத்தப்பட்டது. ஆண்டின் காலப்பகுதியில், உள்நாடு அதேபோன்று வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளுக்காகச் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றிய விபரத்தை அட்டவணை காட்டுகிறது.

மேலும், சபையானது வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வருடாந்த ஒன்றிணைவு ஆகியவற்றை ஒழுங்கமைப்பதன் மூலம் அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருடனான உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது.

| ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப் பின் படிப்பு, முதலாவது பட்டம் மற்றும் தொழில் தகைமைகள் | பட்டப் பின் படிப்பு மற்றும் தொழில் தகைமைகள் | பட்டப் பின் படிப்பு, முதலாவது பட்டம் | முதலாவது பட்டம் மற்றும் தொழில் தகைமைகள் | முதல-ாவது பட்டம் | தொழில் தகைமைகள் |
| 42 | 09 | 02 | 01 | 08 | 07 | 03 |

# நிதி மீளாய்வு


## காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF)

சட்டத்திற்கு இணங்க, சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற எந்த நோக்கங்களுக்காகவும் உடனடியாகத் தேவைப்படாத, பாதுகாப்பு நிதியத்திற்காகச் (PPE) சேகரிக்கப்பட்ட காப்புறுதிதாரர்களின் பணம் (வீதவரி) நல்ல வருமானத்தைப் பெறுவதற்காக விவேகமான முறையில் சபையால் முதலீடு செய்யப்பட வேண்டும். ஆண்டின் காலப்பகுதியில், சபையால் செய்யப்பட்ட வீதவரிச் சேகரிப்பு மற்றும் சம்பாதித்த முதலீட்டு வருமானம் ஆகியவற்றை விளக்கப்படம் 1 சித்தரிக்கிறது.

விளக்கப்படம் 1 ஆனது கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக வீதவரி வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினை விளக்குகிறது. சாதகமான சந்தை நிலைமைகளின் தாக்கம் காரணமாக, முதலீட்டு வருமானமானது 2015 இலிருந்து 2016 இற்கு குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காட்டியிருக்கிறது.

PPF இன் பெறுமதி கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக அதிகரித்திருப்பதுடன் அதனை விளக்கப்படம் 2 விளக்கமாகக் காட்டுகிறது.


**விளக்கப்படம் 2**
**2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியப் பெறுமதிகள்**




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நிதியப் பெறுமதி (ரூ.மில்) | 1,622 | 1,778 | 2,183 | 2,643 | 3,292 |

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிச் சொத்துக்களின் தொகுப்பினை கீழேயுள்ள விளக்கப்படம் 3 சித்தரிக்கிறது.

**விளக்கப்படம் 1**
**2012 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான வீதவரி வருமானமும் முதலீட்டு வருமானமும்**




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| வீதவரி வருமானம் (ரூ.மில்.) | 237 | 246 | 274 | 322 | 408 |
| முதலீட்டு வருமானம் (ரூ.மில்.) | 136 | 236 | 158 | 145 | 229 |

### சபை வருமானம்

சபையின் ஒட்டுமொத்த வருமானம் பின்வரும் மூலங்களிலிருந்து உழைக்கப்படுகின்றன:

- காப்புறுதி வழங்குநர்கள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளிடமிருந்தான பதிவுக் கட்டணங்கள்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான வருடாந்தம் விதிக்கப்பட்ட கட்டணம்
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவினைப் புதுப்பிப்பதற்கான வருடாந்த புதுப்பிப்புக் கட்டணம்
- மிகையான நிதிகளின் முதலீடு மூலம் பெறப்படும் வட்டி வருமானம்

2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்காகப் பெறப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தின் தொகுப்பினை விளக்கப்படம் 4 சித்தரிக்கிறது. 2014 தொடக்கம் 2016 வரை சேகரிக்கப்பட்ட வருடாந்தக் கட்டணத்தில் கூர்மையான அதிகரிப்பினை பார்க்கக்கூடியதாக இருக்கிறது.


சபையானது 2016 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ.12.0 மில்லியன் மிகை ஒன்றினைப் பதிவு செய்திருக்கிறது. இதிலிருந்து, வருமானத்திற்கும் செலவுக்குமிடையிலான வேறுபாட்டிற்கு கடந்த காலத்தில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க PPF இலிருந்து நிதியிடப்பட்டிருந்தது. கூறப்பட்ட மிகை ஆனது PPF இற்கு மாற்றப்பட்டது.

### சபையின் செலவுகள்


2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டிற்கான செலவுகளில் ஒரு சிறியளவிலான அதிகரிப்பினைக் காண முடிகிறது.

கீழே விளக்கப்படம் 5 ஆனது 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான சபையின் மொத்தச் செலவுகளைச் சித்தரிக்கிறது. இது பிரதானமாக அலுவலர் கிரயங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளைக் கொண்டிருக்கிறது.

விளக்கப்படம் 3
2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிச் சொத்துக்களின் தொகுப்பு





விளக்கப்படம் 4
2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான சபை வருமானம்




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| வருடாந்தக் கட்டணம் (ரூ.மில்.) | 61 | 70 | 73 | 104 | 126 |
| பதிவு மற்றும் புதுப்பிப்புக் கட்டணங்கள் (ரூ.மில்.) | 5 | 4 | 4 | 9 | 5 |
| ஏனைய வருமானம் (ரூ.மில்.) | 2 | 1 | 2 | 2 | 3 |
| கொடைகளின் ஏற்பிசைவு (ரூ.மில்.) | 7 | 5 | 4 | 5 | 2 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 75 | 80 | 83 | 119 | 136 |

விளக்கப்படம் 5
2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான சபையின் மொத்தச் செலவினங்கள்




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவினங்கள் (ரூ.மில்.) | 94 | 105 | 107 | 123 | 124 |



# நிதித் தகவல்கள்

# நிதி நிலைக் கூற்று

2016 டிசெம்பர் 31 இல்

| | குறிப்பு | 31.12.16 இல் ரூ. | 31.12.15 இல் ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 1 | 7,629,457 | 11,274,097 |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி - வாடகை, மின்சார வைப்புகளும் திறைசேரி முறிகளும் | 2 | 1,091,418,880 | 1,091,418,880 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் | 3 | 393,033 | 445,902 |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி - முதலீடுகளும் ஏனையவையும் | 2 | 2,200,416,486 | 1,551,778,353 |
| வேறு நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 19,148,704 | 21,841,991 |
| அரச பிணையங்களில் முதலீடுகள் | | 22,700,000 | 1,000,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 5 | 2,301 | 575,848 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 3,341,708,861 | 2,678,335,071 |
| **ஒதுக்கங்களும் பரிப்புகளும்** | | | |
| **ஒதுக்கங்கள்** | | | |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதி | 6 | 3,291,835,366 | 2,643,197,233 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 7,389,652 | 7,389,652 |
| **பரிப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | | |
| கொடை | 7 | 3,523,232 | 4,965,789 |
| ஓய்வூதிய நலக் கடப்பாடு | 8 | 9,842,625 | 8,035,447 |
| | | 13,365,857 | 13,001,236 |
| **நடைமுறைப் பரிப்புகள்** | | | |
| முற்பணப் பெறுவனவு | | 8,268,794 | 7,526,285 |
| ஏனைய நடைமுறைப் பரிப்புகள் | 9 | 20,410,878 | 7,220,665 |
| பேரேட்டின்படியான எதிர்க்கணிய வங்கி மீதி | 17 | 438,314 | - |
| | | 29,117,986 | 14,746,950 |
| **மொத்த ஒதுக்கங்களும் பரிப்புக்களும்** | | 3,341,708,861 | 2,678,335,071 |

இலங்கை காப்புறுதிச் சபையின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் சமர்ப்பித்தலுக்கும் பொறுப்புடையவர்கள்.

மேலுள்ள நிதி நிலைக் கூற்று 5 தொடக்கம் 16 வரையிலான பக்கங்களில் காட்டப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் இணைந்து வாசிக்கப்படுதல் வேண்டும்.



இந்திராணி சுகததாச
தலைவர்



ஏ.ஆர். தேசப்பிரிய
அங்கத்தவர்

கொழும்பு, இலங்கை
2017 பெப்ரவரி 27.

# நிதிச் செயற்பாட்டுக் கூற்று

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. | 31.12.15 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | 10 | 130,972,036 | 113,149,245 |
| கொடை ஏற்பிசைவு | 7 | 2,061,963 | 4,527,482 |
| வட்டி வருமானம் | | 3,112,336 | 1,559,380 |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியிலிருந்தான மாற்றல் | 6 | - | 3,513,004 |
| ஏனைய வருமானம் | 11 | 258,370 | 225,376 |
| **மொத்த வருமானம்** | | 136,404,704 | 122,974,487 |
| **செலவு** | | | |
| அலுவலர் கிரயங்கள் | 12 | (71,862,315) | (70,205,520) |
| தொழில்சார் கட்டணங்கள் | 13 | (2,801,156) | (2,388,225) |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | 14 | (49,032,420) | (49,986,744) |
| நிதியும் ஏனையவையும் | 15 | (150,126) | (206,872) |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கான மாற்றல் | 6 | (12,185,206) | - |
| **மொத்தச் செலவுகள்** | | (136,031,223) | (122,787,361) |
| வரிக்கு முன் நிகர மிகை / (குறைவு) | | 373,480 | 187,126 |
| வரிவிதிப்பு | | (373,480) | (187,126) |
| வரிக்குப் பின் நிகர மிகை / (குறைவு) | | - | - |
| **ஆண்டிற்கான நிகர மிகை** | | - | - |

பக்கங்கள் 5 முதல் 16 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒன்றித்த பகுதியாகும்.

# காசுப் பாய்வுக் கூற்று

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு | 31.12.15 இல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகள்** | | | |
| காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு / (குறைவு) | | - | - |
| தேய்மான ஏற்பாடு | | 4,259,214 | 5,214,297 |
| ஓய்வூதிய நலன் ஏற்பாடு | | 1,807,178 | 2,278,349 |
| விற்பனை மீதான இலாபம் / (நட்டம்) | | (66,590) | (15,028) |
| கொடை ஏற்பிசைவு | | (2,061,963) | (4,527,482) |
| வருமான வரி | | 373,480 | 187,126 |
| வட்டி வருமானம் | | (3,112,336) | (1,559,380) |
| தொழிற்படு மூலதன மாற்றலுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 1,198,985 | 1,577,883 |
| | | | |
| தொழிற்படு மூலதன மாற்றல் | | | |
| தொக்குகளின் (அதிகரிப்பு) / குறைவு | | 52,869 | (171,058) |
| வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு | | 2,748,961 | 4,760,311 |
| முற்பணப் பெறுவனவுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 742,508 | (4,200,249) |
| கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 13,190,213 | (1,866,056) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசுப் பாய்வு | | 16,734,551 | (1,477,052) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்வுகள் | | 17,933,536 | 100,830 |
| | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்வுகள்** | | | |
| அரச பிணையங்களில் முதலீடு | | (21,700,000) | (1,000,000) |
| வட்டி வருமானம் | | 2,683,182 | 1,395,547 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனையிலிருந்தான வருமானம் | | 71,419 | 41,158 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவு | | (619,406) | (3,012,711) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு | | (19,564,804) | (2,576,006) |
| | | | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வு** | | | |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதன மாற்றல் | | 619,406 | 3,012,711 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்வுகள் | | 619,406 | 3,012,711 |
| | | | |
| காசு மற்றும் காசுச் சமானங்களின் நிகர அதிகரிப்பு / (குறைவு) | | (1,011,862) | 537,535 |
| | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுச் சமானங்களும் | | 575,848 | 38,313 |
| | | | |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுச் சமானங்களும் | | (436,014) | 575,848 |
| | | | |
| வங்கி மீதியும் காசுக் கையிருப்பும் | 5 & 17 | (436,014) | 575,848 |

பக்கங்கள் 5 முதல் 16 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒன்றித்த பகுதியாகும்.

# காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப் பாய்வுக் கூற்று

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. | 31.12.15 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகள்** | | | |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தின் நிகர அதிகரிப்பு | | 648,638,132 | 460,290,461 |
| தொழிற்படு மூலதன மாற்றலுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 648,638,132 | 460,290,461 |
| தொழிற்படு மூலதன மாற்றல் | | | |
| அரச பிணையங்கள் மீதான வட்டி வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (46,126,635) | 22,849,356 |
| வீதவரி வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (24,664,812) | (10,300,000) |
| நிதி முகாமைக் கணக்கிலுள்ள மீதியின் (அதிகரிப்பு) / குறைவு | | 952,525 | 5,734,821 |
| PPE இலிருந்து மாற்றப்படவேண்டிய தொகையின் அதிகரிப்பு / (குறைவு) | | (19,967,093) | (8,944,939) |
| | | (89,806,014) | 9,339,238 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசு | | 558,832,118 | 469,629,698 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்வு** | | | |
| அரச பிணையங்களில் முதலீடுகள் | | 362,599,903 | (1,677,958,452) |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | (922,000,000) | 1,208,400,000 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசு | | (559,400,097) | (469,558,452) |
| காசு மற்றும் காசுச் சமானங்களின் நிகர அதிகரிப்பு / (குறைவு) | | (567,980) | 71,247 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுச் சமானங்களும் | | 1,071,247 | 1,000,000 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுச் சமானங்களும் | | 503,267 | 1,071,247 |
| வங்கி மீதி | 2 & 17 | 503,267 | 1,071,247 |

பக்கங்கள் 5 முதல் 16 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒன்றித்த பகுதியாகும்.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 தயாரிப்பின் அடிப்படை

சபையின் நிதிக் கூற்றுக்கள், கிட்டிய ரூபாய்க்கு மட்டந்தட்டப்பட்ட இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டு, வரலாற்றுரீதியான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் குறிப்புகளில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2 இணக்கக் கூற்று

இலங்கை காப்புறுதி சபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருப்பதுடன் அவை கூறப்பட்ட நியமங்களுடன் இணக்கமாகவும் இருக்கின்றன.

### 1.3 அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான சகல பொருண்மை நிகழ்வுகளும் கருத்திலெடுக்கப்பட்டு, தேவையாயின், நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான செம்மையாக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

### 1.4 ஒப்பீட்டு அளவுகள்

நடப்பு நிதி ஆண்டில் சமர்ப்பிக்கப்படுவதிலுள்ள மாற்றங்களை உறுதிப்படுத்துவதற்காக ஒப்பீட்டு அளவுகள் மீள்குறிப்பிடப்படுகிறது.

### 1.5 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வருமான வரிக்கான ஏற்பாடு கணக்கிடப்பட்டிருக்கிறது.

பங்கிலாபம் அல்லது வட்டியிலிருந்தான இலாபம் மற்றும் வருமானம் தவிர்ந்த ஏனையவற்றுக்கு வருமான வரியிலிருந்து சபைக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

### 1.6 வெளிநாட்டு நாணய மாற்று

வெளிநாட்டுப் பரிவர்த்தனைக் கொடுக்கல் வாங்கல்கள் ஏதாவது இருப்பின் அவை இலங்கை ரூபாய்களில் மாற்றீடு செய்யப்படுகின்றன. இங்கு அக்கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நேரத்தில் காணப்பட்ட நாணயமாற்று வீதத்தில் அறிக்கையிடப்படுகிறது.

## 2. சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டு அடிப்படைகள்

### 2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

#### சொந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன திரள் தேய்மானம் கழிக்கப்பெற்ற கிரயத்தில் / மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயம் என்பது பயன்படுத்தும் நோக்கத்திற்காக அவற்றின் பணி நிலைமைக்கான சொத்துக்களை வாங்குவதில் செலவிடப்பட்ட ஏதாவது செலவினத்தைக் கொண்ட கொள்வனவுக் கிரயம் ஆகும்.

#### தேய்மானம்

பின்வரும் வீதங்களில் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மீது நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகிறது.

| | % ஆண்டொன்றுக்கு |
|---|---|
| மோட்டார் வாகனங்களுக்கு | 25 |
| தளபாடம், பொருத்திகள் மற்றும் பொருத்துகளுக்கு | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரணங்களுக்கு | 25 |
| பயிற்சி உபகரணங்களுக்கு | 25 |

சொத்தின் கொள்வனவுத் திகதியிலிருந்து தேய்மானம் வழங்கப்படுவதுடன் அது சொத்தின் விற்பனைத் திகதிவரை வழங்கப்படுகிறது. விற்பனைகள் மூலமான வருமானங்களும் நட்டங்களும், விற்பனை வருமானங்களை முன்கொண்டுசெல்லல் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலம் கணிக்கப்படுகின்றன.

### 2.2 முதலீடுகள்

அரச பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் செய்யப்படும் முதலீடுகள் குறைந்த கிரயம் அல்லது முகப்பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன் வட்டியானது ஆண்டின் இறுதி வரை அட்டுறுவாகிறது.

### 2.3 தொக்குகள்

தொக்குகள் குறைந்த கிரயத்தில் அல்லது நிகரத் தேறிய பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. தொக்குகளின் கிரயம் முதல் உள்ளே - முதல் வெளியே அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

### 2.4 வருமதிகள்

வருமதிகள், மதிப்பீடு செய்யப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன.

### 2.5 காசும் காசுச் சமானங்களும்

காசுப் பாய்வுக் கூற்று நோக்கத்திற்காக, காசும்

# கணக்கீட்டுக் கொள்கைகள்

காசுச் சமானங்களும் வங்கி மீதி மற்றும் காசுக் கையிருப்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## 3. பரிப்புகளும் ஏற்பாடுகளும்

### 3.1 ஓய்வூதிய நலன்கள்

#### 3.1.1 வரையறுக்கப்பட்ட நலத் திட்டங்கள் - பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கிணங்க, ஊழியர் ஒருவருக்கான பரிப்பானது தொடர்ச்சியான ஐந்து வருட சேவையின் நிறைவின் மீது மாத்திரமே எழுகிறது. பரிப்பினை நிறைவேற்றுவதற்காக ஒரு வருட சேவையைப் பூர்த்திசெய்த சகல ஊழியர்களுக்காகவும் நிதியாண்டின் இறுதியில் அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் அரை மாதச் சம்பளத்திற்குச் சமனான ஏற்பாடு ஒன்று செய்யப்படுகிறது.

#### 3.1.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - EPF மற்றும் ETF

சகல ஊழியர்களும் அவர்களுக்குரிய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்குப் பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு உரித்துடையவர்கள் ஆவர். சபையானது ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 12% மற்றும் 3% தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்குச் செலுத்துகிறது.

### 3.2 பரிப்புகள்

நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பரிப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள பரிப்புகள் கேள்வி மீதான கொடுப்பனவு காரணமாக அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் இடம்பெற்றவையாகும். நடைமுறையல்லாப் பரிப்புகளாக உள்ள மீதிகள் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னரான கொடுப்பனவு காரணமாக இடம்பெற்றவையாகும்.

சகல அறியப்பட்ட பரிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பின்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

### 3.3 கொடை

காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினம் கொடை ஒன்றாகக் கருதப்பட்டதுடன் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மீது ஏற்பிசைவு செய்யப்பட்டது.

## 4. வருமானமும் செலவினமும்

### 4.1 வருமான ஏற்பு

வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்கப்படுகிறது.

### 4.2 செலவின ஏற்பு

சபையைப் பராமரிப்பதற்காகச் செலவிடப்பட்ட சகல செலவினங்களும், செலவுகளுக்கு மேலான வருமானத்தை உறுதிப்படுத்துவதில் வருவாயை ஈட்டியிருக்கின்றன.

### 4.3 காசும் காசுச் சமானமும்

காசுப் பாய்வுக் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | மோட்டார் வாகனம் ரூ. | தளபாடம், பொருத்திகள், பொருத்துகள் ரூ. | அலுவலக உபகரணம் (EDP யும் ஏனையவையும்) ரூ. | பயிற்சி உபகரணம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | |
| 2016 சனவரி 1 இல் மீதி | 10,000,000 | 13,661,190 | 23,104,187 | 141,450 | 46,906,828 |
| சேர்ப்பனவுகள் | - | 96,577 | 522,828 | - | 619,406 |
| விற்பனைகள் | - | (217,430) | (1,204,516) | - | (1,421,946) |
| 2016 டிசெம்பர் 31 இல் மீதி | 10,000,000 | 13,540,337 | 22,422,500 | 141,450 | 46,104,286 |
| **திரள் தேய்மானம்** | | | | | |
| 2016 சனவரி 1 இல் மீதி | 3,393,773 | 11,334,176 | 20,763,332 | 141,450 | 35,632,731 |
| ஆண்டிற்கான கட்டணம் | 2,500,000 | 743,315 | 1,015,900 | - | 4,259,214 |
| விற்பனைகள் | - | (214,851) | (1,202,266) | - | (1,417,117) |
| 2016 டிசெம்பர் 31 இல் மீதி | 5,893,773 | 11,862,640 | 20,576,966 | 141,450 | 38,474,829 |
| **2016 டிசெம்பர் 31 இல் குறைக்கப்பட்ட பெறுமதி** | 4,106,227 | 1,677,696 | 1,845,535 | - | 7,629,457 |
| 2016 டிசெம்பர் 31 இல் குறைக்கப்பட்ட பெறுமதி | 6,606,227 | 2,327,013 | 2,340,856 | - | 11,274,097 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. | 31.12.15 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. |
|---|---|---|---|
| **2 காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதிய முதலீடுகளும் ஏனையவையும்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| வாடகை மற்றும் மின்சார வைப்புகள் | | 14,759,880 | 14,759,880 |
| திறைசேரி முறிகள் | | 1,076,659,000 | 1,076,659,000 |
| | | 1,091,418,880 | 1,091,418,880 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| அரச பிணையங்களில் முதலீடு | | 1,049,400,000 | 1,411,999,903 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 922,000,000 | - |
| அரச பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமதிகள் | | 105,241,199 | 59,114,564 |
| வீதவரி வருமதி | 16 | 111,464,812 | 86,800,000 |
| நிதி முகாமைக் கணக்கு மீதி | 17 | - | 952,525 |
| வங்கி மீதி | 17 | 503,267 | 1,071,247 |
| PPE இற்கு மாற்றப்பட வேண்டிய தொகை | | 11,807,206 | - |
| | | 2,200,416,486 | 1,559,938,240 |
| கழி: | | | |
| PPE இலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | | - | 8,159,886 |
| | | 2,200,416,486 | 1,551,778,353 |
| மொத்தச் சொத்துக்கள் | | 3,291,835,366 | 2,643,197,234 |
| **3 தொக்குகள்** | | | |
| அச்சிடுதல், காகிதாதி மற்றும் கணினிப் பொருட்கள் | | 352,633 | 358,832 |
| முத்திரைகள் | | 40,400 | 87,070 |
| | | 393,033 | 445,902 |
| **4 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வைப்புகள் | | 195,363 | 190,744 |
| ஏனைய வருமதிகள் | | 3,106,577 | 309,684 |
| மீட்கத்தக்க நிறுத்தி வைக்கப்பட்ட வரி | | 1,515,446 | 1,208,602 |
| பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாடு | | 1,607,046 | 815,602 |
| வட்டி வருமதிகள் - அரச பிணையங்கள் | | 121,919 | 4,228 |
| அலுவலர் கடன்கள் * | | 5,764,542 | 4,948,645 |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | | 1,062,196 | 1,554,512 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | | 132,365 | - |
| நிதி முகாமைக் கணக்கு மீதி | 17 | 5,643,249 | 4,650,087 |
| PPE இலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | | - | 8,159,886 |
| | | 19,148,704 | 21,841,991 |
| * அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| சனவரி 1 இல் மீதி | | 4,948,645 | 4,911,857 |
| ஆண்டின் காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | | 4,162,000 | 3,232,000 |
| | | 9,110,645 | 8,143,857 |
| ஆண்டின் காலப்பகுதியில் மீள்கொடுப்பனவுகள் | | (3,346,103) | (3,195,212) |
| டிசெம்பர் 31 இல் மீதி | | 5,764,542 | 4,948,645 |
| **5 காசும் காசுச் சமானங்களும்** | | | |
| **வங்கி மீதி** | | | |
| இலங்கை வங்கி | | - | 575,848 |
| காசுக் கையிருப்பு | | 2,301 | - |
| | | 2,301 | 575,848 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. | 31.12.15 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. |
|---|---|---|---|
| **6 காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம்** | | | |
| ஆரம்ப மீதி | | 2,643,197,233 | 2,182,906,773 |
| ஆண்டில் பெறப்பட்ட வீதவரி | 16 | 408,178,592 | 321,747,380 |
| திறைசேரி உண்டியல் முதலீடு மீதான வட்டி | | 2,647,461 | 70,257,878 |
| ரெப்போ மற்றும் அழைப்புக் கணக்கு மீதான வட்டி | | 127,179,906 | 34,917,246 |
| திறைசேரி முறி முதலீடு மீதான வட்டி | | 95,381,313 | 7,036,326 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி | | 3,437,951 | 32,827,399 |
| நிதி முகாமைக் கணக்கு மீதான வட்டி | | 263,804 | 49,800 |
| முறியின் நிகர மிகை | | 12,185,206 | - |
| | | 3,292,471,466 | 2,649,742,802 |
| கழி: | | | |
| தொழிற்பாட்டுச் செலவுகளுக்கான மாற்றங்கள் | | - | 3,513,004 |
| மூலதனச் செலவுகளுக்கான மாற்றங்கள் | | 619,406 | 3,012,711 |
| மொத்த மாற்றங்கள் - காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியம் | | 619,406 | 6,525,714 |
| வங்கிக் கட்டணங்கள் | | 16,695 | 19,855 |
| | | 636,100 | 6,545,569 |
| இறுதி மீதி | | 3,291,835,366 | 2,643,197,233 |
| **7 கொடை** | | | |
| ஆண்டின் ஆரம்ப மீதி | | 4,965,789 | 6,480,560 |
| காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதனச் செலவினம் | | 619,406 | 3,012,711 |
| கழி: ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டவை | | (2,061,963) | (4,527,482) |
| ஆண்டிறுதி மீதி | | 3,523,232 | 4,965,789 |

குறிப்பு - கொடை ஏற்பிசைவு

நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் பின்வரும் வீதங்களில் வருமானமாக கொடை ஏற்பிசைவு செய்யப்பட்டிருக்கும்.
(அதாவது, சம்பந்தப்பட்ட சொத்தின் பயன்தரு காலம் மீதான முறைமை அடிப்படை)

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவையும் EDP யும் | 25% |
| தளபாடப் பொருத்திகளும் பொருத்துதல்களும் | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | 25% |

| | 31.12.16 | 31.12.15 |
|---|---|---|
| **8 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்** | | |
| ஆண்டின் ஆரம்ப மீதி | 8,035,447 | 5,757,098 |
| ஆண்டில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் | 1,807,178 | 2,278,349 |
| (-) ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு | - | - |
| ஆண்டிறுதி மீதி | 9,842,625 | 8,035,447 |
| **9 ஏனைய நடைமுறைப் பரிப்புகள்** | | |
| அட்டுறுவான செலவுகள் | 7,448,565 | 6,169,951 |
| EPF சென்மதிகள் | 654,487 | 660,714 |
| ETF சென்மதிகள் | 98,174 | 99,108 |
| PAYE சென்மதிகள் | 195,330 | 207,889 |
| PPE இற்கு மாற்றப்பட வேண்டிய தொகை | 11,807,206 | - |
| ஏனையவை | 207,115 | 83,003 |
| | 20,410,878 | 7,220,665 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு<br>ரூ. | 31.12.15 இல முடிவடைந்த ஆண்டு<br>ரூ. |
|---|---|---|
| **10 வருமானம்** | | |
| காப்புறுதிக் கம்பனிகளிலிருந்தான வருடாந்தக் கட்டணங்கள் | 125,489,332 | 103,811,505 |
| பதிவு மற்றும் புதுப்பிப்புக் கட்டணங்கள் | 5,482,704 | 9,337,740 |
| | 130,972,036 | 113,149,245 |
| **11 ஏனைய வருமானம்** | | |
| வாகனக் கடன் மீதான வட்டி | 26,129 | 25,583 |
| இடர் கடன் மீதான வட்டி | 146,279 | 142,229 |
| விற்பனை மீதான வருமானம் | 66,590 | 15,028 |
| பல்வகை வருமானம் | 19,371 | 42,537 |
| | 258,370 | 225,376 |
| **12 அலுவலர் கிரயங்கள்** | | |
| அலுவலர்களின் சம்பளங்கள் | 39,765,213 | 38,492,392 |
| ஊழியர் சேமலாப நிதி 12% | 4,775,620 | 4,667,638 |
| ஊழியர் நம்பிக்கை நிதி 3% | 1,193,905 | 1,166,910 |
| தலைவர் - படிகள் | 1,200,000 | 1,004,589 |
| தலைவர் - எரிபொருள் படி | 238,680 | 239,090 |
| சபை அங்கத்தவர்கள் - அமர்வுப் படிகள் | 750,000 | 457,500 |
| உள்ளகப் படி | 225,037 | 91,315 |
| மேலதிக நேரம் | 137,226 | 147,337 |
| அலுவலர்களுக்கான மருத்துவச் செலவுகள் | 1,662,539 | 1,644,315 |
| அலுவலர்களுக்கான மருத்துவக் காப்புறுதி | 920,277 | 839,140 |
| தீ அபாயம் மற்றும் தனிநபர் காப்புறுதி | 367,374 | 483,391 |
| அலுவலர் சேமநலன் | 1,264,417 | 1,513,780 |
| அலுவலர் உள்நாட்டுப் பயிற்சியும் சந்தா பணமும் | 2,021,522 | 1,752,935 |
| சபை அங்கத்தவர்களதும் அலுவலர்களதும் வெளிநாட்டுப் பயிற்சியம் பயணமும் | 8,370,750 | 8,144,101 |
| செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்புகள் | 2,072,650 | 2,047,954 |
| ஆட்சேர்ப்பு விளம்பரம் | 137,520 | 223,620 |
| பணிப்பாளர்களின் வதிவிட தொலைபேசி | 300,613 | 220,950 |
| லீவுக்கான பணக்கொடுப்பனவு | 758,115 | 637,964 |
| பணிப்பாளர்களுக்கான வாகனப் படிகள் | 3,000,000 | 3,291,096 |
| பணிப்பாளர்களுக்கான எரிபொருள் படிகள் | 893,680 | 861,154 |
| அலுவலர் பணிக்கொடை | 1,807,178 | 2,278,349 |
| | 71,862,315 | 70,205,520 |
| **13 தொழில்சார் கட்டணங்கள்** | | |
| ஆலோசனைக் கட்டணம் | 2,801,156 | 2,388,225 |
| | 2,801,156 | 2,388,225 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | 31.12.16 இல் முடிவடைந்த ஆண்டு ரூ. | 31.12.15 இல முடிவடைந்த ஆண்டு ரூ. |
|---|---|---|
| **14 தொழிற்பாட்டுச் செலவுகள்** | | |
| வாடகை | 29,495,421 | 27,740,409 |
| வாகன நிறுத்தல் கட்டணங்கள் | 384,743 | 345,621 |
| தொலைபேசிக் கட்டணங்களும் இணையமும் | 1,686,159 | 1,567,818 |
| மின்சாரம் | 1,315,853 | 1,327,103 |
| அலுவலகப் பராமரிப்பு | 617,424 | 402,472 |
| அச்சிடலும் காகிதாதியும் | 1,328,183 | 2,990,021 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு | 2,922,135 | 3,769,091 |
| உபசரிப்பு | 54,591 | 91,770 |
| உள்நாட்டுப் பயணங்கள் | 105,542 | 102,658 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு EDP யும் ஏனையவையும | 1,216,309 | 1,030,533 |
| IAIS இன் சர்வதேச அங்கத்துவம் (CHF 14,200) | 2,717,637 | 2,541,784 |
| விளம்பரம் - ஏனையவை | 31,040 | - |
| கூட்டச் செலவுகள் | 705,435 | 1,812,680 |
| சந்தா - பத்திரிகை மற்றும் நூலகப் புத்தகங்கள் | 126,414 | 122,768 |
| தபால் மற்றும் பார்சல் அனுப்பும் கட்டணங்கள் | 207,402 | 187,740 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - கணக்காய்வாளர் நாயகம் | 223,500 | 43,800 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - உள்ளகக் கணக்காய்வு | - | (1,035,000) |
| தேய்மானம் | 4,259,214 | 5,214,297 |
| வியாபார வரி | - | (17,000) |
| பொதுச் செலவுகள் | 118,475 | 144,618 |
| சட்டச் செலவுகள் | 8,040 | 205,069 |
| விசாரணைச் செலவுகள் | 6,798 | 19,314 |
| மேற்பார்வைச் செலவுகள் | - | 199,018 |
| வாகனப் பராமரிப்பு | 494,627 | 77,159 |
| வாகனக் காப்புறுதி | 130,859 | 229,143 |
| வாகன ஓட்டக் கட்டணங்கள் | 202,343 | 185,783 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 674,276 | 688,075 |
| | 49,032,420 | 49,986,744 |
| **15 நிதியும் ஏனைய செலவுகளும்** | | |
| வங்கிக் கட்டணங்கள் | 150,126 | 206,872 |
| | 150,126 | 206,872 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 16. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்தான (NITF) நிலுவைகள்

2016 ஆம் ஆண்டிற்காக என்.ஐ.டி.எப். இலிருந்து பெறப்படவேண்டிய வீதவரி (Cess) வருமானம் உள்ளிட்ட வீதவரித் தொகை ரூ. 11,225,235/- ஆகும்.

கூறப்பட்ட மதிப்பீட்டுத் தொகையானது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக, என்.ஐ.டி.எப். இடமிருந்தான சராசரி வீதவரிப் பெறுவனவுகளுக்குச் சேர்க்கப்படும் 10% அதிகரிப்பு காரணமாக வந்ததாகும். இலங்கை காப்புறுதி சபையானது என்.ஐ.டி.எப். இடமிருந்து காலாண்டு அடிப்படையில் வீதவரியைப் பெற்றுக்கொள்வதில்லை.

## 17.

இலங்கை காப்புறுதி சபையானது தமது இரண்டு நடைமுறைக் கணக்குகளையும் (சபைக்கானது மற்றும் PPE) தொடர்புபடுத்தி இரண்டு நிதி முகாமைக் கணக்குகளைச் செயற்படுத்துகிறது. அதற்கிணங்க, நடைமுறைக் கணக்குகளில் (வங்கிப் பதிவுகளில்) மேலோங்கியிருந்த மேலதிக சாதகமான மீதியான ரூ. 1,000,000/- ஆனது நிதி முகாமைக் கணக்குகளுக்குத் தன்னியக்கமாகவே மாற்றப்படும். எனவே, இலங்கை காப்புறுதி சபையினால் ஏலவே வழங்கப்பட்ட காசோலைகள் உடனடியாகச் சமர்ப்பிக்கப்படாது என்பதுடன் பேரேட்டில் காணப்படும் வங்கி மீதியானது நிதி முகாமைக் கணக்குகளுடன் ஊடுசெயல்களைப் பதிவுசெய்ததன் பின்னர் மறைப் பெறுமானத்தைக் காட்டலாம்.

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மீதிகள் பின்வருமாறு :

சபை - ரூ. 984,287/27

PPF - ரூ. 03,267/39

## 18. வரிவிதிப்பு

வருமான வரிக்கான ஏற்பாடு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்டுள்ளது.

## 18.1 இரண்டாம்நிலைச் சந்தை ஊடுசெயல்கள் தொடர்பான அரச பிணையங்கள் மீது நிறுத்தி வைத்தல் வரிக்கான உத்தேசக் கடன்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 137 இன் ஏற்பாடுகளின் அடிப்படையில், மதிப்பீட்டு ஆண்டிற்கான சபையின் நியதிச்சட்ட வருமானத்தின் ஒரு பகுதியாகவுள்ள, இரண்டாம்நிலைச் சந்தை ஊடுசெயல்களிலிருந்து அரச பிணையங்கள் வழங்கிய வட்டி வருமானத்திற்கான ஒரு உத்தேச வரிக் கடனுக்கு சபையானது உரித்துடையதாக இருக்கிறது. அதற்கிணங்க, அரச பிணையங்களிலுள்ள இரண்டாம்நிலைச் சந்தை ஊடுசெயல்களிலிருந்து சபையினால் சம்பாதிக்கப்பெற்ற நிகர வருமானம் நிதிக் கூற்றுக்களில் கூட்டப்பட்டிருப்பதுடன் இதன் விளைவாக 2016 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரிக் கடன் தொகையான ரூ.289,286/21 ஆனது 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டிருக்கிறது. காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு நிதியத்தின் அரச பிணையங்களது இரண்டாம்நிலைச் சந்தை ஊடுசெயல்களிலிருந்தான வட்டி வருமானம் நிகரப் பெறுமதியில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## 19. மூலதனப் பரிப்பு

2016 டிசெம்பர் 31 இல் உள்ளதன்படி எவ்வித மூலதனப் பரிப்புகளும் காணப்படவில்லை.

## 20. எதிர்பாரா பரிப்புகள்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளபடி எதிர்பாரா பரிப்புகள் எதுவும் காணப்படவில்லை.

## 21. அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதியின் பின்னர் செம்மையாக்கங்களைச் செய்யத் தேவையான அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தத் தேவையான எவ்வித சந்தர்ப்பங்களும் எழவில்லை.

## 22. சம்பந்தப்பட்ட தரப்பினரின் வெளிப்படுத்துகைகள்

திருமதி. இந்திராணி சுகததாச (தலைவர்), திரு. பி. சமரசிறி, திரு. டி.என்.ஆர். சிறிவர்த்தன (பதவி வழி உறுப்பினர்கள்), திரு. ஜெரமி போலிங் மற்றும் கலாநிதி. அலி அஸ்ஹர் சாபிர் குலம்ஹுசைன் ஆகியோர் 2016 ஆம் ஆண்டு முழுவதும் சபை அலுவலகத்தை நடத்தியிருந்தனர்.

செல்வி. புஷ்பா வெல்லப்பிலி அவர்கள் 2016 மார்ச் 31 இல் சபையின் பதவிவழி உறுப்பினராக இருந்தது முடிவடைந்திருந்ததுடன் திரு. ஏ.ஆர். தேசப்பிரிய 2016 யூன் 08 ஆந் திகதி பதவிவழி உறுப்பினராக கடமையை ஏற்றுக்கொண்டார்.

பின்வரும் அட்டவணையானது ஆண்டின் காலப்பகுதியில் சபை அங்கத்தவர்களால் நடத்தப்பட்ட நிறுவனங்களையும் அதில் அவர்களது பதவிநிலையையும் காட்டுகிறது.

சந்தை வீதங்களில் வியாபாரத்தின் சாதாரண போக்கிலான ஊடுசெயல்கள்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| அங்கத்தவர் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | பதவிநிலை |
|---|---|---|
| திருமதி. இந்திராணி சுகததாச | வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை | பணிப்பாளர் |
| | தேசிய அபிவிருத்தி வங்கி | பணிப்பாளர் |
| செல்வி. புஷ்பா வெல்லப்பிலி | இலங்கை வங்கி | நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர் (2016 மார்ச் 30 வரை) |
| | இலங்கை மேர்க்கன்ட் வங்கி | நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர் (2016 மார்ச் 1 முதல் 30 வரை) |
| திரு. ஏ.ஆர். தேசப்பிரிய | பிரதேச அபிவிருத்தி வங்கி | சபை உறுப்பினர் (2016 யூலை 14 இலிருந்து) |
| | நலன்புரி நன்மைகள் சபை | சபை உறுப்பினர் (2016 யூலை 12 இலிருந்து) |
| திரு. பி. சமரசிறி | இலங்கை வங்கியியலாளர் நிறுவனம் | தலைவர் |
| | இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | தலைவர் |
| | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு | அங்கத்தவர் |
| | "அபி வெனுவென் அபி" பாதுகாப்பு அமைச்சின் கீழான முகாமைச் சபை | அங்கத்தவர் |
| திரு. டி.என்.ஆர். சிறிவர்த்தன | இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | அங்கத்தவர் |
| | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு | அங்கத்தவர் |
| | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் | அங்கத்தவர் |
| திரு. ஜெரமி போலிங் | ஒக்டாகொன் கன்செல்ட்டன்ஸ் பிரை. லிமிட் | பணிப்பாளர் |
| | என்.எச்.ஜே. இடர் முகாமைத்துவ சேவைகள் பிரை. லிமிட். | பணிப்பாளர் |
| | என்ட்லெஸ் அவுட்டோர்ஸ் பிரை.லிமிட். | பணிப்பாளர் |
| கலாநிதி. அலி அஸ்ஹர் சாபிர் குலம்ஹுசைன் | ஆதும்ஸ் கெப்பிட்டல் பிஎல்சி., | பணிப்பாளர் |
| | சிலோன் அன்ட் / பொறின் டிரேட்ஸ் பிஎல்சி., | பணிப்பாளர் |
| | வர்த்தக வியாபார சம்மேளனம், | பணிப்பாளர் |
| | இலங்கை துணி மற்றும் ஆடைகள் நிறுவனம், | பணிப்பாளர் |
| | ஆதும் எக்ஸ்போ (பிரை) லிமிட்., | பணிப்பாளர் |
| | ஆதும் காபண் லிமிட்டெட், | பணிப்பாளர் |
| | ஆதும் கெப்பிட்டல் மைக்ரோ கிரடிட் (பிரை.) லிமிட். நெட்வேர்க் கொமியுனிகேசன் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | ஆதும் மெட்டல் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | ஆதும் கோப்பரேட் செக்கரட்ரியல் (பிரை.) லிமிட். | பணிப்பாளர் |
| | ஆதும் எயார் கண்டிஷனர்ஸ் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | ஆதும் அப்பரல் (பிரை.) லிமிட். | பணிப்பாளர் |
| | ஆதும் ஆட்டோமொபைல்ஸ் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | வெல்வின் (பிரை.) லிமிட். | பணிப்பாளர் |
| | ஜியோர்ஜியோ மொரண்டி (பிரை.) லிமிட். | பணிப்பாளர் |
| | ஸ்பைஸ் ஒப் லைவ் (பிரை.) லிமிட், | பணிப்பாளர் |
| | சிலோன் மற்றும் / பொறின் செர்ஜிடெக் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | கொழும்பு அப்போதகறீஸ் (பிரை.) லிமிட்., | பணிப்பாளர் |
| | வரையறுக்கப்பட்ட கொழும்பு சரக்கு மற்றும் போக்குவரத்துக் கம்பனி, | பணிப்பாளர் |
| | | பணிப்பாளர் |
| | டொட்வெல் அன்ட் கம்பனி லிமிட்டெட் | பணிப்பாளர் |
| | ஹமில்டன் றிசோட் (பிரை.) லிமிட். | பணிப்பாளர் |

தவிர ஆண்டின் காலப்பகுதியில் மேலே கூறப்பட்ட நிறுவனங்களுடன் வேறு ஊடுசெயல்கள் எவையும் இலங்கை காப்புறுதி சபையினால் பதிவுசெய்யப்படவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. } TRE/C/IBSL/FS/2016 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. } | දිනය<br>திகதி<br>Date } 14 September 2017 |

## 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 14(2)(சீ) இன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை காப்புறுதிச் சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை காப்புறுதிச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்வுக் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு ஆகியன 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிற்றுறையை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 யூன் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து, நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறித் தேவைப்பாடுகளுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையாக இருப்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணக்காய்வானது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் தேவைப்படுத்துகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகிறது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று இடர்களின் மதிப்பீட்டை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானத்தின் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அத்தகைய இடரினை மதிப்பீடு செய்கையில், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் பொருட்டு சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டினை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கிறாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைதிறன்மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

முன்வைப்பினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றையும்கூட கணக்காய்வு உள்ளடக்குகிறது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள், கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயம் செய்வதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிப்புள்ளதாக்கப்படுகிறது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களானவை இலங்கை காப்புறுதிச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்வு ஆகியவற்றையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) சபையின் வருமானத்தை ஏற்பிசைவு செய்வது அட்டுறு அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்து 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகள் தொடர்பில் நிலுவையாகக் காணப்பட்ட வருடாந்தக் கட்டணத் தொகை ரூ.2,894,316 உம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை நிலுவையாக இருந்த செஸ் வரி வருமானத் தொகை ரூ.29,429,323 உம் சேர்ந்து மொத்தமாக மீளாய்வு ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூ.32,323,639 தொகையை முன்னைய ஆண்டுகளின் வருமானமாக ஏற்பிசைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வு ஆண்டிற்கான வருமானம் ஒன்றாகக் கணக்கில் எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் பணிப்புகளுக்கு இணங்க பொது மற்றும் நீண்ட காலம் என வேறாகப் பதிவுசெய்யும் தேவைக்கான பதிவுக் கட்டணமாக 2015 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் 03 நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூ.1,500,000 தொகையில் சரியான தொகையினை சபையின் வருமானமாக ஏற்பிசைவு செய்வதற்கு முன் முற்பணப் பெறுகைக் கணக்கில் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டு சுகாதாரக் காப்புறுதி நடவடிக்கைகளுக்கான இடையீட்டாளர் ஒருவராகச் செயற்படுவதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக நிறுவனம் ஒன்றிலிருந்து 2016 ஆகஸ்டில் கிடைத்திருந்த ரூ.500,000 இலிருந்து மீளாய்வு ஆண்டின் 93 நாட்களுக்குரிய வருமானமாகிய ரூ.127,397 தொகை கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதிவுக் கட்டணமாக 2015 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்த ரூ.500,000 தொகையில் அடங்கியிருந்த 2017 சனவரி மாதத்திற்கான ரூ.43,836 தொகை மீளாய்வு ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 2.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (a) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குபடுத்தும் சட்டம் | |
| (i) 13(1)(இ) ஆம் பிரிவு | வைப்புகள் என விதிகள் மூலம் சபையினால் முடிவு செய்யப்படும் ஏதேனும் ஒரு தொகையினை அந்த நபரினால் திறைசேரிக்கு செலுத்தப்பட்டாலே தவிர, அந்த நபர் இலங்கையில் காப்புறுதித் தொழில் ஒன்றினை நடாத்துவதற்காக பதிவு செய்யப்படக்கூடாது எனினும், 10 நிறுவனங்கள் தொடர்பாக அத்தேவை நிறைவேற்றப்பட்டிருந்ததாக கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 38(1)(ஆ) ஆம் பிரிவு | தனியாக அல்லது பொதுவான காப்புறுதித் தொழிலுக்கு மேலதிகமாக, நீண்ட கால காப்புறுதித் தொழிலை நடாத்திச் செல்லும் அனைத்து காப்புறுதி வழங்குநரினாலும் நீண்ட கால காப்புறுதித் தொழில் தொடர்பான சொத்துக்களை, வேறு ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த காப்புறுதித் தொழில் தொடர்புடைய சொத்துக்களில் இருந்து வேறாக வைத்திருக்க வேண்டியிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்டிருந்த 12 காப்புறுதிக் கம்பனிகளில் 03 கம்பனிகள் இதுவரை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) 49(ஆ) ஆம் பிரிவு | குறிப்பிட்ட விடயத்திற்காக ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் முடிவு செய்யப்பட்ட ஏதேனும் தகவல்கள் அடங்கிய காலாண்டு அறிக்கையொன்றினை சபைக்கு வழங்க வேண்டுமெனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின்படி, காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர் கம்பனிகளின் காலாண்டு அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன |
| (M) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், சபையினால் வருடாந்த அறிக்கையின் வரைவு 2017 மே 30 திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.14 ஆம் பந்தி | நிருவாகக் கைந்நூல் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பித்து இணக்கப்பாடு பெற வேண்டுமெனினும், அக்கைந்நூல் கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே 30 திகதி அளவில் திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பித்திருந்தபோதிலும் இணக்கப்பாடு கிடைத்திருக்கவில்லை. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் வரிக்கு முன்னரான மிகை ரூ. 373,480 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூ. 187,126 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூ. 186,354 இனால் முன்னேற்றமடைந்துள்ளது. ஆண்டின்போது காப்புறுதிப் பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு செய்யப்பட்ட ரூ.12,185,206 இற்கான மாற்றியவைகளை செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் சபையின் மொத்தச் செலவுகளும் ரூ.13,243,862 இனால் அதாவது 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்தபோதிலும், சபையின் பிரதான வருமானமாக காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து கிடைத்திருந்த வருடாந்த கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள் மற்றும் புதுப்பித்தல் கட்டண வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூ. 17,822,791 இனால் அதாவது 16 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு முக்கியமான காரணமாயிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும்போது எல்லா வருடங்களிலும் சபையின் வரிக்கு முன்னரான மிகை அதிகரித்திருந்தது, அவ் அதிகரிப்புக்கு ஊழியர் ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கப்பட்டபோது நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டின்போது ரூ. 36,425,902 இற்கான பங்களிப்பு ஒன்றினை வழங்கியிருந்தது. அது தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின்போது ரூ.89,053,695 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறையை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி, சபை ஆக்கப்பட்ட குறிக்கோள் இலங்கை காப்புறுதித் தொழில், கௌரவமானதாகவும் காப்புறுதிச் சான்றிதழ்கள் வைத்திருப்போரின் மற்றும் எதிர்காலத்தில் காப்புறுதிச் சான்றிதழ்கள் வைத்திருக்கவுள்ளோரின் நாட்டங்களைப் பாதுகாக்கும் தொழில்சார் மற்றும் கைதேர்ந்த முறையிலும், நடத்தப்பட்டு வருவதனை பொறுப்பேற்றலாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புதிய பதிவு ஒன்று தொடர்பாக காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து 2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி சபைக்கு ரூ. 500,000 தொகை ஒன்று கிடைத்திருந்தபோதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பதிவுசெய்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காப்புறுதிச் சான்றிதழ்கள் வைத்திருப்போரின் மற்றும் எதிர்காலத்தில் காப்புறுதிச் சான்றிதழ்கள் வைததிருக்கவுள்ளோரின் நாட்டத்தினைப் பாதுகாத்தல் சபையின் நியதிச் சட்டப் பொறுப்பொன்றாக இருந்தமையால் காப்புறுதிதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் காப்புறுதி உரிமைக் கோரிக்கை ஒன்று தொடர்பான பிணக்கு ஒன்றின்போது அதனை விசாரணை செய்யும் நியதிச்சட்ட அதிகாரம் சபைக்கு உரித்தானது. எனினும் 2016 ஆம் ஆண்டின்போது கிடைத்திருந்த 353 முறைப்பாடுகளில் 44 முறைப்பாடுகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

(இ) 2009 ஆம் ஆண்டின்போது சபையினால் இடைநிறுத்தல் கட்டளை ஒன்று விதித்திருந்த கம்பனி ஒன்று தொடர்பாக உயர் நீதிமன்ற கட்டளை மீது உண்மையான காப்புறுதி உரிமை கோரலை முறைசார் விதமாக தீர்ப்பதற்காக அந்தக் கம்பனியின் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக சபை கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 யூன் 29 திகதி வரை அந்த தீர்த்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 யூன் 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின்மீது சேதப் பெறுமதி மதிப்பீட்டாளர்களை பதிவுசெய்யும் விதியினை அங்கீகாரத்திற்காக சட்டவரைஞருக்கு அனுப்பியிருந்த போதிலும், 2017 ஏப்ரல் 17 திகதி வரை அந்த விதி அங்கீகரிக்கப்பட்டதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த, சேத பெறுமதி மதிப்பீட்டாளர் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்து 02 மாதங்களுக்குள் அவற்றின் மீளாய்வு விடயங்கள் மேற்கொள்ளல் நடைபெற்றிருக்கவில்லை.

(உ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஏப்ரல் 17 திகதி வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

(ஊ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்தின் பிரகாரம், காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்பவர்களின் பாதுகாப்பு நிதியம் என நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியத்திற்கு செஸ் வரியில் இருந்து சேர்ந்து திரண்ட பணத்தை செலவு வைப்பதன் மூலம் நிதியத்திற்காக பணம் உழைக்கப்படுகின்றது. அச்சட்டத்தின் பிரிவு 103(3) இன் பிரகாரம், நிதியத்தின் உடனடியாக தேவைப்படாத பணத்தை நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூ. 3,291,835,366 இற்கான நிதியத்தின் மீதியில் 64 சதவீதம் குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் பணத்தினைச் செலவு செய்தல் தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

தேவையினை கவனத்தில் எடுக்காமல் பாரிய கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு சபையின் வருடாந்த அறிக்கைகளின் பாரிய எண்ணிக்கையான பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தமையால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின்போது அறிக்கைப் பிரதிகள் முறையே 162 மற்றும் 117 என்பன விநியோகிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 4.3 தாமதமாகிய செயற்றிட்டங்கள்

மொத்த மதிப்பீடு ரூ. 3 மில்லியனுக்கான சபையின் கணினி முறைமை செயற்பாட்டு அறைக்காக குளிரூட்டல் முறைமையொன்றைப் பொருத்துவதற்கு பொறியியல்சார் விடயங்களுக்கான மத்திய ஆலோசனை பணியகத்துடன் 2016 மே மாதம் 11 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு 2016 யூன் 07 ஆம் திகதி ரூ.50,000 தொகைக்கான முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி, உடன்படிக்கை செயற்படுத்தப்படும் நாள் முதல் 20 வார காலப்பகுதியில் அதாவது 2016 அக்டோபர் மாதம் அளவில் அந்த சேவை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 யூன் 20 ஆந் திகதி வரை சேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட 06 பதவிகளில் உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு முகாமையாளர் பதவியொன்றும் 2017 ஆகஸ்ட் வரையும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இதுவரை சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிருவாக கைந்நூலில் அவை அடங்கியுள்ளதென சபையால் கணக்காய்வுக்கு அறிவித்திருந்தபோதிலும், அந்த நிருவாகக் கைந்நூலுக்கும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(இ) சபையினால் 2016 சனவரி 01 ஆந் திகதி ஆயுள்காலமுறைக் கணிப்பீட்டு முகாமையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 09 ஆந் திகதி பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் மனித வள அபிவிருத்தி) நாயகத்தின் அங்கீகாரக் கடிதத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்ற பின்னர், அவ் ஏற்பாடுகளுக்கு இணங்க முறைசார் விதமாகவும் வெளிப்படையான தன்மையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 03 பதவிகளுக்காக 2017 ஆகஸ்ட் மாதம் வரையும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்காத நிருவாகக் கைந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பிரகாரம், சம்பளங்கள் மற்றும் படிகள் என்பன செலுத்தப்பட்டிருந்தன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 5. பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகளை, நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்யும்போது 100 சதவீதம் முதல் 246 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (a) நிதிக் கட்டுப்பாடு | (i) காப்புறுதிப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்காக முறையாக நடைமுறை ஒன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. |
| | (ii) நிதியத்தின் பணம் நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமை |
| | (iii) உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் முற்பணங்களைத் தீர்த்தல் துரிதமாக நடைபெற்றிருக்காமை |
| (b) வருமானக் கட்டுப்பாடு | (i) சபையின் கணக்கீட்டுக் கொள்கையின் மீது வருமானங்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | (ii) வருமானங்களை இனங்காண்பதில் தாமதம் காணப்பட்டமை |
| (c) ஆளணி நிருவாகம் | ஆட்சேர்ப்பு நடைபெறும்போது வெளிப்படைத்தன்மை இன்றி குறிப்பிட்ட தெரிவுசெய்தல் நடைபெறல் |



**எச்.எம். காமினி விஜேசிங்க**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

<table>
<tr><th></th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</th><th>IBSL இன் பதில்கள்</th></tr>
<tr><td>2.2</td><td>நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</td><td></td></tr>
<tr><td>2.2.1</td><td>கணக்கீட்டுக் கொள்கைகள்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.</td><td></td></tr>
<tr><td>(அ)</td><td>சபையின் வருமானத்தை ஏற்பிசைவு செய்வது அட்டுறு அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்து 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகள் தொடர்பில் நிலுவையாகக் காணப்பட்ட வருடாந்தக் கட்டணத் தொகை ரூ.2,894,316 உம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை நிலுவையாக இருந்த செஸ் வரி வருமானத் தொகை ரூ.29,429,323 உம் சேர்ந்து மொத்தமாக மீளாய்வு ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூ.32,323,639 தொகையை முன்னைய ஆண்டுகளின் வருமானமாக ஏற்பிசைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வு ஆண்டிற்கான வருமானம் ஒன்றாகக் கணக்கில் எடுக்கப்பட்டிருந்தது.</td><td>என்.ஐ.டி.எப். இலிருந்து கிடைக்கப்பெற்ற வருடாந்தக் கட்டணங்கள் மற்றும் செஸ் வரி நிலுவைத் தொகைகளின் விபரங்கள் பின்வருமாறு:
<table>
<tr><th>ஆண்டு</th><th>வருடாந்தக் கட்டணம் (ரூ.)</th><th>செஸ் (ரூ.)</th></tr>
<tr><td>2011</td><td>462,615</td><td>2,496,241</td></tr>
<tr><td>2012</td><td>602,571</td><td>3,350,105</td></tr>
<tr><td>2013</td><td>629,123</td><td>6,497,002</td></tr>
<tr><td>2014</td><td>1,218,188</td><td>12,027,470</td></tr>
<tr><td>2015</td><td>3,006,867</td><td>8,382,047</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>5,919,364</td><td>32,752,865</td></tr>
<tr><td>வரிகள்</td><td>785,222</td><td>-</td></tr>
<tr><td>மொத்தத் தொகை</td><td>6,704,586</td><td>32,752,865</td></tr>
<tr><td>முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றவை</td><td>(3,357,209)</td><td>(7,668,309)</td></tr>
<tr><td>கிடைக்க வேண்டிய தொகை</td><td>3,347,377</td><td>25,084,556</td></tr>
<tr><td>2016 இல் கிடைத்தவை</td><td>3,347,377</td><td>28,976,263</td></tr>
<tr><td>மிகையாகச் செலுத்தப்பட்டவை</td><td>-</td><td>* 3,891,707</td></tr>
</table>
* என்.ஐ.டி.எப். உடனான ஒப்புதல் காரணமாக 2016 ஆம் ஆண்டிற்கான செஸ் வருமானத்தின் ஒரு பகுதியாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருந்தது.<br><br>
IBSL ஒவ்வொரு கணக்கீட்டு ஆண்டிலும் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெற்ற / பெறத்தக்க வருடாந்தக் கட்டணங்கள் மற்றும் செஸ் வருமானங்களை ஏற்பிசைவு செய்திருந்ததால், முன்னைய ஆண்டுகளில் என்.ஐ.டி.எப். இடமிருந்து கிடைக்கப்பெற்ற செஸ் மற்றும் வருடாந்தக் கட்டணங்கள், பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இல. 03 இற்கு அமைய, மதிப்பீடுகளின் மாற்றமொன்றாகக் கருத்திலெடுக்கப்பட்டதன் காரணமாக நடப்பு ஆண்டு வருமானத்திற்காகச் செம்மையாக்கம் செய்யப்பட்டது.<br><br>
இந்த நியமத்தின் படி, மதிப்பீடுகளின் மாற்றமானது மதிப்பீட்டு ஆண்டிற்காக செம்மையாக்கம் செய்யப்பட முடியும். அதற்கிணங்க, முன்னைய ஆண்டுகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தொகைகள் மீளாய்வு ஆண்டிற்காகச் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனவே, இது தொடர்பில் முன்னைய ஆண்டு வருமானத்தை செம்மையாக்கம் செய்வதற்கான அவசியமில்லை.<br><br>
மேலும், இதேபோன்ற விடயம் 2017 அக்டோபர் 11 ஆந் திகதி நடைபெற்ற 3 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் விபரமாக விபரிக்கப்பட்டு, சொல்லப்பட்ட செம்மையாக்கம் SLPSAS 3 இற்கு இணக்கமாகச் செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டது.</td></tr>
</table>

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| **2.2.1** | **கணக்கீட்டுக் கொள்கைகள்** | |
| (ஆ) | சபையின் பணிப்புகளுக்கு இணங்க பொது மற்றும் நீண்ட காலம் என வேறாகப் பதிவுசெய்யும் தேவைக்கான பதிவுக் கட்டணமாக 2015 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் 03 நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூ.1,500,000 தொகையில் சரியான தொகையினை சபையின் வருமானமாக ஏற்பிசைவு செய்வதற்கு முன் முற்பணப் பெறுகைக் கணக்கில் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருந்தது. | தேறுகை எண்ணக்கருவின்படி, சொல்லப்பட்ட மூன்று கம்பனிகளினதும் பதிவுகளை சபை உறுதிப்படுத்தும் வரை பதிவுக் கட்டணமானது ஒரு வருமானமாக ஏற்பனவு செய்யப்பட முடியாது. எனவே, அது முற்பணப் பெறுகைக் கணக்கில் பேணப்படல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு சுகாதாரக் காப்புறுதி நடவடிக்கைகளுக்கான இடையீட்டாளர் ஒருவராகச் செயற்படுவதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக நிறுவனம் ஒன்றிலிருந்து 2016 ஆகஸ்டில் கிடைத்திருந்த ரூ.500,000 இலிருந்து மீளாய்வு ஆண்டின் 93 நாட்களுக்குரிய வருமானமாகிய ரூ.127,397 தொகை கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட பதிவின் மொத்தக் காலப்பகுதியில் 8 இலிருந்து 9 மாதங்களுக்கு மேற்பட்டவை ஒரு கணக்கீட்டு / நாட்காட்டி ஆண்டினுள் இருக்குமாயின் IBSL ஆனது சாதாரணமாக, பதிவு வழங்கப்படுகின்ற ஆண்டின் ஒரு வருமானமாக முழுத் தொகையையும் ஏற்பிசைவு செய்கிறது. அதற்கிணங்க, (இ) மற்றும் (ஈ) என்பன முறையே 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஓர் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டன.<br><br>அவதானிப்புகளை கருத்திலெடுத்ததன் பின்னர், எதிர்காலத்தில், வழங்கப்பட்ட பதிவுக் காலப்பகுதி தொடர்பில் எங்களால் விகிதசம அடிப்படையில் வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| (ஈ) | பதிவுக் கட்டணமாக 2015 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்த ரூ.500,000 தொகையில் அடங்கியிருந்த 2017 சனவரி மாதத்திற்கான ரூ. 43,836 தொகை மீளாய்வு ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | |
| **2.3** | **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்** | |
| (அ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறையை ஒழுங்குபடுத்தும் சட்டம் | |
| (i) | பிரிவு 13(1)(இ)<br><br>வைப்புகள் என விதிகள் மூலம் சபையினால் முடிவு செய்யப்படும் ஏதேனும் ஒரு தொகையினை அந்த நபரினால் திறைசேரிக்கு செலுத்தப்பட்டாலே தவிர, அந்த நபர் இலங்கையில் காப்புறுதி வியாபாரம் ஒன்றினை நடாத்துவதற்காக பதிவு செய்யப்படக்கூடாது எனினும், 10 நிறுவனங்கள் தொடர்பாக அத்தேவை நிறைவேற்றப்பட்டிருந்ததாக கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 10 நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் 2016.06.06 ஆந் திகதிய IBSL இன் கடிதத்துடன் ஓர் இணைப்பாக கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன், அவ்விபரங்கள் 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் 13.7.A இற்காக 2017.09.15 ஆந் திகதிய IBSL இன் பதிலுடன்கூட கணக்காய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தன. |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| (ii) | பிரிவு 38(1)(ஆ)<br><br>தனியாக அல்லது பொதுவான காப்புறுதி வியாபாரத்திற்கு மேலதிகமாக, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை நடாத்திச் செல்லும் அனைத்து காப்புறுதி வழங்குநரினாலும் நீண்ட கால காப்புறுதித் தொழில் தொடர்பான சொத்துக்களை, வேறு ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த காப்புறுதி வியாபாரம் தொடர்புடைய சொத்துக்களில் இருந்து வேறாக வைத்திருக்க வேண்டியிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்டிருந்த 12 காப்புறுதிக் கம்பனிகளில் 03 கம்பனிகள் இதுவரை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாட்டுடன் 3 இல் 2 காப்புறுதிக் கம்பனிகள் இணக்கமாகியிருக்காததன் காரணமாக பதிவுடன் வழங்கியிருக்கவில்லை.<br><br>எஞ்சிய கம்பனி, எதிர்காலத்தில் தமது வியாபாரத்தை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கின்றனர். |
| (iii) | பிரிவு 49(டி)<br><br>குறிப்பிட்ட விடயத்திற்காக ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் முடிவு செய்யப்பட்ட ஏதேனும் தகவல்கள் அடங்கிய காலாண்டு திரட்டொன்றினை சபைக்கு வழங்க வேண்டுமெனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின்படி, காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர் கம்பனிகளின் காலாண்டுத் திரட்டுகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | உரிய திகதியில் தமது காலாண்டுத் திரட்டுகளை சபைக்குச் சமர்ப்பிக்காத காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கைகள் | |
| (i) | பிரிவு 6.5.1<br><br>நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், சபையினால் வருடாந்த அறிக்கையின் வரைவு 2017 மே 30 திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை காப்புறுதிச் சபை சகல காப்புறுதிக் கம்பனிகள் தொடர்பான தகவல்களையும் கேட்டிருந்ததுடன் அத்தகைய தொடர்புடைய தகவல்கள் ஏப்ரல் மாதக் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றிருந்தன. எனவே, ஆண்டின் 60 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னர், வருடாந்த நிதிக் கூற்றுக்களுடனான வருடாந்த அறிக்கையின் வரைவினை சமர்ப்பிப்பது நடைமுறை ரீதியில் கடினமானதாக இருக்கிறது. இது தொடர்பில் ஏற்கனவே அறிவித்திருந்ததுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. இது தொடர்பான எங்களது IBSL/DG/FAD/5/49/16/07/329 இலக்கமும் 22/07/2017 திகதியும் இடப்பட்ட கடிதத்தையும் அதற்கான உமது TRE/C/IBSL/2015/INFO/18 இலக்க பதில் கடிதத்தையும் தயவுசெய்து பார்வையிடவும்.<br><br>வருடாந்த அறிக்கை வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் அதன் பதிப்பிப்பு முடிவடைந்ததும் அதன் பிரதியொன்றை தங்களுக்கு அனுப்புகிறோம். |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| (ii) | பிரிவு 9.14<br><br>நிருவாகக் கைந்நூல் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பித்து இணக்கப்பாடு பெற வேண்டுமெனினும், அக்கைந்நூல் கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே 30 திகதி அளவில் திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பித்திருந்தபோதிலும் இணக்கப்பாடு கிடைத்திருக்கவில்லை. | இலங்கை காப்புறுதிச் சபையின் நிருவாகக் கைந்நூல் சபை உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் 2017.03.30 ஆந் திகதி திறைசேரிச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பான நினைவூட்டலும் 2017.08.18 இல் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டது.<br><br>IBSL ஆனது அமைச்சின் செயலாளரிடமிருந்து அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காகக் காத்திருக்கிறது. |
| **3.** | நிதி மீளாய்வு | |
| **3.1** | நிதிசார் விளைவுகள் | |
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் வரிக்கு முன்னரான மிகை ரூ. 373,480 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூ.187,126 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூ. 186,354 இனால் முன்னேற்றமடைந்துள்ளது. ஆண்டின்போது காப்புறுதிப் பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு செய்யப்பட்ட ரூ.12,185,206 இற்கான மாற்றியவைகளை செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் சபையின் மொத்தச் செலவுகளும் ரூ.13,243,862 இனால் அதாவது 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்தபோதிலும், சபையின் பிரதான வருமானமாக காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து கிடைத்திருந்த வருடாந்த கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள் மற்றும் புதுப்பித்தல் கட்டண வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூ. 17,822,791 இனால் அதாவது 16 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு முக்கியமான காரணமாயிருந்தது. | |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும்போது எல்லா வருடங்களிலும் சபையின் வரிக்கு முன்னரான மிகை அதிகரித்திருந்தது, அவ் அதிகரிப்புக்கு ஊழியர் ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கப்பட்டபோது நிறுவனத்தினால் 2012 ஆண்டின்போது ரூ. 36,425,902 இற்கான பங்களிப்பு ஒன்றினை வழங்கியிருந்தது. அது தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2016 ஆண்டின்போது ரூ.89,053,695 தொகையாகியிருந்தது. | |
| **4.** | செயற்பாட்டு மீளாய்வு | |
| **4.1** | செயலாற்றுகை | |
| (அ) | புதிய பதிவு ஒன்று தொடர்பாக காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து 2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி சபைக்கு ரூ. 500,000 தொகை ஒன்று கிடைத்திருந்தபோதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பதிவுசெய்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பித்த கம்பனியானது சட்டத்தின்படியான பதிவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருக்காததன் காரணமாக பதிவினை வழங்க முடியவில்லை. |
| (ஆ) | காப்புறுதிச் சான்றிதழ்கள் வைத்திருப்போரின் மற்றும் எதிர்காலத்தில் காப்புறுதிச் சான்றிதழ்கள் வைததிருக்கவுள்ளோரின் நாட்டத்தினைப் பாதுகாத்தல் சபையின் நியதிச் சட்டப் பொறுப்பொன்றாக இருந்தமையால் காப்புறுதிதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் காப்புறுதி உரிமைக் கோரிக்கை ஒன்று தொடர்பான பிணக்கு ஒன்றின்போது அதனை விசாரணை செய்யும் நியதிச்சட்ட அதிகாரம் சபைக்கு உரித்தானது. எனினும் 2016 ஆம் ஆண்டின்போது கிடைத்திருந்த 353 முறைப்பாடுகளில் 44 முறைப்பாடுகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. | 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்ட நிலுவையிலுள்ள முறைப்பாடுகளில், 97 முறைப்பாடுகளின் விசாரணைகள் 2017.11.20 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீதி 4 முறைப்பாடுகள் தொடர்பான பரிந்துரைகள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமையின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.<br><br>காப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான பிணக்குகளுக்கு மேலதிகமாக சபையானது காப்புறுதி வழங்குநர்கள் / இடைத்தரகர்களுக்கு (தரகுக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி முகவர்கள்) எதிரான முறைப்பாடுகளையும் விசாரணை செய்கிறது. அத்துடன் காரணமின்றிய முடிவுறுத்தல் பற்றி முன்னைய காப்புறுதி முகவர்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளையும் சபை விசாரணை செய்கிறது.<br><br>சபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் உள்ளக முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைக்கு இணங்க விசாரணை செய்யப்படுவதுடன், சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான பின்வரும் காரணிகள் மீது தங்கியிருக்கும் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு காலம் எடுக்கிறது:<br><br>• காப்புறுதி வகை (ஆயுள், தனிப்பட்ட ஆதனம், வர்த்தக ஆதனம், மீன்பிடிப் படகுகள் போன்றவை)<br>• விசாரணைக்குத் தேவையான தகவல்களை முறைப்பாட்டாளர்கள் சமர்ப்பிப்பதில் காணப்படும் தாமதங்கள் |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| | | • மூன்றாந் தரப்பினர் மூலமான தகவல்களின் சமர்ப்பிப்பில் காணப்படும் தாமதங்கள் (காவல் நிலையங்கள், வைத்தியசாலைகள் போன்றவை)<br>• சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை நிரல்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களும் அத்தகைய வெளித் தரப்பினரின் கோரிக்கையின்பேரிலான ஒத்திவைப்புகளும்<br>• காப்புறுதி உரிமைக் கோரிக்கை பற்றிய தெளிவின்மையும் சிக்கலான தன்மையும்<br>• பிணக்குகளின் தன்மையும் உரிமைக் கோரிக்கைத் தொகைகளும். |
| (இ) | 2009 ஆம் ஆண்டின்போது சபையினால் இடைநிறுத்தல் கட்டளை ஒன்று விதித்திருந்த கம்பனி ஒன்று தொடர்பாக உயர் நீதிமன்ற கட்டளை மீது உண்மையான காப்புறுதி உரிமை கோரலை முறைசார் விதமாக தீர்ப்பதற்காக அந்தக் கம்பனியின் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக சபை கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 யூன் 29 திகதி வரை அந்த தீர்த்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய கணக்காய்வு ஐய வினாக்களில் விபரிக்கப்பட்டதைப் போன்று, தீர்க்கப்படாத 8 உரிமைக் கோரிக்கைகள் மாத்திரம் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. இது பற்றி முன்னரே IBSL இன் 2015.05.25 ஆந் திகதிய கடிதத்தில் எங்களால் விபரிக்கப்பட்டிருக்கிறது. 8 உரிமைக் கோரிக்கை கோப்புகள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்காக செலிங்கோ டேக்புள் லிமிட்டெட்டிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. |
| (ஈ) | 2015 யூன் 30 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின்மீது சேதப் பெறுமதி மதிப்பீட்டாளர்களை பதிவுசெய்யும் விதியினை அங்கீகாரத்திற்காக சட்டவரைஞருக்கு அனுப்பியிருந்த போதிலும், 2017 ஏப்ரல் 17 திகதி வரை அந்த விதி அங்கீகரிக்கப்பட்டதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த, சேத பெறுமதி மதிப்பீட்டாளர் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்து 02 மாதங்களுக்குள் அவற்றின் மீளாய்வு விடயங்கள் மேற்கொள்ளல் நடைபெற்றிருக்கவில்லை | இது அங்கீகாரத்திற்காக சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டிருப்பதுடன் அங்கீகாரச் செயன்முறை சபையின் கட்டுப்பாட்டை மீறியதாக இருக்கிறது. |
| (உ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஏப்ரல் 17 திகதி வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது அங்கீகாரத்திற்காக நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருப்பதுடன் அங்கீகாரச் செயன்முறை சபையின் கட்டுப்பாட்டை மீறியதாக இருக்கிறது. |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| (ஊ) | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்றுறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்தின் பிரகாரம், காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்பவர்களின் பாதுகாப்பு நிதியம் என நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியத்திற்கு செஸ் வரியில் இருந்து சேர்ந்து திரண்ட பணத்தை செலவு வைப்பதன் மூலம் நிதியத்திற்காக பணம் உழைக்கப்படுகின்றது. அச்சட்டத்தின் பிரிவு 103(3) இன் பிரகாரம், நிதியத்தின் உடனடியாக தேவைப்படாத பணத்தை நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூ. 3,291,835,366 இற்கான நிதியத்தின் மீதியில் 64 சதவீதம் குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் பணத்தினைச் செலவு செய்தல் தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் (RII) பிரிவு 103 இன் உப பிரிவு 3 இன்படி, மிகை நிதியானது முதலீட்டைப் பாதுகாத்துக்கொண்டு, உயர்ந்தபட்ச வருமானத்தை விளைவிக்கக்கூடிய ஒரு விவேகமான முறையில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>அதற்கிணங்க, பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.<br><br>1. வருமானத்தை உச்சமாக்குதல்<br>2. முதலீட்டிலுள்ள நிதிசார் பாதுகாப்பு<br><br>கடந்த சில ஆண்டுகளில் வட்டி வீதத்தில் மிதமான அதிகரிப்பின் ஒரு போக்கு காணப்பட்டதால், அத்தகைய நிலைமையின் கீழ் நீண்ட கால முதலீடுகள் இலாபகரமானதாக அமையவில்லை. திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரெப்போ ஆகியவற்றுக்கான ஒரு வருட வட்டி வீதம் ஏறத்தாழ 2016 இல் 10% ஆக இருந்த அதே வேளை நிலையான வைப்புகளுக்கான (FDs) வட்டி வீதம் 12.5% இற்கும் 13.5% இற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது. மேலும், நிலையான வைப்புகளுக்கான 2, 3, 4 வருடங்களுக்ககுரிய வட்டி வீதங்கள் கவர்ச்சிகரமான ஒன்றாக இருக்கவில்லை.<br><br>அதற்கிணங்க, வருமானத்தை அதிகரிக்கின்ற நோக்கில் PPE நிதியினை குறுங் கால நிதிக் கருவிகளில் சபை முதலீடு செய்திருந்தது. மேலும், PPF நிதியானது பிணையங்களின் நிதிசார் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அரசாங்க வங்கிகள் அல்லது அரசாங்க முதன்மை முகவர் ஊடாக மாத்திரமே முதலீடு செய்யப்பட்டது.<br><br>முதலீட்டின் இவ்வொழுங்கு தொடர்பில் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் அதில் "உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் நல்ல வருமானத்தை விளைவிக்கக்கூடியவாறும் முதலீட்டைப் பாதுகாக்கக்கூடிய வகையிலும் விவேகமான முறையில் சபையினால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்" என்றவாறே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க, முதலீட்டு முறையானது வருமானத்தின் அடிப்படையிலும் RII சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்ட ஏதாவது குறிப்பீடுகளை நிச்சயமாக மீறுகின்ற குறிப்பீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மீதும் மாத்திரமே தீர்மானிக்கப்படல் வேண்டும்.<br><br>PPE இன் நிதியைப் பயன்படுத்துதல் தொடர்பாக வழிகாட்டல்களைத் தயாரித்தல் / நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளல் பற்றி 2016 திசெம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற 4 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. அதன் வரைவு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது பற்றிய கருத்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேசத் தலைமைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த வழிகாட்டல்களை உடனடியாகத் தயாரிக்க முடியாது ஆகையால் சபையானது அது பற்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| **4.2** | முகாமைத்துவ நடவடிக்கைகள் | |
| | தேவையினை கவனத்தில் எடுக்காமல் பாரிய கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு சபையின் வருடாந்த அறிக்கைகளின் பாரிய எண்ணிக்கையான பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தமையால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின்போது அறிக்கைப் பிரதிகள் முறையே 162 மற்றும் 117 என்பன விநியோகிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | தற்போது இலங்கை காப்புறுதிச் சபையானது குறைந்தளவான வருடாந்த அறிக்கைப் பிரதிகளையே பதிப்பிக்கிறது. ஆயினும் பதிப்பிக்கப்பட்ட குறைந்தளவு எண்ணிக்கையிலான பிரதிகளால் கிரயத்தைக் குறைக்க முடியவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஏனெனில், ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போன்று, மேந்தலைக் கிரயமானது குறைந்தளவு எண்ணிக்கையிலான அலகுகளால் பிரிக்கப்படும்போது அலகுக் கிரயம் அதிகரிக்கும். எவ்வாறாயினும், பதிப்பிக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கையை மேலும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. |
| **4.3** | தாமதமாகிய செயற்றிட்டங்கள் | |
| | மொத்த மதிப்பீடு ரூ. 3 மில்லியனுக்கான சபையின் கணினி முறைமை செயற்பாட்டு அறைக்காக குளிரூட்டல் முறைமையொன்றைப் பொருத்துவதற்கு பொறியியல்சார் விடயங்களுக்கான மத்திய ஆலோசனை பணியகத்துடன் 2016 மே மாதம் 11 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு 2016 யூன் 07 ஆம் திகதி ரூ.50,000 தொகைக்கான முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி, உடன்படிக்கை செயற்படுத்தப்படும் நாள் முதல் 20 வார காலப்பகுதியில் அதாவது 2016 அக்டோபர் மாதம் அளவில் அந்த சேவை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 யூன் 20 ஆந் திகதி வரை சேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலையை ஆரம்பிக்கும் பொருட்டு, தெரிவு செய்யப்பட்ட விலைமனுக் கோரலாளர்கள் அதற்கான முற்பணக் கொடுப்பனவுப் பிணையினையும் செயலாற்றுகைப் பிணையினையும் வழங்குமாறு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தனர். |
| **4.4** | ஆளணி நிருவாகம் | |
| (a) | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட 06 பதவிகளில் உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு முகாமையாளர் பதவியொன்றும் 2017 ஆகஸ்ட் வரையும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| (b) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இதுவரை சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிருவாக கைந்நூலில் அவை அடங்கியுள்ளதென சபையால் கணக்காய்வுக்கு அறிவித்திருந்தபோதிலும், அந்த நிருவாகக் கைந்நூலுக்கும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | சபையின் துவக்கத்திலிருந்து, பதவியணியினர் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளை விடுக்கும்போது IBSL ஆனது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் (SOR) பெற்றிருந்தது. அதற்கிணங்க, புதிய பதவி நிலைகளை உருவாக்குவதற்கான கோரிக்கைகளைச் சபை விடுக்கும்போது காலத்திற்குக் காலம் அதன் SOR இற்கான அங்கீகாரத்தை IBSL பெற்றுக்கொண்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், தொடர்ந்துவரும் திருத்தங்கள் 2012 ஆம் ஆண்டில் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட சபையின் நிருவாகக் கைந்நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. மேலும், மேலதிக திருத்தங்களுடன்கூடிய இறுதி நிருவாகக் கைந்நூல், கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்திற்குப் பிரதியிடப்பட்டு 2017 மார்ச் 30 இல் நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் 2017 ஆகஸ்ட் 18 ஆந் திகதி பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு நினைவூட்டல் ஒன்றும் அனுப்பப்பட்டிருக்கிறது. |
| (c) | சபையினால் 2016 சனவரி 01 ஆந் திகதி ஆயுள்காலமுறைக் கணிப்பீட்டு முகாமையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 09 ஆந் திகதி பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் மனித வள அபிவிருத்தி) நாயகத்தின் அங்கீகாரக் கடிதத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்ற பின்னர், அவ் ஏற்பாடுகளுக்கு இணங்க முறைசார் விதமாகவும் வெளிப்படையான தன்மையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சபையில் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் அலகு ஒன்றை நிறுவும் பொருட்டு, 2016 மே மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட IBSL/FAD/9/1/18/16/05/230 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம், ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவியை உருவாக்குவதற்கான கோரிக்கை ஒன்றை ஐடீஎடு செய்திருந்தது. இதற்கு 2016 மே மாதம் 27 ஆந் திகதிய MF1/05/01/IBSL/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (MSD) தனது அங்கீகாரத்தை வழங்கியிருந்ததுடன் தனது அங்கீகாரத்திற்காக ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தை அனுப்புமாறும் கோரிக்கை விடுத்திருந்தது. அதன் பிறகு சபையானது ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் அலகிற்கான உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் மற்றும் நிறைவேற்றுத் தரத்தினர் பதவிகளுக்கான அங்கீகாரங்களைக் கோரியிருந்தது. MSD இன் கோரிக்கைக்கு இணங்க, உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் மற்றும் நிறைவேற்றுத் தரத்தினருக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுடன் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2016 அக்டோபர் 18 ஆந் திகதிய IBSL/FAD/9/1/18/16/10/481 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய MF1/05/01/IBSL/1 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கையுடன் இணக்கமானவாறு இந்த வழிமுறையில் ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டன.<br><br>உதவி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் மற்றும் நிறைவேற்று அலுவலர் ஆகிய இரு பதவிகளும் புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகள் ஆகையால் அவ்விரண்டிற்கும் மாத்திரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது தனது 2016 டிசெம்பர் 07 ஆந் திகதிய DMS/1659/I ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் தனது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர் பதவியானது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை என்பதுடன் அவ்வாறு நாங்கள் செயலாற்றிய அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை மாத்திரமே அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | IBSL இன் பதில்கள் |
|---|---|---|
| (d) | 2016 ஆம் ஆண்டின்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 03 பதவிகளுக்காக 2017 ஆகஸ்ட் மாதம் வரையும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்காத நிருவாகக் கைந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பிரகாரம், சம்பளங்கள் மற்றும் படிகள் என்பன செலுத்தப்பட்டிருந்தன. | மேலே (அ) இல் குறிப்பிட்டதுபோன்று பதவிநிலையை அங்கீகரிக்கும் நேரத்தில் அத்தகைய பதவிநிலைகளின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கான சம்பந்தப்பட்ட அங்கீகாரங்கள் உரிய அதிகாரசபைகளிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன. இந்த வகையில், இத்தகைய பதவிநிலைகளுக்கான சம்பளங்கள் மற்றும் படிகள் என்பன நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களின்படி செலுத்தப்பட்டன. |
| **5.** | பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும் | |
| **5.1** | பாதீட்டுக் கட்டுப்பாடு | |
| | சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகளை, நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்யும்போது 100 சதவீதம் முதல் 246 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. | வட்டி வருமானம் மற்றும் வருமான வரிக் கொடுப்பனவு ஆகியவை தொடர்பில் 246% பாதீட்டு முரணை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது பிரதானமாக பாதிடப்பட்ட வருடாந்தக் கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் பெறப்பட்ட உண்மையான வருடாந்தக் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் சந்தை வட்டி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஒன்றைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிகரித்த வட்டி வருமானம் ஆகியவற்றால் எழுந்ததாகும். வருமான வரி ஒதுக்கீடானது வட்டி வருமானத்தின் அடிப்படையில் மாத்திரம் இருக்கின்ற காரணத்தால் வரிக் கொடுப்பனவிலும் இதேபோன்றதொரு முரணை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.<br><br>எந்தவொரு குறிப்பிட்ட ஆண்டிற்குமான பாதீடானது முன்னைய வருடத்தின் முடிவில் தயாரிக்கப்படுவதால் பாதீட்டு ஒதுக்கீடானது அந்த நேரத்திலுள்ள நிலைமைகளைக் கருத்திலெடுப்பதன் மூலம் மதிப்பிடப்படுகிறதேயன்றி ஒரு பாதீடு உண்மையான தரவுகளைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாது. மேலும், சகல சாத்தியமான முரண்களையும் குறைக்கும் வகையில் சபையின் பாதீட்டைத் தயாரிப்பதற்கு நாங்கள் எங்களது மிகச் சிறந்த முயற்சிகளைச் செய்கின்றோம். |

# 2016 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களும் அதற்கான சபையின் பதில்களும்

<table>
<tr><td>6.</td><td>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</td><td></td></tr>
<tr><td></td><td>கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.<br><br>முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்<br><br>(அ) நிதிக் கட்டுப்பாடு<br><br>(i) காப்புறுதிப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்காக முறையாக நடைமுறை ஒன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.<br><br>(ii) நிதியத்தின் பணம் நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமை.<br><br>(iii) உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் முற்பணங்களைத் தீர்த்தல் துரிதமாக நடைபெற்றிருக்காமை.<br><br>(b) வருமானக் கட்டுப்பாடு<br><br>(i) சபையின் கணக்கீட்டுக் கொள்கையின் மீது வருமானங்கள் கணக்கீடு செய்யப்படாமை.<br><br>(ii) வருமானங்களை இனங்காண்பதில் தாமதம் காணப்பட்டமை.<br><br>(c) ஆளணி நிருவாகம்<br><br>ஆட்சேர்ப்பு நடைபெறும்போது வெளிப்படைத்தன்மை இன்றி குறிப்பிட்ட தெரிவுசெய்தல் நடைபெறல்.</td><td>தேவைப்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட பரப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.<br><br>(அ) iii. IBSL உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சகல முற்பணங்களும் உரியவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டன.<br><br>(இ) 2017.10.11 ஆந் திகதி நடைபெற்ற ஐடீஎடு இன் 3 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில், கணக்காய்வு அத்தியட்சகர் அவர்கள், நீண்ட காலம் எடுத்திருந்த சாரதி பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையாக இது இருக்கிறது என்பதை தெரிவித்திருந்தார். இது தொடர்பில் வெளிப்படையான செயன்முறை ஒன்றை பின்பற்றுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த செயன்முறையும் வெளிப்படையான முறையில் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.</td></tr>
</table>

# பின்னிணைப்பு I

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்

| காப்புறுதிக் கம்பனியின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|
| ஏ.ஐ.ஏ. இன்சூரன்ஸ் லங்கா பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| * ஏ.ஐ.ஜி. இன்சூரன்ஸ் கம்பனி | பொதுக் காப்புறுதி |
| அலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | பொதுக் காப்புறுதி |
| அலையன்ஸ் லைவ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| அமானா டேக்புள் பி.எல்.சி. | பொதுக் காப்புறுதி |
| அமானா டேக்புள் லைவ் லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| சொப்ற்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| பெயார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| செலிங்கோ லைவ் இன்சூரன்ஸ் லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட். | பொதுக் காப்புறுதி |
| கோப்பரேட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட். | பொதுக் காப்புறுதி |
| கோப்லைவ் இன்சூரன்ஸ் லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| எச்.என்.பி. அஸ்சூரன்ஸ் பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| எச்.என்.பி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| லைவ் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| எல்.ஓ.எல்.சி. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| எல்.ஓ.எல்.சி. லைவ் அஷ்யூரன்ஸ் லிமிட். | நீண்ட கால காப்புறுதி |
| எம்.பி.எஸ்.எல். இன்சூரன்ஸ் கம்பனி லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| நஷனல் இன்சூரன்ஸ் டிரஸ்ட் / பண்ட் | பொதுக் காப்புறுதி |
| ஓறியன்ற் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| பீள்பள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| சீமாசகித்த சணச ரக்ஷண சமாகம | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| யூனியன் அஷ்யூரன்ஸ பி.எல்.சி. | நீண்ட கால காப்புறுதி |
| யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரல் லிமிட். | பொதுக் காப்புறுதி |

* எந்தவித புதிய காப்புறுதி வியாபாரத்தையும் பெரியளவில் ஏற்றுக்கொள்வதில்லை என்பதுடன் இலங்கையிலிருந்து தற்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

# பின்னிணைப்பு II

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகுக் கம்பனிகள்

| இல. | தரகுக் கம்பனியின் பெயர் | வியாபார வகை |
|---|---|---|
| 1 | ஏ.எம்.டபி. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 2 | ஏ.டி.இசற். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 3 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 4 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 5 | அலையன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 6 | ஏ.எம். டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 7 | அக்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 8 | அசேகி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 9 | அசற்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 10 | அக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 11 | பிறிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 12 | சீயெக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 13 | சிலோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 14 | சீனேஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 15 | சி.எப். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 16 | கொலம்போரே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 17 | கொமர்ஷியல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 18 | டி.எஸ். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 19 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 20 | ஈ.ஏ.பி. - ஆர்.எம்.எஸ். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 21 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 22 | எசாஜீ கரிம்ஜீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 23 | பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 24 | போர்சைட் இன்சூரன்ஸ் அன்ட் ரீயின்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 25 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 26 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விசஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 27 | கிராண்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 28 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 29 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 30 | ஜே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 31 | ஜே.எப். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 32 | எல்.எம். அன்ட் ஏ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 33 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 34 | லைவ் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 35 | மெக்ஸ்வெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 36 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 37 | மை இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 38 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 39 | பிளேசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 40 | புரோகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |

# பின்னிணைப்பு II

| | | |
|---|---|---|
| 41 | புரொடெக்ஷன் அன்ட் அஷ்யூரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 42 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 43 | ரெட்மோ சுவிஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 44 | றிலையன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 45 | ரின்கூன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 46 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 47 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 48 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 49 | ஸ்ரரஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 50 | டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 51 | யு.என். இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 52 | யுனைட்டெட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 53 | வெரசிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 54 | விக்டர் இமானுவேல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 55 | வோலங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |
| 56 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதியும் நீண்ட கால காப்புறுதியும் |

# கலைச்சொல்லகராதி

### திரள்

ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்ட அல்லது மீள்காப்புறுதி செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இடர்கள் நட்ட நிகழ்வு ஒன்றினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பம்.

### கொள்வனவுச் செலவினங்கள்

புதிய காப்புறுதி ஒப்பந்தங்களின் கொள்வனவு மற்றும் ஏற்கனவேயுள்ள காப்புறுதி ஒப்பந்தங்களின் புதுப்பிப்பு ஆகியவற்றுக்கேற்ப மாற்றமடைவதும் முதன்மையான தொடர்புடையதுமான சகல செலவுகளும். உதாரணம் : தரகுகள்

### காப்புறுதி ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டாளர்

காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் தொகைமதிப்பு போன்ற பிரச்சினைகளுக்கான நிகழ்தகவு மற்றும் புள்ளிவிபரவியல் கோட்பாட்டுப் பிரயோகத்தில் நிபுணத்துவமிக்க ஒரு வல்லுநர்.

### நிருவாகச் செலவினங்கள்

கட்டுப்பணச் சேகரிப்பு, அலுவலர்களின் கிரயங்கள் உள்ளிட்ட துறையின் நிருவாகம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பிலான தேய்மான ஏற்பாடுகள் ஆகியவற்றிலிருந்து எழுகின்றவற்றை உள்ளடக்குகின்ற நிருவாகத் தன்மையின் கிரயங்கள்.

### அனுமதிக்கத்தக்க சொத்துக்கள்

காப்புறுதி வழங்குநர்களின் சட்டநியதி கடன் தீர்க்கும் நிலையினைக் கணிப்பிடுவதில் உள்ளடக்கப்படக்கூடிய சொத்துக்கள். அத்தகைய சொத்துக்கள் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

### ஆண்டுத்தொகை

குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றிற்காக அல்லது ஆண்டுத் தொகை பெறுபவரின் காலப்பகுதிக்காக கால வரன்முறையாக வருமான நன்மைகளை வழங்குகின்ற ஒரு நீண்ட கால காப்புறுதி ஆகும். பின்செலுத்தும் ஆண்டுத்தொகை - எதிர்காலத்தில் சில கட்டங்களில் (நிலைகளில்) கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படுமாயின் அது பின்செலுத்தும் ஆண்டுத்தொகை எனப்படுகிறது. உடனடி ஆண்டுத்தொகை - ஒப்பந்தத்தின் தொடக்கத்திலே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படுமாயின் அது உடனடி ஆண்டுத்தொகை எனப்படுகிறது.

### வங்கியூடாக காப்புறுதியிடுதல்

காப்புறுதி வழங்குநர், வங்கி வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதி மற்றும் முதலீட்டுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாகச் செய்யப்படும் ஒரு ஒழுங்கமைப்பு.

### பயனாளிகள்

காப்புறுதிதாரரின் இறப்பு காரணமாக, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும் ஏனைய நன்மைகளையும் பெறுபவராக காப்புறுதிதாரரால் பெயர் குறிப்பிட்ட ஒரு நபர்.

### மூலதனப் போதியளவு விகிதம் (CAR)

இடர் மூலதனத் தேவைப்பாட்டை (RCR) ஆதரிப்பதற்கான மொத்த கிடைக்கத்தக்க மூலதனத்தின் (TAC) போதுமான அளவுகள்.
CAR = (TAC/RCR) x 100

### அளிப்பவர்

மீள்காப்புறுதிக் கம்பனி (முதன்மை காப்புறுதிக் கம்பனி) ஒன்றின் வாடிக்கையாளர்.

அளிப்பு - அளிப்புச் செய்யும் கம்பனிகளால் மீள்காப்புறுதி வழங்குநர்களுக்கு ஒப்புவிக்கப்படுகின்ற இடரின் பகுதி

### உரிமைக்கோரிக்கைகள்

காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஒன்று நடைபெறுமிடத்து, அதன் பொருட்டு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை : அதாவது ஆதனங்களின் அழிவு அல்லது சேதங்களும் தொடர்புடைய இறப்புகள் அல்லது காயமடைதல்களும், வைத்தியசாலைச் செலவுகள் அல்லது மருத்துவக் கட்டணங்கள், காப்புறுதி பெற்றவர் இறத்தல் அல்லது அங்கவீனமடைதல், அறக்கட்டளைக் காப்புறுதிப் பத்திரத்தின் முதிர்வு, ஓய்வூதிய வயதை அடைதல், காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்புவித்தல் மீது செலுத்தப்பட வேண்டிய தொகை போன்றவை.

### கொடுப்பனவு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள்

ஏற்புடையதான உடைமையாக்கத்தக்க உரிமைக்கோரிக்கைக் கையாளல் செலவுகள், கணக்கீட்டுக் காலப்பகுதியின் ஆரம்பத்திலும் இறுதியிலும் உரிமைக்கோரிக்கை நிலுவை ஏற்பாடுகள் மூலமான செம்மையாக்கங்கள் ஆகியவற்றுடன் கணக்கீட்டுக் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட சகல உரிமைக்கோரிக்கைகளினதும் கூட்டு மொத்தம்.

### நிகழ்ந்தது எனினும் அறிக்கையிடப்படாத உரிமைக்கோரிக்கைகள் (IBNR)

நிகழ்ந்திருந்த இழப்பிற்கான மதிப்பீட்டுக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு, ஆதனம், பரிப்பு மற்றும் பணஞ்சார்ந்த காப்புறுதியின் பொருட்டு கணக்குக் காலப்பகுதியின் முடிவில் செலவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாயினும், நிகழ்ந்திருந்த இழப்புப் பற்றி காப்புறுதி வழங்குநருக்கு இதுவரை அறிக்கையிடப்பட்டிருக்காதவை.

### உரிமைக்கோரிக்கை நிலுவை ஒதுக்கங்கள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகழ்ந்தது ஆயினும் அறிக்கையிடப்படாத உரிமைக்கோரிக்கைகள் (IBNR) மற்றும் உரிமைக்கோரிக்கைக் கையாளல் செலவுகள், அந்த உரிமைக்கோரிக்கைகளின்

# கலைச்சொல்லகராதி

பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட குறைந்தளவான தொகைகள் ஆகியவை உள்ளிட்ட ஐந்தொகைத் திகதியில் ஏற்படும் நிகழ்வுகளால் எழுகின்ற உரிமைக்கோரிக்கைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான மதிப்பீட்டுக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு வழங்கப்பட்ட தொகை.

### இணை - காப்புறுதி

இடர் ஒன்றினை ஈடுசெய்வதற்காகக் காப்புறுதி செய்யப்பட்ட ஒற்றைக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினுள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்களால் செய்யப்படுகின்ற ஒரு ஒழுங்கமைப்பாகும். இங்கு குறிப்பிட்ட கட்டுப்பண விகிதத்திற்கு ஏற்ப ஒழுங்கமைப்பு செய்யப்படுகிறது.

### தரகு

காப்புறுதி வழங்குநரின் காப்புறுதி விற்பனை மற்றும் சேவைக்கான கைம்மாறாக தரகர் ஒருவருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செய்யப்படும் கொடுப்பனவு.

### கவனக்குவிப்பு இடர்

ஒரு காப்புறுதி வழங்குநரின் சொத்துக்கள், உள்ளார்ந்த கடன் இடரின் பொருத்தமான குறைப்பினை வழங்குவதன் பொருட்டு பல்வகைப்படுத்தப்பட போதியதாக இல்லாதிருப்பின் அப்போது காணப்படும் மேலதிக கடன் இடர்.

### கடன் இடர்

கடன் பெறுநர் அல்லது எதிர்த்தரப்பினர் தவணைப் பணத்தைச் செலுத்துகையில் அவர்களது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்ற இடர்.

### பிற்போடப்பட்ட கொள்வனவுக் கிரயம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ், ஐந்தொகைத் திகதியில் நடைமுறையிலுள்ள ஒப்பந்த இடரின் காலாவதியாகாத காலப்பகுதியுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கிரயங்கள். இவை கணக்கீட்டுக் காலப்பகுதி ஒன்றிலிருந்து அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

### இடைநிறுத்தல் செயற்பாடு

கம்பனியிலிருந்து முழுமையான பிரிவொன்றின் செயற்பாடுகளை, துணைக்கம்பனி அல்லது கம்பனியொன்றின் பகுதியை நீக்குவதற்கு வைத்திருக்கப்படும் முறைமைசார் திட்டம்

### சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம்

கணக்கீட்டுக் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் சம்பாதிக்காத கட்டுப்பண ஏற்பாடுகளால் செம்மையாக்கப்பட்ட கட்டுப்பணம்

### பொதுக் காப்புறுதி வியாபாரம்

தீ அபாயம், கடல் அபாயம், மோட்டார் அல்லது நானாவிதக் காப்புறுதி வியாபாரங்களில் ஒன்றையோ அல்லது அவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ முன்னெடுக்கும் காப்புறுதி வியாபாரம். கணக்கீட்டுக் காலப்பகுதி ஒன்றில் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்புபட்டதாக கருதப்பட்ட மீள்காப்புறுதிக்கான கட்டுப்பணம் உள்ளிட்ட சகல மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட அல்லது பெறப்பட வேண்டிய மொத்தக் கட்டுப்பணம்.

### மொத்தக் கட்டுப்பணம்

கழிவுகள், மீளச்செலுத்தல்கள் மற்றும் தள்ளுபடிகள் ஆகியவற்றைக் கழித்ததன் பின்னரான கட்டுப்பணம், ஆயினும் அவை மீள்காப்புறுதி அளிப்புக்காக காப்புறுதி வழங்குநர் ஒருவரால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தவேண்டிய ஏதாவது கட்டுப்பணத்திலிருந்து கழிப்பனவு செய்யப்படுவதற்கு முன்னரான கட்டுப்பணம்.

### காப்புறுதி வழங்குநர்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றாக கூட்டிணைக்கப்பட்டதும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குவிதிச் சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்கும் ஒருவராகப் பதிவுசெய்யப்பட்டதுமான ஒரு கம்பனி.

### காலங்கடந்த காப்புறுதி

கட்டுப்பணம் செலுத்தாமை காரணமாக சலுகைக் காலப்பகுதியின் முடிவில் முடிவுறுத்தப்பட்ட காப்புறுதி

### பரிப்பு போதியளவுச் சோதனை (LAT)

காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் எதிர்காலக் காசுப் பாய்வுகளின் நடப்பு மதிப்பீடுகளைப் பயன்படுத்தி, ஏற்பிசைவு செய்யப்பட்ட காப்புறுதிப் பரிப்புகள் போதுமானதாக இருக்கிறதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியினது முடிவிலும் மதிப்பிடுதல்

### பரிப்பு இடர்

காப்புறுதி வழங்குநரால் தாபிக்கப்பட்ட தொழினுட்ப ஏற்பாடுகள் மற்றும் காப்புறுதிதாரர்களின் பரிப்புகள் தற்போது நடைமுறையிலுள்ள காப்புறுதிகள் மீதான எதிர்கால உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவுகளை கொடுப்பனவு செய்வதற்கு போதுமானதாக இல்லாதிருக்கின்ற இடர்.

### நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

மனித வாழ்வு மீதான காப்பீட்டு ஒப்பந்தங்களில் நுழைதல் அல்லது காப்பீட்டு ஒப்பந்தங்களைப் பேணுதல். இத்தகைய ஒப்பந்தங்கள் இறப்பு அல்லது மனித வாழ்வில் ஏற்படுகின்ற ஏதாவது எதிர்பாரா நிகழ்வுகள் தொடர்பில் பணம் கொடுப்பனவு செய்யும் ஒப்பந்தங்களையும் மனித வாழ்க்கையின் காலவரையறை ஒன்றிற்காக கொடுப்பனவு செய்வதற்கான ஒப்பந்தங்களையும் உள்ளடங்குகின்றன.

# கலைச்சொல்லகராதி

### இழப்பு விகிதம்

ஈட்டப்பட்ட கட்டுப்பணங்களுக்கான உரிமைக்கோரிக்கைச் செலவுகளின் சதவீத விகிதம்.

### சந்தை இடர்

காப்புறுதி வழங்குநர்களின் சொத்துக்களது சந்தைப் பெறுமதியின் குறைவினால் ஏற்படும் இடர்.

### முதிர்வு

நீண்ட கால காப்புறுதியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவு தொகை, அதன் காலத்தை நிறைவுசெய்யும் நேரம்.

### இறப்பு வீதம்

முழுச் சனத்தொகைக்கான அல்லது ஒரு குறிப்பிட்ட வயதுத் தொகுதியினருக்கான இறப்பினது விகிதம். இது உலகளாவியரீதியில் சதவீத எண்ணிக்கையில் வெளிப்படுத்தப்படுவதுடன் அது இறப்பு வீத அட்டவணைகளில் அமைக்கப்படுகிறது.

### நிகர உரிமைக்கோரிக்கை விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்

நிகர உரிமைக்கோரிக்கைச் செலவுகளை நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்துடன் தொடர்புபடுத்துவதற்கு காப்புறுதி வழங்குநர்களால் பயன்படுத்தப்படும் ஒரு சூத்திரம். (அதாவது, சம்பந்தப்பட்ட மீள்காப்புறுதி கழிக்கப்பட்டதன் பின்னர்).

$$\frac{\text{நிகர உரிமைக்கோரிக்கைச் செலவு}}{\text{நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம}} \times 100$$

### நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர செலவு விகிதத்துடன் நிகர இழப்பு விகிதத்தை இணைப்பதன் மூலம் காப்புறுதி வழங்குநர்களின் செயற்பாடுகளின் இலாபத்தன்மையினை இது குறிக்கிறது. இணைந்த விகிதமானது முதலீட்டு வருமானக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

$$\frac{\text{நிகர உரிமைக்கோரிக்கைச் செலவு}}{\text{நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம}} \times 100 + \frac{\text{செலவுகள்}}{\text{நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம}} \times 100$$

### நிகர சம்பாதிக்கப்பட் கட்டுப்பணம் - பொதுக் காப்புறுதி வியாபாரம

மீள்காப்புறுதிக் கட்டுப்பணத்திற்காக சம்பாதிக்கப்படாத கட்டுப்பணத்தின் அதிகரிப்பு அல்லது குறைவுக்காகச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்தக் கட்டுப்பணம்.

### நிகர செலவு விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்தை கொள்வனவு மற்றும் நிருவாகச் செலவுகளுடன் தொடர்புபடுத்துவதற்காக காப்புறுதிக் கம்பனிகளால் பயன்படுத்தப்படும் ஒரு சூத்திரம். (உதாரணம்: தரகு, வரிகள், அலுவலர்கள், விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

### நிகர இழப்பு விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர உரிமைக்கோரிக்கைச் செலவுகளை நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்துடன் தொடர்புபடுத்துவதற்கு காப்புறுதி வழங்குநர்களால் பயன்படுத்தப்படும் ஒரு சூத்திரம். (அதாவது, சம்பந்தப்பட்ட மீள்காப்புறுதி கழிக்கப்பட்டதன் பின்னர்).

### பங்குபற்றாத காப்புறுதி - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

சம்பந்தப்பட்ட ஆயுள் நிதி, உபரிப் பங்குகளுக்கு ஒப்பந்தரீதியாக உரித்தற்ற காப்புறுதிதாரர்களைக் கொண்ட நீண்ட கால காப்புறுதி வியாபாரம்.

### ஒரே மிகை

நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து மொத்தக் கட்டுப்பண மதிப்பீடு வரையான காப்புறுதிப் பரிப்புகளின் மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மாற்றம் காரணமாக உருவாக்கப்பட்ட மிகை.

### செயற்பாட்டு இலாபம்

முதலீட்டு வருமானம், நிகர மூலதன ஈட்டங்கள் மற்றும் ஏனைய வருமானங்களைக் கணக்கிலெடுத்ததன் பின்னரான பொதுக் காப்புறுதி வியாபார கொடுக்கல் வாங்கலின் மூலம் உழைக்கப்பெற்ற இலாபம்.

### செயற்பாட்டு இடர்

போதியதற்ற அல்லது தோல்வியடைந்த முறைமைகள், மக்கள், செயன்முறைகள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பின் இடர்.

### காப்புறுதிப் பத்திரம்

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் எழுதப்பட்ட ஆவணம்.

### காப்புறுதிதாரர்

காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கான காப்புறுதிப் பத்திரத்தைச் சட்டபூர்வமாக வைத்திருக்கின்ற நபர்.

### காப்புறுதிக் கடன்

நீண்ட கால காப்புறுதி ஒன்றின் ஒப்புவிப்புப் பெறுமதியின் பிணை மீது காப்புறுதி வழங்குநரால் காப்புறுதிதாரர் ஒருவருக்கு வழங்கப்படும் கடன். கடன் ஆனது சாதாரணமாக காப்புறுதியின் நடப்பு ஒப்புவிப்புப் பெறுமதியின் சதவீதமொன்றுக்கு வரையறுக்கப்படுவதுடன் அத்தகைய கடன்கள் மீது வட்டியும் விதிக்கப்படுகிறது.

### முதன்மையான காப்புறுதி வழங்குநர்

காப்புறுதிக் கட்டுப்பணத்திற்குப் பதிலாக இடர்களை கருதிக்கொள்வதும் காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்பவருடன் நேரடியான ஒப்பந்தத் தொடர்பைக் கொண்டிருப்பதுமான ஒரு காப்புறுதிக் கம்பனி. (தனிப்பட்ட தனிநபர், நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு).

# கலைச்சொல்லகராதி

### மீள்காப்புறுதி

காப்புறுதிக் கட்டுப்பணத்தினைக் கருத்திலெடுத்து, காப்புறுதி அல்லது காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் அளிப்புச் செய்பவரால் கருதப்படுகின்ற பரிப்புகளின் ஒரு பகுதிக்கு எதிராக அல்லது சகல பரிப்புகளுக்கும் எதிராக இன்னுமொரு தரப்புக்கு (அளிப்புச் செய்பவர் - முதன்மையான காப்புறுதி வழங்குநர்) இழப்பீடு வழங்கச் சம்மதிக்கின்ற ஒரு தரப்பினர் (மீள்காப்புறுதி வழங்குநர்) கொண்டிருக்கின்ற ஓர் ஏற்பாடு.

### மீள்காப்புறுதித் தரகு

மீள்காப்புறுதி வழங்குநருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய கட்டுப்பணம் தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்பட வேண்டிய தரகு.

### மீள்காப்புறுதி உள்வருகை

மீள்காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

### மீள்காப்புறுதி வெளிச்செல்கை

மீள்காப்புறுதி ஒப்பந்தத்தின்கீழ் இடர்களின் இடப்படுத்தல்.

### மீள்காப்புறுதி இலாபத் தரகு

மீள்காப்புறுதி உடன்பாட்டின் மீது மீள்காப்புறுதி வழங்குநரால் ஈட்டப்பட்ட நிகர இலாபத்தை (மீள்காப்புறுதி உடன்பாட்டில் வரையறை செய்யப்பட்டவாறு) அடிப்படையாகக் கொண்டு மீள்காப்புறுதி வழங்குநரிடமிருந்து அளிப்புச் செய்பவரால் (மீள்காப்புறுதி செய்த முதன்மைக் காப்புறுதி வழங்குநர்) பெறப்பட்ட அல்லது பெறப்பட வேண்டிய தரகு.

### வைத்திருத்தல்

காப்புறுதி வழங்குநர் / மீள்காப்புறுதி வழங்குநர் மீள்காப்புறுதி செய்யாத / மீட்டளிப்புச் செய்யாத கருதப்பட்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்காக வைத்திருக்கப்பட்ட நிகரத்தொகை.

### மீட்டளிப்பு

மீள்காப்புறுதி வழங்குநர், இடர்களை மாற்றம் செய்கின்ற ஓர் நடவடிக்கை. இடர்கள் இன்னுமொரு மீள்காப்புறுதி வழங்குநருக்கு மீள்காப்புறுதி செய்யப்பட்டிருக்கும்.

### இடர் மூலதன தேவைப்பாடு (RCR)

இடர் மூலதனத் தேவைப்பாடு என்பது, கடன் தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதி - 2015 இன் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட இடரின் சகலவிதமான தொடர்புபட்ட மற்றும் பொருள் வகைகளையும் குறிப்பிடுவதற்கு தேவையான மூலதனத்தின் கூட்டுத்தொகை.

பொதுக் காப்புறுதி மற்றும் நீண்ட காலப் காப்புறுதி ஆகியவற்றுக்காக சுஊசு தனித்தனியாக கணிப்பிடப்படுவதுடன் அதில் காப்புறுதி மற்றும் பங்குதாரர்களின் நிதி ஆகிய இரண்டும் உட்படுத்தப்படுகிறது.

(அ) பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கானது :

RCR = √[(கடன் இடர் மூலதனக் கட்டணம் + கவனக்குவிப்பு இடர் மூலதனக் கட்டணம் + மீள்காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$ + பரிப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$ + செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

(ஆ) நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கானது :

RCR = அதியுயர் {(SVCC, √[(கடன் இடர் மூலதனக் கட்டணம் + கவனக்குவிப்பு இடர் மூலதனக் கட்டணம் + மீள்காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$+ பரிப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$+ செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

### கடன் தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்)

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்றுறை ஒழுங்குவிதிகள் சட்டத்தின் 26(1) பிரிவுடன் வாசிக்கப்படும் பிரிவு 105 இன் கீழ் செய்யப்பட்ட கடன் தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதி - 2015 இல் வரையறை செய்யப்பட்டவாறான ஆகக் குறைந்த தொகை அதேபோன்று இடர் அடிப்படையிலான தேவைப்பாடு உள்ளடங்கலான காப்புறுதிப் பரிப்புகளுக்கான தொழினுட்ப ஏற்பாடுகள் மற்றும் மூலதனப் போதுமைக்கான நியமம் ஆகியவற்றுக்கு காப்புறுதி வழங்குநர் ஒருவர் கட்டாயமாகச் சேர்ப்பனவு செய்திருக்க வேண்டிய வில்லங்கமற்ற மூலதனத் தொகையின் கணிப்பீட்டிற்காக வகுத்தமைக்கப்படும் ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாடு.

### ஒப்புவிப்புப் பெறுமதி

காப்புறுதி ஒப்பந்த நிபந்தனைகள் காலாவதியாவதற்கு முன்னர், காப்புறுதி ஒன்றின் முடிவுறுத்தலின் மீது நீண்ட கால காப்புறுதி தொடர்பில் காப்புறுதிதாரர் ஒருவருக்கு காப்புறுதி வழங்குநர் ஒருவரால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை. ஒப்புவிப்புப் பெறுமதியை அடையும் பொருட்டு, அக்காப்புறுதி ஆகக் குறைந்தது மூன்று வருட காலப்பகுதிக்கு தொடர்ச்சியாக நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

### ஒப்புவிப்புப் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC)

சகல ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே சமயத்தில் ஒப்புவிக்கப்படும்போது கடுமையான பாதகமான சூழ்நிலை ஒன்றின் இடர்.

### தொழினுட்ப ஏற்பாடுகள்

காப்புறுதி வியாபாரத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட நிச்சயமற்ற பரிப்புகள். இந்த

# கலைச்சொல்லகராதி

ஏற்பாடுகள், காப்புறுதி ஒப்பந்தத்தை எப்பொழுதும் நிறைவேற்றுவதன் கீழான கடப்பாடுகளை உறுதிப்படுத்து வதற்காகச் செய்யப்படுகின்றன.

### அடுக்கு 1 மூலதனம்

தொடர்ந்தியங்கும் கோட்பாடு மற்றும் முடித்தல் அடிப்படை ஆகிய இரண்டு அடிப்படைகளின் மீதும் சகல வேளைகளிலும் காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நட்டங்களை உள்ளடககுவதற்காக முற்றாகக் கிடைக்கத்தக்க நிலையான மூலதனம்.

### அடுக்கு 2 மூலதனம்

அடுக்கு 1 மூலதனத்தின் உறிஞ்சக்கூடிய குணவியல்புகள் சில காணப்படாத மூலதனம். ஆயினும் தொடர்ந்தியங்கும் செயற்பாடுகள் அல்லது முடித்தல் மீதான காலப்பகுதியில் சில இழப்பு உறிஞ்சல்களை வழங்குகிறது.

### மொத்த கிடைக்கத்தக்க மூலதனம் (TAC)

மொத்த கிடைக்கத்தக்க மூலதனமானது அடுக்கு 1 மூலதனம் மற்றும் அடுக்கு 2 மூலதனம் ஆகியவற்றைக் கூட்டி, கடன் தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதி - 2015 இன் படி, ஏதாவது குறித்துரைக்கப்பட்ட கழிவுகள் இருப்பின் அவற்றைக் கழிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுகிறது.

### ஈட்டப்பட்ட இலாபம்

முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாது, பொதுக் காப்புறுதி வியாபார கொடுக்கல் வாங்கல்களால் உழைக்கப்பெற்ற தொழினுட்ப இலாபம்.

### சம்பாதிக்கப்படாத கட்டுப்பணம்

கணக்குகளில் ஏற்கனவே நிலுவையாகப் பதியப்பட்ட கட்டுப்பணங்களின் பகுதி. ஆயினும் இது ஐந்தொகைத் திகதியைத் தொடர்ந்துவரும் இடரின் காலப்பகுதி ஒன்றுடன் தொடர்புடையது.

### சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கம்

தற்போதும் நடைமுறையிலிருக்கின்ற காப்புறுதிகளின் கீழ் எதிர்காலத்தில் எழக்கூடிய உரிமைக் கோரிக்கைகளுக்கு வழங்குவதற்காக பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரால் வைத்திருக்கப்படும் நிதி.

### காலாவதியாகாத இடர் ஒதுக்கம்

உரிய திகதிக்கு முன் முடிவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து நிதியாண்டு முடிந்த பின்னர் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ள உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவுகளின் மதிப்பீட்டுப் பெறுமதியின் மிகை. இம்மிகையானது அதுவரை சம்பாதிக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான (பிற்போடப்பட்ட ஏதாவது கொள்வனவுக் கிரயங்களின் கழிப்பனவுக்குப் பின்) ஏற்பாட்டினை விஞ்சிய அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதியாக இருக்கும்.

# பொதுத் தகவல்கள்

### அலுவலக முகவரி

11இ கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1,
இலங்கை.
தொலைபேசி : +94 11 2396184-9
தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ibsl.gov.lk
இணையத்தளம் : www.ibsl.gov.lk

### சட்ட அமைப்பு

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை ஒழுங்குபடுத்தல் அடிப்படையில் இலங்கையில் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபை, இது 2001 பெப்ரவரி 23 ஆந் திகதிய 1172/27 ஆம் இலக்க அரச வர்த்தமான வெளியீட்டின் மூலம் 2001 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருந்தது.

### சபையின் நோக்கமும் பொறுப்பும்

காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்போர் மற்றும் எதிர்காலத்தில் காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருக்கக்கூடியவர்கள் ஆகியோரின் நாட்டங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையாகவும் தொழில்முறைசார்ந்த மற்றும் விவேகமான முறையில் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதே சபையின் நோக்கமும் பொறுப்புமாக இருக்கும்.

### கணக்கீட்டு ஆண்டு

டிசெம்பர் 31

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### வங்கி

இலங்கை வங்கி

### கணக்காய்வுக் குழு

திரு. ஏ.ஆர். தேசப்பிரிய
கலாநிதி. அலி அஸ்கர் சாபிர் குலம்ஹுசைன்
திரு. ஜெரோமி போலிங்

INSURANCE
BOARD OF SRI LANKA

11, East Tower, World Trade Centre, Colombo 01, Sri Lanka
Telephone : +94 11 2396184-9 | Fax : +94 11 2396190
E-mail : info@ibsl.gov.lk | Web site : www.ibsl.gov.lk

Designed & Printed by www.sharpprintexpo.com